தேரையர் அருளிச்செய்த

தைலவருக்கச் சுருக்கம்

மூலமும்

ஆயுள்வேத பாஸ்கரர்

சி. த. சுப்பிரமணிய பண்டிதர் அவர்கள்

இயற்றிய உரையும்

சென்னை :

B. தேவராஜ நாயகர் அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

[ரூபாய் நான்கு

LC
W70
164431

தேரையர் அருளிச்செய்த

தைலவருக்கச் சுருக்கம்

மூலமும்,

ஐக்கிய
சித்தமருத்துவ பயிற்சி அகம்
டாக்டர். V. பூலோகம், U.S.M.T.C
(துணை ஆசிரியர்)

ஆயுள்வேத பாஸ்கரர்:

சி. த. சுப்பிரமணிய பண்டிதர்

அவர்களால் இயற்றிய

உரையும்

சென்னை:

B. தேவராஜ நாயகர் அவர்களால்

வெளியிட்டது.

இதன் விலை] [ரூ. 4—00

1970

600 005.
164431
LC
N70

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
அசனுமிர்தத் தைலம்	...	77
அசுவகந்தி பலாலாக்ஷா தைலம்	...	58
அடுப்பின் பக்கங்களி லிருக்கவேண்டிய கருவிகள்	...	13
அந்தந்தத் தொழிற்குரிய கருவியும், தைலந்துழாவு விதியும்	...	27
அமிர்தக்குமரித் தைலம்	...	69
அமிர்தாமலகத் தைலம்	...	84
அம்மிவகை குழவிவகை	...	18
அரக்குத் தைலம்	...	86
அரைப்பு வகை	...	32
அர்க்கக்ஷீராதித் தைலம்	...	88
அவ்வவ் மாதங்களில் ஸ்நானஞ் செய்யும் காலம்	...	34
அநுபந்த முகவுரை	...	38
அஜசிருங்கித் தைலம்	...	129
அஜபஞ்சகத் தைலம்	...	103
ஆதொண்டைத் தைலம்	...	105
ஆரநாளத் தைலம்	...	56
ஆலகாலவிஷ தைலம்	...	116
இச்சாபத்திய விதி	...	36
இஞ்சித் தைலம்	...	44
இரதயோக நிற்குண்டித் தைலம்	...	54
இலாங்கலித் தைலம்	...	120
இவ்விதப் பாத்திரம் ஆகும் ஆகாதெனல்	...	15
இவ்வகைத் திரவியங்களை யித்தனைநாள் காய்ச்சில் ரசம் வருமெனல்	...	22
உப்பில்லாப் பத்திய விதி	...	36
உரல்வகையும் உலக்கைவகையும்	...	17
உரோக சஞ்சீவித் தைலம்	...	50

பொருள்		பக்கம்
ஊழலாற்றித் தைலம்	...	133
ஊன்பூச்சுத் தைலம்	...	129
ஒரு தைலப் பாத்திரம் மற்ரெரு தைலத்திற்காகா தெனல்	...	26
கணத் தைலம்	...	122
கண் தைலம்	...	108
கதகாதித் தைலம்	...	66
கதிராதித் தைலம்	...	79
கரப்பான் தைலம்	...	93
கருஞ்செம்பத் தைலம்	...	107
கலிங்கத் தைலம்	...	121
கற்கமருந்து அரைக்கும் விதி	...	25
கட்டுவாங்கத் தைலம்	...	81
கஜகர்ணிகா தைலம்	...	71
கஜகர்ணி பராக கற்கதைலம்	...	72
கஸ்தூரித் தைலம்	...	128
காகமாசித் தைலம்	...	91
கிரகணிபூப்புடத் தைலம்	...	119
கீடாரித் தைலம்	...	131
கீழ்வாய்நெல்லித் தைலம்	...	86
குடிநீர்க்குரிய நீரிலக்கணம்	...	20
குடிநீரளவை விதி	...	,,
குடிநீர் காய்ச்சு பேதமும் வடிபேதமும்	...	,,
குடிநீர்க்கும் பாலுக்கும் புறநடை	...	22
குந்தணை யிலக்கணம்	...	16
குளி இலக்கணம்	...	33
குளிர்ச்சித் தைலம்	...	126
கேசரஞ்சகத் தைலம்	...	143
கைபார்த்த மருத்துவன் நடத்தை	...	5
சகல தைலங்களும் ஐவகைக்குள் அடங்கும் என்பதும் அவற்றுள் ஒவ்வொன்றின் வன்மையும் கூறியது	...	8

பொருள்		பக்கம்
சகதேவித் தைலம்	...	90
சட்டிகளின் இலக்கணம்	...	15
சம்பீரத் தைலம்	...	106
சம்பீரசமாதித் தைலம்	...	107
சரணுதித் தைலம்	...	52
சருவதித்த நிற்குண்டித் தைலம்	...	55
சவுரித் தைலம்	...	142
சாரணைக்கள்ளித் தைலம்	...	139
சிலைத் தைலம்	...	108
சில்லியடை யிலக்கணம் இதுவே சல்லடையாம்	...	17
சிறிய தைலபாக விதி	...	34
சிறிய நிற்குண்டித் தைலம்	...	56
சிறிய அசுவகந்தி பலாலாக்ஷா தைலம்	...	60
சிறிய பிருங்காமலகத் தைலம்	...	63
சிறிய கஜகர்ணிகா தைலம்	...	73
சிறிய சம்பத் தைலம்	...	106
சிறிய விஷமுட்டித் தைலம்	...	98
சிறுகுமரித் தைலம்	...	67
சிறுபூதிகா தைலம்	...	77
சிறுமாந்தத் தைலம்	...	109
சிறுசந்தனுதித் தைலம்	...	110
சிற்சுடர்த் தைலம்	...	116
சீரகத் தைலம்	...	47
சுக்குத் தைலம்	...	42
சுசியக்கினி	...	19
சுத்தியால் வரும் நன்மை கூறல்	...	30
சுத்தி யாரநாளத் தைலம்	...	57
சூலைக்குடாரத் தைலம்	...	141
தசமூலத் தைலம்	...	51
தித்தகோசாதகித் தைலம்	...	81
தூர்வைத் தைலம்	...	142
தேய்த்தாடும் முறைமை	...	113

பொருள்		பக்கம்
தைலப் பிறப்புவகை	...	7
தைலம் இப்படிப்பட்டதென்பது	...	8
தைலாதிகளின் வீரியமும் பயனுங் கூறியது	...	9
தைலாதிகளின் குணம்	...	10
தைலபாக விதி	...	38
தைலம் வடிக்கும் இலக்கணம்	...	29
தைலங்களின் சத்திக்கிரமம்	...	,,
தைல பூசாவிதி	...	31
தைலங்கட்கு ஆகாப் பதார்த்தம்	...	36
நவநாதசித்தத் தைலம்	...	126
நாசிரோக நாசத் தைலம்	...	82
நிற்குண்டித் தைலம்	...	53
நீராடுதொட்டி யிலக்கணம்	...	33
பத்திய பதார்த்தமும், மதாந்திர பத்திய பதார்த்தமும்	...	35
பத்தூரத் தைலம்	...	91
பத்திரசார விரணப்பூச்சுத் தைலம்	...	118
பலாமடக்குத் தைலம்	...	60
பாகஞ்செய்வா னிலக்கணம்	...	6
பாத்திரம் பழக்கும் விதி	...	26
பாத்திராற்றலும் விதியும்	...	27
பாதாதிகளில் தைலமிடல்	...	34
பாவனபஞ்சாங்குலத் தைலம்	...	132
பிணியாள னிலக்கணம்	...	5
பிடிச்சீலை வகையும் பற்றகற்றியும்	...	23
பிருங்காமலகத் தைலம்	...	62
பிருங்கராஜ தைலம்	...	65
பீநசத் தைலம்	...	104
பீநசக் கிருதம்	...	117
புலமினக்கி யிலக்கணம் இதுவே விளக்குமாறு	...	17
புரியணைவகை இதுவே புரிமணையாம்	...	23
பூதிகா தைலம்	...	74

பொருள்		பக்கம்
பூவிலக்கணம், தசவிதப் பொருத்தம், பித்திகை யெழுப்புங் காலம், கட்டிடத் துணைக்கருவி, மந்திரத்திகை அமைப்பு இவைகளைக் கூறியது	...	10
பெருங்குமரித் தைலம்	...	68
மகா மேகராஜாங்கத் தைலம்	...	144
மகா விஷமுட்டித் தைலம்	...	95
மட்கல விலக்கணம்	...	14
மதாந்தரம்	...	22
மயனத் தைலம்	...	137
மருத்துவ னிலக்கணம்	...	4
மாந்தத் தைலம்	...	123
மாஷ தைலம்	...	92
மிளகுத் தைலம்	...	44
மூலயோக நிற்குண்டித் தைலம்	...	54
மூழியிலக்கணம் இதுவே அகப்பை	...	24
மூழிவிகற்பம்	...	25
மெருகுசமூலத் தைலம்	...	65
மெருகுள்ளித் தைலம்	...	80
மெருகுப்பச்சைத் தைலம்	...	104
மேகத்தெண்ணெய்	...	136
மேகாரித் தைலம்	...	134
மோதகவல்லித் தைலம்	...	79
ரசத் தைலம்	...	94
லகுசந்தனாதித் தைலம்	...	115
லகுவிஷமுட்டித் தைலம்	...	101
வச்சிரபீஜத் தைலம்	...	83
வடிகருவிகளின் பேதம்	...	23
வடிக்கும் பாத்திர இலக்கணமும் அதன் நிலையும்	...	28
வலம்புரிக்காய்த் தைலம்	...	118
வாதகேசரித் தைலம்	...	48
வாதநாசத் தைலம்	...	110

பொருள்		பக்கம்
வாதாந்தத் தைலம்	...	49
விறகின் பேதம்	...	19
விரணசஞ்சீவித் தைலம்	...	102
விநியோகமும் தேய்த்தாடுதலும்	...	31
வேறுவகை மிளகுத் தைலம்	...	46
வேறுவகை சிற்ருமுட்டித் தைலம்	...	62
வேறுவகை சிறிய பிருங்காமலக தைலம்	...	64
வேறுவித மாந்தத் தைலம்	...	124
வேறுவித குழந்தை மாந்தயெண்ணெய்	...	125
க்ஷீரதுருமாதித் தைலம்	...	89

பொருளடக்கம் முற்றிற்று.

உ

கணபதி துணை

தேரையர் அருளிச்செய்த

தைலவருக்கச் சுருக்கம்

மூலமும் - உரையும்

கடவுள் வணக்கம்

விநாயகர் துதி - நேரிசை வெண்பா

மணியாந் தைல வருக்கச் சுருக்கந்
திணியாயுள் வேதமுறை செப்பும்—பிணியாவும்
போக்கிக்காக் குந்தைலம் போற்குடிலை வேழமிறை
நீக்கிக்காக் குந்தமிழை நின்று.

(இதன் பொருள்) உறுதியாகிய ஆயுள்வேத முறைப்படி தைலங்களைச் சொல்லுகின்ற கண்மணி போன்ற தமிழ் மொழியிற் செய்த 'தைலவருக்கச் சுருக்கம்' என்னும் இந்நூலைப் பிரணவாகார விநாயகக் கடவுளானவர் சகல ரோகத்தையும் போக்கித்தேகத்தைப் பாதுகாக்குந் தைலத்தைப்போல எமதுள்ளத்தில் நின்று, இடையூறகற்றிப் பாதுகாத்தருள் புரிவர் என்றவாறு. மிறை - குற்றம்.

விசேஷவுரை

கண்மணியானது எல்லாப் பொருள்களையும் அறிவதற்குக் கருவியாக இருப்பதுபோல், இந்நூல் சகல தைலவருக்கங்களின் கைபாக முதலிய யாவையும் அறிவிக்குங் கருவியாக இருப்பதால், 'மணியாந்தைலம்' என்றும், ஏனைய நூல்கள் போலாது கடவுள்போல் நித்தியமா யிருப்பதென்னும் பெருமை தோன்றத் 'திணியாயுள் வேதம்' என்றும், விநாயகர், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்கள் எல்லாம் வணங்கும் முதற்கடவுள் என்பது விளங்கக் 'குடிலைவேழம்' என்றும், வியந்து கூறினர்.

இத்தைலம், முடிவில்லாத பேரின்பத்தை யருளிச் செய்யும் விநாயகருடைய திருவடிகளோடு ஒப்புச்சொல்லத் தகாததாயினும், உலகத்துக்குள் வியாதிகளை நீக்கி உயிர்களைப் பாதுகாக்குந் தன்மையிற் சிறந்தமையால் உவமையாயது. இனி, இது

போல் வருஞ் செய்யுட்களுக்கெல்லாம் இதுவே கருத்தாக வமைத்துக் கொள்க. (1)

பரசிவ வணக்கம்

காக்கவெண்ணெ யொத்துக் கலந்தெங்கு நின்றன்பர்க்
கூக்கவெண்ணெ நல்கு முமைநாதன்—றேக்கச்
சயில *வருக் கச்சுருக்கத் தைக்கடுகாப் பாம்போற்
றயிலவருக் கச்சுருக்கத் தை.

(இ - ள்.) எள்ளுக்குள்ளிருக்கும் நெய்யைப்போல அகிலமெங்கு நிறைந்து நின்று அந்நிலையை யுணர்ந்துய்ய அடியவருக்கருள் புரிபவரும், பார்வதி தேவியாருக்கு நாயகருமாகிய பரமேச்சுரர்; வளப்ப நிறைந்த மலையெருக்கென்னு மாமூலியானது அச்சுருக்கத் தைக்கின்ற பாம்பினது விஷத்தைத் தீர்த்து, உயிரைக் காப்பதுபோலத் 'தைலவருக்கச் சுருக்க' மென்னு மிந்நூலைக் காக்கக்கடவர், எ - று. (2)

பார்வதிதேவியார் துதி

மாணத் தயில வருக்கச் சுருக்கமெனு
மேணத் தமிழிற் கிரட்சையாங்—காணக்
கடையில்வரு மெண்ணெயெனக் காதலன்பர் பாலிற்
றடையில்வரு மம்பிகைபொற் றுள்.

(இ - ள்.) செக்கில் எள்ளிட்டு ஆடுகிறபோது உண்டாகாநின்ற எண்ணெயை மொண்டு கொண்டபின் கடைசியில் வருகிற எண்ணெயானது (மகா தைலங்களைப்போல் திரிதோஷங்களாலுண்டாகாநின்ற நோய்களை விலக்கித் தேகத்தைப் பாதுகாப்பதுபோல்) அன்புள்ள அடியார்களிடத்துத் தடையின்றி வந்தருளுகின்ற பராசத்தியினுடைய சவுந்தரியமுள்ள திருவடிகள் மாட்சிமை தங்கிய 'தைலவருக்கச் சுருக்க'மென்கிற நிலைபெற்ற இந்தத் தமிழ் நூலுக்குக் காப்பாகும், எ - று. (3)

விநாயகர்-சுப்பிரமணியர்-இவர்கள் துதி

கட்டளைக்கலித்துறை

சீரார் தைல மணப்பதஞ் செப்பிடிற் றீப்பிணிகள்
சாரா வகல்வன போலுமை யீன்றரு டந்திமுகன்

---

* அருக்கு - எருக்கு, 'அச்சுருக்க தை கடு' என்பதற்கு அச்சு - சரீரத்தை, உருக்க - கெடுக்கும்படி, தை - தைக்கத்தக்க, கடு - பாம்பின் பல்விஷத்துக்கு எனப் பதம் பிரித்துரைத்துக் கொள்க. பாம்பின்பல் என்னும் ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. தைத்தல் - அழுந்தல்.

காரா ரவுணர் கடலுண்ட வேற்படைக் கந்தனெந்தை
யேரார் மணப்பதஞ் செப்பின மிந்நூற் கிழிசொலின்றே.

(இ - ள்.) பார்வதி தேவியாரீன்றருளிய யானை முகமுள்ள விநாயகர், மேகநிறம் பொருந்திய சூரபத்மன் முதலிய அசுரரென்னுங் கடலையுண்ட வேலாயுத மேந்திய சுப்பிரமணியக்கடவுளாகிய எம்மையன், என்னும் இவர்களுடைய தெய்வமணங் கமழும் திருவடிகளைத் தோத்திரித்தோமாகையால், பெரிய தைலங்கள் காய்ச்சுகையில் பிறக்கின்ற மணப்பதத்தைக்கண்டு இது நல்ல பக்குவ பாகமென்று பண்டிதர்கள் மனங்களித்துச் சொன்னமாத்திரத்தில் பொல்லாத நோய்கள் முழுவதுந் தங்காமல் நீங்குவன போல் இந்நூலினுக்குக் குற்றமாகிய சொல் இல்லையாய்விடும், எ - று. (4)

குருபரம்பரை - பலதேவர் துதி

விருத்தம்

சாதிநறுந் தைலவரி யார்க்குநிறை யாயு
டந்தளித்தா லெனவிந்நூ றணை நாளும் புரக்க
வாதிபரை நந்தியமு தக்கடத்தோ டுதித்தோ
னச்சுவனி தேவர்விரி யலைகடலை நுகர்ந்தோன்
கோதிலரும் புலத்தியனந் தருமசவு மியனிக்
குரவருஞ்சித் தருஞ்சுரருங் கூறுமுனி வரரு
மோதிமத்த ரரியுரகர் முச்சுடரெண் பால
ரொளிர்வசுக்க ளெழுமாத ருயர்வயிர வருமே.

(இ-ள்.) ஆசிரிய வருக்கத்தில் தலைமைத்தன்மை பூண்டுள்ள திருக்கயிலைநாதர், பார்வதிதேவியார், நந்திதேவர், (கையில்) அமிர்தகடத்தோடு திருப்பாற்கடலிற் பிறந்த தன்வந்திரி பகவான், அச்சுவனிதேவர், அலைகளைப் பரப்புகின்ற சமுத்திரத்தைப் பானஞ்செய்த அகத்தியர், புலத்தியர், நமது சற்குருவாகிய தரும சவுமியர் முதலிய ஆசான்மாரும், சித்தபுருஷர்களும், முப்பத்துமுக்கோடி தேவரும், நாற்பத்தெண்ணுயிரம் இருடியரும் பிரமதேவரும், மஹாவிஷ்ணுவும், நாகலோகத்தாரும், சூரியனும், சந்திரனும், அக்கினிதேவரும், அஷ்டதிக்குப் பாலகரும், அஷ்டவசுக்களும், சப்தமாதர்களும், வயிரவரும், மேன்மையுள்ள நற்றைலப் புகையானது யாவருக்கும் பூரணுயுளைக் கொடுத்து இரக்ஷணை செய்வதுபோல இந்நூலை முற்றுப்பெற அருளி இரக்ஷணை செய்வர், எ-று. (5)

அவையடக்கம்

நேரிசை வெண்பா

வாளா விருந்தாலும் வாதித்தென் காதலென்சொற்
கேளாத வைவிடுக்குங் கீர்த்தியிதே—நாளாய்ந்தோர்
தீரனிவ னென்பார் சிலரின்னு லைப்பழிச்சுத்
தேரனிவ னென்பார் சிரித்து.

(இ - ள்.) யான் எனது புல்லறிவை யுணர்ந்து வாளா விருந்தாலும், இந்நூலை இயற்ற வேண்டுமென்னும் எனது பேரவா வானது என்னுடன் வாதித்து என்சொல்லைக் கேளாமல் அது சபையில் எனக்கு உண்டாக்கும் கீர்த்தி இதுவாகும்; அஃதெது வெனில் ஆயுள்வேதியர் இந்நூலைப் பழித்து இவன் தீரனென் பார்; வேறு சிலர் சிரித்து இவன் தேரன் என்பார்கள். பழித்து சிரித்து என்னும் மொழிகளால் தீரன் தேரன் என்பவை அத் தன்மை யில்லாமையைக் குறிப்பாக உணர்த்தின. (6(

பாயிரம்

மருத்துவ னிலக்கணம்

விருத்தம்

தெய்வவுபா சனைபலநூ லெல்லை காண்ட
    றிரிகரண சுத்திபன்னோய் தீர்த்த னளு
நைவகன்ற தீரமதி நுட்பஞ் சான்றோர்
    நட்பொழுக்க மேன்மைகுண மன்புள் ளானய்
மெய்வசுதை விகலையணங் குறைப தார்த்த
    விதியுடற்கா தாரமட லங்கி மாந்தல்
கைவருமெண் பேதமெலா முணர்ந்துற் றுனய்க்
    காணிலந்த மருத்துவன்கைக் கரணி யுண்ணே.

(இ - ள்.) தேவதாவுபாசனை, பல சாஸ்திரங்களை ஆதியோ டந்தமாக ஆராய்ச்சிசெய்து அறிகுதல் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணசுத்தி, பல வியாதிகளைத் தீர்க்குதல், எந்நா ளும் வியாதியைக்கண்டு அஞ்சாத தீரத்துவம், மிகுந்த புத்தி நுட்பம், பெரியோர்களுடைய சிநேகம், ஆசாரம், மேம்பாடு, நல்ல குணம், அன்பு, இத்தன்மைக ளுள்ளவனுகிப் பிணியாளனது தேகம், தேசம், காலம், ரோகம், ஔஷதம், பதார்த்தகுணம்,

சரீரத்துக்குள்ள ஆதாரம், உதராக்கினி, தேகபலம், ஆகாரம், கைபாகம், செய்பாகம், தீக்ஷைபாகம், இன்னநோய்க்கு இத்தனை நாள் மருந்தூட்ட வேண்டுமென்கிற கால அளவு, என்னும் இப் பேதங்களை யெல்லாம் அறிந்திருப்பவனாகத் தெரிந்தால், அந்த வைத்தியன் கொடுக்கும் சஞ்சீவியை யொத்த மருந்தை உண்ணக் கடவை, எ-று. சரீரத்துக்குள்ள ஆதாரபேதமாவது: வாதம், பித்தம், சிலேஷ்மம், ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோ தாது, அஸ்திதாது, மச்சைதாது, சுக்கிலதாது, மலம், மூத்திரம் என்னும் 12-ம் ஆம். உதராக்கினி பேதமாவது: சமாக்கினி, விஷமாக்கினி, தீக்ஷ்ணுக்கினி, மந்தாக்கினி என்னும் 4-ம் ஆம். தேகபலமாவது: சகசபலம், காலபலம், யுக்திகிருதபலம் என்னும் 3-ம் ஆம். இப் பேதங்களை ஜீவரக்ஷாமிர்த மென்னும் சாஸ்திரத்தில் ஏழாவது பக்கத்தில் வாதசுபாவகுணங்கூறிய விடத்தும், 22, 23-வது பக்கங்களிலும் காண்க (1)

கைபார்த்த மருத்துவன் நடத்தை

நேரிசை வெண்பா

கன்மவுரு நோயதைமுக் கண்கொடறி வுற்றறிந்தார்
தன்மநீ ராடற் சதத்துடனெட்—டின்மையெனி
லங்கைபதந் தூய்மையின்றே லங்குலிபூ வெற்றலின்றேற்
கங்கை பதம்புனிறு காண்.

(இ - ள்.) நோயானது கன்ம ரூபமாகையால், அந்த நோயை மூன்று விரலைக்கொண்டு, (பிணியாளனுடைய கைம்முதலாகிய தசவித நாடி ஸ்தானங்களையுந்) தொட்டறிந்து (அதுவுமன்றி அஷ்டவித பரீக்ஷையினுலும்) அறிந்த மருத்துவர்கள் முக்கியமாக நடந்து கொள்ளத்தக்கது. 108—ஸ்நானஞ் செய்தல், அல்லது கை கால்களைச் சுத்தியாவது செய்தல், அல்லது அவ் விரலை பூமியிற் றட்டுதலாம். இப்படிக்குச் செய்யாவிடில், சகல பாவங்களையும் நிவிர்த்தி செய்யும் கங்காநதியை யொத்த வைத்தியருக்கும், பக்குவமாகச் செய்யப்பட்டிருக்கிற ஔஷதங்களுக்கும், ஆசூசம் உண்டாம், எ - று. கண்போலத் தெரிவிக்கின்றமையால் விரலைக் 'கண்'ணென்றுர். இவ்வொழுக்க மில்லாத வைத்தியர்கள் கைம்மருந்து பிணியை நீக்கா தென்பது கருத்து. (2)

பிணியாள னிலக்கணம்

விருத்தம்

அருப்பமுறி னரசெனினுந் தீர்ப்பா னைக்கண்
டழைத்தவனை யாதியரு மவனென் றுரர்தல்

விருப்பமுறத் தவிசிருத்தன் மெய்யன் பாடல்
வேண்டுடலீந் திடலுறையேற் றுண்ட லத்தைத்
திருப்பவருந் துயராற்றற் சரதங் கூறற்
செப்புளொடுங் கற்பன்மருந் தொழித்த லூழா
மிருப்பகற்று முறைகுயிற்ற லிவையுள் ளானே
லிவனுமம் புகலுநர்க்கு மின்று நோயே.

(இ - ள்.) இராஜனே யானுலும் தனக்கு வியாதி சம்பவித்தால் வைத்தியரைக் கண்டு உபசாரத்துட னழைக்கச் செய்தல், தாய் தந்தை குரு தெய்வம் நமக்கு இந்த வைத்தியரே யென்றுணர்தல், விருப்ப முண்டாகும்படி ஆசனத்தி லிருக்கச் செய்தல், உண்மையான அன்பு வைத்தல், ஔஷதங்களுக்கு வேண்டுங் திரவியங் கொடுத்தல், அவர் கொடுக்கின்ற மருந்தை இரண்டு கையினுலும் வாங்கி உண்ணுதல், ஔஷதத்தை வேண்டாமென்று மாற்றும்படி உண்டாகும் வருத்தத்தைச் சகித்துக்கொள்ளுதல், மருந்துண்ணலில் தனக்கிருக்குங் குண குணங்களை உண்மையாகச் சொல்லுதல், (அன்றியும்) அவர் சொல்லுக்குள் அடங்கி யிருத்தல், கண்ட கண்ட ஔஷதங்களை உண்ணுமல் நீக்குதல், பூர்வ கன்மத்தினுல் வியாதி சம்பவிப்பதாதலால் அதனை நிவிர்த்தி செய்து கொள்ளுதல், என்னும் இக்குணங்களை யுடையவனு யிருப்பானுனுல், இவன் பேரை யுச்சரிப்பவர்களுக்கும் வியாதி யணுகாது, எ - று. (3)

பாகஞ்செய்வா னிலக்கணம்

நேரிசை வெண்பா

பிணியர்க் குரியர் பிடக்குளத்தை யொப்ப
ரணியிற் சிறந்தநட்ப ராம்பற்—பணியர்க்குட்
டுப்புறையை யுன்மைமிகு தூய்மையிவை யார்ந்தாரை
யொப்புறையை யாடற் குவந்து.

(இ - ள்.) பிணியாளர்களிடத்திலிருந்து ஔஷதபாகஞ் செய்கின்றவர்கள் அவர்களுக்கு உரிமையுள்ளவர்களும், மிகுந்த நன்மையுள்ள சிநேகிதர்களும், வைத்தியர் மனதை யொத்தவர்களுமாக இருக்க வேண்டும். அத் தன்மையர்களில்லாத பக்ஷத்தில் மற்ற ஏவலாளிகளுக்குள், தேகபலம் பிணியாளர்களுடைய ஆயுசுவிர்த்தியை விரும்புதல், புத்தி, நுட்பம், சத்தியம், உள்ளும் புறமும் பரிசுத்தம் என்னும் நற்குண முள்ளவர்களை ஔஷத பாகஞ் செய்ய வைத்துக் கொள்ள வேண்டும். எ - று. (4)

தைலப் பிறப்புவகை

விருத்தம்

துதியிழுதுற் பவம்பெயர்மிக் கெனினுமவை யீராறுட் சுருங்கு மந்த, விதியுணருங் கருத்துளதேற் சுருதிமுறை யிட்டபடி விரித்து ரைப்பாம், கொதியுருக்கு புடம்பட்டித் தீநீரா தவநிலவிற் கூவ ணேக்கம், பதியிறும்பு நீராவி சுட ரெந்தி ரங்களிலுற் பவமா நெய்யே.

(இ - ள்.) பெரியோர்களாற் சொல்லுகின்ற இழுது என்கிற தைலமானது அனந்தம் பிறப்பையும் பெயரையும் விரிவாகப் பெற்றிருந்தாலும், முடிவில் 12-வகைப் பிறப்பினுள்ளும், 12-வகைப் பெயரினுள்ளும் அடங்கும். அந்த இலக்கணத்தை யறிய வேண்டு மென்கிற எண்ணமிருக்குமாயின் ஆயுள்வேதங் கூறிய வாறே கூறுவாம். (கேட்பாயாக.) (கொதித்தல், உருக்கல், புடம், தீநீர், ஆதவம், பூமி, மரம், மலை, சலம், புகை, சுடர், ஏந்திரம் என்னும் 12-ஸ்தானங்களைப் பற்றி அவற்றின் பெயர்களைப் பெற்று 12 - விதத் தைலம் பிறக்கும்.) அவையாவன, (முத்துக் கொட்டை முதலிய நுட்பத்தினுசுகளை யிடித்துச் சலத்திற் கரைத்துக் கொதிக்கவைப்பதில் நின்றும் பிறப்பது கொதித் தைலம், வெண்ணெய் கோழிமுட்டைக் கருமுதலிய வஸ்துக்களை உருக்குவதனுற் பிறப்பது உருக்குத்தைலம்,) (அடியில் **பணம்** போலத் துவாரமிட்ட ஒரு கடத்திற்குள் சிவனார் வேம்பு முதலிய திரவியங்களை நிறைத்து வாய்க்கு சீலைமண்செய்து கீழ்ப்புறத்தில் கலசம்வைத்துப் புடம்போடுவதனுற் பிறப்பது புடத்தைலம்,) (சந்தனக்கட்டை முதலிய மணமுள்ள சரக்குகளைத் தூளாக்கிப் பானையிற்போட்டு சலம்விட்டுப் பட்டிகட்டியிறக்குகின்ற தீநீரினுல் பிறப்பது தீநீர்த்தைலம்,) (எள்ளுடன் சில சரக்குகளைச் சேர்த்தரைத்த கற்கமருந்தைச் சூரியபுடமாக வைக்கும்போது வெய்யிலின் வெப்பத்தினுல் பிறப்பது ஆதவத் தைலம்,) (ஓதமில்லாத பூமிக்குள்ளிருந்து கொப்பளித்துத் தானே வருவது மண் தைலம்,) (மரத்தில் வெட்டுப்பட்ட இடத்தில் நின்றும் பிறப்பது விருக்கத்தைலம்,) (உயர்ந்த மலைகளிலிருந்து வழிவது சிலைத் தைலம்,) (புனுகுச் சட்ட முதலியதுகளை நறுக்கிச் சலத்தி லூற வைப்பதனுற் பிறப்பது நீர்த்தைலம்,) (மட்டிப்பால், சாம்பிராணி முதலிய சரக்குகளை நெருப்பில் காய்ந்த கலசத்திற்போட்டு அதன் மேல் சலநிரப்பிய தாம்பாளத்தை வைக்க அந்தப் புகையால் பிறப்பது ஆவித்தைலம்,) (பாதரச முதலிய சரக்குகளை அரைத் துச் சீலையிற்றடவிக் காயவைத்ததை யிருப்புக்கதிரில் பந்தம்

போற் சுருட்டிக் கட்டித் தைலங்களில் தோய்த்துக் கொளுத்தும் போது அதில் நின்றும் சுடரோடே பிறப்பது சுடர்த் தைலம்,) (எள்ளாதி வித்துக்களில் நின்றும் செக்கு முதலிய எந்திரங்களி ஞற் பிறப்பது எந்திரத் தைலம்,) என்னும் இவைகளாம். எ-று.

சகல தைலங்களும் ஐவகைக்குள் அடங்கும் என்பதும் அவற்றுள் ஒவ்வொன்றின் வன்மையும் கூறியது

விருத்தம்

பருதியொளி தைலவருக் கச்சுருக்க நூற்குட்
படுதைல மைவிகற்பப் படுமவையா வனவோர்
சுருதிமொழி முடித்தயில முடங்குகுடித் தயிலந்
தொக்கிலிடு பிடித்தயிலந் துளைச்சிகிச்சைத் தயிலங்
குருதிவழி சிலைத்தயில மென்பவையாஞ் சிலநெய்
கூறுமைந்து நான்குமூன் றிரண்டொன்றிற் காங்காண்
கருதிமுதற் றயிலமுதன் மேகரா ஜாங்கங்
கடையிடையி லுணர்வரெல்லாங் கற்குமருத் துவரே.

(இ - ள்.) சூரியனது ஒளிபோன்ற இத்தைலவருக்கச் சுருக்க மென்னும் நூலிற்சொல்லும் சகல தைலங்களும் ஒப்பற்ற ஆயுள் வேதத்திற் கூறும்படியான சிரசிற் கிடுகின்ற முடித்தைலம், உள்ளுக்குக் குடிக்கின்ற குடித்தைலம், சருமத்தின்மீது தடவிப் பிடிக்கின்ற பிடித்தைலம், நவத்துவாரங்களின் வழியாகச் செலுத்துகின்ற துளைச் சிகிச்சைத்தைலம், புரைகளின் வழியாக ரத்தமுதலியவைகளை ஒழுகப்பண்ணுகின்ற துஷ்ட விரணங் களுக்கு உதவுகின்ற சிலைத்தைலம், என ஐவகைக்குள் அடங்கும். இவற்றுள் சில தைலங்கள் மேற்கூறிய ஐந்திடத்தைப்பற்றிய ஐவகைச் சிகிச்சைக்கும் சில நான்கு வகைக்கும், சில மூன்று இரண்டு ஒன்றிற்கும் ஆகும். இவ்விவரங்களை இந்நூலில் முறை யாகவைத்த முதற் றைலமாகிய சுக்குத்தைலம் ஆதியாக மேக ராஜாங்கத்தைலம் அந்தமாக இவைகளின் நடுவிலுள்ள தைல வகைகளை யெல்லாம் நன்றாய் ஆராய்ச்சிசெய்த வைத்தியர்கள் சிந்தித்தறிவார்கள், எ-று. (6)

தைலம் இப்படிப்பட்ட தென்பது

விருத்தம்

திரவியப் பார்வைபுனி தம்பச்சை யெரிசுடர்ச்
சேர்வைமோ தற்றுகளிடை
பரவுநீர் பாக்கியஞ்சு ரசமாதி நெய்யளவை
பகர்கற்கவெண்பொடி நிறை

விரவவரைப் புக்கரைப் பிடலெரிப் புத்துழவல்
வேண்டுபத மூற்றல்சுத்தி
யரவெனுந் துதியிவிரு பத்திரண் டுந்தவறி
டாதுபுரி யிற்றயிலமே.

(இ - ள்.) குடிநீர் கற்கம் முதலியவைகளுக்கு ஆகுந்திரவியங்களை மாறுபாடில்லாத வண்ணம் பார்வையிடுதல், அவைகளைச் சுத்திசெய்குதல், பச்சையாயாவது அனலில் வறுத்தாவது சூரிய புடம் வைத்தாவது இடிக்குதல், தூளாக்குதல், மதித்தல், ஆற்று நீர், குடிநீர், சுரசமாதிகள், நெய்வகை இவைகளின் அளவுகாண்டல், கற்கமருந்துகளின் தொகை யித்தனையென்றறிகுதல், அவைகளைப் பொடிசெய்தல், பின்பு நிறுத்துப்பார்க்குதல், அவைகளைக் கலந்தரைக்குதல், இதைக் குடிநீரிற் கரைக்குதல், அப்பாண்டத்தை அடுப்பின்மிசை பொருந்தவைத்தல், எரிக்குதல், துழாவுதல், வாதமுதலிய தேகிகளுக்கு வேண்டிய பக்குவபாகத்தை விரும்புதல், வடிக்குதல், சுத்தி என்னுந் தானிய புடமிடுதல், கருமசாந்தி செய்யுதல், என்னும் இவ்விருபத்திரண்டுவிதச் செய்கையும் பிசகாது செய்துமுடிக்கில் தைலமாம். எ-று. (7)

தைலாதிகளின் வீரியமும் பயனுங் கூறியது

விருத்தம்

இத்தயிலம் புனலெருநற் காப்பாதி யாற்பைங்கூ
ழிறுமாந் தோங்கிச்
சித்தமுவப் பப்பயனைத் தந்தளித்தா லெனப்பயனைச்
செழிக்க நல்கும்
பத்ததியிற் பிறழ்ந்திடினே நலனையொழித் தளவுபடாப்
படரை நல்குஞ்
சுத்தவிலே காதிசிந் தூரபஸ்மங் கட்குமிந்தச்
சுருதி தானே.

(இ - ள்.) தண்ணீர், எரு, காவல் முதலியவற்ருல் தவறுதலில்லாத பயிரானது செழுமையோடும் வளர்ந்து தன்னை விளைத்தவனுடைய மனங்களிக்கப் பயனையுங்கொடுத்து உலகத்தையும் இரக்ஷிப்பதுபோல், (மேற்சொன்ன 22-விதச் செய்கைகளையுடைய தைலமானது பரிமளத்தோடு) வீரியத்தை யடைந்து தன்னை விளைவித்த பண்டிதர் மனதைக் களிப்பிப்பதுமன்றி பிணியையொழித்து உலகத்தவரையும் இரக்ஷிக்கும். அந்த விதிகள் தவறுமாயின், அளவுக்கடங்காத ரோகத்தையெல்லாம் உண்டாக்கும்.

இதுவுமன்றி லேகியமுதலிய சிந்தூர பஸ்மங்களுக்கும் இந்தச் செய்யுளையே அவ்வவ்விடத்தில் விதியாகக் கொள்க. எ-று. (8)

தைலாதிகளின் குணம்

நேரிசை வெண்பா

எள்ளினெய்யு முக்கூட் டெணுநெய்யு மானெய்யும்
விள்ளுதயி லாதியென வீறுநெய்யு—முள்ளபடி
வாரந் தனக்கிருநாள் வைத்தாடி னேய்களதி
காரந் தனக்கிடமிற் காண்.

(இ - ள்.) சுத்த எள்ளினது நெய், முக்கூட்டுத்தைலம், பசுவினது நெய், சிகிச்சையில் சொல்லுகின்ற நல்ல தைலங்கள் ஆகிய இவைகளிலொன்றைச் சரீரத்திற்குப் பொருந்தியவாறே நான்குநாட் கொருவிசை மூழ்கிவருகின்றவர்களிடம் நோய்களுக் கோர் அதிகாரமுஞ் செல்லாது, எ-று. (9)

வைத்தியசாலை விதி

பூவிலக்கணம் தசவிதப்பொருத்தம் பித்திகை யெழுப்புங்காலம் கட்டிடத்துணைக்கருவி மந்திரத்திகை அமைப்பு இவைகளைக் கூறியது

விருத்தம்

குழிபடுமண் டெற்குமேற் குயர்வினிப்புத் தென்பாற்
கூழ்முதலொன் பானலமிக் குறியெழுநன் னிலத்தில்
வழிபடுதை வதங்குருபண் டிதன்சிகிச்சை களுக்கா
மானமொடீ ரைம்பொருத்தம் வைத்துயர்வாத் தெழுங்காற்
செழிபடுநன் மரங்கருஞ்சாந் திட்டிகைசுண் ணத்தாற்
சிற்பமுண ரக்குயிற்றத் திருவளர்மந் திரத்திற்
பழிபடுமுற் கருமசாந் திச்சாலை வேள்வி
பணிவைத்திய நாதர்பவ னம்பவனப் பாலே.

(இ - ள்.) வடக்குமுகமாக நின்றுகொண்டு ஒரு சதுரப்பூமி மத்தியில் ஒருமுழ ஆழமும், சதுரத்துக்குச்சதுரம் ஒருமுழ அகல நீளமுள்ள ஒரு குழியை மண்வெட்டியினால் வெட்டி, வெட்டிய மண்ணை அந்தக் குழியில் நிரப்ப அது அதிகமானாலும், அந்நிலமே தற்கும் மேற்கும் உயர்ந்திருந்தாலும், அந்த மண்ணை நாவிலிட இனித்தாலும், அந்நிலத்தைத் தென்பாரிசத்திலிருந்து கொத்திச்

சோதிக்குமிடத்தில் நற்சகுணங்களாகிய பொன், தானியம், இரத்தினம், செங்கல், தவளை, பசுமாட்டுக்கொம்பு, அரணை, நண்டு, நன்னீர் ஊற்று ஆகிய இவ் 9-வகைக்குள் ஏதேனும் ஒன்று தோன்றினாலும், அது உத்தம பூமியாம். அதில் வழிபடுதெய்வம் ஆசான் பண்டிதன் சிகிச்சை என்னும் இந்நாற் பெயருக்குள், ஒரு பெயருக்கிணங்கிய மானம் தீர்க்கம் தேகம் என்னும் முப்பொருத்தத்தோடு * தசவிதப்பொருத்தமும் வைத்து † வாஸ்துபுருஷன் எழுங்காலத்தில் அஸ்திவார முதல் சுவருகளும் எழுப்பி, அதில் நல்ல மரங்கள் சேறு செங்கல் சுண்ணம் என்னு மிக்கருவிகளைக் கொண்டு சிற்பநூல் விதிப்படி இல்லமமைத்து, அதில் வாயு திக்கில் ஆயுள்வேதத்திற்கு ஆதிகருத்தாவாகிய வைத்திய நாதர்க்கிடமும், கருமசாந்திச் சாலையும், வேள்விச்சாலையும் அமைத்து, எ - று. (10)

இதுவுமது

பாற்கரியோன் றிசைநீருப் பியமனுணற் சுனகன்
 பலகலையீன் றற்றுயிலா சான்குடக்கு வடக்கி
னூற்கரிகொள் பிடக்குறைபற் சிகிச்சைநிரை யரன்பா
 னேற்றனவ தானியங்கட் கேற்றநிவே சனஞ்செய்
மாற்கரியோ னுதல்விழிப்பார் கீட்டிசையிற் றெளிநீர்
 மரப்பேழைப் பித்திகைபல் கணிமுகூரக் ககனம்
மேற்கரிய நிறத்தூமம் போக்கிமுத லமைய
 மேலையியல் கொடுபலவாஞ் சாலைகளும் புரியே.

(இ - ள்.) இந்திரதிக்கில் நீராடுதற்கும் லவணம் வைப்பதற்கும், இயமதிக்கில் உண்பதற்கும், நிருதிதிக்கில் பலசாத்திரம் வைப்பதற்கும், பிரசவத்திற்கும், வருணதிக்கில் சயனத்திற்கும், ஆசான் வசிப்பதற்கும், குபேரதிக்கில் பண்டிதர் இருப்பதற்கும், மருந்து வைப்பதற்கும், சிகிச்சை செய்வதற்கும், பசுத்தொழுவங் கட்டுவதற்கும், ஈசானதிக்கில் தவஞ்செய்வதற்கும், நவதானியங்கள் வைப்பதற்கும், வீடுகளமைத்து, அக்கினிதிக்கில் அப் பாகத்

* தசவிதப்பொருத்தமாவன: ஆதாயம் செலவு யோனி வாரம் திதி நக்ஷத்திரம் ராசி அங்கிசம் ஜாதி வயசு என்பவைகளாம். † வாஸ்து புருஷன் எழுங்கால நிர்ணயமாவன: சித்திரை மாதம் 10-தேதி வைகாசி மாதம் 21-தேதி ஆடி ஐப்பசி மாதங்களில் 11-தேதி ஆவணி மாதம் 6-தேதி கார்த்திகை மாதம் 8-தேதி தை மாதம் 12-தேதி மாசி மாதம் 20-தேதி ஆம். இவைகளை விரிக்கிற் பெருகும் ஆதலால் மயன் நூலாதியான சிற்ப நூல்களிற் காண்க.

துக்குள்ள கீழ்த்திசையில் தெளிநீர்க்கேணியும், சுற்றிலும் * அறை மாறி வைத்துக் கட்டிய சுவரும், பலகணி வாசல்களும், கண்ணுடி பதித்த ஆகாயமும், புகைக்கூண்டும் அமைப்பதன்றிப் பாகசாலைக்காகப் பிறந்த இலக்கணத்தைக் கொண்டு பற்பல சாலைகளையுஞ் செய்வாய், எ - று. (11)

இதுவுமது

புரிபுனித வுலைபுடமுப் பூப்புடநெல் லுமிவெண்
புடவையிருந் தைமயனப் புடமுதற் சாலைகளு
மெரிசுடரோ டிருசுடர்கா லுறைபுறைவிற் கூட
மெற்றறட்டற் போழல்வினைக் கெஃகிறை கோல்கள்
வரிகறையெந் திரவலரை சிலைகுமிழ்ப்பு வடித்தல்
மணிவடகஞ் சுதைபொடிசிந் தூரவைப்பு குடிநீர்
விரிதிரவ நீர்படங்கு சாயனலே காதி
விளைச்சுலிச்சா லைகள்பலுறைச் சாலைகளும்விதியே.

(இ - ள்.) சுத்தி செய்கிறசாலை, உலைச்சாலை, புடச்சாலை, † மூவிதமாகிய பூப்புடச்சாலை, நெற்புடச்சாலை, உமிப்புடச்சாலை, சீலைப்புடச்சாலை, கரிப்புடச்சாலை, மயனப்புடச்சாலை, தீபப்புடச் சாலை, சூரியபுடச்சாலை, சந்திரபுடச்சாலை, காற்றுலவுஞ்சாலை, காற்றுலவாச்சாலை, கூடச்சாலை, நறுக்கல், பிளத்தல் முதலிய தொழிற்குரிய ஆயுதச்சாலை, நிறுக்கிற துலைச்சாலை, உரற்சாலை, ஏந்திரசாலை, நன்னிக்கல் அம்மிச்சாலை, முறம் முதலியவற்ருல் கொழிக்கிறசாலை, வடிக்கட்டுகிறசாலை என்னும் இவைகளும், மாத்திரை, வடகம், சுண்ணம், பஸ்மம், சிந்தூரம், குடிநீர், திராவகம், தீநீர் ‡ படங்கு, ரசாயனம், லேகியம் இவைகளை விளைக்கின்ற அடுப்புச்சாலைகளும், (சத்திரம் க்ஷாரம் அக்கினி) என்னும் மூவிதச் சிகிச்சைக்குரிய கருவிச்சாலைகளும், இன்னும் பற்பல ஔஷதச்சாலைகளும் தனித்தனியே செய்வாய், எ - று, (12)

இதுவுமது

விதித்தவடுப் பினிலனந்த பேதமவற் றுள்ளோர்
விகற்பமறை குதுந்தைல கிருதவகைக் கெல்லாந் [த்
திதித்தவிலிற் றென்கிழக்கிற் குறுஞ்சுவரொன் றியற்றி
தீக்கப்பா னெறியிப்பால் வட்டணைவாய் மணவை

* அறைமாறி எனுஞ் சொல் அலமாரி எனமருவியது.

† மூவிதப்பூப் புடங்களாவன: மணவைப்பூப்புடம், குழிப்பூப்புடம், பூபதனப்பூப்புடம் என்பனவாம். கூடம் - சம்மட்டி.

‡ படங்கு - பதங்கம் என வழங்குகின்றது,

கசித்தவெடி யெழிற்குருசு நீணுள முழுதுங்
கற்ருனுக் கலங்காரக் குறடுதகத் திண்ணை
பதித்தகீழ் கடம்பொருந்தும் வடிச்சதுக்கஞ் சுருதி
பரவுவிநா யகபீட முதலுறையப் பண்ணே.

(இ - ள்.) பாகசாஸ்திரங்களில் அநந்தபேத அடுப்புக்களைக் கூறி யிருக்கின்றன. அவற்றுள் தைலகிருதாதிகளுக்காகும் ஒரு பேதத்தை மாத்திரம் கூறுவாம். (முன்பியற்றிய) வைத்திய சாலையினுடைய அக்கினிதிக்கில் அமைத்த பாகசாலைக்குள் கிழக்குச் சுவற்றில் நின்றும் (11-அடிக்கு மேற்காக 2½ அடி கனமும் 6 அடி உயரமும் தெற்குச்சுவரை யொட்டி 23 அடி நீளமுமுள்ள) சிறிய சுவரொன்று எழுப்பி, அந்தச் சுவற்றிற்குக் கீழ்ப்புறத்தில் தீமூட்டுவதற்கு வழியும், மேற்புறத்தில் பாண்டம் வைப்பதற்கு வட்ட வடிவான வாயையுடைய அடுப்பும், அதற்குத் தென்புறத்தில் புகை போவதற்கு நீளமாயும் ஒழுங்காயுமுள்ள ஒரு குழாயும் அமைத்து, அதற்கு மேற்புரத்தில் ஆயுள்வேதம் முழுதுங் கற்றுணர்ந்த பண்டிதன் உட்காருவதற்கு அலங்காரத்திண்ணையும், அதற்கு வடபுறத்தில் தண்ணீர் நிரப்பி வைப்பதற்குக் கட்டிய ஒரு சதுக்கமும், புரியணைமேல் பொருந்த வைக்கின்ற வடிப் பாத்திரத்தில் தைலம் வடிப்பதற்காக அப்பாத்திரத்தை வைக்கின்ற வடிச்சதுக்கமும், வேதங்கள் துதிக்கும்படியான விநாயக பீடம் நந்திபீடம் முதல் செய்வாயாக. எ-று. (13)

அடுப்பின் பக்கங்களி லிருக்கவேண்டிய கருவிகள்

விருத்தம்

கொதியடக்கச் சிவிறிநெய்த்தீ யணைத்தலுக்கவ் வாய்ச்
சட்டி கோர கைக்குட்
பதிசுடுகற் கம்வழித்தற் கிருவாய்க்கைச் சுரிகைசுடர்
பாதத் துட்டி
யதிகரித்த குந்தணை மூழ்க்கடத்தோ டிணைப்பாண்ட
மமைத்த லன்றிப்
பதிமினுக்கி யாதிதுணைக் கருவிகளு மமைமணவைப்
பாங்கிற் ருனே.

(இ - ள்.) தைலகிருதாதிகள் காய்ச்சும் காலத்தில் அடுப்பின் பக்கங்களில் முக்கியமாக இருக்கவேண்டிய கருவிகளாவன: கொதியை யடக்குவதற்கு விசிறி, தைலத்தில் தீப்பிடிக்கில் அணைப்பதற்கு அந்தத்தாழி வாய்க்குச் சரியான ஒருசட்டி, அகப்பைக்குள் பிடிக்கின்ற சுடுகையுள்ள கற்கம் வழிப்பதற்கு இருபுற

முங் கூர்மையுள்ள சிறியகத்தி, பதிவிளக்கு, அடியிற் சுடுகை யுள்ள குந்தணே, துழாவுகின்ற அகப்பை வைத்தற்கு ஒரு சட்டி, அடுப்பிலிருக்கிற பாண்டத்திற்கு அபாயம் நேரிடுங்கால் மாற்றுவ தற்கு மற்றொரு பாண்டம், விளக்குமாறு முதலிய துணைக்கருவிக ளாம். எ-று. (14)

மட்கல விலக்கணம்

விருத்தம்

உவர்சவரு மற்றநீர் நிலக்குடிச்சக் கிரிகை
  யுருவிவழித் திடுமணில்வா லுகமளவி யிழைத்துத்
துவர்மருவப் புளிப்பேற்றி யொருபக்கந் துவைத்துத்
  தூருகனத் தோடேயெத் தொழிற்கும்பா சனஞ்செய்
அவிரனலேற் றிடுகுடிநீர் தைலமாதி கட்கென்
  றமைப்பதில்வெண் பருமணலை யடிக்கடியிற் பொதிந்தே
சுவரடருஞ் சுள்ளை நடுக் கண்ணுறச்சுட் டெடுத்துச்
  சொற்படிக்குண் மேலளவைக் குறியிலக்க மெழுதே.

(இ - ள்.) உப்பும் சவரும் இல்லாத நன்னீரையுடைய பூமியில் வசிக்கும் குயவன், திகிரியில் பாண்டங்கள் வனையும்போது கையை உருவி யுருவி வழித்துச் சேர்க்கும் மண்ணைச் சேகரித்து, அதற்கு 4-ல் ஒரு பங்கு மணலைக் கலந்தரைத்துத் துவர் ஏற்றிப் புளிக்கவைத்து 15-நாள் வரைக்கும் நித்தியமும் மிதித்து அந்த மண்ணில் அடிகனமுள்ளதாக எவ்வகைத் தொழிற்கும் பாண்டங் களைச் செய்வாயாக. இவற்றுள் பிரகாசிக்கும் தீயையுள்ள அடுப் பில் ஏற்றப்படுகிற குடிநீர் தைலமுதலிய வகைகளுக்கென்று நிரு மித்துச் செய்கின்ற பாண்டங்களின் அடித்தூறில் வெளுத்த பரு மணலையப்பிப் பதித்துக் காயவைத்துக் கண்விழும்படிக்குச் சுவ ரடர்ந்த சூளையிற் சுட்டெடுத்துப் பிரயோகத்துக்குத் தக்கவாறே அக் கலங்களில் 1-படி முதல் 64-படி வரையில் குடிநீரளவை யறி வதற்காக உட்புறத்தில் குறியும் வைத்து வெளிப்புறத்தில் இலக் கமும் எழுதுவாயாக. எ-று. (15)

இதுவுமது

எழுதிட நேர் விரலறுநான் கிருபதிற்றே மாயி
  னியற்றுவா யெட்டிலக்கா யெந்தவெந்நீர்க் கடமும்
மூழுதுமண நெய்மயனம் படங்குழூப் புடங்குய்
  முகர்குடுவைப் பறியுறிபான் மோரெண்ணெ யுதகந்

தொழுதுபெறு தைவதமங் களமிசையா திகளாய்ச்
சொல்லும்வகைக் கடங்களின்வாய் சுருங்கலிலக் கணங்
பழுதுரு தெடுத்தூற்றத் தாங்குகல மெல்லாம் [காண்
பண்டியினும் வாயகலப் பண்ணுவது முறையே.

(இ - ள்.) குடிநீர் தீநீர் பானைகட்கு அகட்டினது குறுக்களவின் அங்குலம் 24-ம் உயரத்தின் அங்குலம் 27-ம் ஆகச் செய்யில் வாயின் அகலத்தை 8-அங்குலமாகச் செய்யவேண்டும். இதன்றியும், முழுது மணப்புள்ள * சந்தனநெய், மெழுகுத்தைலம், படங்கு, பூப்புடத்தைலம், புகையாலுண்டாகிய திராவகம் குடுவைப்பறி, கொப்புளம் எழும்புவதற்காக வாயினுல் காற்றை யுறுஞ்சுகிற ஒருவித பாத்திரம், பால், மோர், எண்ணெய்வகை, தண்ணீரெடுத்தல், தெய்வ ஆராதனை, மங்களகாரியம், சங்கீதம் முதலிய வகைக்குச் செய்கின்ற கடங்களுக்கு வாயானது தக்கபடியே சுருங்கி யிருப்பதே விதியாம்; அன்றியும் சிந்தாமல் எடுத்து ஊற்றுகின்ற பொருள்களைத் தாங்குகிற பாத்திரங்கள் எல்லாம் அவைகளின் வயிற்றைப்பார்க்கிலும் வாயை விரிவாகச் செய்வது விதியென்றறிக. எ-று. (16)

சட்டிகளின் இலக்கணம்

நேரிசை வெண்பா

கல்லையொத்தவ் வெல்லைமுற்றுங் காவ றணைப்பூணின்
மல்லையொத்துக் கம்பீரம் வாய்ந்திருக்கி—னெல்லை
வறலுக்காஞ் சட்டியது மாந்துங்கு வாத
வறலுக்காஞ் சட்டி யறி.

(இ - ள்.) கலத்தைப்போலச் சுற்றிலும் வரம்புள்ளதா யிருக்கில், அது வறுக்கின்ற பொருளுக்குதவுஞ் சட்டியாம். மல்லையைப் போல ஆழமுள்ளதா யிருக்கில், அது அருந்துகின்ற சிறு குடிநீர் சுரச முதலியவைகளுக்கு உதவுஞ் சட்டியாம், எ - று. (17)

இவ்விதப் பாத்திரம் ஆகும் ஆகாதெனல்

விருத்தம்

எக்குவா தந்தைலங் கிருத மாதி
யெரிக்குங்கா னவலோக கடங்க ளொவ்வா
வொக்குமெனிற் பகைக்கஞ்சா வன்மை வேண்டு
மூலோகமஃ தின்றென்னி லதைப்புக் காகு

* சந்தனநெய் - அத்தர்.

மிக்குறைகா ரனக்கனந்த மாறு தற்கே
மிலேச்சமைக்காங் கலங்களெனப் புலம்பு வார்க
ளக்குயில்முப் பிணிக்கருத்துங் கலங்க ளேயா
மறைந்தவைகட் கெவ்விதத்துந்திறந்தான்மண்ணே.

(இ-ள்.) எவ்விதக் குடிநீர் தைலம் கிருதம் முதலியவை களைக் காய்ச்சப்புகுங்கால் நவலோக பாத்திரங்கள் ஒவ்வாவாம்; ஒவ்வுமென்னில் அந்தந்தப் பாத்திரங்களைக் கெடுக்கும் சத்துருச் சரக்குகள் சேர்த்தரைத்த கற்க மருந்துக்குப் பயப்படாத தன்மை இருக்க வேண்டும். அது இன்மையால் ஒவ்வாவென் றறிக. இருப்புப் பாத்திரத்தில் சத்துருவின்றிய கற்கஞ் சேர்ந்த தைலாதிகளைக் காய்ச்சில் அவை சோபை வியாதிகளுக்காகும். வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் முப்பிணிக்கும் முறையே வெண்கலம், தங்கம், செம்பு என்னும் இவைகளில் காய்ச்சலா மென்று சொல்லுவார்கள். அவை முத்தேகருக்கும் மருந்தூட்டுங் கலங்களேயன்றி காய்ச்சு வகைக்கு ஆகாவாம். இங்ஙனம் கூறிய வைக்குள் எவ்விதத்தும் மட்கலமே உறுதியாம். எ - று. (18)

குந்தணை யிலக்கணம்

விருத்தம்

பணையடுப்பிற் றயிலாதி பருவமுற் றுருமுனடிப்
பழுது றிற்குந்
தணையிருத்திப் பதத்தெடுப்ப ரக்கருவி யெக்கலமீ
தகடு மட்டு
பிணையநீக் கறத்தகடுங் கொளக்கீழ்த்தீ மிச்சிலெரிக்
கிடப்பத் தப்பாற்
கணைமருவச் சாளரவா யிலுமமையக் கரும்பொன்னுற்
கலஞ்செய் யீதே.

(இ-ள்.) உயரமுள்ள அடுப்பில் தைலகிருதங்கள் காய்ச்சு கையில், பாகம் வந்தும் வராமலுமாக இருக்கிற தருணத்தில் அப் பாத்திரத்தில் பழுது நேருமாயின், அதைக் குந்தணையிற் சேர்த்துப் பக்குவம் வருமளவுங் காத்துத் துழாவிப் பதத்தில் சேகரிப்பார்கள். அக் கருவியாவது, தைலப்பாத்திரத்தின் வயிறு மட்டுங் கொள்ளும் அகலமும் உயரமும் இணக்கமும், அடியில் கரிநெருப்பின் புகையானது வெளிப்படும்படியான துவாரங்க ளைப் பொருந்தி உள்ளில் ஆகாய நிறைந்த வட்டவடிவான

பாதமுமுள்ள ஒரு அண்டாவைப்போல இரும்பினுற் செய்வ தாம், எ - று. (19)

புலமினக்கி யிலக்கணம்-இதுவே விளக்குமாறு

நேரிசை வெண்பா

பாற்புலடை யேடகணி பாளை கவரிவகை
பாற்புலமி னுக்கியிழைத் தாசகற்றி—மேற்புலவர்
யாகசாலை யைப்பொருத வான்மெழுக்கிட்டச்சலந்தூய்
பாகசாலை யைப்புனிதம் பண்.

(இ - ள்.) இயல்புள்ள தருப்பை மாவிலை தெங்கு பனை இவ் வோலைகளின் அகணி, பாளைகள் கவரி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றுல் புலமினுக்கிசெய்து, பதவியிலுள்ள தேவர்க் குணவளிக்கச் செய்கின்ற யாகசாலையைப்போல் பரிசுத்தப்பட விளக்கி, கோமய கோசலத்தால் பாகசாலையைச் சுத்தி செய்யக் கடவை, எ - று. (20)

உரல்வகையும் உலக்கைவகையும்

நேரிசை வெண்பா

கல்லிருப்பொண் கஞ்சங் கறைபா முனையிரண்டிற்
பல்லிருப்பொன் ஞெ றுசமன் பாரைகளாங்—கல்ல
வழிக்கக் கொழுமூழி வைகைக் கடைப்பாரை
செழிக்கவமை சேகுமாஞ் செய்.

(இ - ள்.) கருங்கல் இரும்பு ஒளிபொருந்திய வெண்கலம் என் னும் இவற்றுல் தனித்தனியே உரல்களும், ஒருமுனை பலாமுட் களைப்போற் பற்களை யுடையதாகவும் ஒருமுனை சமமாகவுமுள்ள இருப்புலக்கையும், இடித்த சரக்குகளைக் கிளற வழிக்க ஒருமுனை கொழுவைப்போலும் ஒருமுனை அகப்பையைப்போலும் அமைத்த சிறிய கடைப்பாரையும் செய்வதன்றி மரவயிரத்திலுைம் செய்யக் கடவை, எ-று. (21)

சில்லியடை யிலக்கணம் இதுவே சல்லடையாம்

விருத்தம்

*** சாதிவங்க மிரதிகளாற் படகமிரண் டகமிணையுந்**
தகைமைத் தாய்க்கீழ்ப்
பாதியிலுட் புறவரம்பிற் றடுத்தாழி வலையமொன்று
பதித்துட் பாங்கர்

---

* சாதி - தேக்கமரம், வங்கம் - வெள்ளி, இரதி - பித்தளை,

மீதிலணுத் தமர்களமைத் தவையுழிநார் தந்துதந்தி
மிடையப் பின்னி
யோதியமுன் னேர்மூடத் திறக்கவிழை சில்லியடை
யுருவ மீதே.

(இ - ள்.) தேக்குமரம் வெள்ளி பித்தளை என்னும் இவற்றுள் ஏதேனும் ஒன்ருல் தம்பட்டவுருவமாகவும், மூடுங்கால் இரண்டினது ஆகாயமும் ஒன்று படுவதாகவும், (உள்ளிலும் வெளியிலும் பிதுக்கமின்றி அழகுறப் பொருந்துவதாகவும்,) கீழ்மேல் என்கிற அடையாளந் தோன்றுவதாகவுமுள்ள இரண்டு கருவிகள் அமைத்து, (இவற்றுள் கீழ்க்கருவியின் உட்புற வரம்பில் ($\frac{1}{8}$) அங்குல ஆழமும் ($\frac{1}{2}$) அங்குல அகலமுமாகச் சுற்றிலும்) தடுத்து (மட்ட சுத்தஞ்செய்து தடுத்த பள்ளத்தின் உயர்வும் உள்வெளியில் பிதுக்கமும், வெளியில் தூக்குவதற்காக அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மோதிரவளையமும் அமைத்துள்ள வெள்ளியிலாவது பொன்னுலாவது செய்த) ஒரு வளையம்பதித்து, அதன் உட்புறவரம்பைச் சுற்றிலும் அணுப்போன்ற சிறு சிறு துவாரங்களிட்டு அத்துவாரங்கள் தோறும் நார்பட்டுநூல் என்னும் இவற்ருல் முறுக்கிய இழைகளையாவது, பொன் வெள்ளி இவைகளின் கம்பிகளையாவது நுழைத்து நெருங்கப்பின்னி, முன்புகூறிய மேற்கருவியைக் கவிழ்த்துமூடி அது திறக்கவும் மூடவுமாகக் கீல்களிசைத்துச் செய்யக்கடவை; இதுவே சில்லியடை என்கிற கருவி, எ-று. (22)

அம்மிவகை குழவிவகை

விருத்தம்

பொருதலைப் புனன்ம ருந்தும் பொடியரை குழியம் மிக்குட்
டருதலைப் பருகாட் டம்மி தனிப்பசை யுறைம சிக்கு
மொருதலைக் குழவி யம்மி யுயர்மருந் திழைத்தற் கொவ்வு
மிருதலைக் குழவி யம்மி யெக்கற்க வகைக்கு மேற்கும்.

(இ-ள்.) அலைபொருந்திய பிரவாகம்போற் சலப்பெருக்குள்ள சரக்குகளையும், சலத்தையேவிட்டு அது அலையும்படி ஆட்டுகின்ற மருந்துகளையும், பொடியாயாவது கற்கருபமாயாவது செய்யப்படும் வஸ்துக்களையும், கலுவம் என்கிற குழியம்மியில் அரைக்கக்கடவை. கொடுக்கும் வஸ்துக்களை யுள்ளிழுத்துக் கொள்ளுவதாகிய ஆட்டு அம்மியானது, ஒப்பற்ற பிசின்போன்ற பசையுள்ள திரவியங்களை மசியப்பண்ணும். ஒருதலைக் குழவியம்மி

உயர்ந்த மருந்து வகைகளை யிழைப்பதற்காகும். இருபக்கமும் தலையுள்ள குழவி அம்மி சகல கற்கவகைக்கும் உதவும், எ-று. (23)

விறகின் பேதம்

விருத்தம்

மெய்யனற்போக் கருந்தைலங் கட் * கேம புட்பி ‡ பலை விழிமூக் கட்டா, ணெய்யருந்து நெய்யாதி களுக்கு சிலங் ‖ கோற்கொடியா நீவிப் பூசுப், வெய்யபிடித் தைலாதிகளுக் கிருப்பை புளியாதி விறகா மின்றேற், செய்யவிகட் கவ்வ வற்றிற் கேற்றவோர் குலக்காட்டத் தீநன் ருயே.

(இ-ள்.) சரீரத்தில், சுரம் முதலியவைகளை நீக்குகின்ற உயர்ந்த தைலங்களுக்கெல்லாம் ஆவாரைவிறகும் சிற்ருமுட்டி விறகுமாம். கண் நாசி செவி பாதம் ஆகிய இவைகளுக்கு இடுகின்ற நெய்களுக்கும், குடிக்கின்ற தைலங்கட்கும், கிருதாதிகளுக்கும், உசிலம் விறகும் இலந்தை விறகுமாம். தடவிப் பூசுவதாகிய உஷ்ணமுள்ள பிடித்தைல வகைக்கெல்லாம், இலுப்பை புளி முதலிய மரங்களின் விறகுமாம். இவைகள் கிடையாவிடத்தில், காய்ச்சுகின்ற தைலங்களின் தாரதன்மையங்களுக்கேற்ப ஒருசாதி விறகினது தீயாலெரிப்பது உத்தமமாம், எ-று. (24)

சுசியக்கினி

நேரிசை வெண்பா

அரணிகருங் கல்லெரிப்பூ தாதிபுடங் கட்காந்
தரணிசசி வேள்வித்தீ சாற்றும்—பரணிகளி
விட்டவையெ டாமுன்வெறி யேறிமருங் கேகினவை
கெட்டவைவீ ரஞ்சுவைபோங் கேள்.

(இ-ள்.) தைல கிருத வகைகளைக் காய்ச்சுதற்கு, அடுப்பு துருத்தியுலை புடம் முதலியவைகளுக்குச் சுத்தாக்கினி வேண்டும். அதாவது அரணி, § சிகிமுகி சூரியன் கருப்பூரம் நித்தியாக்கினி என்னும் இவ் 5-வகைகளில் ஏதேனும் ஒன்றில் எடுக்கின்ற அக்கினியாம். இது நிற்க, அடுப்பின் மிசை வைத்திருக்கின்றவைகள் பாகமாகி இறங்குவதற்கு முன்னம், அவ் வடுப்பின் அக்கினியிற் கொஞ்சமேனும் மற்றொரு தொழிற்குச் செலுத்துகையில், விகற்ப

---

* ஏமபுட்பி - ஆவாரை, ‡ பலை - சிற்ருமுட்டி, ‖ கோற்கொடி - இலந்தை.
§ சிகிமுகி என்னுஞ்சொல் - சக்கிமுக்கி எனத் திரிந்தது.

முறுவதுமன்றி அவைகட்குரிய அழகும் வீரியமும் சுவையும் நீங்கும். எ - று. (25)

குடிநீர்க்குரிய நீரிலக்கணம்

நேரிசை வெண்பா

சேற்றுநீர்ப் பாசிசுக்கான் சீதஞ் சரகுப்புக்
காற்றுநீ ரன்றேரி கால்குளத்து—மாற்றுநீர்
ஊற்றுநீ ரென்கினுநோ யோட்டு மருதநிலத்
தாற்றுநீர் † நிர்த்துகத்திற் காம்.

(இ - ள்.) சேறு நீர்ப்பாசி சுக்கான் சீதளம் சரகு உப்புழ காற்று இவைகளின் சம்பந்தமான நீர் ஆகிய ஒவ்வொன்றும் குடிநீர் வைப்பதற்கு உபயோகப் படுவதன்று; ஏரியிலும் கால் வரத்துள்ள குளத்திலும், பழமையுறாது மாற்றப்படுகின்ற சலம், ஊற்றுச்சலம் ஆகியவை அக்குடிநீர் வைப்பதற்கு உபயோகப் படிமென்று சொல்வாராயினும், பிணியைப் போக்குகின்ற மருத நிலத்திலுள்ள ஆற்றுநீர் ஒன்றுமே அதற்கு உபயோகமாகும். எ - று. (26)

குடிநீரளவை விதி

நேரிசை வெண்பா

குறியிராப் பாண்டக் குடிநீ ரளவை
யறியுநீ ருண்டசரக் காக்கிக்—குறிநீர்விட்
டக்குறிகைக் கோன்மிசைவைத் தப்பெல்லா முற்றெரி
பக்குறிநிற் கிற்குடி நீராம். [யம்

(இ - ள்.) குறியிட்டிராத பாண்டங்களில், குடிநீரின் படி யளவை கண்டு வடிக்க வேண்டுமாயின், அப் பாண்டத்தில் இட்ட சரக்குகளை நீருண்ட சரக்கெனக் கூறும்படிக்கு நனைத்து மட்டமாகப் பரப்பி எவ்வளவு குடிநீர் வேண்டுமோ அவ்வளவு நீரை அதில் விட்டு, அந்த நீரளவை ஒரு சிறிய கோலின் மிசை குறியிட்டெடுத்துவைத்துக்கொண்டு; பின்பு விடவேண்டிய நீரை யெல்லாம் விட்டு எரித்து, அக்கோலின் குறிக்குச் சரியாக நிற்கு மாயின் அதுவே அளவைக் குடிநீராம், எ - று. (27)

குடிநீர்காய்ச்சுபேதமும் வடிபேதமும்

நேரிசை வெண்பா

குடிநீர் வடிவிதியைக் கூறின் மிகுநேய்க்காங்
குடிநீர் வடிவிதியைக் கூறும்—குடிநீ

† நிர்த்துகம் என்பது கஷாயம்.

ரளவையங்கங் காயரத்த மாதிவகை காய்ச்சு
முளவையங்கள் கூறியவா றோர்ந்து.

(இ - ள்.) குடிநீர் காய்ச்சி வடிக்கும் விதிகளை விரிக்கிற் பெருகும். அது நிற்க, தைலங்களிற் சேர்க்கும் கஷாயங்களின் அளவையும், அக் கஷாயங்களுக்குரிய திரவியம், சலம் இவைகளின் அளவையும், இந்நூற்குள் அவ்வவ் விடங்களிற் காண்க. இங்ஙனம் குடிநீர் வடிக்கும் விதியையும், அரக்கு முதலிய திரவியங்களைக் காய்ச்சும் நுணுக்க விதியையும் ஆயுள்வேதங் கூறியவாறோர்ந்து கூறுவாம், எ - று. (28)

இதுவுமது

விருத்தம்

துப்புபல நிரியாசஞ் சீறிதழ்ப்பூ பிட்டந்
தோகமுறு விதைமிதந்தே தோற்றும்வகை முழுது
மப்பிலிட்டுக் காய்ச்சுங்காற் கிழிகட்ட லூன்றெக்
கடைபலங்காய் தானியம்வெவ் வேறட்டனுன்காகச்
செப்புவன்மை வேராதி களைவெவ்வே றிடத்துச்
சீவனீயத் தூறச்செய் தாக்குநற் குடிநீ
ரொப்பிலடை பஞ்சமூ லாதியெனு மிலக்கத் [ரே.
துள்ளவையொன் றுறச்சுருக்க லோத்தினுரை யுண

(இ - ள்.) குடிநீர் வருக்கத்தில் கிழிகட்டிக் காய்ச்சப்படுந் திரவிய வகைகளாவன: கொம்பரக்கு பலவிதப்பிசின்கள் சிறிய இதழையுடைய புட்பங்கள் மாவுகள் அணுத்துவமாகிய வித்துக்கள் சலத்தில மிதக்கப்படுகின்ற பொருள்கள் என்பனவாம்— தனித்தனியே காய்ச்சப்படுகின்ற வகைகளாவன: மாமிசம் பட்டை இலை பழம் காய் தானியம் என்னுமிவைகளாம். நைய இடித்துச் சலத்திலூறிய பின்பு காய்ச்சவேண்டிய வகைகளாவன: விருக்ஷம் செடி கொடி புல் என்னும் நான்கு வருக்கத்தா லுண்டாகின்ற வயிரமுள்ள வேர்கள் முதலியவைகளாம். இந்நான்கு வகையிலுள்ள வேர் கிழங்கு பட்டை கட்டை பிசின் இலை பூ கனி வித்து என்னும் (8) பதார்த்தங்களையும், காரசாராதி திரவியங்களையும் ஒன்றுபட இடித்து ஒருபானையில் அடைத்துக் காய்ச்சுவது அடைக்குடிநீர் என்றும், சரக்குகளின் தொகையால் பெயரிடப்பட்ட பஞ்சமூல கஷாயமாதியான கஷாய வருக்கங்களைத் தொகைக் குடிநீரென்றுஞ் சொல்வது ஆயுள்வேதவாக்கிய மென்றுணர்க, எ-று. (ஆதலால் அச்சரக்குகளைத் தனித்தனியே காய்ச்சக்கூடாது.) (29)

இவ்வகைத் திரவியங்களை யித்தனைநாள் காய்ச்சில் ரசம் வருமெனல்

நேரிசை வெண்பா

காழாதி வல்லிதந்தி காயிலைதோ லூன்பலங்கீ
ழாழா திவர்தா னியவகைநான்—சூழாதி [தைப்
யோர்ந்திருசட் டேழுமூன் றென்றிந்நாட் காய்ச்சிடத்
பேர்ந்திருசத் தம்பில்வரும் பேசு.

(இ-ள்.) வயிரக்கட்டைகளை 12-நாள், வன்மையுள்ளவேர்களை 7-நாள், கொடி நரம்பு என்னும் இவைகளை 3-நாள், இலை, பட்டை, மாமிசம், கிழங்கு, தானியம் ஆகிய இவைகளை ஒவ்வொருநாள் காய்ச்சில் அவைகளி லிராநின்ற சத்துக்கள் அவ்விடங்களைவிட்டு அம்பு என்னும் குடிநீரில் வருவனவாம். எ-று.

மதாந்தரம்

நேரிசை வெண்பா

வேராதி யெட்டாய் விரிபதார்த் தங்களையுந்
தாரார் மணியுபர சங்களையுஞ்—சேரா
விடியிடி நுண் டூளா யிடித்துக் குடிநீர்
வடிவடியெ னுஞ்சில மதம்.

(இ-ள்.) வேர்முதல் வித்து பரியந்தமுள்ள 8-வித திரவியங்களையும், நவரத்தினங்களையும், உபரசங்களையும் நுண்ணிய தூளாயிடித்து ஒன்றுறச் சேர்த்துக் குடிநீர் காய்ச்சி வடித்துக் கொள் என்று சில மதாந்தரங் கூறுகின்றன. எ-று. (31

குடிநீருக்கும் பாலுக்கும் புறநடை

நேரிசை வெண்பா

சரக்களவை நீரளவை சாற்றுவி டத்தச்
சரக்களவைக் கீரிரண்டு தண்ணீர்—பரக்கவிட்
டத்தொகைக்கோர் கூறுகடா யங்கொட் பயசுதயி
லத்தொகைக்கெண் கூறமைக்கி னும்.

(இ-ள்.) சரக்கினது இடையும், சலத்தினளவும், குடிநீர் இறக்குகின்ற பிரமாணமும் இவ்வளவெனச் சொல்லியிராத இடத்தில், அந்தச் சரக்கின் அளவின் புரகத்திற்கு 4-பாகம் சலத்தைப் பரவவிட்டு, அதை ஒரு பாகமாகக் காய்ச்சித் தைலங்களில் சேர்த்துக்கொள்ளவும். (இது நிற்க) சில தைலத்தில் பசும்பால் சேர்க்

கும் விதியைச் சொல்லியிருந்தாலும், வேண்டுமானல் அத்தைலத்திற்கு எண்மடங்களவும் சேர்த்தாலுஞ் சேர்க்கலாம். எ-று. (32)

புரியணைவகை இதுவே புரிமணையாம்

கட்டளைக்கலித்துறை

தூத்திரக் கூர்ச்சம்பை யோடதி மூவட்சித் தொக்கரம்பை
வேத்திரச் சாய்கண்டற் பூதக் குயங்கள்வைவேய்பிரம்பாம்
பூத்திர ளாதிக ளாலாழி போற்பொருந் தப்பொருந்தாப்
பாத்திரத் தூரு சுமக்கும் புரியணை பண்ணுவரே.

(இ-ள்.) பரிசுத்தமாகிய ஆண்தருப்பை, பச்சைக்கொடி, தெங்கின்நார், வாழைநார், பிரப்பங்கோரை தாழைவிழுது, ஆலம் விழுது, வைக்கோல், மூங்கில், பிரம்பு, பூங்கொத்து முதலியவைகளால் வட்டமாகக் கடத்தினது அடித்தூரைச்சுமக்கவும் அதைப் பூமியிற்படாமற் செய்யவுமான புரியணையைச் செய்வார்கள். எ-று. (33)

பிடிச்சீலை வகையும் பற்றகற்றியும்

நேரிசை வெண்பா

பருந்தந்தி ரட்டுவெண் படாம்வலைநார்ச் சீலை
மருந்தந்தம் வெங்கல வகைக்குப்—பொருந்தும்
பிடிச்சீரை பற்றகற்றி பேருரியோ ரெஃகாத்
தடிச்சீரைப் பற்றறச்செய் தான்.

(இ-ள்.) அடுப்பில் கொதிக்கின்ற தைலமாதியான மருந்துகளின் முடிவில் சுடுகையுள்ள அப்பாத்திரத்தைப் பிடித்திறக்குவதற்கு ரெட்டும், வெள்ளை வஸ்திரமும், வலைக்கோணியும், பிடிச்சீலைகளாம். தைலங்கள் காய்ச்சும்போது துழாவுதல் தவறுமாயின் கோழைபோலும் பந்தமுள்ள கற்கமருந்தானது கெட்டியாகப் பிடித்துத் தடித்து அவ்விடத்து நெய்ப் பசையை யொழித்து அந்தப் பாண்டத்தினது அடியைப் பத்தலாகப் பிளக்கும்படி செய்யும். ஆதலால்; அப்பற்றை உடனே அகற்றுவதற்காகப் பற்றகற்றி என்கிற ஒரு கருவியை இரும்பினுல் செய்துகொள்ளக் கடவை. அதாவது, சக்கிலியர் ஆளுகின்ற பிறையுருவமுள்ள ஒரு ஆயுதம்போல்வதாம், எ-று. (34)

வடிகருவிகளின் பேதம்

நேரிசை வெண்பா

கண்ணிருக்கும் புத்தாடை கம்பளநார்ச் சீலைகட்சி
விண்ணிருக்கு நெய்யரியு மேயாகும்—வண்ணக்

குடிநீர் வகையுங் கொதிநெய் வகையும்
வடிநீர் வகையும் வடி.

(இ-ள்.) குடிநீர் வகையையும், கொதிக்குந் தைலமுதலிய நெய்வகையையும், இன்னும் வடிக்கவேண்டிய சலரூபமான திரவியங்களையும், கண்களையுடைய புதிய வஸ்திரம், கம்பளம், கோணி, பறவையின் கூடு, பன்னாடை ஆகிய இக்கருவிகளைக் கொண்டு நீர்வடித்துக்கொள், எ-று. (35)

முழியிலக்கணம் இதுவே அகப்பை

விருத்தம்

பல்லாய தாழிகட்கவ் வுயர்வைநாற் பகுப்பாய்
பகுத்ததன்மே லிருபகுப்புப் பானைகளுக் கிந்தச்
சொல்லாய பகுப்பின்மிசை மூவரையாம் பகுப்புந்
தோன்றுமள வாய்த்தாளைத் துந்திவைத்துத் துறுத்துப்
புல்லாய மரக்கனியோ டிருப்பினுழைக் கேற்பப்
புகறயிலா திகட்கெல்லாம் புரிமூழி யிவற்றுள்
வில்லாய வாய்வாய்ச்சி வாயஞ்ச வமைப்பாய்
விண்டவற்று ளுளதுசில விகற்பமினி யுரைப்பாம்.

(இ-ள்.) தைலம் முதலியவைகளைச் செய்கின்ற வாயகன்ற பற்பல தாழிகளுக்கும், உயரமுள்ள பானைகளுக்கும் அகப்பைகள் அமைக்கவேண்டும் விதியாவது: முற்கூறிய தாழிகளின் உயர்வுக்குச் சரியாய் ஒரு கோலை யளந்தெடுத்து அவ் அளவுகோலை * 4-பங்காகப் பகுத்து 2-பங்கை-அக்கோலின் அளவுடன் சேர்த்து, அந்த அளவின் பிரகாரம் நீளமும் கொஞ்சம் முன்வளைவு முள்ள தாளாகிய காம்பைப் பாண்டங்களின் வாய்க்குப் பொருந்திய வாறே செய்த தெங்கினது ஓடுகளிலும், இருப்புக்கிண்ணங்களிலும் நுழைத்துக்கொள்வதாம். பானைகளுக்கோவென்றால், அப்பிரகாரமே 4-பங்காக்கி அந்தக்கோலின்மேல் இன்னும் 1½-பங்கு கூட்டி அந்த அளவின்படிக்குத் தாளிட்டுக்கொள்ளவும். வில்லையொத்த முனைவளைவையுடைய சில அகப்பைகளின் வாயை வாய்ச்சியினது வாயும் அஞ்சும்படிக்குக் கூர்மைப்படுத்துவதுங்

* பாத்திரத்தில் தைலமுதலியவை காயும்போது புகை கம்முவதினால் இவ்வளவிருக்குதென்று நேத்திரத்தினால் பார்த்தறிவதற்குக் கூடாமையின், மூழியினால் அளவை யறியவேண்டுவதற்காக அதன் காம்பை 4-பகுப்பாகப் பகுக்கவும், துழாவும்போது கையிற் சுடுகையேறாமலிருப்பதற்கு அந்த 4-பகுப்பின்மேல் 2-பகுப்பு இருக்கவும் வேண்டுமெனக் கூறினர்.

தவிர, இப்பிரகாரமே இரும்பினுலும் அமைத்துக்கொள்க. இப்போதுசொன்ன அகப்பைகளில் சில வேறுபாடுண்டு அதுகளையுஞ் சொல்லுவாம், எ-று. (36)

மூழி விகற்பம்

விருத்தம்

உரைத்தலென்னை மடக்குவட்டத் தகட்டகப்பை யந்த
வுருவமொத்துச் சில்லியடை மூழிகீழ் மேலும்
நிரைத்ததுளைக் கிட்டிகுவை முட்டைதிரி யக்கு
நீடுகச்சங் கசிதமத்த நேரலகா திகளாம்
விரைத்தைல மினிப்புறுநெய் பாறயிர்காய் குடிநீர்
வீயிரசா யனம்பாகிவ் விதங்களுக்கு மிரத
மரைத்தபா டாணகற்க மரவிடஞ்சேர் தைல
மாதிகட்கு மிருப்பகப்பை யிருப்பையகற்று வரே.

(இ-ள்.) முற்கூறிய அகப்பைகளிற் சில விகற்பமுண்டு அவையாவன: தட்டைரூபமாகிய மண்மடக்கும்போல வட்டமாகவும், பரந்தபள்ளத்தை யுடையதாகவும் இருப்பது தகட்டகப்பை. அந்த உருவம்போன்று சல்லடைக் கண்களைப்போற் சிறு சிறு சில்லிகளையுடையது சில்லியகப்பை. துளைகள் நிறைந்துள்ள இரண்டு இருப்புக் கிண்ணங்களைத் தலையிற் பதித்த கொல்லன்கைக்குறடுபோல விரிக்கவும் குவிக்கவுமாக விருப்பது துளைக்கிட்டியகப்பை. கூன்போல் குழியையுடையது குவையகப்பை. கோழிமுட்டை பதியும் பள்ளமுள்ளது முட்டையகப்பை. குறுக்காக நீண்டிருப்பது திரியக்கு அகப்பை. மரக்காலென்னும் அளவைக் கருவிபோல வடிவமும் நீண்டதாளுமுள்ளது கச்சகப்பை. இவைகளல்லாமல் துடுப்பு மத்து சலாக்கு முதலியவைகளும் ஆம். இவற்றுள் இருப்பகப்பை, பரிமளத்தயிலம் மதுரமுள்ள கிருதம் பால் தயிர் பழம் இவைகளிற் செய்கின்ற குடிநீர், புஷ்பரசாயனம் பாகு முதலியவைகளுக்கும், பாதரசம் பாஷாணம் தாவரவிஷம் ஆகிய இவைகளைக் கூட்டிவரைத்த கற்கஞ்சேர்ந்த தைலம் ஆதிகளுக்கும் விலக்கென்று பெரியோர் கூறுவர், எ-று. (37)

கற்கமருந்து அரைக்கும் விதி

விருத்தம்

பூதவெண் பொருள்சட்டி ரதஞ்சுசி பொன்னிரத்தின
முபரச நெய்மணம்

பேதவெண் ணெண்ணவுதட மாதியாய்ப் பேசுவத்
துக்களே கற்கமாமிவற்
ஞேத வன்மையு மென்மையு மொவ்வியொள்ளுற்
றகத்துக்க ளெல்லாம் யுணர்ப்பி
காதவிந்து வெளிப்படல் போல்வெளி காணுமட்
டிழைகற்கஞ் சிறுக்கவே.

(இ - ள்.) பஞ்சபூதசம்பந்தமான வேராதி வித்தீருகிய (8) பதார்த்தம், அறுசுவை, ரசாதிபாஷாணம் சொன்னுதிலோகம் ரத்தினம் உபரசம் நெய் வாசனை சுக்ரு முதலிய 64-சரக்கு என்னும் இவற்றின் வருக்கத்திரவியங்களே கற்க மருந்துகளாகையால் இவைகளை ஆறு தாதுவுக்கும் அப்பாலிருக்கின்ற சுக்கில தாதுவானது புணர்ச்சியினுல் எப்படி வெளிப்படுமோ அப்படி வன்மை மென்மையுள்ள சரக்குகளும் ஒன்றுபட்டு உள்ளிருக்கின்ற சத்துக்கள் வெளிப்பட்டுக் கற்கஞ் சிறுக்குமட்டும் சேர்த்திழைப்பாயாக, எ - று. (38)

ஒரு தைலப் பாத்திரம் மற்ருெரு தைலத்திற் காகாதெனல்

நேரிசை வெண்பா

ஒருதைலப் பாண்டத் தொருதைலங் காய்ச்சி
ஞெருதைலப் பண்புகெட லொன்ரே—கருது
மளவிலுற்ருன் மெய்யுந்தீர்ப் பான்புகழுஞ் சான்ரோர்
கிளவியுநூன் மெய்யுங் கெடும்.

(இ - ள்.) ஒரு தைலங்காய்ச்சிய பாத்திரத்தில் மற்ருெரு தைலத்தைக் காய்ச்சினுல் ஒப்பற்ற அப்பெரிய தைலத்தினது நற்குணங் கெடுவதொன்று மாத்திரமோ? யோசிக்குமளவில் நோயாளியின் தேகமும், சிகிச்சகன் புகழும், பெரியோர் வசனமும், வைத்திய நூலின் உண்மையும் கெடும், எ - று. (39)

பாத்திரம் பழக்கும் விதி

நேரிசை வெண்பா

எவ்வகைநெய்க் குங்கடமே தேற்கும் புதுக்கடத்தை
யவ்வகைநெய் யானஊத்தம் பட்டியம்மை—கவ்விப்
பிடிக்கவொட்டா மற்கழுவிப் பின்புணக்கி நெய்யைக்
குடிக்கவொட்டா மற்பழக்கிக் கொள்.

(இ - ள்.) எந்த வகைத் தைலங்களுக்கும் பழகிய பாத்திர மிராது, வேண்டுமாயின் யத்தனித்த தைலங்களுக்கேற்ற புதுப் பாத்திரத்தை அவ்வகை நெய்யால் நனைத்து, அதில் சலத்தை விட்டு விட்டுக் காய்ச்சி யூற்றிவிட்டு அந்தக் காய்ப்பாலுண்டாகிய கருமையானது அடியில் கவ்விப்பிடிக்குந்தோறும் கழுவி, அது கையிலொட்டாமல் அப் பாத்திரத்தை மாத்திரங் கறுக்கச் செய்த ததியறிந்து எடுத்துக் கழுவிக் காயவைத்து, விடுகின்ற நெய் வகைகளைக் குடிக்கவொட்டாமல் பழகிக்கொள்க, எ-று.

பாத்திராற்றலும் விதியும்

நேரிசை வெண்பா

கொள்ளுகட மீதடியிற் கூர்தந் திரிகைசுற்றித் [வே
தெள்ளுமண்ணுங் கோவிட்டுஞ் சேர்த்தப்பி—யுள்ளுற
காயவிட்டுத் தீநீர்க் கடவிதிசெய் தீதினெய்யை
யேயவிட்டுக் காய்ச்சுவடு வில்.

(இ - ள்.) அவ்வாறு பழக்கிக்கொண்ட பாத்திரத்தின் மேல் கழுத்திலிருந்து அடிவரைக்கும் இருப்புத்தந்தியைப் (பூரணகும் பத்தினது நூலைப்போலச் சுற்றி) யிறுக்கிக்கட்டி அதின்மேல் புற்றுமண்ணும் சாணமும் அரைத்துப் பூசி நிழலிற் காயவைத்து புனிதப்படுத்திக் குடிநீர்ப்பாத்திரத்திற்குச் சொல்லிய விதியை முடித்து இதில் நெய்களை விட்டு நீ காய்ச்சு குற்றம் வராது, எ - று. (41)

அந்தந்தத் தொழிற்குரிய கருவியும் தைலந்துழாவு விதியும்

நேரிசை வெண்பா

கடைவகையின் மத்துழலல் கைபாகங் கற்க
மடைவகைநெய்க் குத்துடுப்ப கப்பை—விடைமேற்
சொலுவதென்று ழாவலுறைத் தோயாநிறைந் துள்ள
கலுவவரைப் பின்கதியைக் காண்

(இ - ள்.) கைபாகமாகக் கடையப்படுந் தொழிற்கு மத்தும்; கற்க வடிவத்தை யடைகின்ற களி முதலிய லேகிய வகைத் தொழிற்குத் துடுப்பும், பொங்கிக் கொடுக்கின்ற தைலகிருதாதி வகைத்தொழிற்கு அகப்பையும் கருவியாம். இனி தைலாதிகளைத் துழாவுகின்ற பாகவிதியைச் சொல்லுவதென்ன, கலுவத்திற் கனத்தமருந்தளாவிய சலத்தை நிறைத்துக் குழ்வியைக்

கொண்டு எப்படி யரைத்து முடிப்பதோ அப்படிபோலத் துழாவக் கடவை, எ - று. (42)

தைலபாக விதி

விருத்தம்

சூக்குமநீ ருறுமயன மிருதுபாகந்
தொடிற்பிடிக்கு மயனமது சிக்குப் பாகம்
மோக்குமுன்வா லுகமெழற்கா யத்த மென்னின்
முதிரலன்று கரகரப்பாம் பாக மாகும்
நோக்குமிவை மூன்றுநீலாதி மூன்று
நோய்க்குமுறை யேவிரிப்பார் நூல்வல் லோர்கள்
ஆக்குமவைக் காதியந்தப் பருவ கற்க
மாசிழைக்கு மாயினஃதி யாவர்க் காமே.

(இ - ள்.) பாகமென்பது மூவிதப்படும் அவையாவன: தைல பக்குவ காலத்தில் கற்கத்தில் சில்லியகப்பையில் எடுத்துப்பார்க்கில் அற்பநீருள்ள மெழுக்குப் பதமாக விருந்தால் அது மிருது பாகம்; திரட்டும்போது கையிற் பிடிக்கில் அது சிக்குப்பாகம்; அகப்பையால் முகந்த மாத்திரத்தில் மணல் வடிவ முண்டாதற்கு யத்தனமாக இருந்தால் முதிர்ந்ததன்று அது கரகரப்புப்பாகம் என்பனவாம். இம் மூன்று பாகங்களும் முறையே, வாத பித்த சிலேஷ்ம நோய்களுக்காமென்று ஆயுள் வேதியர் சொல்வர். இவ்வாறு நிருமித்த மூவிதப்பாகத்துள் மிருதுபாகத்துக்கு முன்பாகமும், கரகரப்புப்பாகத்துக்குப் பின்பாகமும், பொல்லாங்கையே விளைக்குமானால் அப் பாகத்தில் வடித்த தைலம் முத்தேகிகளில் யாவர்க்காம் ! ஒருவர்க்குமாகாது, எ - று. (43)

வடிக்கும் பாத்திர இலக்கணமும், அதன் நிலையும்

விருத்தம்

பருவமணத் தைலவகை வடிப்ப தற்குப்
பழக்குகடத் திருபுறஞ்சுத் தித்து வாச
மருவநறும் புகையூட்டி யகத்துண் முல்லை
மல்லிகைகே தகைமுதலா மலர்ப ரப்பித்
தருவரத்த மாதிவிரைத் தூஉய்மீது
தக்கவடி கருவிகற்கந் தாங்க வீக்கித்
திருவரிபொன் வடிசதுக்கத் திடைசொ ரிந்தத்
திட்டிலணை யிட்டதனைத் திருந்த வையே.

(இ - ள்.) பருவமென்னும் பாகமணம் வந்த தைலத்தை வடிப்பதற்குப் பழக்கிய பாத்திரத்தினது இரு புறமுஞ் சுத்தி செய்து, அதனுள் பரிமளம் வீசும்படி நல்ல வாசனைப் புகையை யூட்டி முல்லை மல்லிகை தாழை முதலிய புட்பங்களைப் பரப்பி, அதன்மேல் தேவதாரம் குங்குமப்பூ ஆதியான மணப்பொடி களைத் தூவி மேலில் கற்கத்தைத் தாங்கும்படியான வடி கருவியை யிறுக்கிக் கட்டி வடிசதுக்கத்தினது வோரத்தின்கீழ் அழகிய நெல்லும் பொன்னும் கலந்து கொட்டி அதன்மேல் புரியணையிட்டு அதி லிதைப் பொருந்தும்படி வைப்பாயாக, எ-று.

தைலம் வடிக்கு மிலக்கணம்

விருத்தம்

திருந்துதெய்வப் பிடக்கெனினும் பஞ்ச சுத்தி
செய்தொருகோட் டெந்தைபதஞ் சென்னி வைத்துப்
பொருந்துபிடிச் சீரைகொடு வெங்க டத்தைப்
புரியணைமேல் வடிசதுக்கம் பொருத்தி யாழி
மருந்தனைய தைலத்தைக் கற்கத் தோடே
வடிகடத்தில் வடித்தபின்மேல் வாய்கற் கங்காய்ந்
திருந்தகடத் தாடையொடு கிட்டி மூழி
யினிப்பிழிந்து முன்றயிலத் திருத்துக் கொள்ளே.

(இ - ள்.) கைபழகிய தேவபண்டிதனேயாயினும், கால் கை முகம் இவைகளைச் சுத்தி செய்துகொண்டு விநாயகரைத் தொழுது, தகுந்த பிடிசீலையைக்கொண்டு சுடுகையுள்ள பாத் திரத்தை வடிசதுக்கத்தின்மேல் புரியணையிற் பொருந்த வைத்து அமிர்தத்துக்குச் சமதையாகிய தைலத்தைக் கற்கத்துடன் வடி கலசத்தில் வடித்துக் கற்கத்திலிருக்கும் தைலத்தையும் வடி கருவியோடே துளைக்கிட்டி அகப்பையால் அத்தைலக்கடத்தில் பிழிந்து முன் தைலத்தி லிறுத்திக்கொள், எ - று. (45)

தைலங்களின் சுத்திக்கிரமம்

விருத்தம்

ஒருமுழுக்குக் கனல்வெதுப்பி நுண்பொருள்சேர்த் திவ்
வுருவவ் வுருவிற் காண்டேற்
றுடனுடு தைலவகைக் கமிழ்த்தியிட லேசுத்தி
யுடலா டற்கென்
றருமடைவே நெய்வகைகட் காற்றல்சுத்தி குடிநீர்பா
லடைச்சா றூற்றி

யாக்கவியு மேழேனு மவற்றுளமை வனவேனு
மரைத்தெ ரித்து
வருதைல மாதிகளும் பானுளொன் றிருமைமும்மை
வதியச் சுத்தி
வழுத்துமிவை யொழிநனிகற் காதிகள்சேர் நெய்யாதி
வகைக ளெல்லாம்
வருடமைச்சா லிக்குண மும்மை நான்முதலொன் றியநாண்
மண் டலநாட் சுத்தி
மார்க்கமிஃ திஃதுமன்றிச் சிலதுமண்ட லச்சுத்தி
மருவு மர்தோ.

(இ - ள்.) ஒரு ஸ்நானத்திற்காகும்படி எண்ணெயை வெதும்பக் காய்ச்சி யிறக்கியதில் மெல்லிய தூள்களைப்போட்டு அத்தூளின் நிறம் அதில் தோற்றப்பார்த்து உடனே முழுகுந் தைலங்களுக்கெல்லாம் கொஞ்சம் அழுத்தித் தேய்ப்பதுவே சுத்தியாம். குடிப்பதற்காவது மூழ்குவதற்காவது அருமையான வடைகளைத் தட்டிப்போட்டுக் காய்ச்சும் தைலவகைக்கெல்லாம் அந்தச்சுடுகை யாறுவதே சுத்தியாம். குடிநீர், பால், இலை ரசம் முதலியவைகளை ஒருமிக்கவாவது தனித்தனியேயாவது விட்டுக் காய்ச்சும் தைலங்களும், ஏழு சரக்கையாவது அவற்றுள் கிடைத்த மட்டிலாவது அரைத்துக் கரைத்துக் காய்ச்சும் தைலாதிகளும், $\frac{1}{2}$-1-2-3 என்னும் நாள்வரையில் சும்மா இருப்பதுவே சுத்தியாம். சொன்னவைகள் தவிர, மிகுந்த கற்காதிகள் சேர்ந்த தைல கிருத மாதியவை தக்கபடி (3) நாள் முதல் பொருந்திய நாளளவே மண்டல நாள்வரையில் ஒருவருடம் சென்ற கறுப்பு நெல்லுக்குள் இருக்கச் சுத்தியாம். இது சுத்திக்கிரமம். அன்றியும் சிலவற்றிற்குப் பூமிப்புடச்சுத்தியும் உண்டு, எ-று. (46)

சுத்தியால் வரு நன்மை கூறல்

நேரிசை வெண்பா

பாகங் களினறலும் பாக்கியஞ்சேர் மூலகந்த
சாகங் களினறலுஞ் சாற்றறலும்—வேகஞ்செய்
கற்காதி பண்புமறுங் காய்ச்சுரைபோ னெற்குணிற்கி
னற்காரி யஞ்செயு நாடு.

(இ - ள்.) சுத்தி என்கிற நெற்புடத்தினால் புதிய தைலங்களுக்குள் அந்தர்ப்பூதமாக மறைந்திருக்கின்ற மூவிதபாகத் திப்பியால் வரும் தைலச்சலமும், குடிநீரில் சேர்ந்த வேர் கிழங்கு இலை முதலியவைகளின் சலமும், சுரசங்களின் சலமும், வெப்பஞ்

செய்கின்ற கற்க திரவியங்களின் பற்பல குணமும் நீங்கி, சிறிய தைலங்களும் புடத்திலிட்டு ஆறியபின் எடுத்த தங்கம்போலுயர் வை யடைந்து நற்காரியத்தைச் செய்யும், எ-று. (47)

தைல பூசாவிதி

விருத்தம்

தந்திமுக னயிற்குமர ஞதியுமை வடுகன்
றன்வந்திரி தேவரிரு டியர்சித்தர் மலர்த்தாள்
புந்தியுற வணங்கிவிதி முறையருச்சித் தப்பம்
பொரியவல்போ னகமாதி போதனை வேதித்து
மந்திரவேள் விகள்கரும சாந்திகளுங் குயிற்றி
மறையவர்க்கோ தனமுதலாய் வழங்குவன வழங்கி
முந்திறைவற் பரவியைந்தை யாறெனவா யிரமாய்
முடிவையுற வுச்சரித்து முதுதைலம் வாங்கே.

(இ - ள்.) யானைமுகமுள்ள விநாயகர், வேலாயுதம் ஏந்திய முருகக்கடவுள், பரமேச்சுரர், பராசத்தி, வயிரவர், தன்வந்தரி பகவான், அச்சுவனிதேவர், முனிவர், சித்தபுருஷர் ஆகிய இவர் களது பாதாரவிந்தங்களை மனதில் தியானித்து வணங்கி முறைப் படி யருச்சனைபுரிந்து, அப்பம் பொரி அவல் மகா நைவேத்திய முதலியவையும் நைவேதித்து, ரோகமாரண ஓமம் கருமசாந்தி என்னும் இவைகளைச்செய்து, பிராமணர்கட்கு அன்னதான முதலிய தானங்கள் செய்வித்து, ஆதியில் அநுக்கிரகஞ் செய் தருளிய குருநாதனைப் பணிந்து பஞ்சாட்சரத்தைப் பிரணவத் துடன் ஆயிரம் உருச்செபித்து நெற்புடத்தில் வைத்த தைலத் தை யெடுப்பாயாக, எ-று. (48)

விநியோகமும் தேய்த்தாடுதலும்

விருத்தம்

வாங்கியற மருத்துவருக் கொன்றுென் றிரண்டு
வைத்தானுக் கெனச்சதுப்பால் வகுப்ப ரிந்தத்தயில
மாங்கவற் கரந்தினத்திரு பூவள்ளங் கடமிலிட்
டாடகமிட் டானனம்பார்த் தளித்தொன் றுென்றிடற்கே
ற்ேறுங்குமதைப் பவித்திராங் குலியாற்றுத் திரிமீ
தோரேழு தரந்தெறிப்பித் துறவழித்துச் சிரஞ்சேர்த்
தீங்கடுண் டங்களிற் சடுநான்கெனத் துளிவிட்டுச்சி
யெங்குஞ்சூ டெழாதுதேய்த் திடச்செயலே யுரைப்பாம்

(இ-ள்.) அவ்வாறு எடுத்த தைலத்தை, (ஆயுள்வேதியர்) பெரியோர் பகுக்கும் முறைமைப்படி தருமத்திற்கு ஒருபங்கும் தமக்கு ஒருபங்கும் பகுத்து எடுத்துக்கொண்டு, செய்வித்தவற்குரிய மற்றைய இரண்டுபங்கைக்கொண்டு ஸ்நானம்செய்விக்கும் முறைமை யாவது, முழுகுவோனுக்குப் பொருந்திய நல்லதினத்தில் வேண்டுமளவு இரண்டு தங்கக் கிண்ணத்திலாவது, இரண்டு மண் கிண்ணத்திலாவது நிரம்பவிட்டு ஒன்றில் சொர்னமிட்டு அதில் தன் முகவடிவைப்பார்த்து ஒருவருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு, மற்றொன்றை ஸ்நானஞ் செய்வதற்கு அமைத்துக் கொண்டு, அத்தைலத்தைப் பவித்திர விரலால் பூமியில் ஏழுதரம் தெறித்து அதைச் சேர்த்து வழித்து உச்சியில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு காதுக்குள் மும்மூன்று துளியும், ஒவ்வொரு நாசியின் துவாரத்தில் இரண்டிரண்டு துளியுமாக விட்டுப் பின்பு உச்சி முதல் சர்வாங்கத்திலும் சூடெழும்பாமல் தேய்க்கும்படி செய்விக்கவும். இனி அரைப்பு வகையைச் சொல்லுவாம், எ-று. (49)

அரைப்பு வகை

நேரிசை வெண்பா

சிகைக்காயீங் கைத்துவக்குஞ் சீரார் தயில
வகைக்கா மரைப்புண் வறட்சித்—தொகைக்காகுஞ்
* சோடியிருப் பைத்திப்பி சொல்லரைப்பா நெய்க்குமுற்
தேடியரைப் பாகுந் தெளி. [கந்

(இ - ள்.) உயர்ந்த தைலவகைகட்கு, சிகைக்காயும் ஈங்கைப் பட்டையும், விரணம், வறட்சி இவைகளுக்கு உசிலந்தூளும் இலுப்பைப்பிண்ணாக்கும் பசுவினது நெய்க்குப் பச்சைப்பயறும் அரைப்புகளாம், எ - று. (50)

இதுவுமது

நேரிசை வெண்பா

கொடியூ னுருக்குநெய்க்குங் கோர வெயிற்றுக்
கிடியூ னுருக்குநெய்க்குங் கிட்டாத்—தடியூ [மெண்
னுருக்குநெய்க்குங் காரையரைப் போர்மணிப்புங் கும்
ணிருக்குநெய்க்குங் காரையரைப் பேண்.

(இ - ள்.) காக்கையின் மாமிசம், கோரதந்தமுள்ள பன்றியின் மாமிசம், சிக்குதற்கரிய உடும்பின் மாமிசம் என்னும் இவைகளை

* சோடி என்பது உசில்மரம்,

உருக்குவதால் வராநின்ற நோய்களுக்கெல்லாம் சிறுகாரைச் செடியினது சமூல சூரணம் அரைப்பாகும். எள்ளினது தனி நெய்க்கு, மணிப்புங்கின்காயும் அரைப்பாகும் என நீ யுணர்க, எ - று. (51)

குளி இலக்கணம்

விருத்தம்

மந்தழைவெந் தேற்றபடி யாற்றிநிறைப் பித்த
வாவியெனத் தேங்குவெந்நீர் வதிந்தாடி னலனு
நீந்துபுன லாடுதொட்டி யின்றுமண்ணிற் பலவாய்
நிறைத்தகடத் தொருசுடுகை நீரெடுத்தாடு வையேன்
மோந்தகடத் தயமெயெலா முழுகமுதன் மூர்த்த
முகட்டினிடைச் சொரிந்திவண மூழ்கலப்பிங் கனமாங்
காந்தட்டாள் களக்கீழொவ் வொருபாற்பெய் திடினக்
கம்பணுகா விடந்தோடங் கக்கியண்ணுங் காணே.

(இ - ள்.) மாவிலைக்கொத்து (2-3) இட்டு வேகும்படிக்குக் காய்ச்சி தக்கபடி ஆற்றிய வெந்நீரைப் புனலாடுதொட்டிகளில் தேங்கும்படி நிரப்பி அதில் ஆழ்ந்து ஸ்நானஞ் செய்வது நலமாம்; அவைகள் கிடையாவிடத்தில் ஒரே சுடுகையாகப் பல மண்பாண் டங்களில் நிரப்பிக்கொண்டு ஸ்நானஞ் செய்ய வேண்டும். அப் படிச் செய்யுங் காலத்தில், தேகமுழுதும் நனையும்படி முதலில் சிரசில் சொரிந்து ஸ்நானஞ் செய்வதே அப்பிரங்கனமாம். அது தப்பி அந்நீரைப் பாதத்திற்குமேல் கண்டத்திற்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு அவயவங்களில் விட்டுக் குளிக்கில் நனைந்த பக்கங் களில் இருக்கும் தோஷம் நனையாத பக்கங்களில் வியாபித்துத் துயரைத்தரும், எ-று. (ஆதலால் முதலில் உத்தமாங்க ஸ்நா னமே உத்தமமாம். ஆனால், கால் கைகளில் வாதாதிகளாலும், வேறு காரணங்களினாலும், நோயுறுங் காலத்தில் வெந்நீரும் தண்ணீரும் உபயோகப்படுவதுண்டு, அது சிகிச்சைகளில் ஒரு பேதமாம்.) (52)

நீராடுதொட்டி யிலக்கணம்

நேரிசை வெண்பா

ஆறு மடுவி லகர்முகமப் பாடுநருக்
காறு மடுவினெய்யப் பாடுநருக்—கேறுமடி
யெட்டகத்துத் தற்சதுர மேற்றமூன் றீதுபமோர்
மட்டகத்துத் தொட்டிவணே வார்,

(இ - ள்.) நதியிலும் தடாகத்திலும் உதயகாலத்தில் நித்திய ஸ்நானஞ் செய்கிறவர்கள்; அந் நதியும் தடாகமும் இல்லாத இடத்தில் ஸ்நானஞ் செய்வதற்கும், தைலஸ்நானஞ் செய்கிறவர்களுக்கும் பொருந்திய (8-அடி) தற்சதுரமாகவும் (3-அடி) உயரமாகவும் (2) தொட்டிகளை வேண்டுமிடத்தில் செய்து கொள்வார்கள், எ - று. (நெய்ச்சிக்கு அரைப்பு இவைகளைப் போக்குவதற்கு ஒன்றும், பின்பு சுத்த ஸ்நானத்திற்கு ஒன்றும் வேண்டுவதாகையால் இரண்டு தொட்டிகளென்றார்.) (53)

பாதாதிகளில் தைலமிடல்

நேரிசை வெண்பா

பாதத் திடிற்கண்ணோய் பாறுமக் கட்கிடினே
கரதுற் றெழுநோய்போங் காதுளிடி—னேதுந்
தலைநோ யகலுந் தலைக்கிடினே யெல்லா
நிலையா வறலாடி னெய்.

(இ - ள்.) துளைச்சிகிச்சைத் தைலங்களில், தகுதியானவைகளைப் பாதங்களில் தேய்க்கில் கண்களின் உபத்திரவம் நீங்கும். கண்களுக்குக் கட்டினால், காதுகளின் உபத்திரவம் விடும் காதுகளுக்குத் துளிக்கணக்காக விடில் சிரசினது உபத்திரவம் போம் சிரசிற்கிட்டு ஸ்நானஞ் செய்யில், சகல நோயும் விலகும், எ-று.

அவ்வவ்மாதங்களில் ஸ்நானஞ்செய்யும் காலம்

கட்டளைக்கலித்துறை

அயமா னிவைக்கைகம் பதத்துளி யாழ்குளிர்க் கட்டமத்துள்
வயமா கனிக்குங்கோற் றேட்குநன் ஞன்குவின் மானிரண்
பயமார் கடமச்சத் திற்குந் திரிக்குட் பகர்திங்களி [டே
னயமாந் தைலங்க ளாடவ ரோகமெய் நண்ணுவரே.

(இ - ள்.) சித்திரை வைகாசிகளில் உதயமாகி (5) ஆனி ஆடிகளில் (8) ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகைகளில் (4) மார்கழி தைகளில் (2) மாசி பங்குனிகளில் (3) என்னும் நாழிகைகளுக்குள் நல்ல தைலங்களை ஸ்நானஞ் செய்யில் வியாதியில்லாத தேகத்தைப் பெறுவார்கள், எ-று. (55)

சிறிய தைலபாக விதி

நேரிசை வெண்பா

அடையிலை பராகமெழு காதியிர தஞ்சேர்த்
திடையில்புரி புன்னெய்கட் கெல்லாங்—கடையில்

விரிபருவ மாவனவாம் வேதல் பொரிதல்
அரிகரைத னீரொலிய றல்.

(இ - ள்.) ஐவகைச் சிகிச்சைகளுக்குரிய தைலங்களில்லாத விடத்து வேண்டிய அப்போதே காய்ச்சிக் கொள்ளுதற்குரிய சிறு தைலவகைகட்கெல்லாம் பாகம் சொல்லுமிடத்து, அரைத்துத் தட்டிய அடைவகைகள், இலைவகைகள், தூள் வகைகள், மெழுக்காதிகள், கற்கமில்லாத நீர்த்தன்மை வகைகள் ஆகிய இவைகளைத் தைலத்திலிட்டுக் காய்ச்சிய முடிவில், அவ்வகைகள் ஒவ்வொன்றும் முறையே வேகவும், பொரியவும், நிறம் தைலத்துக்குண்டாகவும், உருகவும், திரிச்சீலையால் தொட்டு விளக்கில் காட்டினால் சிடுசிடுப்பு இல்லாமையும் ஆகிய பக்குவபாகத்தில் அத்தைலங்களை வடித்துக்கொள்ளுவதாம், எ-று. (56)

பத்திய பதார்த்தமும், மதாந்தர பத்திய பதார்த்தமும்

விருத்தம்

அவரைகந் தஞ்சிங்க வல்லிகுட பலைகடுகி
யண்டர்நிலை சிலிகரியவேம்
பாடகி வயற்பயறு சிறியமுற் கம்பலினி
பசைமேதி பிலவமத்தோல்
குவரைநிட் குடிசாதி பயிராநெய் யிதல்காடை
கோதிகையிவ் வகைகளெல்லாங்
குலதைல பத்தியங்கட் கொவ்வு மன்றியுங்
கோசவதி புடலனலினே
ரெவரையு நமைக்குள்விடு வங்கமா நெல்லிமுய
லேரிமீ னயிரைதேளி
யெரிசுரு கருவாலி யடவியெலி வெள்ளா
டிளந்தண்டு கமழிங்குள
முவரைவெடி படவறுத்துக் கொட்டுமட் கலத்தூற்றி
முறிகொளு மோர்புரா
வுதிரமுர ணுஞ்சிறிய புளியொடடை காயிவைக
ளொவ்வுமென் பாருமுளரே.

(இ - ள்.) தைலங்கட்குரிய பத்திய பதார்த்தங்களாவன: அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, தூதுளங்காய், மனத்தக்காளி வற்றல், சுருண்டைக்காய் வற்றல், பொன்னுங்காணி,

சிறுகீரை, கருவேப்பிலை, துவரை, வயற்பயறு, சிறுபயறு, மிளகு சீரகம் வெந்தயம் லவங்கம் லவங்கப்பட்டை ஏலம் சாதிக்காய் சருக்கரை பசுநெய் கவுதாரி காடை உடும்பு என்பனவாம்; அல்லா மலும் பீர்க்கு புடல் உஷ்ணதேகிகளைத் தினவுக்காளாக்குகின்ற கத்தரி இவைகளின் பிஞ்சு, மாவடு நெல்லிக்காய் முயல் ஏரிமீன் அயிரை தேளி வெப்பமுள்ள சுரு கருவாலி காட்டினெலி வெள்ளாடு முளைக்கீரை பெருங்காயம், உப்பு வறுத்துக் கொட்டிவிட்டு அச்சட்டியில் முறித்தமோர், உதிர முரணுகிய சிறுபுளி, தாம்பூலம் என்னும் இவைகளும் ஆகும் எனச் சிலர் சொல்வார்கள், எ - று. (57)

தைலங்கட்கு ஆகாப்பதார்த்தம்

விருத்தம்

நண்டுமீன் கோழியசம் பன்றி நவ்வீ
 நரைசெய்யிரு பூசனிமா தெங்கு கீரைத்
தண்டுசேம் பறுகீரை முனிபா கற்கத்
 தாரிகொத் தவரைகனி வகைமாப் பண்டம்
விண்டுவா பமாச்சையெள் கொள் கடலை மாடம்
 வெங்காயங் கடுபுளிபா றயிர்கைப் பாவி
கண்டுநீர் பகற்றுயிலா தவம்பு ணர்ச்சி
 காற்றிவையா காவுயர்நெய்க் கணங்க ளுக்கே.

(இ - ள்.) தைலங்கட்கு ஆகாப் பதார்த்தங்களாவன: நண்டு, மீன் கோழி ஆடு பன்றி கடமான் வெள்ளைப்பூசனி பறங்கி மா தெங்கு இவற்றின் காய்கள், கீரைத்தண்டு, சேம்பு, அறுகீரை, அகத்தி, பாகல், கத்தரி, கொத்தவரை கனிவகை மாப்பண்டம் மொச்சை, எள்ளு, கொள்ளு, கடலை, உழுந்து, வெங்காயம், கடுகு, புளி, பால், தயிர் கசப்புத்திரவியம் புகையிலை வெல்லம் குளிர்ந்த சலம் பகல்நித்திரை வெய்யில் புணர்ச்சி மிகுகாற்று என்பனவாம், எ - று. (58)

இச்சாப்பத்திய விதி

நேரிசை வெண்பா

உலகிலிச்சாப் பத்தியங்கண் டூர்கூர மாங்கா
யுலகினமைக் காய்கொத் தவரை—கலகமுனி

மந்தவகை கூஸ்மாண்ட மாகடுகெள் ளென்றேறு
மிந்தவகை நீத்துண்ப தே.

(இ - ள்.) இச்சாபத்தியம் என்பது: முள்ளுள்ள பாகல் மா கத்தரி கொத்தவரை வெள்ளைப்பூசனி என்னும் இவற்றின் காய் கள், அகத்திக்கீரை மந்தவகைப் பதார்த்தங்கள் கடுகு எள்ளு இவைகளை நீக்கி யுண்பதாம், எ - று. (59)

உப்பில்லாப் பத்தியவிதி

இதுவுமது

உப்பிற ளப்பானு ளோட்டுப்புண் பின்போம
வப்பினு டப்பானு ளாம்பிரமேற்—றுப்பினு
டொப்பிராப் பாரதமீ துற்றதை லாதிகளுக்
குப்பிராப் பத்தியமீ தோர்.

(இ - ள்.) தனக்குவமை யில்லாத பாதரசத்திற்கும், இது சேர்ந்த தைலாதிகளுக்கும் உப்பில்லாப் பத்தியம் வைத்த நாளள வும் மறுபத்திய மிருந்து, பின்னுளில் உப்பு வறுத்துக் கூட்டி, அதற்குப் பின்னுல் பின்னுட்களில், முறையே ஓமப்பாலிட்டு முழுகி, புளி சேர்த்து பசுநெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். இதுவே உப்பில்லாப் பத்தியம் என்றறியக்கடவை, எ-று. (60)

பாயிரம் முற்றியது.

———

அநுபந்த முகவுரை

விருத்தம்

விதிமுறையாங் கடம்புதுக்கி மணக்குய் யூட்டி
மீ * தட்ட மூர்த்திசடி லத்தாய் காப்பும்
பதியமகக் குழைகூர்ச்ச நிசிபொன் னுடை
பன்மலரா டகநவநாண் பரிக்க வார்த்துத்
துதியரிசி குங்குமமுத் திரையுஞ் சாத்தித்
தும்பிமுகற் றெழுதன்னோர் துணைத்தா ளுன்னிப்
புதியவழி முக்காலி யிட்டப் பூசை
புரிந்தடுப்பி லக்கடத்தைப் புனனேர் வையே.

(இ-ள்.) விதிப்படி அமைத்துக் குறி இலக்கம் எழுதிய குடிநீர்ப் பாண்டத்தைச் சுத்திசெய்து வாசனைப்புகை யூட்டி அதன் கழுத்தில், அஷ்டமூர்த்தி வடிவமாகிய பரமேச்சுரர் கங்காதேவி இவர்களைக் குறித்து மாவிலை தருப்பை மஞ்சள் பொன்னுடை புட்பமாலை இவை தொடுத்த 9-பொற்சரட்டினால் காப்புக்கட்டி கட்டி, அதில் குங்கும அட்சதைகளினால் முத்திரையும் வைத்து விநாயகரைப்பூசித்து முற்கூறியவர்களின் உபயசரணங்களைத் தியானித்துப் புதிய பழைய என்கின்ற அக்கினிகளில், ஒரு அக்கினியை அடுப்பினிடத்தில் ஆவாகித்துத் தொழுது அவ் வடுப்பின்மிசை அப்பாண்டத்தை நீர்மட்டமாக வைப்பாயாக, எ-று. (61)

* அஷ்ட மூர்த்தமாவது பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சூரியன் சந்திரன் ஆன்மா என்னும் (8-ம்) ஆம். வாயுவினின் றுண்டாகும் அக்கினியின் பிறப்பும் பெயரும் அநேகமாக இருந்தபோதிலும் இந்நூலாசிரியர் (18-வது) பக்கத்தில் (25-வது) செய்யுளில் பாகத்தொழிற்குரிய ஐந்து சுசியாக்கினிகளை மாத்திரம் எடுத்துக்கூறிய விடத்தில், 'கட்டைகளைக் கடைந்தும், சிகிமுகியைத் தட்டியும், சூரியகிரணத்தில் கண்ணாடியைப் பிடித்தும் எடுப்பதாகிய புதிய வக்கினி மூன்றென்றும், யாகத்தில் ஓமவிறகைக் கொண்டும், ஆலயதீபத்தில் கருப்பூரத்தைக் கொண்டும், எடுப்பதாகிய பழைய வக்கினி இரண்டென்றும் விவரங் கூறுமையால் அவை விளங்க இச் செய்யுளில் புதியவழி முக்காலி எனக் கூறினர். புதிய என்பது புதுமை, வழி என்பது பழைமை, முக்காலி என்பது அக்கினி. மூன்று கால்களுள்ள காரணத்தினல் அக்கினிதேவருக்கு முக்காலி யெனப் பெயராயிற்று.

இதுவுமது

வையிடி நுண் டுகளெல்லாங் கலந்திட் டுந்தி
வர்ருற்றி நணைத்திதிற்கு வாதம் விட்டுப்
பெய்யளவைப் புனன்முற்று முக்கா லென்னப்
பீடுகற்க நீருண்மேற் பிரிவாத் தோற்றச்
செய்யதற்கெண் ணுள்வரைநான் முகத்தோன் பீடச்
சிகியாடல் கண்டுகுறி சேரு நீரைப்
பையவடி திப்பியுண்பாக் கியமுங் கூட்டப்
பாணைநெய்ச்சா லையிற்சேர்பின் பகரு வாமே.

(இ - ள்.) அவ்வாறு வைத்த பாண்டத்துள் குடிநீர்க்காக இடித்து நிறுத்த திரவியத்தூளையெல்லாம் கலந்து கொட்டி ஆற்று நீரால் நனைத்துப் பரப்பிக் குடிநீர் இருக்கவேண்டிய அளவின்படி நீரைவிட்டு அதன் அளவின் குறியைப் பாணையின்மேல் எழுதிய இலக்கத்தால் கண்டுகொண்டு, பின்பு அளவையினளவே விடவேண்டிய நீரையெல்லாம் முக்காற் பாத்திரம் வரையில் விட்டுத் தூளெல்லாம் உள்ளழுந்தவும் சலம் மேலில் பிரிவாகத் தோற்றவும் பார்த்துக் காய்ச்சுதற்கு ஏற்படுத்திய இலக்க நாள் வரைக்கும் கமலாக்கினியாக மெதுவுற எரித்து, விட்டசலம் முழுவதும் சுண்டி முன்பு அளந்துவைத்த குறிச் சலமாத்திரம் நிற்கில் தீயை நிறுத்தி வடித்துக்கொண்டு திப்பிநீரையுஞ் சேர்த்து, இந்தக் குடிநீரைத் தைலச்சாலையில் சேர்ப்பாயாக. இனி நடத்தவேண்டுவதுஞ் சொல்வாம், எ-று. (62)

இதுவுமது

பகரவெப்ப மறுமுனெய்ப்பா சனம்பெய் தோதும்
பதக்கற்க மிழைப்பொருட்குட் படக்க ரைத்திட்
டுகரமின்றி யூற்றுவன வூற்றி யொன்றுக்
குபரியட்டத் தொன்றெனநெய் யுகுத்த ளாவி
யொகரவிப நந்தியடி வணங்கி விண்ணோர்க்
குணவருளு மிருகமுடை யொருதெய் வத்தைச்
சிகரமண வைக்குணிறீஇப் புகழ்ந்த தன்மேற்
சேர்வையுறு கடந்திருந்தச் சேர்த்தி டாயே.

(இ - ள்.) வைத்த குடிநீரைச் சுடுகையுடன் தைலப்பாத்திரத்திற் சேர்த்து விதிப்படி பால்முதலிய ரசத்திரவியங்களில் ஏதேனும் ஒன்றால் அரைத்த கற்கத்தை அந்த ரசத்திரவியத்திலேயே கரைத்தூற்றி, சேர்க்கத்தக்க வகையுஞ் சேர்த்து, ஒரு பங்கு

நெய்க்கு அரிக்கால் பங்கு நெய் அதிகமாகவிட்டு இரண்டில்லாமல் ஒன்ருகும்படி கலக்கி பிரணவாகார யானைமுக விநாயகர், நந்தி தேவர் இவர்களுடைய திருவடிகளை வணங்கி, சிகரமுள்ள அடுப்புக்குள் தேவர்க்கு அவிர்ப்பாகங் கொடுக்கும் இரண்டு சிரசினையுடைய அக்கினி தேவனை நிறுத்திப் பூசித்து அவ்வடுப்பின்மீது அப்பாத்திரத்தைச் சேர்ப்பாயாக, எ-று. (63)

இதுவுமது

சேர்த் * தங்கத் தீநான்கி லாதி யந்தத்
தீமுறையே யெரியெரிக்கிற் சீத மற்ருற்
பேர்த்தந்தத் தீயிடந்த மந்த மாகப்
பிரிவிற்கிற் றினவெண்வரை பிடித்துட் காந்தா
தார்ந்துந்தித் துழவன்முறைப் படியும் மூழி
யாற்றுழவி யறைந்தபத மதிற்பி றக்கப்
பார்த்தந்தக் கடத்தியல்வ ழாதி றுத்தெம்
பரமனுருக் கடவுளவிர்ப் பாக நல்கே.

(இ - ள்.) அவ்வண்ணம் சேர்த்துத் தைலங்காய்ச்சுதற் கேற்படுத்திய நாள் அளவைவரையில் பொருந்திய விறகினுல் கமலம் போன்ற சமாக்கினியாகவும், நீர்ச்சுண்டியபின்பு தீபம்போன்ற மந்தாக்கினியாகவும் எரித்து, அடிபற்றிக் காந்தாமல் முற்கூறிய அகப்பையைக்கொண்டு முறைபோல் துழாவிச் சொல்லிய பாகம் இதில் வரக்கண்டு வடிகடத்தில் விதிப்படிக்கு வடித்து, அத் தைலத்தில் நமது பரமசிவத் திருவுருவமாகிய அக்கினி தேவனுக்கு அவிர்ப்பாகங் கொடுப்பாயாக, எ-று. (64)

இதுவுமது

நல்குவது முத்தரமும் முழி நெய்மே
ஞவலங்கொண் டெழினடத்து நாத ஞயுண்
மல்குவது வாய்மையென்பர் நிற்க வன்னி
மகிழ்பூசை யொடுக்கிநெய்க்கண் மருவ வாச
மல்குவது தெறச்சில்லிட் டெழுமண் கட்டி
யக்கடத்தை நெற்புடச்சா லையிற்செ லுத்திப்
புல்குவது மும்மதிக்கே ருத மைத்துப்
பூசைசெய்தீந் தாட்டுமுறை போற்றி பாட்டே.

---

* அங்கம்-தேகம். தேகத்துள் இருக்கின்ற அக்கினி நான்கு வகைப்படும். அவையாவன: சமாக்கினி, விஷமாக்கினி, தீக்ஷணக்கினி, மந்தாக்கினி என்பனவாம்.

(இ - ள்.) அவிர்ப்பாகம் கொடுக்கும் விதியாவது : அவ் வக்கினியை வளர்த்து அதில் (3) தரம் ஒவ்வொரு அகப்பைத் தைலத்தைச் சொரிவதாம். அப்படிச் சொரியும்போது, அவ் வக்கினியினது நடு-நா என்கிற சுவாலையானது மேல்வலங்கொண்டு சுழித்தெழும்பிக் குடைபோல் நிற்குமாயின், இத் தைலம் செய்வித்தவன் தீர்க்காயுள் பெறுவது உண்மை எனப் பெரியோர் சொல்வர். இது நிற்க, முன்பு கட்டிய காப்பு முதலியவைகளை விசர்ச்சனஞ் செய்து அக்கினிபூசை ஒடுக்கி தைலத்தினது பரிமளம் நீங்காவண்ணம் ஓடு மூடி ஏழுசீலை மண்செய்து அப் பாத்திரத்தை நெற்புடச்சாலையில் மூன்று மாதத்திற்கு உயராமல் வைத்து, தைலபூசை செய்து எடுத்து முறைப்படி பகுத்துக் கொடுத்து விதிப்படிக்கு ஸ்நானஞ் செய்விக்கவும், எ-று. (65)

இதுவுமது

ஆட்டுநோய் முகன்கணக்கன் றினங்க டோறு
மறமெலிந்தோர் சுரநோயா லழன்றோர்க் கெல்லா
நாட்டுநா ளெட்டினின்றே மூறைந் தென்னு
நாட்களிலாட் டிப்பழக்கி நான்கி லாட்டாட்
டாட்டுநோய்ச் செருக்கொழியுங் காறும் பத்தி
யங்காப்பா யணங்கிலுறி னங்கூழ் தீர்ப்பாய்
மீட்டுமோ ருரையுமின்றிம் முகவு ரைக்குள்
விரிதைல விதிமுழுதும் விளங்கு மாதோ.

(இ - ள்.) ஸ்நானம் செய்விப்பது சனிவாரம் புதவாரந்தோறுமாம். ஆனால் மிகவும் மெலிந்தவருக்கும், சுரரோகத்தால் வெப்பங்கொண்டவருக்கும் (8) நாட்கொருதரம் செய்வித்துப் பின்பு, ஒவ்வொரு நாளாகக் குறைத்துக் குறைத்துச் செய்வித்துப் பழக்கிப் பின்பு (4) நாட்கொரு தரமாக ரோக நிசேஷமாகுமட்டும் செய்வித்துப் பத்தியகிரமத்தில் வைக்கவும். இவ்விதம் செய்யில் சகல பிணிகளும் நீங்கும். ஒருவேளை, நீங்காவிடில் அவ்வவற்றிற்குத் தக்கவாறே கருமசாந்திகளைச் செய்விக்கில் அவைகள் சந்தேகமற நீங்குவனவாம். இனி, நாம் சொல்ல வேண்டுவ தொன்றுமில்லை. இப் பாயிரத்தின்கண் மேற்கூறப்படும் தைலவிதிகளெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் தெளிவாக விளங்கும். எ-று. (66)

அநுபந்த முகவுரை முற்றியது.

தைல வகைகள்

சுக்குத் தைலம்

விருத்தம்

சீரமிர்த மூடுவிட மஃதையவ்
விடமறச் சீவுதறி முட்டியெண்பான்
சேராற் றறற்கடன தட்டமதி
லொன்ருய்ச் சிறுக்கிவிடு திலநெய்யமிர்தம்
வாரநீர்க் கரையரை யரத்தைமுக்
கடுமுஸ்தை மஞ்சிட்டி முப்பலமகில்
வரிவரி யெருக்கடி குலாதினிக
தாகுவயம் வலிவன்னி தாருசந்தங்
காரமுறு தேவதூ பஞ்சவிகை
தலரூப கத்தாதி லொத்துகத்தோல்
கர்ச்சூர் பலோத்தமை யோடிந்து
கத்தூரி காஸ்மீர மிருபத்தாறையு
மாரநூண் டுகள்புரி பதப்பல
மெண்ணெய்யி லிட்டந்தச் சரக்கிரண்டு
மடியிலிடு கலசத்து ளரைநிட்க
மிதையெரித் தாந்தைல மக்கூடமிடே.

(இ - ள்.) மாச்சுக்கை விஷம் என்கிற தோலை அறச்சீவி கரணை கரணையாக நறுக்கி (பலம்-80) நிறுத்துக் குடிநீர்ப்பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி (8) மரக்கால் ஆற்றுச்சலம் விட்டுக் கமலாக்கினியாக எரித்து (8-ல்) ஒருபங்காக்கி தைலப்பாத்திரத்தில் வடித்து இக்கஷாயத்தில் ($\frac{1}{2}$-என்கிற) (2-படி) நல்லெண்ணெயும் மற்றொரு ($\frac{1}{2}$-என்கிற) (2-படி) பசுவின்பாலும் கூடவிட்டு, சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி வேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அகிற்கட்டை, தண்ணீர்விட்டான்கிழங்கு, எருக்கின் வேர்ப்பட்டை, கடுகுரோகிணி, கோஷ்டம், கொடுவேலிவேர், தேவதாரிக்கட்டை, சந்தனக்கட்டை, வெள்ளைக்குங்கிலியம், செவ்வியம், ஆமணக்கின் வேர், வெள்ளலத்திப்பட்டை, பேரீச்சங்காய், கொடிமுந்திரிப் பழம், இந்துப்பு, கஸ்தூரி, குங்குமப்பூ என்னும் (26) கற்கவகைச் சரக்குகளையும், தனித்தனியே மிகவும் நுண்ணிய பொடியாகச்

செய்து, ஈற்றிற்கூறிய கஸ்தூரி, குங்குமப்பூ என்னும் (2-ம்) நீங்கலாக, மற்றை (24) வகைத் தூளையும் ஒவ்வொன்று (¼-பலம்) விழுக்காடு நிறுத்து மேற்கூறிய எண்ணெயிலிட்டு, கஸ்தூரி, குங்குமப்பூத் தூளிரண்டையும் (½-½-வராகனிடை) வடிகலசத்தி லிட்டு வைத்துக்கொண்டு, அந்த எண்ணெயைச் சிறிய தீயால் எரித்துத் துழாவித் தைலத்தை மெழுகுபதத்தில் வடிகடத்தில் வடித்துக் கொள்வாயாக, எ-று. (1)

இதன் மகிமை

விருத்தம்

கடத்திலிடு நாகராதித் தைலஞ்சுத்தி
மதிகளம மிட்டாற்
காசினியி லதன்பெருமை யெமைவினவே
லதுதொழிலிற் காட்டுமாயின்
சடத்திலுறு மாவர்த்த வாதமெலாந்
துவாலையாற் றங்காநாசி
தனினசியம் புரிந்திடினே பீநசமுந்
தலைநோயுந் தரியாமூர
லிடத்திலடர் காலொடுபல் லரணையுங்கொப்
பளிக்கவரு மிருசெவிக்கு
ளிருதுளிவிட் டிடக்குத்தல் விடுஞ்சிரநோய்
தோற்பைக்கு ளிட்டாற்போந்
திடத்திடுகோ ழைக்கட்டுங் குரற்கம்ம
லும்முழுக்கிற் றீருமின்னுஞ்
செப்பின்மிகப் பெருகுமிதன் பத்தியமிச்
சாப்பத்தியந் தேர்ந்திடாயே.

(இ - ள்.) அவ்வாறு கடத்தில் வடித்த நாகராதி என்கிற சுக்குத்தைலம், நெல்லுக்குள் ஒருமாதம் புடம் வைத்தெடுக்கச் சுத்தியாம். இதன் பெருமையை நம்மைக் கேட்கவேண்டுவதில்லை; அதுவே, தனது தொழிலினால் யாவருக்கும் தெரிவிக்கும்; ஆயி னும், அதனை ஆளும் முறைமையை ஆராயுமிடத்தில் (1) துவா லைச் சிகிச்சை என்கிற மேற்பூச்சினால், தேகத்தில் நிலைத்த ஆவர்த்த வாதங்களெல்லாம் நீங்கும். (2) நாசிகளில் நசியம் பண்ணினால், பீநசரோகங்களும், தலைவலிகளும் ஒழியும். (3) வாயில்விட்டுக் கொப்பளித்தால், பல்லுகளின் வேரைப்பற்றிய வாதநோயும், பல்லரணை என்கிற ரோகமும் விலகும். (4) காதுக்

குள் இரண்டு துளிவிட்டால், கர்ணசூலை நிவர்த்தியாம். (5) மிருதுவாகிய தோலில் புரைவைத்துக் குல்லாதைத்து அதில் விட்டுச் சிரசில் போட்டுக்கொண்டால், சிரோரோகந் தீரும். (6) ஸ்நானமே செய்தால், பலம்பொருந்திய கோழைக்கட்டுகளும், சுரசாத ரோகமும்போம். இன்னும் கூறப்புகின் மிகவும் பெருகும், இதற்கு இச்சாபத்தியமாம், எ-று. (2)

இஞ்சித் தைலம்

விருத்தம்

மதின்முசுக்கை கரிசாலை யெண்ணுவிவ் வைந்தும்
வகைக்கிரதம் படிபடிபெய் மலயசந்தீட் சணம்பா
லதிலிரண்டு மிழைவெவ்வே றிரண்டரையா மிரஞ்சேர்த்
தட்டிரத்தம் வாளகஞ் சுராலைமும்மைப் பொடியும்
மதியொருநிட் கஞ்சுத்தி முட்டியிடக் கலத்துள்
வடியாடுச் சந்தலைநோய் வாதவுடற் கடுப்பு
முதிர்செவிநோய் தலைவலிபீ நசமுகநோய் கபநோய்
முதலியநோ யும்பகன்முன் முளைத்தெழும்பூ மொழியே.

(இ - ள்.) இஞ்சிச்சாறு முசுமுசுக்கைச்சாறு கையாந்தகரைச் சாறு நல்லெண்ணெய் பசுவின்பால் ஆகிய இவ் (5-ம்) வகை 1-க்கு ஒவ்வொரு படி தைலப்பாத்திரத்திலூற்றிச் சந்தனக்கட்டையும்-மிளகும் ($2\frac{1}{2}$ $2\frac{1}{2}$ பலம் ஆக) நிறுத்து பசும்பால் விட்டரைத்து அந்த எண்ணெயில் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடிகலசத்துள் குங்குமப்பூ விராகனிடை-1, வெட்டிவேர் (பலம்-$\frac{1}{2}$) சாம்பிராணி விராகனிடை-1, என்னும் இம் 3-சரக்குகளையும் பொடித்துத் தூவி இதில் வடித்தெடுத்து வைத்த தைலத்தை ஸ்நானஞ் செய்யில், உச்சந் தலைநோய் வாதத்தா லுண்டாகிய தேகக்கடுப்பு அதிகரித்த செவிநோய் தலைநோய் பீநசநோய் முகநோய் கப நோய் முதலிய நோய்களும், சூரியகிரணம்பட்ட * பூவைப்போல் நாமமும் ரூபமும் இல்லாமற் போய்விடும், எ-று. (3)

மிளகுத் தைலம்

விருத்தம்

மிரியல்வழு துணைமூல மாலூர மச்சடை
வியாக்கிரி கரஞ்சமத்த
மேகநா தஞ்சுரச மாகுலி முடங்கன்முலை
விண்டவொரு பானென்றிவண்

* பூ - என்பது பூநீருவதற்கு முன்பு தோன்றும் கதிராம்.

பிரகுஞ்ச மொன்றினுக் கொருபானி கற்கமபு
பெய்தூணி நான்கினென்ருய்ப்
பிறகிறுத் தெட்டயில மிருபடிபெய்சி தமைசொரி
பீரீரிரண் டுபடிகாண்
திரிபலை மரீசமம் பதிவிடைகு பேரிகை
சிகிப்பீலி யொலிசாதிசந்
திரிபூரம் வெட்பாலை பங்கிவித் தரிசனந்திவி
பிநாமங் குன்றிவேர்
கிருமியரி சிஞ்சைவித் துரியொருப தொடுநவங்
கிளர்வகைக் கொருகஃசெலாங்
கிண்டியி ழையபப்பால் கொடதிலி டெரிவாசங்
கிளம்பின்வடி சுத்திபுரியே.

(இ - ள்.) மிளகு சிறுகத்தரி வில்வம் கீழ்வாய்நெல்லி கண்டங்கத்தரி புன்கு ஊமத்தை சிறுகீரை நொச்சில் இவற்றின்வேர், சிற்றரத்தை தாழைவிழுது ஆக மொத்த தினுசுகள் (11-ம்) வகை 1-க்கு பலம்-10, இவைகளை உரலில் துவைத்துப் பாண்டத்திலிட்டுத் தூணி என்கிற (16-படி) சலம் விட்டு அதை (4-ல்) ஒரு பங்காகக் காய்ச்சி யிறுத்த குடிநீரில் எள்ளினது நெய் (படி 2-ம்) வெள்ளாட்டுப்பால் (படி 4-ம்) சேர்த்து, கடுக்காய் நெல்லிக்காய் தாணிக்காய் மிளகு திப்பிலி அதிவிடையம் வட்டத்திருப்பி மயிலிறகு கோஷ்டம் சாதிக்காய் சுக்கு கருப்பூரம் வெட்பாலையரிசி கஞ்சாவிதை மஞ்சள் சித்திரமூலம் அதிமதுரம் வாய்விளங்கம் புளியங்கொட்டைத்தோல் என்னும் கற்கதிரவியம் (13-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) விழுக்காடு முற்கூறிய பால்விட்டரைத்து அதிற் கரைத்துக் காய்ச்சிப் பக்குவ மணம் உண்டாகும்போது வடித்து அதை (3) நாட்கு மேற்பட அமைந்தநாள் வரைக்கும் நெற்புடத்தில் வைப்பாயாக, எ - று. (4)

இதன் மகிமை

விருத்தம்

சுத்திசெய் சருமபந்தத் தூயநற்றயி லங்காணின்
முத்திய வாதமெங்கே மூர்த்தத்தின் கனப்பதெங்கே
குத்திய சுழல்வாய்வெங்கே கூக்குரற் செவிடதெங்கே
புத்தியின் மயினமெங்கே புகழுளீர் புகலுவீரே.

(இ - ள்.) சுத்திசெய்த பரிசுத்தமாகிய நல்ல மிளகுத் தைலத்தினல், நாட்பட்ட வாதரோகமும் சிரோபாரமும் ஆவர்த்தவாத

மும் கூச்சலிட்டுச் சொல்லும்படிக்குச் செய்கின்ற செவிட்டு ரோக மும் புத்தியினது மந்தமும் எங்கே போய்விடுமோ புகழையுடைய பண்டிதரே சொல்வீராக, எ-று.

[நீங்கிவிடும் என்பது கருத்து] (5)

வேறுவகை மிளகுத் தைலம்

விருத்தம்

வல்லிசம் படியுகர மாப்பிருங் கரமட
வந்தபுன லரைங்கரமேன்
மதிலார்க் கிலைத்தமா லகிமத்த முதிர்சம்ப
மாதுலங் கத்திரதமுந்
தில்லியமு முருவினுக் கொருககர மதுரநிசி
சிங்கிமுக் கடுமுப்பலஞ்
சிவதைசவி யஞ்சடை விளங்கமிரு துடிமுஸ்தை
சிகரத்து வக்கொட்டறை
துல்லியமசீ தளம்பூலாங் கிழங்கசை மதூகவலர்
கச்ச நுரைபொன்
றூவியய முந்திரிகை மாதுவசை புஷ்கரந்
தோணிவான் மீகஞ்சலஞ்
சொல்லிய சரக்கெண் முதலக்கரம் வகைக்குத்
தொடிக்குளுறை வகரமுழுதுஞ்
சுப்பிர தஷ்டச்சுரத மிட்டிழைத் தொன்றுய்த்
துழாவியடு வடிதைலமே.

(இ - ள்.) மிளகு படி 2-ல் பெரியபடி, (4-படி) சலம்விட்டுக் காய்ச்சி, நாலுழி கஷாயமாக வடித்து இதில் முதிர்ந்த இஞ்சி எருக்கிலை கீழ்வாய்நெல்லி ஊமத்தை புழுத்துதிர்ந்த எலுமிச்சம் பழம் கொமட்டி மாதுளம்பழம் இவ் (6-ன்) ரசமும் நல்லெண்ணெ யும் வகை 1-க்கு (படி-1) ஆகமொத்தம் சேர்த்து அதிமதுரம் மர மஞ்சள் கர்க்கடகசிங்கி * திரிகடுகு * திரிபலை சிவதை செவ்வியம் சடாமாஞ்சில் வாய்விளங்கம் ஏலம் காட்டேலம் கோரைக்கிழங்கு லவங்கப்பட்டை ஒட்டறை அப்பிரகம் கருப்பூரம் பூலாங்கிழங்கு சீரகம் இலுப்பைப்பூ கடுகரோகணி கடல்நுரை சிறுநாகப்பூ மயி லிறகு அரப்பொடி கொடிமுந்திரிப்பழம் பெண் வசம்பு கோஷ்டம்

* திரிகடுகு * திரிபலை இவைகள் (6) சரக்குகளாக விருந்தபோதி லும் தொகைச்சரக்கு என்னும் விதியினுல் இங்ஙனம் அவைகளை இரண்டு சரக்காகவே கொள்க.

சிறுவழுதுணைவேர் குங்குமப்பூ வெட்டிவேர் என்னும் கற்கதிரவியம் 30-ம் வகை-1-க்கு (பலம்-$\frac{1}{4}$) விழுக்காடு அத்திப்பட்டைச் சாற்றிலரைத்துக் கரைத்து ஒன்றுபடத் துழாவிக் காய்ச்சிப் பதத்தில் தைலத்தை வடிப்பாயாக,

(இரண்டிற்கு) உகரமும் (குருணிக்கு) ஙகரமும் (பதக்குக்கு) இருஙகரமும் (நாநாழிக்கு) அரை ஙகரமும் (ஒன்றிற்கு) ககரமும் (காலுக்கு) வகரமுமாக வழங்குதலின் இந்நூலாசிரியரும் அவைகளையே தொகையாகக் கூறினர். உயிருமுடம்பும் முப்பது எழுத்துக்களாதலின் (30) என்னும் தொகை-க்கு முதல் அக்கரமென்ருர், எ-று. (6)

(தூணி) என்பது மரக்கால் இது பெரியபடி 2-படி.
(குருணி) என்பது பெரியபடி-2. (பதக்கு) என்பது பெரியபடி 4.
(நாநாழி) என்பது பெரியபடி-1. ஆகக் கொள்க.

இதன் மகிமை

விருத்தம்

வடித்திடுமிக் கறித்தைலந் துட்டிடையுள் ளருந்திடினும் வாரந்தோறும், பிடித்திடினு மாடிடினுஞ் சோபை பாண் டிருமனீர்ப் பிணிவி சர்ச்சி, நடித்திடச்செ யுஞ்சூதி காவாதந் தலைவலிபன் னமைச்ச லூதை; தடித்திடுசீ ரணச் சுரமா தியநோயு நகுலசர்ப்ப சால மாமே.

(இ-ள்.) இவ்வாறு வடித்த கறிஎன்கிற மிளகுத் தைலத்தை ஒரு துட்டிடை யளவாக உள்ளுக்குச் சாப்பிட்டாலும், தினந்தினமும் சரீரத்தில் தடவிப் பிடித்தாலும், வாரத்துக்கொருதரம் ஸ்நானஞ் செய்தாலும், சோபை பாண்டு காசம் சலக்கோவை விசர்ச்சி கூத்தாடச் செய்கின்ற சூதிகாவாதம் தலைவலி பலவாருகிய தினவு வாதரோகம் விஷமிக்கின்ற சீரணசுரம் முதலிய ரோகங்களும் கீரிப்பிள்ளையைக் கண்ட சர்ப்பக்கூட்டம்போல் நாசத்தை யடையும், எ-று. (7)

சீரகத் தைலம்

நேரிசை வெண்பா

அசைத்தொடியொன் றெண்ணெய் யரைக்குளகம் பாண்ட
திசைத்தொடியக் காய்ச்சி யிறுத்தா—டசைத்தொடியத் [த்
தள்ளும்பித் தக்கிச்சூர் சர்த்திதலை நோயலச
மள்ளும்பித் துக்கொள்ளு மால்.

(இ-ள்.) (1) பலம் சீரகத்தை (1-படி) நல்லெண்ணெயிற் போட்டு தைலப்பாண்டத்திலூற்றி மேற்படி சீரகம் ஒடியத்தக்க பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு இதை ஸ்நானஞ்செய்தால், சிரசிலேறிச் சுழலச்செய்து கீழே தள்ளுவதான பித்தம், நேத்திர ரோகம் வாந்திரோகம் தலைவலி மந்தம் அள்ளுநோய் என்னும் ரோகங்களுக்கெல்லாம் பயித்தியம் பிடிக்கும், எ-று.

[எனவே நீங்கும் என்பதாம்.] (8)

வாதகேசரித் தைலம்

விருத்தம்

குடமொடு நொச்சி தழுதாழை
கொச்சை யருக்கெண் ணேரண்டங்
கூறிய வேழின் முதன்மூன்றுங்
கோமி துனம்பா றுவிநேயம்
படிபடி தத்தம் முறவேபெய்
பண்டித வாயு மரேணுகையும்
பருமர சோனங் கமழ்சரணம்
பரையரு ணுதம் புட்கரமுக்
கடுகடு கீரைந் தஃதஃதோ
காசிடை மும்மூன் றிழையமுதாற்
கரையடு வடியித னபிதானங்
கண்டுகொள் வாத கேசரியாம்
பிடிபிடி நற்றயி லந்தடவிப்
பேரா வாதக் குழுவுடனே
பிசறிய சருமத் திமிர்வாய்வும்
பீடுறு மிற்புலி யணேசுகமே.

(இ-ள்.) சதுரக்கள்ளி நொச்சி தழுதாழை இவற்றின் ரசங்கள், வெள்ளாட்டுபால் எருக்கம்பால் எண்ணெய் ஆமணக்குநெய் என்னும் இவ் (7-ம்) வகை 1-க்கு ஒவ்வொரு படி பாத்திரத்தில் விட்டு ஒன்றுறக்கலக்கி, கடுக்காய் காட்டுமிளகு பரும்வெள்ளைப்பூண்டு வாசனையுள்ள பெருங்காயம் நெல்லிக்காய்கந்தகம் கோஷ்டம் சுக்கு மிளகு திப்பிலி கடுகு என்னும் கற்கமருந்துகள் (10-ம்) வகை 1-க்கு (3) காசிடையாக நிறுத்து, அவைகளை மேற்படி பால்விட்டரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடிக்கவும். இது வாதகேசரி என்னும் பெயரையுடைய நல்ல தைலமாம். இதைத் தேகத்தில் தடவிப்பிடித்தால் தீராத வாதரோகக்கூட்ட

மும் சப்ததாதுக்களிலும் கலந்த திமிர்வாதமும் பூனையைச்சேர்ந்த கிளிப்பிள்ளையைப்போலாம், எ-று.

[பூனையிருக்கும் இடத்தில் கிளிப்பிள்ளை அணுகாததுபோல் இத்தைலம் இருக்கும் இடத்தில் நோய் அணுகாதென்பது கருத்து.] (9)

வாதாந்தத் தைலம்

விருத்தம்

கோரண்டம் பலையெருக்கா மணக்குநொச்சி தசமூலங்
குலமூ வைந்துங்
கோவிருதா ணியிற்பப்பத் தாம்பலமச் சடைகளிட்டு
குறுக்கெட் டொன்ரு [க்
யேரண்டந் திரியாட்சி நூவுநெய்யோர் படிபடியா
மிவைவெண் மைப்பா
லேகமுறக் கலந்தசுவ கந்திகுப்பை முஸ்தைமஞ்ச
ளிந்துப் பேலச்
சீரண்ட மிலவங்க வுரியடைசுக் ககில்வசம்பு
தேவ தாரஞ்
சிற்றரத்தை யொருபான்மூன் றெவ்வொன்றுக்
கொருகஃசாச் சேர்த்தி டித்து
வாரண்ட முறுபரம வணுவாக்கி விரவியெரி
வடியி தன்பேர்
வாதாந்தத் தைலமிதை விரிகிக்குட் சுத்திபுரி
வார நாளே.

(இ - ள்.) செம்முள்ளி, சிற்ருமுட்டி, எருக்கு, ஆமணக்கு, நொச்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிற்ருமல்லி, பேரா மல்லி, நெருஞ்சில், வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகைஎன்னும் இவற்றின் வேர்வகை (15-ம்) தினுசு 1-க்கு பலம் 10-ஆக நிறுத்து இடித்து இருதூணி தண்ணீர் விட்டுக் காய்ச்சி (8-ல் 1) ஆக கஷாயம் வடித்து அதில், சிற்ருமணக்கு, தேங்காய், எள்ளு என்னும் இம் 3-நெய்களும் வகை (1-க்கு 1-படியும்) வெள் ளாட்டுப்பால் (3-படியும்) ஊற்றிக் கலக்கி, அசுவகந்தி, சத குப்பை, கோரைக்கிழங்கு, மஞ்சள், இந்துப்பு, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, அகிற்கட்டை, வசம்பு, தேவ தாரம், சிற்றரத்தை என்னும் கற்கவகை (13-ம்) வகை 1-க்கு ($\frac{1}{4}$-பலம்) விழுக்காடு கூட்டி இடித்து உயர்ந்த ஆகாயத்திற்

பொருந்தும் பரம அணுவையொத்த தூளாக்கி மேற்படி எண்ணெயில் கலந்து எரித்துப் பதத்தில் வடித்துக்கொள். இதன் பெயர் வாதாந்தத் தைலமாம். இதை (8) நாள் வரையில் நெற்புடம் வைப்பாயாக, எ-று. (10)

இதன் மகிமை

விருத்தம்

வாரமே தணந்தெ டித்து வைத்தநெய் யுஊக்கா லெல்லாஞ்
சேரமே லெங்கும் பூசித் தினந்தினம் பிடிக்கிற் பொல்லாக்
கோரமே புரியும் வாதக் குழாமறி ஞோர்க்கா மந்த
காரமே நாளு மிச்சாப் பத்தியங் கண்டு கொள்ளே.

(இ-ள்.) நெற்புடம் வைத்து (8) நாளுங் கழித்தபின்பு எடுத்து வைத்துக்கொண்டு, இதை ரோமகூபங்க ளெல்லாம் நிறையும்படிக்குத் தேகமுழுதும் பூசித் தினந்தோறும் பிடிப்பிக்கில் மிகுந்த பயங்கரத்தைச் செய்யாநின்ற வாதநோய்க் கூட்டமானவை பெரியோர்களுக்கு உண்டாகின்ற அஞ்ஞானம் போலாம். இதற்கு எப்போதும் இச்சாபத்தியமாம், எ - று.

[பெரியோரை அஞ்ஞானம் அணுகாததுபோல், இச் சிகிச்சைக்குரியோரை நோயணுகா தென்பதாம்.] (11)

உரோக சஞ்சீவித் தைலம்

விருத்தம்

சுகபலைச்சா றதன்பாலிவ் வடைவே கானச்
சுநுகியுளும் புரண்டையிர தம்பற் பாடம்
வெகுபிரசைக் குடிநீரிவ் வேழும் பற்பம்
வெவ்வேறைந் தைந்தெணெய்பத் துயராட் டுப்பாற்
றுகையளவைந் தெரிமுகிபால் வாள மெல்லாஞ்
சுடரில்வடி பூசுணடல் வாதஞ் சந்நி
யுகுகொடுஞ்சு வாசகா சங்க ளும்போ
முரோகசஞ் சீவியிதற் குரிய பேரே.

(இ-ள்.) எருக்கிலைச்சாறு-அதன் பால் காட்டுச்சதுரக்கள்ளிச்சாறு-அதன் பால், பிரண்டைச்சாறு, பற்பாடகக்கஷாயம், மெருகன்கிழங்குக் கஷாயம் என்னும் இவ் 7-ம் வகை (1-க்கு) (பலம்-5) நல்லெண்ணெய் (பலம்-10) வெள்ளாட்டுப்பால் (பலம்-45) இவைகளை ஒன்றுபடக் கலந்து இதில் நறுக்கிய சேராங்கொட்டை (பலம் 5-ம்) சுத்திசெய்த வாளப்பருப்பு (பலம் ½-ம்)

சேர்த்து, தீபாக்கினியாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதைச் சிறுகத்தொட்டு மேலுக்கும் பூசி வெற்றிலையிற் றேய்த்து உள்ளுக்கும் கொள்ளுவையாகில், வன்மையுள்ள வாத ரோகமும் சந்நிபாதமும் கோழைவிழும்படியான சுவாசரோகமும் நீங்கும். இதற்கு உரோகசஞ்சீவித் தைலமென்பதே வுரிய பெயராம், எ - று.

சஞ்சீவியானது மரணத்தைத் தடுத்துச் சீவிக்கச்செய்யுந் தன்மையைப்போல, இத்தைலமும் மரணத்தையே தராநின்ற மகாவாத ரோகங்களையும், விபரீத சந்நிபாதங்களையும், கொடிய சுவாச காசரோகங்களையும் நீக்கி ரோகியைச் சீவிக்கச் செய்வதனுல் உரோகசஞ்சீவித் தைலமெனக் கூறினர். (12)

தசமூலத் தைலம்

விருத்தம்

தசமூ லந்தொடி யத்தொகை தத்தந் தவழ்புன லிருதூணி
தழலம் பொருசிவ மெண்ணெ யதுமாடந் தருகட் டிருசிவ
துசிரந் துடிசா பிருசந் திருதரு வொலிமுப் பலமதுர [மிந்
முயர்சீ வனியுரி மிசிநீர் முளிவிதை யோசன வல்லிமர
நிசிகூ கைபினீ றட்டவ ருக்கிவை நீடார கையெணலா
நேரவி ழைத்தஃ தஃதரை முட்டியந் நேயத் திடுவடியுண்
பிசகற முழுகப் பனிலக் குழுவை பிணுகிமு னெதிர்மறமாம்
பிடகர் சொல்வார் தசமூலத்தை லப்பெருமை யெமக்கரிதே.

(இ-ள்.) கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், கூவிளை, பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை என்னும் இப் (10-வேரும்) வகை 1-க்கு (பலம்-10) ஆக இடித்து அதில் இருதூணி ஆற்றுச்சலம்விட்டுக் காய்ச்சி, 1-மரக்கால் கஷாயமாகவடித்து நல்லெண்ணெய் 1-மரக்காலும் உழுந்துக் கஷாயம் (பெரியபடி $\frac{1}{2}$-ம்) விட்டு எட்டிவிதை, விலாமிச்சு, ஏலம், கோரைக்கிழங்கு, சந்தனம், செஞ்சந்தனம், தேவதாரம், சரள தேவதாரம், கோஷ்டம், கடு, நெல்லி, தான்றி, அதிமதுரம், வெட்பாலைப்பட்டை, சதகுப்பை, நீர்முள்ளிவிதை, மஞ்திட்டிவேர், மரமஞ்சள், கூகைநீறு, அட்டவருக்கம் என்னும் கற்கவகை 27-ம் வகை 1-க்கு (பலம்-$\frac{1}{2}$) ஆகச் சேர்த்து அந்தக் கஷாயத்தினுல் மை போலரைத்து அந்த எண்ணெயிற் கரைத்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு, இதை துட்டெடை யளவையாக உள்ளுக்குஞ் சாப்பிட்டு விதிபோல் அப்பியங்கனமுஞ்செய்து, மேலுக்கும் தடவிப் பிடிப்பையாகில், வாதரோகக் கூட்டங்களெல்

லாம் பரமசிவனுடன் எதிர்த்த இயமனைப்போலாம். இத் தசமூலத் தைலத்தின் பெருமையைச் சொல்லவென்றால் பண்டிதரே சொல் வார்கள்; யாம் சொல்லப்புகின் அரிதாம், எ-று. (13)

அஷ்டவருக்கம் ஆவன: சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு சீரகம், கருஞ்சீரகம், ஓமம், பெருங்காயம் என்பனவாம்.

சரணைத் தைலம்

விருத்தம்

முதியசரண் மூலமொரு துலைக்கறனுற் குருணி
மொய்க்கவிட்டு நாலிலொன்றாய் முகித்தகுடி நீரிற்
றதியயமெண் ணெய் யவந்திதத்து வயந்தத்து வயமாத்
தன்னியஞ்சக் கரம்பாணந் தன்மூலஞ் சடிலை
யதிமதுரஞ் சசிபலைதெய் வத்தருசித் திரக
மாகுலிமா விலிங்குமிசி யெரிமுகிமுன் பறைவேர்
பதின்மூன்றும் வகைவகைக்குப் பற்பமிழைத் தமுதாற்
பாய்ச்சியெலாங் கலக்கியட்டிப் பருவமுறு வடியே.

(இ-ள்.) முதிர்ந்த அம்மையார் கூந்தல்வேர் (பலம் 100-க்கு) (தூணி) தண்ணீர்விட்டுக் காய்ச்சி (4-ல் 1-ஆக) வடித்த கஷா யத்தில் தயிர்ச்சலம் நல்லெண்ணெய் காடிச்சலம் இம் (3-ம்) வகைக்கு (3-படியும்) முலைப்பால் பெரியபடி 1-ம் விட்டு, திப்பிலி திப்பிலிமூலம் சடாமாஞ்சில் அதிமதுரம் இந்துப்பு சிற்றாமுட்டி தேவதாரு கொடிவேலி சிற்றரத்தை மாவிலிங்குப்பட்டை சதபுட்பி சேராங்கொட்டை அம்மையார் கூந்தல்வேர் என்னும் கற்கவகை (13-ம்) வகை 1-க்கு பலம் 1-ஆக மேற்படி பாலாலரைத்துக் கரைத்துக் கலக்கி மெதுவாக எரித்துப் பக்குவத்தில் வடிப்பா யாகவும், எ-று. (14)

இதன் மகிமை

விருத்தம்

பருவத் தெடுத்த தைலமதைப் பதனம்பண்ணி யொரு விரலாற், றுருவத் தடவிப் பிடிப்பையெனி லொழியாக் குடைச்ச லுதறுவலி, சருவத் திமிர்வா தக்குழூவுந் தடிமுன் குயப்பாண் டத்தடுக்காந், துருவத் தடைநீந்தோர் சரணைதிச் சுவைச்சத் தடலை துதிப்பாரே.

(இ-ள்.) இவ்வாறு வடித்த தைலத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டு ஒரு விரலால் தொட்டுத் தடவிப்பிடிக்கில், நீங்காத

தேகக்குடைச்சலும் உதறுவலியும் சகலதிமிர் வாதக்கூட்டமும் தடிக்குமுன் நேரிட்ட குயப்பாண்டத்தின் அடுக்குப்போலாம். இந்தச் சரணுதித் தைலத்தினது வன்மையை யாம் சொல்லுவ தல்ல; துருவநிலையை யடைந்த பெரியோர்களே சொல்வார்கள், எ-று. (15)

* நிற்குண்டித் தைலம்

விருத்தம்

சிதசுரச மார்க்கவஞ் சங்குசா றடைமுட்டி
தேட்கடை பெரும்புன்முள்ளி
சிம்மமுகி பொடுதலை தமாலகி யளர்க்கமெண்
டெரிபனிரு வகையிரதமு
மகதரைப் படிகருமை யமுதெணெய் யிரண்டிரண்
டணைகடுகு † பஞ்சாக்கினி
யரேணுகஞ் சவ்வியம் பூதநா சினியோம
மதிவிடை பாரங்கிமுஸ்தை
மதகரிக் கணைவச்ச கத்தண் டுலம்பரு
மரத்துரி நறுக்குமூலம்
வாய்விளங் கங்கடுகை கொடிவேலி மதுரசை
வசம்பிரு பதிற்றிரண்டும்
பதமுறவவ் வமுதிழை வகைக்கரை வராகனிடை
பாய்ச்சதி லெரித்துணடப்
பஞ்சகா சங்கயஞ் சாபமெதிர் சிங்கமாம்
பகருநிற் குண்டியிஃதே.

(இ - ள்.) வெண்ணொச்சி கரிசனுங்கண்ணி முள்ளுச்சங்கிலை, வெள்ளைச்சார்வேளை பேராமுட்டி தேள்கொடுக்கிலை பெரும்புல் கண்டங்கத்திரி ஆடாதோடை பொடுதலை கீழ்வாய்நெல்லி தூதுளை என்னும் (12-ம்) வகை 1-க்கு சாறு (படி-½) ஆக சேர்த்து அதில் வெள்ளாட்டுப்பால் (படி 2-ம்) நல்லெண்ணெய் (படி 2-ம்) விட்டு கடுகு பஞ்சாக்கினி காட்டுமிளகு செவ்வியம் பெருங்காயம் ஓமம் அதிவிடையம் கண்டுபாரங்கி கோரைக் கிழங்கு யானைத்திப்பிலி வெட்பாலையரிசி பெருமரப்பட்டை திப் பிலிக்கட்டை வாய்விளங்கம் கடுகுரோகிணி கொடிவேலி பெருங்

---

* நிற்குண்டி என்பது நொச்சில்.

† பஞ்சாக்கினி ஆவன: சுக்கு மிளகு திப்பிலி சீரகம் ஏலம் என்னும் இவைகளாம்.

குரும்பை வசம்பு என்னும் கற்கவகை (22-ம்) வகை 1-க்கு (½) விராகனிடை. விழுக்காடு அவ் வெள்ளாட்டுப்பாலால் மைபோலரைத்து அதிற் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதைத் துட்டிடையளவாக உள்ளுக்குஞ் சாப்பிட்டு ஸ்நானமுஞ் செய்தால், ஐந்து வகைக் காசரோகங்களும் க்ஷயரோகங்களும் சிம்புள் பக்ஷிக்கெதிர்ப்பட்ட சிங்கத்தைப் போல் நாசம் அடையும். இதுவே நிற்குண்டித் தைலமாம், எ - று.

மூலயோக நிற்குண்டித் தைலம்

விருத்தம்

தூயநொச்சி யாமணக்கார்க் கசுவகந்தி புன்கா
 தொண்டைமுட்டி பருவாகை புனமுருங்கை கூந்த
லாயில்குடம் பருங்குறிஞ்சி பதின்மூன்றும் வகைக்கீ
 ரைம்பலவேர்க் கம்புபதக் கடம்பிரண்டு படியெண்
ணேயம்வெண்மை யமுதுபடி படிதருசுக் குழுந்தா
 நீடியரு மாலமரா ளங்கொடுத்தீ குக்கி
லாயவே ழும்பலம்பா லஃதஃதாட்டி டட்டப்
 பனிலவர்க்க மிலேச்சடைநிற் குண்டியிலீ தாமே.

(இ - ள்.) வெண்ணொச்சில் ஆமணக்கு எருக்கு அசுவகந்தி புன்கு ஆதொண்டை பேராமுட்டி பருவாகை புனமுருங்கை குதிரைவாலி ஆயில்மரம் சதுரக்கள்ளி பெருங்குறிஞ்சி என்னும் (13-ன்) வேரும் வகை 1-க்கு (பலம்-10) ஆக இடித்துப் பாத்திரத்திலிட்டு (4-படி) தண்ணீர் விட்டுக் காய்ச்சி 2-படியாக வடித்த கஷாயத்தில் எண்ணெயும் வெள்ளாட்டுப்பாலும் ஒரு ஒரு படிவிட்டு, தேவதாரம் சுக்கு உழுந்து மாவிலிங்குப்பட்டை குங்கிலியம் சித்திரமூலம் மைசாட்சி என்னும் கற்கவகை (7-ம்) வகை 1-க்கு (பலம்-½) விழுக்காடு மேற்படி கஷாயத்தினுல் அரைத்து கரைத்துக்குக் காய்ச்சி பக்குவத்தில் வடித்துத் தேகத்தில் பூசிப் பிடிப்பையாகில், வாதரோகக் கூட்டங்கள் இல்லையாம். இதுவே மூலயோக நிற்குண்டித் தைலமாம், எ-று. (17)

இரதயோக நிற்குண்டித் தைலம்

விருத்தம்

பூருவச் சுரசங் கையான் பூண்டிஞ்சி முருங்கை பாகற் [ன்
 புட்பேந்திர மார்க்கு வங்கம் புற்பதி வளம்பத் தோடொ
ரூரொரு வகைக்குச் சாறங் கூற்றுழக் குடனெண் ணேய
 மொருபடி வார ரத்தை யொலிகட மதுரங் காயந்

தாருமுக் கடுவி ளங்கஞ் சரஷபஞ் சித்ர மூலந்
தனித்தனிக் கஃஃசீ ராறுந் தர்க்கிழைத் தெரித்தா டத்தை
நேருறச் செவிக்குட் குத்து நீடுபீ நசமே ஞேய்போ
நீயுண ரிரத யோக நிற்குண்டித் தைல மீதே.

(இ - ள்.) முதிர்ந்த நொச்சி கையாந்தகரை வெள்ளைப்பூண்டு இஞ்சி முருங்கையிலை பாகல் சண்பகத்தழை எருக்கிலை கத்தரி வாழைக்கிழங்கு துளசி என்னும் (11) வகைச் சாறுகளும் வகை 1-க்கு ($\frac{3}{4}$-படி) விழுக்காடு நல்லெண்ணெய் (படி 1-ல்) விட்டு, அரத்தை கோஷ்டம் மரமஞ்சள் அதிமதுரம் பெருங்காயம் தேவ தாரி சுக்கு மிளகு திப்பிலி வாய்விளங்கம் கடுகு சித்திரமூலம் என்னும் கற்கதிரவியம் (12-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) விழுக்காடு மேற்படி ரசத்திஞல் நன்ருயரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பக்கு வத்தில் வடித்து இதை விதிபோல் ஸ்நானஞ் செய்வித்தாலும், செவிக்குள் துளிக்கணக்காக விடுத்தாலும், நாட்பட்ட பீநசமும் தலைநோயும் நீங்கும். இதனை இரதயோக நிற்குண்டித்தைல மென்று நீ அறியக்கடவாய், எ-று. (18)

சருவதித்த நிற்குண்டித் தைலம்

விருத்தம்

வெண்ணொச்சிச் சாறு நான்கு விடைக்கந்தச் சாறு நான்கு
வெள்ளெண்ணெய்ப் படியொன் றெல்லாம் விரவுவெண் [கடுகுவேணி
பெண்ணிச்சை தருமு ருங்கைப் பீசமம் பஷ்டை சுக்கு
பெருமுன்னை வேரி ரத்தம் பிப்பலி தேக்கித் தொண்டும்
பண்ணச்ச மாகக் கற்கம் பரவவே கரைவி ளக்காய்ப்
பாவக னணுக வட்டிப் பத்தியம் புளிமோர் விட்டா
டுண்ணிச்ச கத்திஞலு முண்ணுக்கவ் விரும லெங்கே
யுலகமா தாவைச் சோர்வுற் றுயருநிற் குண்டி யீதே.

(இ - ள்.) வெண்ணொச்சியிலைச்சாறு (படி-4) செம்மணித் தக் காளிச்சாறு (படி-4) வெண்மையாகக் கழுவிய எள்ளினது நெய் (படி-1) இம் (3-ம்) கலந்து ஒரு பாத்திரத்தில்விட்டு, வெண்கடுகு வசம்பு முருங்கைவிதை வட்டத்திருப்பி சுக்கு பருமுன்னைவேர் குங்குமப்பூ திப்பிலி சிறுதேக்கு என்னும் கற்கவகை (9-ம்) வகை 1-க்கு (பலம்-1) விழுக்காடு மேற்படி சாற்றிஞல் நன்ருயரைத்து கரைத்து தீபாக்கினியாக எரித்துப் பதத்தில் வடித்து இதை முறைப்படி ஸ்நானஞ் செய்தாலும், உள்ளுக்குச் சாப்பிட்டாலும்,

தொங்குகின்ற உண்ணுக்கும் அதனால் வருகிற விருமலும் நீங்கும். பத்தியம் புளி மோர் நீக்கவும். இதுவே மணத்தக்காளி ரசங் கூடிய நிற்குண்டித் தைலமாம், எ-று. (19)

இச் செய்யுளில் கற்கவகைக்கு அளவை கூறாமையால், பேஷஸகற்ப சாத்திர விதிப்படி அளவை கூறலாயிற்று.

சிறிய நிற்குண்டித் தைலம்

விருத்தம்

ஒருபடி நொச்சிச் சாறே டொப்பெண்ணெய்ச் சடையிந் துப்
திரிகடு சிங்கி குஷ்டந் தேக்குமுப் பலேவி யாக்கிரி [பு
யொருபதி னறுஞ் சேர்த்தட் டொவ்வொரு கஃசா டுண்ணித்
திரிகபங் கடுப்பு மேகுஞ் சிறியநிற் குண்டி யீதே.

(இ-ள்.) நொச்சியிலைச்சாறு (படி-1) நல்லெண்ணெய் (படி-1(இவ்விரண்டையும் ஒருபாத்திரத்தில் விட்டு, சடாமாஞ்சில் கல் லுப்பு வளையலுப்பு மண்ணுப்பு வெடியுப்பு அட்டுப்பு சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய்ப்பூ கோஷ்டம் கண்டுபாரங்கி கடுக்காய் நெல் லிக்காய் தான்றிக்காய் கண்டங்கத்திரிவேர் என்னும் கற்கதிரவி யம் (16-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) விழுக்காடு மேற்படி சாறுவிட் டரைத்து அதிற் கரைத்து எரித்துப் பக்குவத்தில் வடித்து இதை ஸ்நானஞ்செய்தாலும், உள்ளுக்குச் சாப்பிட்டாலும் காசம் சுவா சம் க்ஷயம் என்னும் மூவித கபரோகங்களும் சரீரக்கடுப்பும் நீங் கும். இதுவே சிறிய நிற்குண்டித் தைலமாம், எ-று. (20)

ஆரநாளத் தைலம்

விருத்தம்

காடியெணெய் பெருகம்பு நாலொன் றரைப்படி
கலந்தரே ணுகமிருநிசி
யீடினற் சந்துமிசி கச்சோல முத்தைமது
ரங்கடுகை யிவைநமதே
கூடிய வராகனிழை யிட்டடிறு பூசியுட்
கொண்டுபார் சீதசுரமு
மாடியபர் சீரணச் சுரமுமயி லுண்ணறலி
தாரநா ளத்தைலமே.

(இ-ள்.) (4-படி) புளித்த காடியும் (1-படி) நல்லெண்ணெயும் ($\frac{1}{2}$-படி) தயிர்ச்சலமும் ஒரு பாத்திரத்திற் சேர்த்து, காட்டுமிளகு, கஸ்தூரிமஞ்சள், கப்புமஞ்சள், உயர்ந்த நற்சந்தனம், சத தப்பை

கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், கடுகுரோகணி என்னும் கற்கதிரவியம் (9-ம்) வகை 1-க்கு வராகனிடை 1-ஆக காடிச்சலம் விட்டரைத்து அதிற் கரைத்து சிறுக எரித்து வடித்து இதை மேலுக்கும்பூசித் துட்டிடையளவாக உள்ளுக்குஞ் சாப்பிட்டுப் பார்ப்பையாகில், சீதசுரமும் சீரணச்சுரமும் * இரும்பு உண்ட நீரைப்போலாம். இதுவே ஆரநாளத் தைலமாம், எ-று. (21)

சுத்தியாரநாளத் தைலம்

விருத்தம்

சுத்திபுரி சவ்வீர மோர்ததிக ஞூன்கிவைத்
தோயமொவ் வொன்ஞெருபடி
சுவச்சமொரு படிவடவை முசறுபடி நான்கறற்
றுரோணமுட் புன்குரிகடு
பத்திரந் தசமூல மிருசடஞ் சலியிடுத
பனனிலட் டியபாக்கியம்
படியிரண் டெல்லாம் விலாவுசசி வில்வவேர்
பத்திரதா ருகமரத்த
சித்திரகந்தன் மூலம்வை தேகிசடு மொவ்வொரு
தினுசினுக் கிருதொடியதிற்
சேரருந் துகளாக வடுவடும் போழ்துமா
திரிபலங் காற்பொடியுகுத்
தத்ததி யிரக்குகற் கத்தொடுண் கிரகணிய
ழுற்கருகு சருகுசுத்தி
யாரநா ளத்தைல நற்றயில மென்பர்மறை
யறையுமுறை யறியறிஞரே.

(இ - ள்.) கும்பிடுகிளிஞ்சல், வீட்டிற்சேர்த்துவைத்தகாடி, பசுவின்மோர், அதன் தயிர் என்னும் இந்நான்கின் சலமும் வகை 1-க்கு.(படி-1) நல்லெண்ணெய் (படி-1) எருமைத்தயிர் (படி-4) இவைகளுடன் புன்கின்வேர்பட்டை, சுக்கு, கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிற்ருமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை இவற்றின் வேர்கள் (12-ம்) வகை 1-க்கு (பலம்-4) ஆக நிறுத்து நையநறுக்கி இதில் (4-படி) சலம்விட்டு (2-படி) ஆகக் காய்ச்சிய கஷாயம் கூடவிட்டுக் கலந்து; இந்துப்பு, வில்வவேர், தேவதாரம், சிவப்புக் கொடிவேலி

* இரும்பு உண்ட நீரானது மீட்டும் தோற்ருதவாறுபோல அந்நோய்கள் தோற்ருவாம்.

வேர், திப்பிலிமூலம், திப்பிலி என்னும் கற்கவகை (6-ம்) வகை 1-க்கு (பலம்-2) ஆக இடித்து வஸ்திரகாயஞ் செய்து அதிலிட்டு சிறுக எரித்துச் சலம்வற்றிக் கடுகுதிரளும் பக்குவத்தில், அதிவிடையத்தூள் (பலம்-¼) தூவி, பக்குவத்தில் கற்கத்தோடு இறக்கி வைத்துக்கொண்டு இதை, அந்தி சந்தி ஒவ்வொரு முட்டைக்கரண்டிவீதம் சாப்பிடுவையாகில், கிரகணியரோகமெல்லாம் தீயில் விழுந்து கருகி எரியுஞ் சருகுபோலாம். ஆயுள்வேதங் கூறிய சிகிச்சைகளை ஆராய்ந்த பெரியோர்கள் இந்தச் சுத்தியாரநாளத் தைலத்தை உயர்ந்த ஂதலம் எனச் சொல்வர், எ-று. (22)

அசுவ்கந்தி பலாலாக்ஷா தைலம்

விருத்தம்

அசுவகந்தி பலாலாக்ஷ நவில்வா
மவையொடு சவ்வியம் படோல்சடை
யதிபலை யிருமல்லி நன்னாரி
யரிட்டை நெல்லிவரி வரிபர்ப்படா
மமிர்தை வங்கம் புன்றேகரிக்காந்தி
நீடம்பின் மூலம்பிசந்துவிதத்தரு
அரிசனத் துவயஞ்சகச் சிராக்ஷியு
மைந்தெழுத் தடுக்கொவ்வொன்றீரைம்பல
மசியமுற்று மிடித்ததிற் சூர்ப்பநீர்
வார்த்தவந் தியதற் கரைசேரிதை
வன்னியிட் டெரிநான்கி லொன்ருக்கிப்
பின்வார ரக்கினிரதஞ்சுவச்சமும்
வகைவகைக் குக்கடங் கடமுக்
கடுமாஞ் சிருடிமத் தோடுதிரிபலை
மாடமா டகமாகுலி கோலக
மட்டனுக் கம்ப லினியரேணுகஞ்
சசிவிலாமிச் சிலவங்கத் தோலடை
சாதிசந் துடியஷ்டி மந்திட்டிநற்
சாரிபை யகிற்கீர காகோளி
யுஞ்சாதி மான்மதங்குங் குமம்பங்குரை
தந்திகற்ணி மகாகோளி யச்சடை
தாளிசந் தகரம் மிருசீரகஞ்
சாற்றும்பா திரிக்கூட்டஞ் சுரேஸ்வரி
சக்கிராங்கி யுமைகோ ணத்தெண்ணிறை

பிசகிடா மல்வகைக் கொருமுட்டி
யாய்ப்பெய்த நீரிழையிட்டடித்து நெற்
பேணிவைத் தொருதிங்க டணந்தெடு
பிற்றைமுற் கருமந் தொலைத்தாடயிற்
பேதசூதிகை வாயுவுஞ் சந்நியாம்
பீடைவாத பித்தாமா யஞ்சீரணப்
பேர்கொள்வெப்ப முதலிய நோய்
களும்பே ருயிர்க்கெதிர் பீளையலரரோ.

(இ - ள்.) துமுக்கிருக்கிழங்கு, சிற்ருமுட்டிவேர், கொம் பரக்கு, செவ்வியம், பேய்ப்புடல், சடாமாஞ்சில், பேராமுட்டிவேர், சிற்ருமல்லி, பேராமல்லி, நன்னுரி, கடுகுரோகணி, நெல்லிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, பர்ப்பாடம், சீந்தில், சிறுகத்திரிவேர், சிறுதேக்கு, விஷ்ணுகாந்தி, திப்பிலிமூலம், தாமரைவளையம்' தேவதாரம், சரளதேவதாரம், மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், சகச்சி ராக்ஷி என்னும் (25-ம்) வகை 1-க்கு (பலம்-10) ஆக நிறுத்துப் பொடியாக நறுக்கி நைய இடித்துக் குடிநீர்ப் பாண்டத்திலிட்டு ஆற்றுச்சலம் (1-மரக்காலும்) காடிச்சலம் (2-மரக்காலும்) விட்டு அடுப்பேற்றி சிறிய தீயினுல் எரித்து 4-ல் 1-ஆக வடித்து அக் கஷாயத்தில் கொம்பரக்கு கஷாயம் (2-மரக்காலுக்கும்) நல்லெண் ணெய் (2) மரச்காலுக்கும் விட்டு, சுக்கு மிளகு திப்பிலி சடா மாஞ்சில் மாதுளைக்கனியின் மேற்ருேல் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் உழுந்து சிறுநாகப்பூ சிற்றரத்தை தக்கோலப் பொட்டு சந்தனக்கட்டை நாணற்ருது காட்டுமிளகு பச்சைக் கருப்பூரம் விலாமிச்சு லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி சாதிக்காய் ஏலம் அதிமதுரம் மஞ்சிட்டிவேர் சிறுநன்னுரி அகிற்கட்டை க்ஷீர காகோளி கஸ்தூரி குங்குமப்பூ அதிவிடையம் மெருகன்கிழங்கு மகாகோளி கீழ்வாய்நெல்லிவேர் தாளிசபத்திரி கிரந்திதகரம் சீரகம் கருஞ்சீரகம் பாதிரிவேர் வில்வவேர் பெருங்குமிழ்வேர் தழுதாழை வேர் வாகைவேர் முசுமுசுக்கைவேர் கடுகுரோகணி என்னும் (43) கற்கதிரவியங்களையும் வகை 1-க்கு (பலம்-1) ஆக அக்கஷாயத் திஞல் அரைத்துக் கரைத்து விதிபோல் எரித்துத் துழாவிப் பக்கு வத்தில் வடித்து நெற்புடத்தில் ஒருமாதம் வரையில் வைத்தெடுத் துக் கருமசாந்தி முதலிய தானங்களுஞ்செய்து இத்தைலத்தை, முறைப்படி ஸ்நானம் செய்யில், பலவிதமாகிய சூதிகாவாதரோ கம் சந்நிபாதங்கள், வாதபித்த கபரோகம், சீரணசுரம் முதலிய ரோகங்களும் பெருங்காற்றில் அகப்பட்ட பீளைப்பூப் போலாம்,

குடிநீர்ச்சரக்கு-25 என்றும், கற்கவகைச்சரக்கு-43 என்றும், தொகைதோன்ற ஐந்தெழுத்தடுக்கென்றும், உமைகோணமென்

றும் கூறினமையால் ஐந்தெழுத் தடுக்கென்பது சிவசக்கரத்துள் பஞ்சாக்ஷரமாறலில் ஓர் வகை 25-எழுத்துக்களெனவும், உமை கோணமென்பது சத்திசக்கரத்துள்-43 முக்கோணங்களெனவும் பொருளமைத்துக்கொள்க. (23)

சிறிய அசுவகந்தி பலாலாக்ஷா தைலம்

விருத்தம்

வராககற்ணி பலையரக்கோர் வகைக்கீரைம் பலமாம்
வனங்கட்கு வாதந்து வம்படிமஸ்த் தெண்ணெய்
யொராறுமூ வரைமுதன்மூன் ளெடுகுரும்பை யரத்தை
யுசிரமட்டி திட்டிகுப்பை யொலிநிசிரந் தாதி
யிரேணுகைகச் சந்தருசாய் நாரியிவை பதினெட்
டிலிதிங்தோ காசிடைமூன் றிழையமுதிட் டெரித்தா
டராவினஞ்சி காவளமுன் ஞங்கதிவெப் பினஞ்சீ
றசுவகந்தி பலாலாட்சை யடலுரைப்பா ரியாரே.

(இ - ள்.) அமுக்கிராங்கிழங்கும் சிற்ருமுட்டிவேரும் கொம்பரக்கும் வகை 1-க்கு (பலம்-10) ஆக நிறுத்து ஆற்றுச்சலம் (2-மரக்காலுக்கு) விட்டு எரித்து (2-படி) ஆக வடித்ததில், தயிர்ச் சலம் (படி-6-ம்) நல்லெண்ணெய் (படி-1½-யும்) கூடச்சேர்த்து அசுவகந்திக்கிழங்கு குறுந்தொட்டிவேர் கொம்பரக்கு பெருங்குரும்பை அரத்தை விலாமிச்சு அதிமதுரம் மஞ்சிட்டி சதபுட்பி கோஷ்டம் கப்புமஞ்சள் சந்தனக்கட்டை திப்பிலிமூலம் காட்டுமிளகு கடுகுரோகணி தேவதாரம் கோரைக்கிழங்கு நன்னரிவேர் என்னும் (18) கற்கச்சரக்குகளும் வகை 1-க்கு காசிடை (3) ஆக நிறுத்துப் பசுவின் பாலால் அரைத்து அதிற் கரைத்துத் தீபாக்கினியாக எரித்துத் துழாவிப் பக்குவபாகத்தில் வடித்துவைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்யில், சகல சுரங்களும் மயிலின்முன் சிக்கிக் கொண்ட பாம்பின் கூட்டம்போலாம். இதுவே, சிறிய அசுவ கந்தி பலாலாக்ஷா தைலமாம், எ-று. (24)

* பலாமடக்குத் தைலம்

விருத்தம்

பத்திரபதி மூலமொரு வீசையிடை யுரவிவிடு
பஞ்சென விடித்த தினதிப்
பானீய டெண்ணுன்கு படிபெயத் தொகையிலொரு
பங்காச் சமைத்தநீரை

* பலா - என்பது சிற்ருமுட்டி.

வத்திர மிட்டுப்பிசைந் துப்பிழிந் தேவடி
வடித்தபடி யேதிலபவம்
வார்த்துமுற் புகன்மூல மொருதொடியை யரைசிலை
வைத்தமுது கொண்டிழைத்து [யில்
மித்திரமுற வேகலக்கப்படி நறுஞ்சுதை பெய்மித
முறவவ்விறகி லெரிவெண்
மெழுகெனும் பருவம்வடி யிதையெண்ணெ யாக்
கொண்முனம் விண்டபடி யெழுதரஞ்செய்
யுத்திரமிகு கடையில்வரு தைலமொடு கலசமிடி
தொருசரக் குத்தைலமென்
றுன்னிடே லாடுநர்க் குடலெலாம் பூசுநர்க்
குண்ணுநர்க் குவமையவரே.

(இ - ள்.) சிற்ருமுட்டிவேரை இரும்புரலிலிட்டுப் பஞ்சுபோ லிடித்து ஒரு (வீசை) நிறுத்து அதில் ஆற்றுச்சலம் (படி-32) விட்டு அத்தொகையில் ஓர் பங்கு என்கிற ஒருபடியாகக் காய்ச்சி இறுத்து, அந்தத் திப்பியை வத்திரத்திலிட்டுப் பிசைந்து வடித்து அதையும் இத்துடன் சேர்த்து, இந்தக் கஷாயத்தின் அடைவே ஒருபடி நல்லெண்ணெயும், ஒருபடி பசும்பாலும் கூடவிட்டு, முற் கூறிய சிற்ருமுட்டிவேரை (பலம்-1) நிறுத்து அம்மியில் வைத்து மேற்படி பாலால் மெழுகுபோலரைத்து அதில் உறவாகும்படி கரைத்து அந்தச் சிற்ருமுட்டி விறகினுல் எரித்து வெண்மெழுகுப் பக்குவத்தில் வடித்துக்கொண்டு இத்தைலத்தை, முன்போலவே கஷாயமும் பாலும் கற்கமும் சேர்த்துச்சேர்த்து ஏழுதரம் மடக்கிக் காய்ச்சி கடைசியில் வராநின்ற தைலத்தைக் கலசத்திலிட்டு வைத்துக்கொள்ளவும். ஒரு சரக்கினுல் செய்யப்பட்ட தைல மென்று எளிதாக நினைக்க வேண்டுவதில்லை. இதை அப்பியங் கனஞ் செய்பவருக்கும், மேலிற் பூசிக் கொள்பவருக்கும், உண்பவ ருக்கும் உவமை அவர்களேயாம், எ-று. (25)

இதன் மகிமை

விருத்தம்

உவமையிற் பலாமடக்குத் தைலப் பேரை
யொருதரமுச் சரித்தாலு முலகத் துள்ளீ
ரவமிருத்தைச் செயுஞ்சூதி காவா தத்தோ
டதிசுட்க முழலைகருப் பாச யத்துற்
பவமருத்துட் சுரங்கைகா லெரிவுள் ளென்பைப்
பற்றியவெப் பயர்வதிதுர்ப் பலநீ ரேற்றந்

துவமெனச்சொ னீர்க்கோவை முதற்பன் னோயுந்
தூலமுரு விருகமுன்சார்த் தூல மாமே.

(இ - ள்.) உவமையில்லாத இந்தப் பலாமடக்குத் தைலத்தின் பெயரை ஒருதரஞ் சொன்னாலும், சூதிகாவாதம், அதிசுட்கரோகம், உழலைரோகம், கருப்பாசயவாதம், உட்சுரம், கைகால் எரிவு, அஸ்தியைப்பற்றிய சுரம், அசதி, மிகுந்த துர்ப்பலம், சலதோஷம், முன்னீர்க்கோவை, பின்னீர்க்கோவை முதலிய பலவித ரோகங்களும், எளிய செந்நாய்க்கு எதிரிட்ட பெரிய வேங்கையின் கதியை யடையும், எ-று. (26)

வேறுவகைச் சிற்றாமுட்டித் தைலம்

சந்த விருத்தம்

சிற்ரு முட்டியை யொருதுலை யிடிவிரி திரைவரு
புனலிரு கடமதி விடுவன
விற்ரு னட்டிறு சிவமொரு கடமமு தெளிரத
மரையடி யொருபது தொடியணு
வுற்ரு மட்டிழை யிட்டெ டிஃதுப லையுறுதை
லமுணுகர் முழுகுயர் கருவறை
யிற்ரு னெட்டிய வளியொடி ருதுவலி யிவையர
வெதிருறு சிறுநுண லினமரோ.

(இ - ள்.) சிற்ருமுட்டிவேரை நன்ருயிடித்து (பலம்-100) நிறுத்துக் குடிநீர்ப் பாத்திரத்திற் சேர்த்து ஆற்றுச்சலம் (தூணி) விட்டுக் காய்ச்சிக் குருணிக்கஷாயமாக வடித்து அதில், பசுவின்பால் (2-மரக்காலும்) நல்லெண்ணெய் (1-மரக்காலும்) விட்டு மேற்படி வேரை (10-பலம்) அணுப்போல் மேற்படி பாலாலரைத்து அதிற் கரைத்துச் சிறிய தீயினுல் எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு முறைப்படி உள்ளுக்குஞ் சாப்பிட்டு ஸ்நானமுஞ் செய்யில், கருப்பையைப் பற்றிய வாயுவும், மாதாந்த ருதுகால குன்மமும், சர்ப்பத்தோடெதிர்த்த தேரைக்கூட்டம்போலாம், எ - று. (27)

பிருங்காமலக தைலம்

சந்த விருத்தம்

கரிசாலை சிவைகோளி தக்காரி சதமூலை
கதலிசடு முதலிலைபலங்
கதிகொங்கை யடைதுவங் கந்தமிவை யிரதமோ
கடமொவொன் றெண்ணெயுமதே

யிருதூணி யமிழ்துகுத் ததினெய்த லல்லிசந்
திருவேர்வ சம்பட்டிசு
ரேஸ்வரிம ரைப்பூவ ளர்க்கமந் திட்டிசா
யிருசண்ப கம்மாமிசி
தருநாரி வேங்கைவ யிரங்கிடிச் செவிபுட்க
ரஞ்சசி பெருங்குரும்பை
சதகுப்பை யிருபதிற் றேடுமூன்றெவ் வொருசதுர்த்தி
கைவகைக் கிழைகரைத்
தெரிவடியி தேபிருங் காமலக தைலமூழ்
கிடுநசிய மூர்த்தநோயோ
டிருவிழிப் பிணிசெவிடு முதலியவ ணங்குமடு
வலினருபமை யினமரோ.

(இ - ள்.) கையாந்தகரை, நெல்லிக்காய், ஆலம்விழுது, தழுதாழை, தண்ணீர்விட்டான்கிழங்கு, வாழைக்கிழங்கு என்னும் (6-ம்) வகை 1-க்கு சாறு (2-மரக்காலும்) நல்லெண்ணெய் (2-மரக்காலும்) பசுவின்பால் (இருதூணியும்) ஆக பாத்திரத்தில்விட்டு, நெய்தற்கிழங்கு, அல்லிக்கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், விலாமிச்சுவேர், வசம்பு, அதிமதுரம், முசுமுசுக்கைவேர், தாமரைப்பூவிதழ், தூதுளைவேர், மஞ்சிட்டிவேர், கோரைக்கிழங்கு, சிறுசண்பகப்பூ, பெருஞ்சண்பகப்பூ, சடாமாஞ்சில், தேவதாரு, நன்னாரிவேர், வேங்கைவயிரம், அமுக்கிராக்கிழங்கு, கோஷ்டம், கருப்பூரம், பெருங்குரும்பை, சதபுட்பி என்னும் (23-சரக்கும்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) இவைகளை மேற்படி பால்விட்டரைத்து கரைத்துக் காய்ச்சிப் பக்குவத்தில் வடித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்தாலும், நசியம் பண்ணினாலும் சிரோரோகம் நேத்திரரோகம்; செவிடு முதலிய ரோகங்களும் புட்பித்த மூங்கில்குலம்போம் ஆம், எ - று. (28)

சிறிய பிருங்காமலக தைலம்

விருத்தம்

கரியகரிப் பானமிர்தை காணியிம் மூன்றிற்
கசியிரத முப்படியெண் ணெய்யமுதொன் றிரண்டா
மரிசனத்து வயமரத்தை கோரைநெய்த ஞரி
யாரமசை கடுகைதிட்டி சலஞ்சாதுர் சாதந்
தருகுரும்பை யம்பிருதொண் டொவொருநிட்க மரைக்குந்
ததிமதுரந் தொடியிட ரை கரைத்தடெடுத் திறுத்தா

டிருதலைநோய் பயித்தியங்கண் ணோய்களழற் புழுவா
மிலகுபிருங் காமலக தைலமென்ப திஃதே.

(இ-ள்.) கறுப்புக் கையாந்தகரை, நெல்லிக்காய், பொன்னுங்காணி இம் 3-சாறும் வகை 1-க்கு (படி-1) எண்ணெய் (படி-1) பால் (படி-2) இவைகளைத் தைலபாத்திரத்தில்விட்டு, கப்புமஞ்சள், மரமஞ்சள், அரத்தை, கோரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு) நன்னாரிவேர், சந்தனம், சீரகம், கடுகுரோகணி, மஞ்சிட்டிவேர், விலாமிச்சுவேர், * (சாதுர்சாதம்), தேவதாரி, பெருங்குரும்பை, திப்பிலி என்னும் கற்கவகை (18-ம்) வகை 1-க்கு விராகனிடை 1-ஆக நிறுத்து மேற்படி பால்விட்டரைத்து வழிக்கும் பக்குவத்தில் அதிமதுரம் (பலம்-1) கூட வைத்தரைத்து வழித்து அதிற் கரைத்து எரித்துப் பக்குவபாகத்தில் வடித்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்யில், ஏழுநாயிரும் பயித்தியமும் கண்ணோயும் நெருப்பில் விழுந்த புழுவைப்போலாம், எ-று. (29)

வேறுவகை சிறிய பிருங்காமலக தைலம்

விருத்தம்

கோகனமா மலகியின்சா றெள்ளினறு நேயங்
குருணியொவ்வொன் றமிழ்துபதக் குப்யபலை மதுர
நாகபலை முந்திரிகை குபபையொலி சந்தி
ராத்திரிகச் சோரமிச்சை யுருளரிசி முசுக்கை
யாகுலிநற் றிரிசாத மொருபதினே டேழா
மஃதஃதங் காறுநி[illegible] மரைத்திடட்டிக் குளிபொற்
றேகமுறும் பித்தகலுங் கண்ணெளிருஞ் சிரநோய்
தீருமிதே சிறியபிருங் காமலகஞ் செய்யே.

(இ-ள்.) கையாந்தகரைச்சாறு நெல்லிக்காய்ச்சாறு நல்லெண்ணெய் இம் (3-ம்) வகை 1-க்கு (மரக்கால் 1-ம்) பசுவின்பால் (மரக்கால் 2-ம்) ஒரு பாண்டத்திலிட்டு, சிற்றுமுட்டிவேர் பேராமுட்டிவேர் அதிமதுரம் நாதமல்லிவேர் திராட்சை சதகுப்பை கோஷ்டம் சந்தனக்கட்டை மஞ்சள் பூலாங்கிழங்கு விலாமிச்சு கொத்துமல்லிவிதை முசுமுசுக்கைவேர் சிற்றரத்தை லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி ஏலம் என்னும் கற்கவகை (17-ம்) வகை

---

* சாதுர்சாதம் ஆவன: ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ என்னும் இந்த (4) சரக்குகளாம். இனி இதுபோல்வரும் தொகைச் சரக்குகளுக்கெல்லாம் இவ்வண்ணமே பொருளமைத்துக்கொள்க.

1-க்கு விராகனிடை (6) இவைகளைப் பால்விட்டரைத்துக் கரைத்து மெல்லிய தீயால் எரித்துப் பக்குவமறிந்து வடித்துவைத்துக்கொண்டு, விதிபோல் (4) நாட்கொருகால் ஸ்நானஞ்செய்யில், தேகத்தில் ஒளியுண்டாம் பித்தநோய் விலகும், நேத்திரந் துலங்கும். சிரோரோகம் நீங்கும், எ-று. (30)

பிருங்கராஜ தைலம்

நேரிசை வெண்பா

தேகரா சச்சுரதந் தில்லியநேர் நேர்கூட்டிப்
பாகமுறக் காய்ச்சிப் பருகுவார்—காகமுணுங்
காசத்தைக் காணரக் காசமுற்று ரிப்பிருங்க
ராசத்தைக் காணர் நவில்.

(இ - ள்.) கரிசாலைச்சாறு (படி-$\frac{1}{2}$) நல்லெண்ணெய் (படி-$\frac{1}{2}$-ம்) (இவ் 2-ம்) தைலப்பாத்திரத்தில்விட்டுத் தீபாக்கினியால் எரித்துப் பக்குவமாக வடித்து வைத்துக்கொண்டு, அந்தி சந்தி ஒரு துட்டிடை சாப்பிடுகின்றவர்கள் காசரோகத்தைக் காணுதவர்களா யிருப்பார்கள். காசரோகத்தினுல் வருத்தப் படுகிறவர்களெல்லாம், இந்தப் பிருங்கராஜமென்னும் தைலத்தைக் காணுதவர்களென்றே சொல்லக்கடவை, எ-று. காகம் உண்ணுங் காசம் என்பது, காகங்கள் உண்ணும்படிக்குக் கோழையை வெளிப்படுத்தாநின்ற இருமல் வியாதியாம். (31)

மெருகு சமூலத் தைலம்

விருத்தம்

தீர்க்ககந்தை நூறுபல மிதற்கட்டத்
தொன்றென்று சிற்றுமுட்டி
தேவகந்த மூன்றுமிடித் தாரநா
ளம்பதக்கிற் செலுத்தெட் டொன்றாய்
நீர்க்கவடி யிதற்கிரட்டி யெண்ணெய்யமு
தூற்றுமா நிசிநன் னாரி
நெய்யாரங் கடுகுரோ கணியிருளிச்
செவிமுருகு நிறைந்த தாருந்
தீர்க்கமது ரிக்குமஷ்டி மதுகமருட்
கிழங்குமந் திட்டி மூலஞ்
செய்யவரக் கிவைபத்தும் வகைவகைக்குக்
கலைசாகச் சேர்த்தி டித்துப்

பார்க்கவருந் துகளாக்கி யதிலிட்டுச்
சிறுகவட்டிப் பதத்தி றுத்துப்
பருகவளித் தங்கமெலாந் துவாலையிடு
சீதசுரம் பறக்குந் தானே.

(இ-ள்) (100-பலம்) மெருகின்செடி சமூலம், இத் தொகைக்கு 8-ல் 1-என்கிற(12½-பலம்) சிற்றுமுட்டிவேர் மற்றொரு 1-என்கிற (12½-பலம்) நெய்ச்சட்டிப்பூண்டு என்னும் இம் மூன்றையும் நன்ருக இடித்து, (2-மரக்கால்) காடித் தண்ணீர் விட்டுக் காய்ச்சி 8-ல் ஒரு பங்காக வடித்த கஷாயத்தில் (2-படி) நல்லெண்ணெயும் (2-படி) பசும்பாலும் சேர்த்து, மரமஞ்சள் நன்னுரிவேர் தைலப்பசையுள்ள சந்தனக்கட்டை கடுகுரோகணி அமுக்கராக்கிழங்கு வாசனை நிறைந்த தேவதாரிக்கட்டை அதிமதுரம் மருள்கிழங்கு மஞ்சிட்டிவேர் செம்மை நிறமுள்ள கொம்பரக்கு என்னும் கற்கவகை (10-ம்) வகை 1-க்கு (பலம்-¼) ஆக மெல்லிய தூள்செய்து அதிலிட்டு மிருதுவாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு இதை உள்ளுக்கு ஒரு துட்டிடை அந்திசந்தி சாப்பிடச் செய்து, மேலுக்குந் துவாலையிட்டு மெதுவுறப் பிடிப்பித்தால் சீதசுரம் விலகிப்போம், எ-று. (32)

* கதகாதித் தைலம்

விருத்தம்

இல்லமுறு மண்டங்க ணூறுபலந் துகளா
யிடித்ததனிற் றூணிநீ ரிட்டதையெட் டொன்று
யெரித்திறுத்துத் திலபவத்தை யிதற்கீடாப் பெய்கா
ழிருமஞ்ச டிரிபலைமுன் பியம்பண்ட மனுக்கம்
வில்லுவநற் கனித்தசைலோத் திரங்காய்ச்சுக் கட்டி
விளங்கனியின் றசையாச்சா தனபலைமென் பருப்பு
வெண்குன்றிப் பருப்போமைக் கொட்டைவரும் பருப்பு
விரைத்தகர மரம்பைப்பூ வெற்பிரதங் காந்தக்
கல்லுடைக்கல் மாயாளி யிவை † மறவன் றெகையாங்
காண்வகைக்கு நிட்கமொன்ருய்க் கல்லுரலிற் பொடித்
கலுவத்தில் வெள்வேற்றேற் குடிநீரா லரைத்துக் [துக்
கரைத்தெல்லா மொருங்குறவே கலக்கியடுப் பேற்றி

---

* கதகம் என்பது - தேற்ரன் கொட்டை.

† மறவன் என்பது - சிலேஷ்மம். இச் சிலேஷ்மத்தின் தொகை (20) ஆதலின் 20-என்னும் தொகைக்கு மறவன்தொகை என்று கூறினர்.

மெல்லவெரித் திறுவிஃதே கதகாதித் தைலம்
விரிகிக்குட் ‡ கோட்டிவசம் விட்டெடுத்திங் கதனை
மேன்முழுதுந் தடவினுமப் பியங்கனஞ்செய் திடினு
மேகநோய் பெருற்காற்றின் மேவசலென் றுணரே.

(இ-ள்.) தேற்ருன் கொட்டையை நன்ருகப் பொடி செய்து (பலம்-100) நிறுத்துக் குடிநீர்ப்பாண்டத்தில் சேர்த்து ஆற்றுச் சலம் (8-படி) விட்டுச் சிறிய தீயாக எரித்து 8-ல்-1 பங்காக வடித்த கஷாயத்தில் நல்லெண்ணெய் (படி-1) விட்டு தேறின மரமஞ்சள் கப்புமஞ்சள் கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் தேற்ருன் கொட்டைத்தூள் சந்தனக்கட்டை வில்வப்பழத்தசை வெள்ளிலோத்திரம் காய்ச்சுக்கட்டி விளாம்பழத்தசை பருத்தி கொட்டைப்பருப்பு வெண்குன்றிப்பருப்பு மாங்கொட்டைப்பருப்பு கிரந்திதகரம் வாழைப்பூ கருப்பூரச் சிலாசத்து காந்தக்கல் காவிக் கல் வட்டத்திருப்பி என்னும் கற்கவகை (20-ம்) வகை 1-க்கு விராகனிடை 1-ஆக நிறுத்து, இவற்றுள் கல்லுரலில் முதலிற் பொடிக்கத் தக்கவைகளைப் பொடித்துப் பின்பு, மற்ற சரக்கு களையுங் கொட்டிக் குமுறவிடித்துக் குழியம்மியிலிட்டு வெள் வேலம்பட்டைக் கஷாயத்தினுல் மைபோலரைத்து மேற்படி கஷா யத்தில் கரைத்து அடுப்பிலேற்றி மெதுவாக எரித்துப் பருவ மறிந்து வடித்துச் சீலமண்செய்து நெற்புடத்தில் (9-நாள்) வைத் தெடுத்துக் கொண்டு இக் கதகாதித் தைலத்தை, அந்தி சந்தி ஒவ்வொரு காசிடை உள்ளுக்குக் கொண்டாலும், மேலெங்கும் பூசித் துவாலையிட்டுப் பிடிப்பித்தாலும், நாலுநாட் கொருகால் அப்பியங்கனஞ் செய்தாலும் மேக அழலை யேகவெட்டை மேக நீர் முதலிய பற்பல மேக சம்பந்தமான ரோகங்களும் பெருங் காற்றி லகப்பட்ட கொசுக்களைப் போலாம், எ-று. (33)

சிறுகுமரித் தைலம்

விருத்தம்

குமரியைக் கைக்கொண்ட மோகையறி யாவமுது
கொப்பளித் திடலாங்கியோர்
குறுணியோ டெண்ணெயும் பாலுமொவ்
வொருபடிபெய குட்டமந் திட்டியார

ஒன்பது நாள் என்பதற்கு ‡ கோள்திவசம் என்று கூறினர். கோள்-நவக்கிரகம். திவசம் - நாள்.

மமிர்தைமுக் கடுசாதி திரிபலைசு சாதிபல
மஷ்டிமது கம்பைசாசி
யபயலை தரிக்கும்வேர் சாதுர்சா தந்தகர
மரியுண் மூலஞ்சாரியை
யிமவாலு கைநெய்தல் கச்சோல மிலதையிவை
யிருபானே டேழுமும்மூன்
றெனுநிட்க நிறையமுதி லிழையட்டி வடிகொளினி
யென் சொல்கேன் சிறுகுமரியை
யமரபட் சஞ்சாலி வைத்தெடுத் தாடுவிழி
யருகலொடு நீர்க்கம்மலு
மமரமுங் கண்ணேயு மேகவழ றலைநோயு
மாமையஞ் சிறகாமரோ.

(இ - ள்.) கற்றாழைச்சோற்றை எடுத்துக் கடுக்காய்த்தூள் சேர்க்காமல் சலம் கக்கும்படி நன்றாகப்பிசைந்து பிழிந்து வாங்கிய சலம் (4-படியும்) நல்லெண்ணெய் (படி-1-ம்) பசுவின்பால் (படி 1-ம்) ஒரு பாத்திரத்தில்விட்டு, கோஷ்டம் மஞ்சிட்டிவேர் சந்தனம் ரசாஞ்சனம் சுக்கு மிளகு திப்பிலி புழுகுச்சட்டம் கடுக்காய் நெல் லிக்காய் தான்றிக்காய் சாதிக்காய் அதிமதுரம் சடாமாஞ்சில் விலாமிச்சம்வேர் வெட்டிவேர், சாதுர்சாதம், கிரந்திதகரம் கோரைக்கிழங்கு நன்னாரிவேர் பச்சைக்கருப்பூரம் செங்கழுநீர்க் கிழங்கு பூலாக்கிழங்கு தக்கோலப்பொட்டு என்னும் கற்கதிரவி யம் (27-ம்) வகை-1-க்கு விராகனிடை-3-ஆக நிறுத்தவைகளைப் பசும்பால்விட்டு அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து (15) நாள் நெற்புடத்தில் வைத்து எடுத்துக்கொண்டு முறைபோல் ஸ்நானஞ் செய்வையாகில், கண்ணருகல் நீர்க்கம்மல் அமரம் கண்ணேவு மேகவழல் தலைநோய் முதலிய நோய்களெல் லாம் ஆமையின் சிறகுபோல் இல்லையாய்விடும், எ-று. (34)

பெருங்குமரித் தைலம்

விருத்தம்

கன்னியா குமரியமிர் தஞ்சுவச் சம்மொவொரு
கடமுயரு ரூட்சோதகங்
கையான்சி வைச்சுரச மலைதலை து படிபடிபெய்
கண்டுபா ரங்கியிருவேர்
நன்னாரி யுபய மிருசந்த மிருதாரு
திரிராத்திரி யரத்தைமூளரி

நாளமந் திட்டிமது ரங்குவளை தக்கோல
நாதேய முஸ்ஸதைபூரம்
வன்னியுறு கத்தூரி முப்பலை குலக்காய்
மணச்சாலி விடைகிச்சிலி
மாதுலங் கத்தொடு சாதுர்சா தம்பூக
மடன்முப்ப திற்றைந்தெலாங்
கொன்னறும் பாலாட்டு முக்கலைசொவ் வொன்றுவிதி
கொண்டுவடி யாடிமைபில்வங்
கூழாட்ட மக்கிநோ யிவைபெரிய குமரியாங்
கொள்ளிமுன் பல்லமாமே.

(இ - ள்.) இளமைத் தன்மையுள்ள கற்றாழை மடற்சாறும், பசுவின்பாலும், நல்லெண்ணெயும், வகை 1-க்கு (8-படி) மொந்தன் வாழைக்கிழங்குச்சாறும், கரிப்பான்சாறும், நெல்லிக்கனிச் சாறும், வகை 1-க்கு (படி 1-ம்) ஆக ஒரு பாண்டத்திலூற்றி, சிறுதேக்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சிறுநன்னாரி, பெருநன்னாரி, சந்தனம், செஞ்சந்தனம், தேவதாரி, சரளதேவதாரி, கறிமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், அரத்தை, தாமரைவளையம், மஞ்சிட்டிவேர், அதிமதுரம், நீலோற்பலக்கிழங்கு, தக்கோலம், நீலாஞ்சனம், கோரைக்கிழங்கு, கர்ப்பூரம், கஸ்தூரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், புழுகுசட்டம், அதிவிடையம், கிச்சிலிக்கிழங்கு, மாதுளம்பழத்தின் மேற்றோடு, சாதுர்சாதம், பாக்குமரத்தினதுபூமுடி என்னும் கற்கதிரவியம் (35-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{3}{4}$) பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்துப் பக்குவத்தில் முறைமைப்படி வடித்து நெற்புடந் தீர்த்து வைத்துக்கொண்டு, (4) நாட்கொருகால் ஸ்நானஞ் செய்வித்தால், இமை நரம்பில் பரவிய வாதச்சலிப்பும், கண்ணோய் முதலிய சிற்சில ரோகங்களும் எரிகின்ற கொள்ளியின் முன் நேர்ந்த கரடியைப் போலாம், எ-று. (35)

அமிர்தக்குமரித் தைலம்

விருத்தம்

மதுபன்னி கன்னிசிலை யிருமூல நாரிவரி
வரிமுகரி மீனுட்சிவிண்
மதிவல்லி பதுமையிள நீரிரண் டாரும்
வகைக்கிரத நான்குபடியெண்

ணுதிநெய்பா லத்தொய்தம் வெவ்வேறு சேர்கற்க
முபயவேர் தகரம்வெள்ளி
லோத்திரந் திரிசாத மஷ்டவர்க் கஞ்சந்த
முயர்குங்கு மங்கிச்சிலி
சிதைபலினி யல்லிகரு நெய்தல் கர்ப்பூரந்
திராட்சைசடை நீலாஞ்சனஞ்
சிறுகேச ரஞ்சுரேசு வரிசாதி யடைசொனகு
செப்புமிரு பாஞேடுதொண்
டதிலிடு வகைக்குமுக் கஃசெடுத் தமுதுகொ
டரைத்தொன் றுறக்கலக்கி
யட்டிவடி பட்சமே சுத்திபுரி நாமமமிர்
தக்குமரி யித்தைலமே.

(இ - ள்.) சீந்தில்கொடி, கற்ருழை, நெல்லிக்கனி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நன்ஞரி, தண்ணீர்விட்டான், தாழைவிழுது, பொன்ஞங்காணி, கொத்தான், ஓரிதழ்த்தாமரை, இளநீர் என்னும் (12-ன்) ரசங்களும், வகை 1-க்கு (படி 4-ம்) நல்லெண்ணெய் (2-மரக்காலும்) தைலப்பாத்திரத்தில் சேர்த்து, வெட்டிவேர், விலாமிச்சுவேர், கிரந்திதகரம், வெள்ளிலோத்திரம், திரிசாதம், அஷ்டவர்க்கம், சந்தனம், குங்குமப்பூ, கிச்சிலிக்கிழங்கு, நாணற்ருது, அல்லிக்கிழங்கு, நீலோற்பலக்கிழங்கு, கருப்பூரம், திராக்ஷிப்பழம், சடாமாஞ்சில், நீலாஞ்சனம், சிறுநாகப்பூ, முசுமுசுக்கைவேர், சாதிபத்திரி, சொனகப்புல் என்னும் கற்கதிரவியம் (29-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{3}{4}$) ஆக நிறுத்தவைகளைப் பசுவின் பாலால் அரைத்துக் கரைத்துக் கலக்கிச் சிறுக எரித்துப் பக்குவத்தில் வடித்து (15-நாள்) நெற்புடம் வைத்தெடுப்பாயாகவும். இதன் பெயர் அமிர்தக்குமரித் தைலமாம், எ-று. (36)

இதன் மகிமை

விருத்தம்

இத்திற வெண்ணெய் நாடி யினினசி யஞ்செய் தாலும்
புத்திகொ டாடி லுஞம் புருவங்கண் சிரநோய் கைகான்
முத்திய வெரிவுன் மாத முதலிய நோய்க ளிச்சாப்
பத்திய மிடியே றுண்ணும் பணிக்கண வாரு மன்னே.

(இ - ள்.) மேன்மையுள்ள இந்தத் தைலத்தை நாசிக்குள் நசியஞ்செய்தாலும், விதிபோல் ஸ்நானஞ்செய்தாலும், புருவம் நேத்திரம் சிரசு என்னும் இடங்களைப்பற்றிய நோய்கள், கை கால்

களில் அதிகரித்த எரிவு உன்மாதம் முதலிய ரோகங்களும், இடியுண்ட சர்ப்பக்கூட்டக் கதிபோலாம். இதற்கு இச்சாபத்தியம், எ - று. (37)

கஜகற்ணிகா தைலம்

விருத்தம்

பருமுசலி முட்டியையம் பானசுவ கந்தியதி
பலைகோரை நாராயணி
பலமுனன் கொவ்வொன்றி னுக்கைந்து
மிடிதூணி பத்தசா ரத்தட்டநீ
ரிருபடி நெய்யமுத மஃதஃ தரக்கம்பொன்
றிருந்ததிப் புனலைம்பத
மிலவங்க வுரியவிலை யிருதாரு கேசரம
ரேணுக மரத்தைதகர
மரநிசிய திற்சந்து ரோகணி விலாமிச்சை
மதுரமுயர கோரோசனம்
மந்திட்டி மருண்மூல மொருபானே டேழாம்
வகைக்கிரு வராகனமுதா
லரையெலா மதிலிட் டெரித்திறிது கஜகற்ணி
யாந்தயில மாடல்லதுண்
ணகலருஞ் சகலசுர முங்கடற் காயமா
மாமிலமி லறிபத்யமே.

(இ-ள்.) மெருகன்கிழங்கு, அமுக்கராங்கிழங்கு, பேராமுட்டி, கோரைக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு என்னும் (3-ல்) முதற்சரக்கு (50-பலமும்) மற்றதுகள் (12-12-பலமுமாக) நிறுத்திடித்ததில் (8-படி) காடிச்சலம் விட்டுக் காய்ச்சி (2-படி) ஆக வடித்த கஷாயத்தில் அஃது என்கிற (2-படி) நல்லெண்ணெயும், மற்றொரு அஃது என்கிற (2-படி) பசும்பாலும், (1-படி) அரக்குக் கஷாயமும், ஐம்பதம் என்கிற ($1\frac{1}{4}$-படி) புளித்த தயிர்ச்சலமும் கூட்டி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சரளதேவதாரம் தேவதாரம், சிறுநாகப்பூ, காட்டுமிளகு, தும்பராஷ்டம், கிரந்திதகரம், மரமஞ்சள், அகில், சந்தனம், கடுகுரோகணி, விலாமிச்சை, அதிமதுரம், கோரோசனம், மஞ்சிட்டிவேர், மருட்கிழங்கு என்னும் கற்கதிரவியம் (17-ம்) வகை 1-க்கு (வராகனிடை-2) ஆக நிறுத்த வைகளை மேற்படி பாலால் அரைத்துக் கரைத்து எரித்துப் பக்குவத்தில் வடித்து நெற்புடந் தீர்த்த இக் கஜகற்ணிகா தைலத்தை

முறைப்படி ஸ்நானஞ்செய்தாலும், அல்லது இரண்டுகாலமும் துட்டிடை உள்ளுக்குச் சாப்பிட்டாலும் வாதசுரம் முதலிய சகல சுரமும் கடலிற்கரைத்த பெருங்காயம் போலாம் இதற்குப் புளி யில்லாப் பத்தியம் என்றறிவாயாக, எ-று.. (38)

கஜகர்ணி பராக கர்க்கதைலம்

விருத்தம்

மெருகுபலை யாடமுண் டனிநீலி யிந்திராணி
விபுதர்கந் தங்கந்தலை
வெகுபுத்திரி தாரமிவை யொருபதலீ தலீ * தாதி
விரிசரக் கேதொடிக ¶ ளாம்
பெருகவிரு குருணிவிட் டடு ‖ பதங் கண்டதிற்
பெய்நெய்யா னந்தையிரதம்
பேசுகுடி நீரிலக் கிவைகளை யரத்தையொலி
பேய்ப்புடல ரேணுகமகிற்
றிரிகடு வசம்போம மம்பினடி சவ்வியஞ்
சித்திரங் கோரைவிடையந்
திரிபலை விளங்கமர நிசிதுளவு கோலமந்
திட்டிபா ரங்கிகுப்பை
கரியநிம் பம்பூண்டு ரோகணி வசந்தமலர்
கச்சோல மொட்டறையிதே
கற்கமுப் பாளெடொன் றென்றுமூன் றேவரா
கன்றுக ‡ ளிடடடெடாடே.

(இ - ள்.) மெருகன்கிழங்கு, சிற்றுமுட்டிவேர், சிறுகாஞ்சொறி வேர், கொட்டாங்கரந்தை, அவுரிவேர், நொச்சில்வேர், நெய்ச் சட்டிவேர், சன்னராஷ்டம், கீழ்வாய்நெல்லிவேர், தேவதாரிகட்டை என்னும் இம் (10-ம்) வகை 1-க்கு (பலம்-10) ஆக நிறுத் திடித்து, இருதூணி சலம்விட்டுக் காய்ச்சி (2-படி) யாக இறுத்த குடிநீரில், இக் குடிநீர் இலக்கு என்கிற (2 - படி) நல் லெண்ணெயும் (2-படி) கொட்டைக்கரந்தைச் சாறும் சேர்த்து, சன்னராஷ்டம், கோஷ்டம், பேய்ப்புடல், காட்டுமிளகு, அகில், சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, ஓமம், திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, அதிவிடையம், கடுக்காய், நெல்

---

* முதலிற்கூறிய சரக்குகள் (10) ஆதலின் அத்தொகையையே அவைகள் ஒவ்வொன்றிற்கும் தொடிகள் என்றார்.

¶ ஆம்-நீர். ‖ பதம் 4-ல் 1. ‡ இடு, அடு, எடு, ஆடு.

லிக்காய், தான்றிக்காய், வாய்விளங்கம், மரமஞ்சள், துளசி விதை, தக்கோலம், மஞ்சிட்டிவேர், சிறுதேக்கு, சதகுப்பை, கருவேப்பிலை, வெள்ளைப்பூண்டு, கடுகுரோகணி, லவங்கப்பூ, பூலாங்கிழங்கு, ஒட்டறை என்னும் கற்கதிரவியம் (31-ம்) வகை 1-க்கு வராகனெடை (3) ஆக எடுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்து அதிற் கலந்து மெதுவுற எரித்துப் பக்குவத்தில் வடித்து, அக்கடத்திற்குச் சீலைமண்செய்து ஒரு மண்டலமட்டும் நெற்புடம் வைத்து எடுத்த கஜகற்ணிபராக கற்க தைலத்தை ஸ்நானஞ் செய்வாயாக, எ-று. (39)

இதன் மகிமை

விருத்தம்

ஆடியப் பத்தி யத்தை யனுட்டிக்கின்
முறைக்காய்ச் சன்முன்
னீடிய சுரங்க ளெல்லா நெற்றிக்க
ணனங்கன் மெய்யாம்
பாடிய கஜகற் ணிப்ப ராககற்
கத்தா நெய்க்கிங்
கோடிய பிணிக்கு மாத்தை யுரைப்பர்நூ
லுணர்ந்து ளோரே.

(இ-ள்.) அவ்வண்ணம் ஸ்நானஞ்செய்து பாயிரத்திற்கூறிய பத்தியகிரமத்தை அனுசரிக்கில், சந்ததசுர முதலிய முறைச்சுரங்களும், பழைமையாக நீடித்த புராண சுரங்களும் பரமசிவனது நெற்றிக்கண் சுவாலையிலகப்பட்ட மன்மதன் தேகம்போலாம், எ - று. (40)

இப்போது சொல்லிய கஜகற்ணி பராககற்க தைலத்தால் நீங்கியரோகக் கூட்டங்களை ஆயுள்வேத பண்டிதரே சொல்லுவார்கள்.

சிறிய கஜ்கற்ணிகா தைலம்

கட்டளைக்கலிப்பா

கந்த புட்பிச மூலமுப் பான்பலங் காடி
யெட்டுப் படிக்கு ளிடித்துற
வெந்த நீரிறு நான்கிலொன் றப்படி வெண்மைப்
பாலுந் திலரச முங்கலந்
தந்த மூலஞ்சக் ராங்கி யுபய மொன்றும்
பலக்கணக் காட்டியி டட்டிவை

யிந்த நேயஞ் சிறுமுறை யாயினு மில்லைச்
சீத சுரமிதற் கிட்டுணே.

(இ-ள்.) மெருகன்செடிச்சமூலமும் உரலிலிட்டுத் துவைத்து (30-பலம்) நிறுத்ததை (8-படி) காடிச் சலத்தில் சேர்த்து அடுப் பேற்றி எரித்து (2-படி) ஆக வடித்த கஷாயத்தில் (2-படி) வெள் ளாட்டுப் பாலும் (2-படி) நல்லெண்ணெயும் விட்டு (1-பலம்) மெருகன்கிழங்கையும் (1-பலம்) கடுகுரோகணியையும் மேற்படி பாலால் அரைத்து அதில் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித் துக்கொண்டு 4-நாளைக்கொருதரம் ஸ்நானம் செய்தாலும் உள் ளுக்குச் சாப்பிட்டாலும் சீதசுரம் விலகும். சிறிய முறையாயிருந்த போதிலும் இது வீரியத்தைச் செய்யும். எ-று. (41)

பூதிகா தைலம்

விருத்தம்

பூதிக மரத்தையர்க் கெட்டிவில் வங்குமிழ்ப்
புன்கா மணக்கழிஞ்சிற்
புங்கிவா சாதொண்டை யிருமுட்டி யிருமல்லி
புன்வங்க முண்முருக்குப்
பாதிரிநெ ரிஞ்சிறமூ தாழைவர ணங்காரி
பரணைசா றடைசித்திரம்
பருவாகை மூங்கைவிழு திந்திராணி மாகாளி
பாலைசை ரியமமுக்கிரி
தூதுளமி யாட * மணி யெண்முத விரண்டரைத்
தூக்கயல திற் பாலெலாந்
துவிதுவித் தொடிவகைக் கிடியிவைக் கிருபஃது
தூம்பம்படெட் டொன்றுநீர்
† மூதிரைச் சிரிதமொரு தத்துவயம் மலையாளி
முளரிநீரரை யிவையெலா
மொய்க்கவெண் மைச்சுதைநெய் யொவ்வொருகடம்
பெய்யினி மொழிகுதுங் கற்கமுறையே.

(இ-ள்.) ஆயில்மரப்பட்டை, சன்னராஷ்டம், எருக்கின்பட் டை, எட்டிப்பட்டை, வில்வவேர், குமிழம்பட்டை, புங்கின்வேர்ப்

---

* அணி என்பது அலங்காரம். இதன் பிரிவு 35-ஆதலின் இவண் 35 என்னும் தொகை விளங்க, அணி - எண் என்றூர்.

† முதிரை - மூதிரை என விகாரத்தானீண்டது. மலையாள தேசத் தில் உற்பத்தியாகின்ற மிளகை மலையாளி எனக் கூறினர்.

பட்டை, ஆமணக்கின்வேர்பட்டை, அழிஞ்சிற்பட்டை முட்கா வேளைவேர், ஆடாதோடைவேர், ஆதொண்டைவேர், பேராமுட்டி சிற்ருமுட்டி, பேராமல்லி, சிற்ருமல்லி, சிறுவழுதுணேவேர், கல்யாணமுருக்கின்வேர், பாதிரிவேர், நெருஞ்சில்வேர், தழுதாழை வேர், மாவிலிங்குப்பட்டை, கண்டங்கத்திரிவேர், தண்ணீர்விட் டான்கிழங்கு, வெள்ளைச்சார்வேளைவேர், கொடிவேலிவேர், பரு வாகைவேர், மூங்கைவிழுது, நொச்சிவேர்ப்பட்டை, களாவிழுது, பாலைமரப்பட்டை, பெருங்குறிஞ்சிவேர், அசுவகந்திக்கிழங்கு, தூதுளைவேர், சிறுகாஞ்சொறிவேர் என்னும் (35-ல்) ஆயில்மரப் பட்டை (தூக்கு $2\frac{1}{2}$-ம்) சன்னராஷ்டம் ($1\frac{1}{4}$-ம்) மற்றைய (33-ம்) வகை 1-க்கு (பலம் 2-ம்) ஆக நிறுத்து இடித்துப் பாண்டத்தில் சேர்த்து ஆற்றுச்சலம் (மரக்கால்-20) விட்டுக் காய்ச்சி (8-ல் 1) ஆக வடித்த குடிநீருடன் ([illegible]-படி) கொள்ளுக்கஷாயமும் (2-படி) மிளகுக் கஷாயமும் (8-படி) வெள்ளாட்டுப்பாலும் (8-படி) நல் லெண்ணெயும் கலக்கும்படி விடுப்பாயாக. இனி கற்கவகை யைக் கூறுவாம், எ-று. (42)

இதுவுமது

விருத்தம்

கற்கடக சிங்கிவிடை மைசாட்சி குட்டுதரு
காயமரு தோன்றிமதுரங்
கச்சோல மந்திட்டி குப்பைசண் பகிவிளங்
கங்கோரை பனிதகர
நற்கடு கரத்தைசவி யஞ்சிகர மிலதைவளி
நாரிசடை வசைவீரணி
நளினகே சரமிரண் டாரமிரு நிசிசாதி
நதிகாந்தை யசுவகந்தி
மற்கடுகை சாதுர்சா தந்திரி பலந்திரி
வருக்கமெண் ணேந்தொடுசதுர்
வகைவகைக் குக்கால கன்றதொடி யமுதிழை
வளாவிடு வடித்திடவடி
யிற்கடிந கந்தேவ தூபமுத லியவிரைக
ளிட்டொரும திக்களம்பிட்
டெடுவையைங் கரணையா ராதிசந்
தர்ப்பணைசெய் யிதுபூதி காதைலமே.

(இ-ள்.) கடுக்காய்ப்பூ, அதிவிடையம், மைசாட்சி, கோஷ் டம், தேவதாரி, பெருங்காயம், மருதோன்றி மரத்தின்வேர், அதி

மதுரம், பூலாங்கிழங்கு, மஞ்சிட்டிவேர், சதபுட்பி, சண்பகமொக்கு, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, நாணற்ருது, கிரந்திதகரம், நல்லகடுகு, சிற்றரத்தை, செவ்வியம், லவங்கப்பூ, கொடிவேலி, நன்னரிவேர், சடாமாஞ்சில், வசம்பு, விளாமிச்சு, தாமரைவளை யம், சந்தனம், செஞ்சந்தனம், மஞ்சள், மரமஞ்சள், சாதிக்காய், திப்பிலிமூலம், அமுக்கிராங்கிழங்கு, கடுகுரோகணி, லவங்கப்பட் டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் கற்கதிர வியம் (44-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{3}{4}$) ஆக மேற்படி பால்விட்டரைத் துக் கரைத்து மெதுவுற எரித்து, மணமுள்ள நாகணம் சாம்ப ராணி முதலிய பரிமள திரவியங்களை வகை 1-க்கு வராகனிடை (1) ஆக பொடித்து வடிகடத்தில் தூவி அதில் பக்குவத்துடன் வடித்து நெல்லுக்குள் ஒருமாதம் வரைக்கும் புதைத்து வைத் தெடுத்து, விநாயகமூர்த்தியை ஆராதித்தும் பிராமண சந்தர்ப் பணையும் செய்வாயாக. இதுவே பூதிகா தைலமாம், எ-று. (43)

இதன் மகிமை

விருத்தம்

இதுநசியம் புரியினுமூழ் கினுந் தலைக்குத்
  திருநெறியின் றெறிப்புவலி யெயிற தைப்பு
குதுகுலநீக் குங்கர்ண சூலை கர்ண
  கூசிகைபா திரியம்விடாக் குரை * பத்தோடு
சதுநிபத்தால் வரும்பீந சங்க ளும்போஞ்
  சாற்றவென்ருற் களமேலாஞ் சகல நோயு
மதுவிதழிச் சடையாளன் றேழற் குற்ற
  வறுமையாம் புளியிதற்கு வழங்கொ ணுதே.

(இ - ள்.) இந்தத் தைலத்தினுல் நசியஞ்செய்தாலும், ஸ்நா னஞ்செய்தாலும் குத்துகின்ற கபாலசூலையும், இரண்டு நெறி களின் தெறிப்பும் வலிப்பும், பல்லின் அடியில் வீங்குகின்ற வீக்க மும், மகிழ்ச்சியை யொழிக்காநின்ற கர்ணசூலையும், கர்ணகூசி கையும், பாதிரியமும், கர்ணநாதமும் * (14) காரணத்தினுல் பிறக்கின்ற பீநசரோகமும் விலகும். இன்னும் சொல்லப்புகின், கழுத்திற்கு மேற்பட்ட சகலரோகங்களும் கொன்றைமாலை யணிந்த பரமசிவனுக்குத் தோழனுகிய குபேரனுக்குப் பொருந்திய

* இந்த (14-ன்) விவரத்தை ஜீவரக்ஷாமிர்தத்தில் பீநசரோக வருக் கத்திற் காண்க.

தரித்திரத்தைப்போலாம். இதற்குப் புளியில்லாப் பத்தியமாம், எ - று. (44)

சிறு பூதிகா தைலம்

விருத்தம்

ஆயிலுரிக் குடிநீரோர் குருணியமு தஃதெண்
 ணவியரைகோட் டம்பலநன் ருரிநிசி மதுரங்
காயமிரா சஊதாரு கன்மதமா மிசிமாக்
 கடுவிளங்கஞ் சொனகப்புன் மேதைபதி னுன்குந்
தூயபசும் பாலிலரைப் பலத்தரைவெவ் வேருய்த்
 தூக்கியரை யதிலிடு துழாவுவிளக் கிணையாந்
தீயில்வடி முழுகுபல பீநசம்போ மிதன்பேர்
 சிறுபூதி காதைலஞ் செய்திடினுஞ் செய்யே.

(இ - ள்.) ஆயில்பட்டை (வீசை-1) இடித்து (8-படி) நீர்விட்டுக் காய்ச்சி (4-படி) ஆக வடித்த குடிநீரில், பசும்பால் (படி-4-ம்) நல்லெண்ணெய் படி 2-ம் சேர்த்து கோஷ்டம், சிற்ருமுட்டிவேர், நன்ருரிவேர், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, தேவதாரி, கல்மதம், சடாமாஞ்சில், சூர்த்து கடுக்காய், வாய்விளங்கம், சொனகப்புல், மேதை என்னும் கற்கதிரவியம் (14-ம்) வகை 1-க்கு பலம்-$\frac{1}{4}$ ஆக மொத்தம் வெண்பசுவின் பாலால் கலக்க அரைத்துக் கரைத்து தீபாக்கினியாக எரித்துப் பதத்தில் வடித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யில் பலவித பீநசங்களும் போம், இதன்பேர் சிறுபூதிகா தைலமாம். இது செய்தாலுஞ் செய்வாயாக, எ-று. (45)

அசனுமிர்த தைலம்

விருத்தம்

வேங்கையத ளமிர்தைவில் வம்பலயி னுன்கும்வெவ்
  வேறுகாற் சதமுட்டிநீர்
 விடுகும்ப நான்கிலொன் ருயட்டி யெண்ணெய்பால்
  விரவேக மேகம்படி
யோங்கையடு சுரசைசுக் ககிலேல நாரிகச்
  சோலமது ரந்திரிபலை
 யுபயநிசி முகுளநீ லஞ்சாதி சாந்துபலை
  யுபயவேர் முத்தைபூலா

காங்கையுறு குங்குமந் தாருசடை வாராக
கற்ணிகோ லஞ்சண்பகக்
கனிலவத் தோல்பூதி யிருபதிற் றென்பதுங்
கற்கமொவ் வொருநிட்கமாய்
வாங்கை யாகப்பசும் பாலிழைத் திட்டட்டி
வடிவடிக் கலசத்துளே
வருடபுட் பந்தசம் பூசமொரு நிட்கமிடு
வையசம் பக்கமுறவே.

(இ - ள்.) வேங்கைப்பட்டை, சீந்தில், வில்வவேர், சிற்று முட்டிவேர் (4-ம்) வகை 1-க்கு பலம் 2-ஆக நிறுத்து இடித்துத் தண்ணீர் (8-படி) விட்டுக் காய்ச்சி 2-படியாக வடித்து நல்லெண் ணெய் (படி 1-ம்) பசுவின் பால் (படி 1-ம்) சேர்த்து சன்னருஷ் டம், சுக்கு, அகில், ஏலம். நன்னரி, கிச்சிலிக்கிழங்கு, அதிமதுரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மஞ்சள், மரமஞ்சள், தாமரைவளையம், செங்கழுநீர்க்கிழங்கு, சாதிக்காய், சந்தனம், சிற்றுமுட்டிவேர், வெட்டிவேர், விலாமிச்சு, கோரைக்கிழங்கு, பெருங்கிச்சிலிக்கிழங்கு, குங்குமப்பூ, தேவதாரம், சடாமாஞ்சில், அமுக்கிராங்கிழங்கு, தக்கோலம், சண்பகமொக்கு, லவங்கப் பட்டை, புழுகுசட்டம் என்னும் கற்கதிரவியம் (29-ம்) வகை 1க்கு வராகனெடை-1 ஆக நிறுத்திடித்துப் பசுவின்பாலால் அரைத்து அதிற்கரைத்து விதிபோல் எரித்துப் பக்குவத்தில் தாழம்பூப் பரப்பி அதன்மேல் பச்சைக்கருப்பூரத்தூள் வராகனெடை-1 தூவி, வைத்திருக்கின்ற வடிகடத்தில் தைலத்தை வடித்து (15) நாள் நெற்புடம் வைக்கக்கடவை, எ-று. (46)

இதன் மகிமை

விருத்தம்

அசமகற்றி வாங்குமிந்த வசனுமிர்தத் தைலங்
கஜமுகனுக் காட்டியன்னேன் கழலேத்தி யாடுநர்க்குக்
குசமெனவே புகன்மறவன் குடித்தலத்து நோய்முழுது
நிசமிலுறை மூட்டைகளெண் ணெய்யின்முழு கியவாறே.

(இ-ள்.) நெற்குவைவயை நீக்கி எடுத்த இவ் அசனுமிர்தத் தைலத்தினுல் விநாயகருக்கு அபிஷேகஞ் செய்வித்து தோத்தரித் துப் பின்பு முறைப்படி ஸ்நானஞ் செய்பவருக்கு சிலேஷ்மத் தல மாகிய சிரசைப்பற்றிய ரோகமுழுதும் உண்மையாகவே எண்ணெ யில் முழுகிய வீட்டிலுள்ள மூட்டைப்பூச்சிகளைப் போலாம், எ-று. (47)

கதிராதித் தைலம்

விருத்தம்

கீதிவிளா வேம்புட்பி மதலைதும்பி நீபங்
கிஞ்சுகிவா ருணியிவையெண் மூலமுமே லுரிகாண்
மோதியெலாந் துவையைந்தைந் தாம்மிரநீர் கடம்பெய்
முளரிவர வெட்டிலொன்றம் பமிர்தபல மெளிலாங்
கோதிலிர தங்களுமவ் வெண்ணெணதி மதுரங்
கூட்டரைத்துப் பசும்பாலி விருதொடியட் டிறுத்துண்
பீதிதரு மெலும்புருக்கிக் கெலும்புருக்கி யாம்வை
பேசுவதென் கதிராதித் தைலமிதன் பெயரே.

(இ - ள்.) கருங்காலி, விளா, ஆவாரை, சரக்கொன்றை, தும்பி, கடப்பம், பலாசம், ஆட்டாங்கொடி என்னும் இவ் (8-ன்) வேர்ப்பட்டைகளையும் இடித்து வகை 1-க்கு (பலம்-5) ஆக நிறுத்துப் பாண்டத்திலிட்டு தண்ணீர் (8-படி) விட்டுக் காய்ச்சி (8-ல்) ஒரு பங்காக வடித்த (1-படி) கஷாயத்தில் அவ் எண் என்கிற (1-படி) நெல்லிக்காய் ரசமும், மற்றொரு எண் என்கிற (1-படி) நல்லெண்ணெயும் விட்டு (2-பலம்) அதிமதுரத்தைப் பசுவின் பாலால் அரைத்து அதிற் கரைத்து எரித்து பக்குவங் கண்டு வடித்து (8-நாள்) ஆறவிட்டுக் காலையிலும் மாலையிலும் துட்டிடை துட்டிடை அளவாக ஒரு மண்டலஞ் சாப்பிட்டுப் பத்தியமும் தவறாமலிருக்கில், பயங்கரத்தைத் தருகின்ற எலும்புருக்கி ரோகத்திற்கு இதுவே எலும்புருக்கியாகும்; இதன் பெயர் கதிராதித்தைலம், எ-று. (48)

மோதகவல்லித் தைலம்

விருத்தம்

கொழுக்கட்டை மாம்பட்டை வகைக்கொருதூக் குரலிற்
குழுங்கவிடித் துயர்கடத்திற் கொட்டியதிற் றடினிக்
கோவெண்மரக் காலூற்றிக் குமுதமிட்டங் கெழுநாக்
கொண்டிடைய ருதெரித்துக் குறுக்கீரைம் படிவை
பழுக்குமந்தப் பாக்கியத்தோர் படியெடுத்தெண் ணெயுமப்
படிகலந்தப் பட்டைகளிற் பலமரைத்துக் கரைத்துப்
பக்குவமா யெரித்திறுத்தப் பத்தின்மறு படியோர்
படிகொடதி லித்தைலம் பாய்ச்சியவ்வல்க் கமுமிட்
டிழுக்குரு தட்டிவடி யிவ்வாறே யதனை
யீரைந்தா வர்த்தமடக் கீற்றில்வரு நேய

மெடுத்தொருமட் கடத்தினிலிட் டிபமுகனைப் பேணி
யிருபொழுதுஞ் சிறுகரண்டி யிடைநுகர்மண் டலமே
வழுக்கிரத்தப் பெரும்பாடு மெலும்புருக்கிப் பிணியும்
மலடிமைந்த ராங்கலைதேர் மருத்துவர்க ளிதனை
வழங்குவர்மோ தகவவ்லித் தைலமென வுலகின்
மர்ச்சமொடு புளிபுகையும் வர்ச்சிமிக வழகே.

(இ-ள்.) கொழுக்கட்டை மரப்பட்டையும், மாமரப்பட்டையும், தனித்தனியே மசிய இடித்து வகை 1-க்கு (தூக் ந-1) ஆக நிறுத்துப் பெரிய பாண்டத்திலிட்டு (8-மரக்கால்) சலம்விட்டு அடுப்பேற்றி கமலாக்கினியால் இடைவிடாமல் மெதுவுற எரித்து (10-படி) ஆக நிறுத்தி, சிவந்திருக்கிற அந்தக் கஷாயத்தில் (1-படியும்) நல்லெண்ணெய் (1-படியும்) விட்டுக்கலந்து இதில் முற்கூறிய பட்டைகளில் (1-1-பலம்) நிறுத்து மேற்படி குடிநீரினால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்துக்கொள்; பின்னும் அந்தக் குடிநீரில் (1-படி) யெடுத்து அதில் இத்தைலத்தைவிட்டு அந்தப் பட்டைகளையும் அரைத்துப்போட்டு முன்போலவே காய்ச்சிக்கொள்; இவ்வாறே பத்துத்தடவை மடக்கிக் காய்ச்சிக் கடைசியில்வரும் தைலத்தை, ஒரு மண்பாண்டத்தில் பதனப் படுத்தி விநாயகபூசைசெய்து, காலையிலும் மாலையிலும் சிறு கரண்டிவீதம் ஒருமண்டல நாள்வரைக்கும் உண்ணக்கடவை; இதனால் எலும்புருக்கிரோகமும் மலடியின் பிள்ளைகளைப்போலாம். ஆயுள்வேதமுணர்ந்த பண்டிதர்கள் உலகத்தின்கண் இதனை மோதகவல்லித் தைலமெனச் சொல்லுவர். இதற்குப் பத்தியம் மீனும் புளிப்பும் புகையிலையும் நீக்குவது உத்தமமாம், எ-று. (49)

மெருகுள்ளித் தைலம்

நேரிசை வெண்பா

முசலமுள்ளி நேர்நேர்நேர் முத்தவியிட் டாக்கி.
லசலமுள்ளி லாக்குங்கீ லையுங்—கிசல
மெனவாம்புண் மேக மெறுழ்வாத வீக்கங்
கனவாம் புளியுப்பிற் காண்.

(இ-ள்.) (தோலைச் சீவியபின் மெல்லியதாக நறுக்கிய) மெருகன் கிழங்கும், தோலுரித்த வெள்ளைப்பூண்டுத்திரியும் சரி இடையாக நிறுத்துப் பாண்டத்தில் கொட்டி, இவ்விரண்டிடைக்கும் சமமாக ஆமணக்கு நெய்யைச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறிய தீயால் எரித்து அவை சிவந்து மிதக்கும் பக்குவத்தில் வடிகடத்

தில் வடித்து வைத்துக்கொண்டு (3-நாள்) ஆறவைத்து இத் தைலத்தை காலையில் மாத்திரம் ($\frac{1}{4}$-$\frac{1}{2}$-$\frac{3}{4}$-1-1$\frac{1}{4}$-1$\frac{1}{2}$-1$\frac{3}{4}$-2-பலம்) என்னும் கணக்கின் பிரகாரம் தேகபேதங்களை யறிந்து கொடுப்பிக்கில், சரீரத்தில் சகல கீல்களையும் அசையவொட்டாமல் செய்கின்ற சந்திகசிலேஷ்மரோகமும், தளிர்போல் கிளைத்துண்டாகாநின்ற விரணமும், மேகமும், வன்மையுள்ள வாயுவின் வீக்கமும் கனவிற்கண்ட பொருட்போலாம். இதற்குப் பத்தியம் புளிப்பும் உப்பும் இல்லை, எ-று. (50)

கட்டுவாங்கத் தைலம்

விருத்தம்

பெருமரத் துவக்கீ ரைந்தாம் பிரகுஞ்சத் தறற்று ரோணம்
பெய்திரு படியாய்க் காய்ச்சிப் பின்பெணெய் புளியா ரைச்
ரொருபடி வகைக்கூற் றேட்டோ டுறைததி நான்களாவி [சா
யோமமிச் சிங்கம் பாதி யுடசத்தோற் கழற்ப ருப்பு
மர நிசி சிகரஞ் சுக்கு மாதிரி கோட்டஞ் சாய்வில்
வக்கனி காட்டாத் திப்பூ மார்ச்சாலஞ் சடிலைவீரை [சேர்த்
யொருபதோ டேழுந் தூளா யொவ்வொன் றரைக் காற்பலஞ்
துறவட்டுண் கிரக ணித்துன் பொழிகட்டு வாங்க மீதே.

(இ-ள்.) பெருமரம் என்னும் மரப்பட்டையை நன்ருகயிடித்து (10-பலம்) நிறுத்துப் பாண்டத்திலிட்டு தண்ணீர் (8-படி)விட்டுக் காய்ச்சி (2-படி) ஆக இறுத்த கஷாயத்தில் நல்லெண்ணெய் (படி 1-ம்) புளியாரைச்சாறு (படி-1-ம்) ஏட்டுத்தயிர் (படி-4-ம்) விட்டுக் கலந்து, ஓமம், விலாமிச்சம்வேர், பெருங்காயம், திப்பிலிமூலம், வெட்பாலைப்பட்டை, கழற்சிப்பருப்பு, மரமஞ்சள், லவங்கம், சுக்கு, அதிவிடையம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, வில்வப்பழத்தின் தசை, காட்டாத்திப்பூ, பூனைக்காஞ்சொறிவேர், சடாமாஞ்சில், வட்டத்திருப்பி என்னும் (17) கற்க திரவியங்களையும் தனித் தனியே இடித்து வஸ்திரகாயஞ்செய்து, வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) ஆக நிறுத்து அதிற்போட்டு தீபாக்கினியாக எரித்து மிருது பாகத்தில் கற்கத்துடன் இறக்கி வைத்துக்கொண்டு இரண்டு வேளையிலும் முட்டை அகப்பை வீதமாகப் பத்தியத்துடன் உண்ணுவையாகில் சகல கிரகணி ரோகங்களும் நீங்கும். எ-று.

தித்தகோசாதகித் தைலம்

விருத்தம்

சாலினி கரிப்பான் சாறுந் தத்தமோர் படிவற் காலிற்
தன்னிய மஃதே ரண்டைத் தைலநெய் யுழக்கு மூக்காம்

பாலகத் தவியா திக்குப் பாதியா மதுரங் கோட்டம்
பாடீர மிரத்தை சாரி பைமிரு ணுள மஞ்ச
டோலடர் மிசிமூன் ருகச் சொலுங்கனி திரிசா தம்மித்
தொகையிரண் டேழே யாமத் தொகைநிட்க மிழைத்திட்
மேலிடாடுச்சி நோயும் விழிநோயும் பொய்யாமித்தை [டாக்கி
மேன்மையோர் தித்த கோசா தகியென விளம்பு வாரே.

(இ - ள்.) பேய்ப்பீர்க்கு, கையாந்தகரை இவற்றின் சாறு வகை 1-க்கு (படி 1-ம்) வெள்ளாட்டுப்பால் (படி 1-ம்) ஆமணக்கு நெய் (படி-¼-ம்) பசுநெய் (படி-¼-ம்) நல்லெண்ணெய் (படி-½-ம்) ஆக ஒரு பாத்திரத்தில் சேர்த்து இதில் அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், மஞ்சிட்டிவேர், நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், கப்பு மஞ்சள், சதபுட்பி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், லவங் கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம் என்னும் கற்கதிரவியம் (14-ம்) வகை 1-க்கு (வராகனெடை-1) ஆக நிறுத்தவைகளை வெள்ளாட்டுப்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து வைத்துக்கொண்டு, இதைச் சிரசில் துவாலையாகப் பூசினாலும், ஸ்நானஞ் செய்தாலும் சிரோரோகமும் நேத்திரரோகமும் இல்லை யாம். பெரியோர்கள் இதனைத் தித்தகோசாதகித் தைலமெனச் சொல்வர், எ-று. (52)

நாசிரோக நாசத் தைலம்

விருத்தம்

மாருச் சிநேகபல நேயமவு தசியமுகிர்
வாங்குமய மூவட்சிநீர்
வகைவகைக் கொருபடி யிதிற்படீ ரங்கஞ்ச
வளையமிரு வேர்மண நிசி
தேளுர்ச னித்தவித் தேலமுத் தக்காசு
சீரகங் கிச்சிலியடை
செங்குவளை யலர்பீரு தந்தியதி மதுரமஞ்
சிட்டிசண் பககன்னிகை
நாருப் பிலாளக மிரத்தமொரு பானெடிரு
நான்குமொவ் வொருநிட்கமா
நன்குறத் துகள்புரிந் திட்டெரித் துப்பருவ
நாடிவடி யாடிவரவே
ஏருத் தடைப்பீந சஞ்சோர் வீழல்பக்
கெழறிரித் தோன்றல்விழிமா

செலுநோய்க டெறுநாசி ரோகநா சத்தைல
மீதிலிச்சாப் பத்தியமே.

(இ-ள்.) நல்லெண்ணெய், பசும்பால், நகத்தால் வழிக்கத் தக்க வழுக்கையையுடைய இளநீர் இம்மூன்றும் வகை 1-க்கு (படி-1) ஆக பாத்திரத்தில்விட்டு, இதில் சந்தனம், தாமரைவளையம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் கஸ்தூரிமஞ்சள், தேற்றுங்கொட்டை, ஏலம், கோரைக்கிழங்கு, சீரகம், பூலாங்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க்கிழங்கு தண்ணீர்விட்டான்கிழங்கு, அதிமதுரம், மஞ்சிட்டிவேர், சண்பகமொக்கு, புழுகுசட்டம், குங்குமப்பூ என்னும் (18) கற்கவகைகளையும் தனித்தனியே வஸ்திரகாயஞ் செய்து வகை 1-க்கு (வராகனெடை-1) ஆக நிறுத்துச் சேர்த்து மிருதுவாக எரித்துப் பக்குவம் பார்த்து வடித்து வைத்துக் கொண்டு, விதிபோல் ஸ்நானஞ் செய்துகொண்டு வருவையாகில், சுவாசத்தைத் தடுக்கின்ற பீநசம், ரத்தபீநசம், பக்குகட்டுகின்ற துஷ்டபீநசம், திரிவிழுதல் முதலிய (18) வகைப் பீநசரோகங்களும் விலகும். இதுவே நாசிரோக நாசத்தைலம், எ-று. (53)

வச்சிரபீஜத் தைலம்

விருத்தம்

கழலடியஞ் சலியைந்தம் பாறுபடி யேற்றழற்கே
கங்காண் டத்துட்
கண்ணிபற ழைந்துமிது னந்துவைத்
திண்டேரண்டங் கான்றநேயம்
விழலடியெண் டொந்தமுண ராஞ்சிமதுஸ்
மிகிதோகை விளங்கழற்காய்
மெல்லிலவங் கத்துரியுந் தனித்தனிக்கங்
கஷ்டமிவை வெவ்வேருகத்
தழலடியு ருதுவெதுப் பிப்பரா கம்புரிந்தத்
தாளி சேர்த்தச்
சரணழலி லாக்கிவடி சுத்திரே சகம்பூரந்
தாக்க தற்குட்
சுழலடியாந் திரமருத்தும் பீஜமருத் தும்மவற்றின்
சுரப்பு நோயுந்
துவிதாங்க சப்ததா துக்களிற்கட் டுங்கனப்புஞ்
சுடர லாமே.

(இ-ள்.) கழற்சிக்கொடியின் வேர்ப்பட்டை (பலம்-20) இடித்துப் பாண்டத்திலிட்டு (6-படி) சலம்விட்டுக் காய்ச்சி (1-படி) ஆக

இறுத்த கஷாயத்தில் மேற்படி கழற்சிக்கொடியின் கொழுந்து (பலம்-5-ம்) அதன் பருப்பு (பலம்-2-ம்) அரைத்து அதிற்கரைத்து சிற்றாமணக்குநெய் (பலம்-40-ம்) கூடவிட்டு, ஏலம், பரங்கிச்சக்கை, வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை என்னும் (4) கற்கவகைகளையும் வகை 1-க்கு (பலம்-½) ஆக தனித்தனியே இளவறுப்பாக வறுத்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்து, அந்தக் கழற்சி வேரையே விறகாகக்கொண்டு எரித்துப் பதத்தில் வடித்து இதில் (½-பலம்) வாளப்பருப்பையும், (½-பலம்) ரசக்கருப்பூரத்தையும் அத்தைலத்தைவிட்டு மைபோல் அரைத்துக்கலந்து வைத்துக் கொள்ளவும். இத் தைலத்தினுல் அடிக்குடலில் சுழலுகின்ற வாயுவும், பீநசவாயுவும் அதன் வீக்கமும் * துவிதாங்கங்களில் உள்ள சப்த தாதுக்களை ஒட்டிப் பிறக்காநின்ற வீக்கங்களும் † சூரியனைக் கண்ட இருளைப்போலாகும், எ - று. (54)

இதை அருந்தும் முறைமையும் பத்தியமும்

விருத்தம்

வச்சிர பீஜ நெய்யை மார்த்தாண்ட னுதயந் தன்னில்
வெச்சென வெதுப்பி யஷ்ட மிகைப்பலம் பாலா கக்கொள்
வைச்சநாள் மூன்றைந் தேழா மணப்புளி நிஷ்பா வத்தோ
டுச்சித முருங்கை யாகு முறையிச்சாப் பத்திய மென்றே.

(இ - ள்.) இந்த வச்சிரபீஜத் தைலத்தை ½-பலம் அல்லது ¼-பலம் ஆக எடுத்து அனலில் வெதுப்பி சூரிய உதயத்தில் மாத்திரம் உண்ணக்கடவை. இப்படி உண்பதுவும் ரோகங்களின் பலாபலன்களைத் தெரிந்து (3-5-7) என்னும் நாள்கணக்கின்படி உண்ணவும். இதற்குப் பத்தியம் பழைய புளியும், அவரைப் பிஞ்சும் முருங்கைப்பிஞ்சும் சேர்ப்பதன்றி, இச்சாபத்தியமுமாம், எ - று. (55)

அமிர்தாமலகத் தைலம்

சந்த விருத்தம்

குண்டலி சிவையரை யரைமதி துலையிடி
குடிஞையிநீர் கடனென்

* பாதமுதல் இடுப்புவரைக்கும் அதோங்கம் என்றும், அதற்குமேல் சிரசு வரைக்கும் ஊர்த்துவாங்கம் என்றும், ஒரு அங்கத்தையே இருபகுப்பாகப் பகுத்திருப்பதால் துவிதாங்கம் என்றூர். துவிதம் 2 அங்கம்-உடம்பு.

† சூரியனுல் இருள் விலகுவதுபோல் இத்தைலத்தினுல் ரோகம் விலகும் என்பது கருத்து.

கூட விடுத்தட் டெட்டொன் ருயிறு
குமிகைநெய் கருமைப்பா
லண்டவி ளாவிடு கடுகைவ ராலம
தடைதுடி திரிபலைசந்
ததிமது ரங்கிச் சிலிபலை முஸ்தைய
ராவாரங் கழுநீர்
புண்டரி கச்சகு னங்கோ பிப்பூ
சனிதோ யகபித்தம்
புத்திரி போமி தொன்றெழி யிருபான்
புகனிட்கந் துவியாந்
தண்டமி டித்தப ராகமெ லாமிடு
தைலத்தைப் பருவத்
ததிகண் டிறுவை யமிர்தா மலகத்
தைலமி தன்பெயரே.

(இ - ள்.) சீந்தில்கொடி, நெல்லிக்கனி இவையிரண்டும் வகை 1-க்கு (பலம்-50) ஆக மொத்தம் நிறுத்துப் பாண்டத்தில்கொட்டி ஆற்றுச்சலம் 8-மரக்கால் விட்டு 1-மரக்காலாகக் காய்ச்சிய கஷாயத்தில் நல்லெண்ணெய் (படி 2-ம்) வெள்ளாட்டுப்பால் (படி 2-ம்) விட்டுக் கலந்து, இதில் கடுகுரோகணி, லவங்கப்பத்திரி, ஏலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சந்தனம், அதிமதுரம், பூலாங்கிழங்கு, சிற்றுமுட்டிவேர், கோரைக்கிழங்கு, திராக்ஷைப் பழம், செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நன்னாரி, நிலப்பூசினிக்கிழங்கு. புதியவெட்டிவேர், கொட்டிக்கிழங்கு, கீழ்வாய்நெல்லி வேர் என்னும் கற்கதிரவியம் (19-ம்) வகை 1-க்கு வராகனெடை 2-ஆக நிறுத்து உலக்கையால் இடித்து வஸ்திரகாயஞ் செய்து சேர்த்து மிருதுவாக எரித்துப் பக்குவத்தில் வடித்து விதிபோல் எடுத்து வைப்பாயாக. இதன் பெயர் அமிர்தாமலகத்தைலமாம், எ - று. (56)

இதன் மகிமை

விருத்தம்

இத்தைல நான்குநாட் கொருமுழுக்கு
மூழ்கிவர விச்சா பத்தியம்
வைத்திடுசி ரோரோகங் கர்ணநோய்
வாதபித்தா மயநோ யார
மொத்தவரிப் படலமொடு நேத்திரநோய்
கண்ணிறுக்க மொழுக்குப் பீளை

முத்தியவெப் பிவையலசயைக் காணரசோ
னக்கடியா மொழியுங் காலே.

(இ-ள்.) இத் தைலத்தை 4-நாட்கொருகால் ஸ்நானஞ்செய்யில் சிரசைப்பற்றியரோகம், செவிரோகம், திரிதோஷத்தால் பிறக்கின்ற ரோகம், முத்துப்போல் வெளுத்த வெள்வரிப்படல முதலிய நேத்திர ரோகம், கண்ணிறுக்கம், பூயாலசரோகம், நாட்பட்ட உள்சுரம் இவ்வகை ரோகங்களெல்லாம் சீரக மணத்தைக்கண்ட வெள்ளைப்பூண்டின் வாசனையைப்போல் நீங்கிவிடும், எ-று. (57)

கீழ்வாய்நெல்லித் தைலம்

விருத்தம்

பருவவய துற்றவெகு புத்திரியை யுணக்கிப்
பாசனத்தோர் வீசையிட்டுப் பாணியெட்டுப் படிவார்த்
துருவவட்டி யொருபடியாக் கஃதமிழ்தெண் ணெயுஞ்சே
ரொருதொடிமேத் தியம்பயசா லுறவிழைத்திட் டெரித்தா
டருவமுறு முட்சுரங்கா மாலைகம்பந் தலைச்சுற்
றக்கினிமாந் தங்கைகா லக்கியெரி வுழலை
மருவவரு பித்தவெட்டை சர்த்தியுஞ்சண் பகக்கா
மதுகரங்கீழ் வாய்நெல்லி மணத்தைல மிஃதே.

(இ-ள்.) கீழ்வாய்நெல்லிசமூலமும் நிழலில் உலர்த்தி பொடியாகக் கொய்து இடித்து (வீசை-1) பாண்டத்திற்கொட்டி (8-படி) சலம்விட்டு நன்ருகக் காய்ச்சி (1-படி) ஆக இறுத்த குடிநீரில், பசும்பால் (படி-1-ம்) நல்லெண்ணெய் (படி-1-ம்) விட்டு அதில் சீரகம் (பலம்-1) நிறுத்ததை மேற்படி பாலால் பதமாக அரைத்துக் கரைத்து எரித்துப் பக்குவத்தில் வடித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்வையாகில், வெளிப்படாத உட்சுரம், காமாலை, அவயவங்களில் காணுகின்ற நடுக்கல், தலைச்சுற்றல், அக்கினிமந்தம், கைகால் கண் இவ்விடங்களின் எரிச்சல், உழலை, போகத்தால் விளைந்த அரித்திராமேகம், வாந்தி என்னும் ரோகங்களெல்லாம் சண்பகவனத்தின் வண்டுகளாம். இதுவே வாசனைபொருந்திய கீழ்வாய்நெல்லித் தைலமாம், எ-று. (58)

அரக்குத் தைலம்

விருத்தம்

துரும வியாதி யெண்குடுப்பஞ் சுரராற்
றறலெண் ணுன்குகடன்

சுருக்கப் பலையிந் தனக்கனலாந் தொகைக்கொட்
டொன்றாய் வடிகுடிநீ
ரருமை நறும்பா லெட்டயில மன்னீர்க்
கருத்த மவந்திமஸ்து
மாற்றப் பளவைப் படிப்பலமா மார
நிசிபுட் காஞ்சிகரச்
சரும மடைபச் சிலைமதுரஞ் சடைகிச்
சிலிரோ கணியேலை
சதபுட் பியும்வா லரியுரிபூஞ் சாந்தோ
டுபய வசைமுசலி
உரும முறுசெவ் வல்லிகண மொவ்வொன்
றினுக்கோ ராம்பிரமா
யூற்றும் பயசா லிழையெல்லா மூற்றிக்
கரைத்துத் தானமிடே.

(இ - ள்.) கொம்பரக்கு (பலம்-32) குடிநீர்ப்பாண்டத்தில் கிழி கட்டித் தொங்கவிட்டு மருதஞ்சார்ந்த ஆற்றுநீர் (மரக்கால்-32) விட்டு சிற்றுமுட்டி விறகினுல் எரித்து (8-ல்) ஒரு பங்காக வடித்த குடிநீரில் பசுவின்பால் (படி 4-ம்) நல்லெண்ணெய் (படி-4-ம்) காடிச்சலம் தயிர்ச்சலம் இவைகள் வகை 1-க்கு (பலம் 32-ம்) சேர்த்து, இதில் சந்தனம், கஸ்தூரிமஞ்சள், கோஷ்டம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, பச்சிலை, அதிமதுரம், சடாமாஞ்சில் பூலாங்கிழங்கு, கடுகுரோகணி, ஏலம், சதகுப்பை, கிளியூறல் பட்டை, பூசாந்திரப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், மெருகன் கிழங்கு, செவ்வள்ளிக்கொடி என்னும் கற்கதிரவியம் (18-ம்) வகை 1-க்கு (பலம்-1) ஆக தனித்தனியே பொடித்து நிறுத்து மேற்படி பாலால் பதமாக அரைத்து எல்லாம் ஒன்றுபடக் கரைத்து அடுப் பின்மிசை வைப்பாயாக, எ-று. (59)

இதன் மகிமை

விருத்தம்

உத்தான மிட்டுமுதற் பொருளை வாழ்த்தி
யொல்கவெரித் தைந்தாநா ளுதய முந்தி
யோதுபரு வத்துவடித் ததற்குச் சுத்தி
யொருமதிநெற் புடந்தீர்வ தொளிரி லாட்சை
சத்தான தைலத்தின் பெயரைச் சொல்லிற்
சப்ததா துச்சுரமுஞ் சடக்க டுப்புஞ்

சந்திரா வர்த்தமொடு சூரியா வர்த்தந்
தலைச்சூலை வியர்வுறுகற் ருழை வாச
முத்தான வெயிற்றினடிச் சுரப்பு மாற்ற
மொழியவொட்டாச் சுரக்கினமு மூர்த்த மாக
மூச்செழுப் புஞ்சுவாச காசச் செருக்கு
முதிருழலை யுதிரத்தின் முறிவும் பாண்டுக்
கொத்தான நோய்களுமுள் ளீர லுக்குட்
குளிர்ந்தெழுந்தங் கவயவியைக் குலிக்கி யாட்டுங்
குளிர்ச்சுரமு நாட்பட்ட சுரமுந் தீவாய்க்
குயவரியை நேருமயக் குழாத்த தாமே.

(இ - ள்.) பிரணவப் பொருளாகிய விநாயகமூர்த்தியைப் பூசித்து, அடுப்பின்மீது வைத்த எண்ணெயைத் தகுந்த விறகினால் (4-நாள்) வரைக்கும் மிருதுவாக எரித்து (5-வது) நாள் உதயகாலத்திற்கு முன் வடித்து ஒருமாதம் நெற்புடம் வைத்துச் சுத்திபுரிந்தெடுத்துப் பதனஞ்செய்யவும்; இதில் சிவந்த அரக்கினது சத்துச் சேருதலால், இந்தத் தைலத்தின்பெயரைச் சொன்ன மாத்திரத்தில், சப்த தாதுக்களைப்பற்றிய சுரங்கள், தேகக்கடுப்பு, சந்திராவர்த்தம், சூரியாவர்த்தம், கபாலச்சூலை, வியர்வையாற் பிறக்கின்ற கற்றுழை நாற்றம், பல்லுகளின் வேரில் வீங்குகின்ற வீக்கம், வார்த்தைசொல்ல ஒட்டாத சுரக்கினரோகம், ஊர்த்துவ கதியாக மூச்சை எழுப்புகின்ற சுவாசகாசரோகம், அதிகரித்த உழலைரோகம், உதிரக்கெடுதி, ஐவண்கைப்பாண்டு ரோகங்கள், ஈரலுக்குள் குளிர்ச்சியை யுண்டாக்கிப் பின்பு நரம்புகளில் வியாபித்துத் தேகத்தைக் குலுக்கி ஆட்டுகின்ற நளிர்சுரம், புராணசுரம் என்னும் ரோகங்களெல்லாம், தீவாயையுடைய புலிமுன் அகப்பட்ட ஆட்டுக் கூட்டங்களைப் போலாகும், எ-று. (60)

அர்க்கக்ஷீராதித் தைலம்

விருத்தம்

எருக்குகுடம் பாற்களன்றி யிவையிரண்டை சீதமெரு
கிருங்கி ழங்கு
ளிருக்குமற லோடேமு முட்டிவகைக் கைந்தெணெய்
பத் தெரிமு கிக்காழ்
பெருக்குசய பாளமிவை யைந்தார்த்தஞ் சேர்த்
தொன்றுப் பேணித் தீயாற்
சுருக்குவடி தைலமித னுமமர்க்க க்ஷீராதி
துதித்தி டாயே.

(இ - ள்.) எருக்கின்பால், சதுரக்கள்ளிப்பால் இவைகளுடன் மேற்படி இரண்டின் ரசங்கள், பிரண்டைரசம் பற்பாடகரசம் பெரிய மெருகன்கிழங்கு ரசம் என்னும் இவ்வேழும் வகை 1-க்கு (பலம்-5) ஆக (10-பலம்) நல்லெண்ணெயில் ஊற்றி, அதில் சேராங்கொட்டை (5-ம்) நேர்வாளப்பருப்பு (பலம்-½-ம்) சேர்த்துத் தீபாக்கினியில் காய்ச்சிப் பக்குவத்தில் வடித்துக் கொள்ளவும். இதன் பெயர் அர்க்கக்ஷீராதித் தைலமெனச் சொல்வாயாக, எ - று. (61)

இதன் மகிமை

விருத்தம்

துதிக்கவிந்தத் தைலத்தைச் சிறுகவப்பிப் பிடிவாதத்
தொகைபோஞ் சத்திற்
கதிக்கவிட்டுப் புரட்டுண்மகோ தரஞ்சோபை பாண்டு
குன்மக் கட்டி யும்போம்
வதிக்கவொட்டாச் செவிக்குத்தற் கொருதுளிகுத் தடங்கும்
விழி வழியாம் பன்னோய்
பதிக்ககலத் தாண்டவென்றாற் கலிக்கமுந்தீட் டிதற்கிச்சாப்
பத்தியங் காணே.

(இ - ள்.) யாவருந் துதிக்கத்தக்க இத்தைலத்தை உடம்பில் சிறுகத் தொட்டுத் தடவிப்பிடிக்கில், மகாவாதரோகக் கூட்டங்கள் ஒழியும். கருங்குருவை அரிசிமாவில் விட்டுத் திரட்டிக் கழற்சிக்காய்ப் பிரமாணம் ஒரு மண்டலம் அல்லது அரைமண்டலம் உண்ணில், மகோதரரோகமும் சோபாரோகமும் பாண்டு ரோகமும் குன்மக்கட்டியும் விலகும்; தங்க ஒட்டாத வுபத்திரவத்தைச் செய்கின்ற கர்ணசூலை ரோகத்திற்கு ஒருதுளி வெதுப்பிக் காதில் குத்தினால் குத்தல் விடும், இதைக் கலிக்க மிடுவையாகில் நேத்திர முற்றிலும் வராநின்ற பற்பல ரோகங்களும் ஊரைவிட்டகலும். இதற்கு இச்சாபத்தியம் என அறியக்கடவை, எ - று. (62)

க்ஷீரதுருமாதித் தைலம்

விருத்தம்

சீவனியின் றுவக்கையொரு வீசைநிறுத் துரலிற்
சேர்த்திடித்தெட் டுப்படிநற் சீவனம்பெய் தேம

காவனியிட் டெட்டிலொன்றம் பஃதெணெய்யே லாதிக்
கணச்சரக்கை வகைக்கிரண்டு களஞ்சியரை * யயனுத்
தூவனிதை நிறவரப்பால் விட்டட்டிக் கீர
துருமாதித் தைலமெனச் சொல்லிமுழு குண்ணீ
தாவனில மேகமிவற் ருலுடல்கை காலிற்
சார்ந்தவெரி வகலுமிச்சாப் பத்தியமி தற்கே.

(இ - ள்.) பாலமரப்பட்டையைக் கல்லுரலிற் சேர்த்திடித்து (1-வீசை) நிறுத்ததில் ஆற்றுத்தண்ணீர் (படி-8) ஊற்றி மகா வன்னி என்கிற கமலாக்கினியால் எரித்து (8-ல்-1) ஆக வடித்த கஷாயத்தில் நல்லெண்ணெய் (படி-1) கூட்டி அதில் ஏலம், சிற்றேலம், நாணற்ருது, சேங்கொட்டை, சடாமாஞ்சில், வெட்டிவேர், சிறுகாஞ்சொறிவேர், கச்சோலம், லவங்கப்பட்டை, கிரந்திதகரம், தூணியங்கம்பிப்பிசின், சாதிக்காய், சுக்கு, புலிநகம், தேவதாரம், அகிற்கட்டை, ஸ்ரீவச்சகம், குங்குமப்பூ, வண்ணக்குங்குலு, குங்குல், சுரபுன்னைப்பூ, சிறுநாகப்பூ என்னும் † ஏலாதிக்கணச்சரக்கு (22-ம்) வகை 1.க்கு களஞ்சி (2) ஆக நிறுத்து வெண்மை நிறப் பசுவின்பாலால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதங் கண்டு வடித்து வைத்துக்கொண்டு, இது க்ஷீரதுருமாதித் தைலமென்று நீ சொல்லி ஸ்நானமுஞ் செய்து, உள்ளுக்கும் கொள்ளுவையாகில், ஒட்டுகின்ற வாதமேக ரோகமும், சரீரம் கை கால் இவைகளைப் பற்றிய எரிவும் நீங்கும் இதற்கு இச்சாபத்தியம், எ - று. (63)

சகதேவித் தைலம்

விருத்தம்

ஒருதேவ கந்தச்சா றொருபடிநெய் யெண்ணெய்
யுரைத்ததினேர் நேரஷ்டி யுயரார நாரி
யிருமூலத் தன்மூலம் பாசகுசு மம்விட் [நிட்க
டினக்கரிஷ்டை நெய்தலொன்பா னிவையொவ்வொரு
மருமாவின் பாலிழைத்துப் பதத்திறுத்தோர் கரண்டி
யயிலினுமா டினும்விழை யடர்புகைமெய் யெரிவும்
பொருசீர ணச்சுரமு மாதவத்தே சனியாம்
புகழ்ச்சகதே வித்தைலம் புரிவர்மருத் துவரே.

* தைலங்களுக்கு உபயோகிக்கும் அக்கினிகளில் மகா அக்கினி என்பது கமலாக்கினியாம் அயன் - நா - னு - வனிதை-சரசுவதி.

† ஏலாதிக்கணம் என்பது, உரையிற்கூறிய (22) சரக்குகளுமாம்.

(இ - ள்.) (1-படி) நெய்ச்சட்டிச்சாறும் (½-படி) பசுவினது நெய்யும் (½-படி) நல்லெண்ணெயும் ஒன்ருகக்கலந்து, அதிமதுரம், நற்சந்தனம், நன்னுரிவேர், வெட்டிவேர், விலாமிச்சுவேர், திப்பிலி மூலம், லவங்கம், கடுகுரோகணி, நெய்தற்கிழங்கு என்னும் கற்க வகை (9-ம்) வகை 1-க்கு (வராகனிடை-1) ஆக நிறுத்துப் பசு வின்பால் விட்டரைத்து அதிற்கரைத்து அடுப்பிலிட் டெரித்துப் பதத்தில் வடித்துக்கொண்டு, இதை ஒரு சிறுகரண்டிவீதம் அந்தி சந்தி சாப்பிட்டாலும், (4) நாட் கொருகால் ஸ்நானஞ்செய்தாலும், நேத்திரத்தைப்பற்றிய புகைச்சலும், தேக எரிச்சலும், போராடு கின்ற சீரணச்சுரமும் வெய்யில்பட்ட மஞ்சள் பூச்சுப்போலாம். புகழுள்ள இச்சகதேவித் தைலத்தைப் பண்டிதர் செய்வார், எ-று

காகமாசித் தைலம்

விருத்தம்

வாயசிச் சாறெண் ணெயம் வகைக்குழக் கெனக்க லந்தே
தூயசுக் காதி மூன்றுந் துகண்முக்காற் றெடிய ளாவிப்
பாயசத் திறைபா லட்டிப் பருகிடிற் சுவாச ரோகம்
போயசைப் பருங்கன் மெய்யாம் பரிகாக மாசி யீதே.

(இ - ள்.) (¼-படி) செம்மணித்தக்காளிச்சாறும் (¼-படி) நல் லெண்ணெயும் ஒன்ருகக்கூட்டி, இதில் சுத்திசெய்த சுக்கு, மிளகு, திப்பிலி (3-ம்) வஸ்திரகாயஞ்செய்து வகை 1-க்கு (பலம்-¾) விழுக் காடு நிறுத்துத் தூவிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு, காலையிலும் மாலையிலும் (2-3) துட்டிடை வீதம் ஒரு மண்டலம் சாப்பிடில், சுவாசரோகம் நீங்குவதும் அன்றி, அசைப் பதற் கரியமலைபோன்ற உறுதியுள்ள சரீரமுமாம். இதுவே காக மாசித் தைலம் நீ செய், எ-று. (65)

பத்தூரத் தைலம்

விருத்தம்

இந்திரனூ ரிந்திராணி பர்ணிவெகு புத்திரியி
லசுனமுனி நாமஞ்சடு
மிருபடி தனித்தனிக் கிரதநிரை யமிர்தமொன்
றெண்ணெயும தளவிவற்றுட்
சந்தமா மஞ்சளதி மதுரமுப குஞ்சிகை
சரம்புழுப் பகைகந்திகை
தன்மூல மரிதகியி னலர்பாரி பாவியஞ்
சாதுர்சா தஞ்சவ்விய

மிந்தவகை பதினைந்து மொவ்வொரு வராகனிடை
யிழைமுனம் புகலமுதினு
லிடுகலக் கெரிபொறுத் திறுபதத் திதுசிரத்
திடுமுழுகு நசியமுஞ்செய்
பந்தமிகு மட்டாத சப்பீந சங்களும்
பகடுண்வி ளாங்கனியாம்
பத்தியம் புளிபுகையி லெத்தேக ருக்குமாம்
* பத்தூர முறுதைலமே

(இ-ள்.) பொன்னுங்காணி, நொச்சில், வல்லாரை, துளசி, வெள்ளைப்பூண்டு, அகத்தி என்னும் (6-ம்) தனித்தனியே சாறு (படி-2-ம்) பசுவின்பால் (படி-1-ம்) நல்லெண்ணெய் (படி-1-ம்) ஒரு பாத்திரத்திற்சேர்த்து இதில் சந்தனம், மரமஞ்சள், அதிமதுரம், கருஞ்சீரகம், திப்பிலி, வாய்விளங்கம், சிறுதேக்கு, திப்பிலி மூலம், கடுக்காய்ப்பூ, கோஷ்டம், லவங்கப்பட்டை, லவங்கப்பத் திரி, சிறுநாகப்பூ, ஏலம், செவ்வியம் என்னும் கற்கதிரவியம் (15-ம்) வகை 1-க்கு (வராகனிடை-1) ஆக நிறுக்து மேற்படி பாலால் அரைத்துக் கரைத்து மிருதுவாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் காண்டு, இதை (3-நாள்) தினந்தினஞ் சிறு கச் சிறுக சிரசிலிட்டு ஊறவைத்து பின்பு (4-6) தினம் விடுத்து மறுபடியும் போதுமான நாள்வரையில் இவ்வண்ணமாகச் செய் துக்கொண்டாலும், (4) நாட்கொருகால் ஸ்நானஞ்செய்துகொண் டாலும், நசியஞ்செய்து கொண்டாலும் சுவாசத்தைத் தடுக்கின்ற (18) விதப் பீநசங்களும் யானையுண்ட விளாங்கனிபோலாம். பத் தியம்: புளி, புகை நீக்கவும். சகல தேகிகளுக்கும் உதவும். இதுவே பத்தூரத் தைலமாம், எ-று. (66)

மாஷ தைலம்

சந்த விருத்தம்

வெற்பாமணி மாடம்படி யேகம்புன னுன்காம்
விளையுங்குடி நீரொன்றிரு வெண்மைச்சுதை யிலைதே
நற்பாலக நேயஞ்சரி காலிப்பறழ் மிசிமா
நறவந்திரி கடுசீவனி மதுரஞ்சசி வசைகோ
முற்பாலிழை யேகம்பட வேயொவ்வொரு நிட்க
மொழியிங்கிவை யாவும்விர வித்தீயெரி வடிநெய்
நெற்பானையு ளோரைந்திரு நாளும்புட மிடுமே
னிகழ்கின்றபின் னுளிற்புரி நெறியும்புக லுதுமே.

---

* பத்தூரம் என்பது பொன்னுங்காணி.

(இ - ள்.) குறிஞ்சிநிலத்தில் விளைந்த மணிபோன்ற உழுந்து படி (1-க்கு 4-படி) சலம்விட்டுக் காய்ச்சி ஒருபடியாக வடித்த குடிநீரில் வெள்ளாட்டுப்பால் (படி-1-ம்) நல்லெண்ணெய் (படி-1-ம்) கூட்டி, இதில் பூனைகாலிப்பருப்பு, சதபுட்பி, அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்பாலைப்பட்டை, அதிமதுரம், இந்துப்பு' வசம்பு என்னும் (10-ம்) வகை 1-க்கு (வராகனிடை-1) ஆக நிறுத்ததை மேற்படி பாலால் அரைத்துக் கரைத்துத் துழாவி எரித்துப் பக்குவத்தில் வடித்து நெற்புடத்தில் (10) நாள் சுத்தி செய்தெடுத்து வைத்துக் கொள்வாயாக. இனி, நடத்தும் வகையையும் கூறுவாம், எ-று. (67)

இதன் மகிமை

விருத்தம்

புகலுமா டத்தி னெய்யைப் புகலவை யவத்தும் பூசி
யிகலுறப் பிடிக்கின் மூர்த்தத் தெழுங்கம்பங் கரத்தின் கம்ப
மகனுமீ துண்மை யப்பி யங்கஞ்செயிற் செவிடுண் ணுக்கு
மகலுமிச் சாப்பத் யத்தோ டாயொரு வருட நாளே.

(இ-ள்.) மேற்கூறிய உழுந்தினது தைலத்தை அங்க உறுப்புகளில் பூசிப் பலமாகப் பிடிக்கில், சிரசில் உண்டாகின்ற நடுக்கலும், கைகளின் நடுக்கலும் நீங்கும்; இது உண்மையாம். இதனை ஒரு வருஷகாலம் ஸ்நானஞ் செய்யில் பாதிரியரோகமும் உபஜிக்வாரோகமும் தீரும். இச்சாபத்தியம், எ-று. (68)

கரப்பான் தைலம்

கட்டளைக்கலித்துறை

பூரந் துடியிரு துத்தஞ் சுசிசுசி போகிமிரு
தாரங் கடிநிசி நீர்முத்தங் காட்டசை சத்தியெல்லெண்
சேரங் கினமரை நிட்கம் பொடிபடி தெங்குறும்பால்
வாரங்கி வைத்துநெய் வாங்கெக் கரப்பனும் வாங்குமன்றே.

(இ - ள்.) ரசகருப்பூரம், ஏலம், துத்தம், துரிசி, கருப்பூரம், பாதரசம், கார்போகிவிதை, மிருதார்சிங்கி, கஸ்தூரிமஞ்சள், நீரடிமுத்துப்பருப்பு, காட்டுச்சீரகம், நெல்லிக்காய்க் கந்தகம் என்னும் (12-சரக்கும்) வகை 1-க்கு (வராகனிடை-½) ஆக நிறுத்துக் கலுவத்தில் நன்ருகப் பொடித்து ஒரு தைல பாத்திரத்திற் சேர்த்து இதில் தேங்காய்ப்பால் (படி-1) விட்டுக் கலக்கி மிருது

வாக எரித்துப் பதத்தில் இறுத்து வைத்துக்கொண்டு, இத் தைலத்தைக் கோழியிறகினல் தடவித்தடவி (3-நாள்) ஊற வைத்து (4-வது) நாளில் உசில் அரைப்பிட்டு இளவெந்நீரால் ஸ்நானஞ் செய்விக்கில் கரப்பான் என்கிற ரோகம் நீங்கும், எ-று.

ரசத் தைலம்

விருத்தம்

சூலினி பற்ப ணம்பிம்பி முப்பன்ன ந் தொடிகளை ந்தைந்
தாலினிக் கந்தங் கஃசிட் டிடிமுத் தவிப்படிசேர்
கோலின்இரு மித்த மூழி யளாவிக் குடிகஃசுண்
மேலி னிரைத்த நுணுக்காய்க் கிரந்தி விரணங்களே.

(இ - ள்.) வெற்றிலை, பாவட்டையிலை, கோவையிலை என்னும் (3-ம்) வகை 1-க்கு (பலம்-5) ஆக நிறுத்துக் கல்லுரலிலிட்டு பாதரசம் (பலம்-$\frac{1}{4}$) விட்டு இருப்புப்பூணில்லாத உலக்கை கொண்டு மைபோலிடித்துக் கடைந்து திரட்டி ஒரு பாத்திரத்திற் போட்டு, ஆமணக்குநெய் (படி-1) ஊற்றி மர அகப்பையால் ஒன்றுபடக் கரைத்து (3-நாள்) சூரியபுடம் வைத்தெடுத்து இதை மேற்படி அகப்பையால் கலக்கி (பலம்-$\frac{1}{4}$) வீதம் (போதுமான நாள் அளவும்) சாப்பிடுவையாகில், நிறைபடுகின்ற நுணுக்காய்க் கிரந்தி விரணங்கள், எ - று. (70)

இதுவுமது

விருத்தம்

விரணமடர் படர்தாமரை பாமைவெடிப் புணினஞ்
சரணமுறுப் பங்கையாங் கரும்புள்ளிசது மணிநோய்
கரணமிலாஞ் சனமேகக் கசிவுகண்டத் தலங்கற்
கிரணமுறு மிரதத்தெண்ணெய் யீதுப்பிற்கெஞ் சினுமே.

(இ-ள்.) விரணநெருங்கிய படர்தாமரை, சிரங்கு, கீற்றுக வெடிக்கின்ற புண்களின் கூட்டம், பாதம் உடம்பு கை இவ்விடங் களி லுண்டாகின்ற கரும்புள்ளி என்கிற கருமேகம், சதுமணி ரோகம், கணக்கிலடங்காத லாஞ்சனரோகம், எந்நேரமுங் கசிந் தொழுகாநின்ற மேகரோகம், கண்டமாலை என்னும் இவைகள் உள்ளிலும் வெளியிலும் நிலையாவாம். இதுவே பச்சை ரசத் தைலம், இதற்குப் பத்தியம் உப்பு புளிப்பு மன்ருடினும் இல்லை, எ - று. (71)

மகா விஷமுட்டித் தைலம்

விருத்தம்

இந்தடித ராமுளியி லிங்கவுரி சயையாயி
விருதாரு வுடசமத்தை
யிருபலைவி ஷானியொலி வேளைநளி சங்குவேம்
பிதழிதேட் கடைபெறும்புற்
கந்தமுக் குன்றிகோற் பாலிகை கிடிச்செவி
கடம்பழிஞ் சத்திதொண்டை
கார்போகி வாசைவா யசிபுன்கு பாடைமிள
கரணைசர ஞாராயணி
சிந்துவா ரங்கலிங் கந்தழற் கொடியவசி
திகழ்பா தலத் தம்பியுஞ்
சேரிஞற் பாஞெடைந் தாம்பிரஞ் சோடசஞ்
சேர்த்திடியொவ் வொன்றினுக்கம்
பந்தமூ லத்தொகைக் கெண்மடங் கிட்டட்டி
யட்டபா கத்தொன்றிறுத்
தாரபா டங்காணம் வெந்தநீர் படிபடிபெய்
யறிசுரதம் விடலினியரோ.

(இ-ள்.) எட்டிவேர், தரா, செம்முள்ளி, மாவிலிங்கு, அவுரி, முன்னை, ஆயில், தேவதாரம், சரளதேவதாரம், வெட்பாலை, ஊமத்தை, சிற்றுமுட்டி, பேராமுட்டி, சதுரக்கள்ளி, கோஷ்டம், வேளை, வெண்காறடை, முள்சங்கு, வேம்பு, சரக்கொன்றை, தேட்கொடுக்கு, பெரும்புல், முருங்கை, வெண்குன்றி, செங்குன்றி, கருங்குன்றி, கோற்பாலை, அமுக்கிராங்கிழங்கு, கடம்பு, அழிஞ்சில், அத்தி, ஆதொண்டை, கார்போகிப்பூண்டின்வேர், ஆடாதோடை, செம்மணித்தக்காளி, புன்கு, வட்டத்திருப்பி, மிளகரணை, முதியார்கூந்தல், தண்ணீர்விட்டான்கிழங்கு, நொச்சில், பருந்துமட்டி, கொடிவேலி, கழுதைப்பாலை, நிலக்காளான் என்னும் வேர் கிழங்குகள் (45-யும்) மெல்லிய துகளாக இடித்து வகை 1-க்கு பலம் 16-ஆக நிறுத்து ஒரு பெரிய பாண்டத்தில் கலந்து கொட்டி இச்சூரணத் தொகைக்கு எண் மடங்கு என்கிற 144-படி சலம் விட்டெரித்து (8-ல் 1 என்கிற 18-படி) ஆக வடித்த கஷாயத்தில் சந்தனக்கஷாயம் (படி 1-ம்) உழுந்துக்கஷாயம் (படி 1-ம்) கொள்ளுக்கஷாயம் (படி 1-ம்) விடுப்பாயாக. இனி இதில் விடுகிற சாறு வகையைச் சொல்லுவாம், எ-று.

இங்ஙனம் விவரம் கூறியிராத குடிநீர்களின் விதியைப் பாயி ரத்துள் 32-வது செய்யுளிற் காண்க. (72)

இதுவுமது

விருத்தம்

விடமரக் கனிமுருக் கத்திதந் தந்தின்முனை
வீழிசங் குத்தாமணி
வேளைசுசி பசுநிசி முருங்கைகை யான்பாகல்
வேம்பவுரி நொச்சிமத்தம்
பொடுதலை தராய்மேனி சுந்தரி பரிக்கந்தி
புளிமருட் பீர்க்குவாசை
புனர்நவ மரிக்காந்தி தழைசிக் குவைசதா
புட்பிதரு பூவோடவிலை
குடமதிற் றழைமுறுக் குக்களிக ளிரதமுங்
கூறியவைங் கீரங்களுங்
கூறியவெ ணுற்பதொவ் வொன்றுபடி யொன்றுநற்
குமிகைநெய்ச் சிவமிவையுடன்
விடுகரஞ் சங்குலி கநாகமே ரண்டமயில்
வேம்பண்ட முயிறுபூவேர்
விண்டதை லங்கணவ மரையரைப் படியெணினி
விள் ளுதுங்க கற்கமுறையே.

(இ-ள்.) எட்டிப்பழம், எலுமிச்சம்பழம், முள்ளங்கிக்கிழங்கு, பசுமுன்னை, விழுதி, சங்கின் இலை, உத்தாமணி, நல்வேளை, கொடிவேலி, பச்சைமஞ்சள், முருங்கை, கையாந்தகரை, பாகல், வேம்பு, அவுரி, நொச்சில், ஊமத்தை, பொடுதலை, தரா, குப்பைமேனி, சிறு செருப்படை, அசுவகந்தியிலை, புளியிலை, பேய்ப்பீர்க்கு, ஆடாதோடை, வெள்ளைச்சாரணையிலை, விஷ்ணுகாந்தி, தழுதாழை, தண்ணீர்விட்டான்கிழங்கு, எருக்கம்பூ, எருக்கின் இலை, சதுரக்கள்ளி, வேலிக்கள்ளி, இலைக்கள்ளி, திருகுக்கள்ளி என்னும் (35) விதச் சாறுகளுடன், எருக்கு ஆதி திருகுக்கள்ளி அந்தமாயுள்ள ஐவகைப்பால்களுங் கூடிய தொகை (40-ம்) வகை 1-க்கு (படி-1) நல்லெண்ணெய் (படி-4) இவையுடன் புன்கு, இலுப்பை, புன்னை, ஆமணக்கு, மயில், வேம்பு, கோழிமுட்டை, முசிறுமுட்டை, பூநாகம் என்னும் இவ் (9) நெய்யும் வகை 1-க்கு (படி-½) ஆக சேர்க்கவும். இனி கற்கவகையைச் சொல்லுவாம், எ-று. (73)

இதுவுமது

விருத்தம்

முட்டிவித் தோமமிரு நிசிகரிக் கணவேணி
முக்கடு விளங்கமதுர
முச்சீர கங்கடுபி வெள்ளுள்ளி கச்சோர
முப்பலை நறுக்குமூலங்
குட்டமகி றில்லக முருதிகூ டாலமிசி
குங்குலுசு வல்லிகடுகை
குங்குஷ்ட மதிவிடை யரத்தையு பயத்தருகு
பேரிகைவ சந்தமலர்மஞ்
சிட்டிமா மிசிசந்நி நாயகஞ் சவ்வியஞ்
சிங்கிமருள் கடுகுகாயஞ்
சிறியதேக் குயர்நாவி யிந்தைநதி லவணமாண்
சிகியினெச் சம்பூலதை
கட்டுருக் கொடிநெடிய பசியகட் செவிசர்ப்ப
கண்டமைம்பா றெடெட்டுங்
கஃசுபய முபயமுற் சுரசமிழை யிட்டெலாங்
கலவல்சொடு தாழியுளிடே.

(இ - ள்.) எட்டிவிதை, ஓமம், மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், யானைத்திப்பிலி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், அதிமதுரம், சீரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், வாலுழுவை யரிசி, வெள்ளைப்பூண்டு, கிச்சிலிக்கிழங்கு, கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய், திப்பிலிமூலம், கோஷ்டம், அகில், வெள்ளி லோத்திரம், ஆயிற்பட்டை, சணப்புவிதை, சதகுப்பை, குக்கில், கார்போகிவிதை, கடுகுரோகணி, குங்குஷ்டம் அதிவிடையம். சன்னராஷ்டம், தேவதாரம், சரளதேவதாரம், வட்டத்திருப்பி, லவங்கம், மஞ்சிட்டிவேர், சடாமாஞ்சில், சங்கிநாயகம், செவ்வியம், கடுக்காய்ப்பூ, மருட்கிழங்கு, கடுகு, பெருங்காயம், கண்டுபா ரங்கி, கஸ்தூரி, இந்துப்பு, கறியுப்பு, வெடியுப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, மண்ணுப்பு, ஆண்மயிலின் எச்சம், பூநாகம், காக் கையின் பிச்சு, பச்சைப்பாம்பினது பிச்சு, சர்ப்பகண்டம் என் னும் கற்கதிரவியம் (58-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{2}$) ஆக நிறுத் திடித்து முற்கூறிய எட்டிப்பழச்சாற்றினுல் கலக்க அரைத்துக் குடிநீரில் கரைத்து சுரசங்களும் எண்ணெய்களும் ஒன்ருகக் கலந்து வாயகன்ற தைலபாத்திரத்திற் சேர்க்கவும், எ-று.. (74)

இதன் மகிமை

விருத்தம்

தாழியிட்டு மணவையிட் டைந்தா நாள் வாங்கித்
தைலமன்றே பெருமுட்டித் தைல மித்தை
யூழியிட்ட விணையகற்றி நசியஞ் செய்வ
ளூறக்குத்து கலிக்கமுந்தீட் டுண்மீ திற்பூ
சாழியிட்ட தனுஸ்தம்பஞ் சந்நி பாத
மைவலிதோ ஷம்பேரா வனில சாலம்
பூழியிட்ட கழுதுமுத லாம்பன் னேயும்
புலிமுனெதிர் மான்கூட்டம் போலா மன்னே.

(இ-ள்.) முறைமைப்படி அடுப்பின்மிசைவைத்த தாழி என்கிற தைலபாத்திரத்தில், இச்சேர்மானங்களை யெல்லாம் ஊற்றி விநாயகபூசைசெய்து பொருந்திய விறகினால் மெதுவுற எரித்து இடைவிடாமல் துழாவி (5-வது) நாளில் பாகங்கண்டு வடிகடத்தில் வடிப்பாயாக; விஷமுட்டித் தைலங்களுக்குள் இதுவே மகா விஷமுட்டித் தைலமாம். இதை சீலமண்செய்து நெற்புடத்தில் ஒருமாதம் வைத்தெடுத்து தைலபூசையும் கருமசாந்திகளுஞ் செய்வித்து, இதைத் துளிக்கணக்காக நாசிகளுக்கும் செவிகளுக்கும் விட்டு கலிக்கமுந்தீட்டி ஸ்நானமுஞ்செய்து வெற்றிலையில் தோய்த்து உள்ளுக்குங்கொண்டு சரீரமெல்லாம் பூசித் துவாலையும் இடில், சக்கராகிரிதியாக வளைக்கின்ற தனுஸ்தம்பவாதம் சந்நி பாதம் அமரகண்டம் குமரகண்டம் பிரமகண்டம் காக்கை முயல் என்னும் (5-வித) வலிகள், தோஷங்கள், சிகிச்சைக்கடங்காத மகாவாத கூட்டங்கள், பைசாசம் பில்லி சூனியம்முதலிய பற்பல ரோகங்களும் பெரிய புலியின்முன் சிக்கிய மான்கூட்டங்கள் போலாம், எ-று. பத்தியம் பாயிரத்திற் காண்க. (75)

சிறியவிஷமுட்டித் தைலம்

விருத்தம்

மதுகவடி யவ்விதைமும் முட்டி புங்கி
மஞ்சளிரண் டாரமிரண் டோம மேனி
மைசாட்சி புலியுபய நொச்சி புன்கா
மணக்காயி லிருகோபி யிருப கஞ்சாய்
முதிரைபுளி செம்முள்ளி நீலி மாட
முன்னைகழ லிருநிம்ப மேடக் கோடு

முதியகுழ வறுகெருக்கு தேண்மு ருங்கை
முடக்கற்ருன் றூதுவளை பருங்கு றிஞ்சி
சதபுட்பி துஸ்பரிச முண்டி வீழி
சங்கரத்தை வாராகி காக மாசி
சல்லியமுத் தாமணிசொத் தான்ப ருத்தி
தசமூலம் வாசைபிரா யமிர்தை தேக்கு
கதிரமனல் வீரைதரா வழுக்கை வாகை
களாவிழுது பற்ணேமயூ ரம்பா வட்டை
காசமர்த்த கம்மெழுபா ஞேடொன் பானிக்
கணமீரைம் பலம்வகைக்கோர் கடத்தி டாயே.

(இ-ள்.) எட்டிவேர் அதன்விதை, பேராமுட்டி, சிற்ரு முட்டி, நாகமுட்டி, முட்காவேளை, கப்புமஞ்சள், கஸ்தூரிமஞ் சள், நற்சந்தனம், செஞ்சந்தனம், ஓமம், குப்பைமேனி, மைசாட்சி, வேங்கைப்பட்டை, வெண்ணொச்சில், கருநொச்சில், புன்கு, ஆமணக்கு, ஆயில்மரத்தின்வேர், பெருநன்ஞரி, சிறுநன்ஞரி, வெண்காக்கட்டான், கருங்காக்கட்டான், கோரைக்கிழங்கு, கொள்ளு, புளியமரத்தின்வேர்ப்பட்டை, செம்முள்ளிவேர், அவுரி, உழுந்து, முன்னைவேர், கழற்கொடிவேர், வேம்பு, மலைவேம்பு: ஆட்டுக்கோட்டுப்பாலை, குதிரைவாலிப்பூண்டு, அறுகம்வேர், எருக்கம்வேர், தேட்கொடுக்கின்வேர், முருங்கைவேர், முடக்கற் ருன், தூதுவளை, பெருங்குறிஞ்சிவேர், சதகுப்பை, சிறுகாஞ் சொறிவேர், கொட்டைக்கரந்தை, வீழி, முட்சங்கு, சன்னராஷ் டம், நிலப்பனை, மணித்தக்காளி, செவ்வியம், வேலிப்பருத்திவேர், கொத்தான், பருத்திவேர், தசமூலம், ஆடாதோடை, பிராய்மரத் தின்வேர், சீந்தில்வேர், கண்டுபாரங்கி, கருங்காலிவேர், சித்திர மூலம், வட்டத்திருப்பி, தராய், பிரமியவழுக்கை, வாகைவேர், களாவிழுது, தண்ணீர்விட்டான்கிழங்கு, நாயுருவி, பாவட்டை, பெரும்புல் என்னும் (79) சரக்கும் வகை 1-க்கு (பலம்-10) ஆக உரலிலிட்டு நன்ருக இடித்து அலங்கரித்த குடிநீர்ப்பாண்டத்தில் சேர்ப்பாயாக, எ-று. (76)

இதுவுமது

விருத்தம்

இருதொகைக்கெட் டம்பலஷ்தைச் சோட சத்தொன்
றிருத்தாதிக் கனிச்சாருப் பாலெண் ணேய
மியவானி முதிரையுழுந் துதக மூல
மிவைநான்கின் குடிநீரோ டேழுந் தத்தம்

படியுபயஞ் சேர்த்திதிற்குங் குமம்பி சந்திப்
பலித்துவயஞ் சீரகத்துவஞ் சந்தகினெய் தன்முப்
பலையுசிர மஞ்சிட்டி சாதுர் சாதம்
பருங்காய்ங் குட்டிலவங் கஞ்சா திக்காய்
கடுகிரண்டு பலினிவிளங் கந்தக் கோலங்
கத்தூரி யோமமுடக் கற்ருன் வேளை
கருவேம்ப ரேணுகங்கைச் சோரம் வாலு
கம்மகா கோளிமகி ழம்பூ முப்பா
னெடுசரக்கே ழாம்வகைக்குக் க ற்ப லங்காண்
குறமுதற்கு வாதமிழைத் தொன்று றச்செய்
துமைமகிழ்நன் றணையனடி யேத்தி யங்கி
யூட்டிவடித் தொருமதிநெல் லுறவை வாங்கே.

(இ - ள்.) மேற்சொல்லிய குடிநீர்ப்பாண்டத்தில் சேர்த்த வேர் முதலிய சரக்குகளின் மொத்தத் தொகைக்கு (8-பங்கு) சலம் விட்டு (16-ல்) ஒரு பங்காகக் குறுக்கிய கஷாயத்தில் தைல பாத்திரத்தற் வடித்து, அதில் எட்டிப்பழச்சாறு பசுவின்பால், நல்லெண்ணெய், ஓமக்கஷாயம், கொள்ளுக்கஷாயம், உழுந்துக்கஷாயம், தண்ணீர்விட்டான்கிழங்குக் கஷாயம் என்னும் (7-ம்) வகை 1-க்கு (படி-2) ஆக சேர்த்ததில் குங்குமப்பூ, தாமரைவளையம், திப்பிலி, யானைத்திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், சந்தனம், அகில், செங்கழுநீர்க்கிழங்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், விலாமிச்சு, மஞ்சிட்டி, சாதுர்சாதம், பெருங்காயம், கோஷ்டம், லவங்கம், சாதிக்காய், கடுகு, வெண்கடுகு, நாணற்ருது, வாய்விளங்கம், தக்கோலம், கஸ்தூரி, ஓமம், முடக்கற்ருன்வேர், வேளைவேர், கருவேப்பிலைவேர், காட்டுமிளகு, கிச்சிலிக்கிழங்கு, மணலிப்பூண்டின்வேர், மகாகோளி மகிழம்பூ என்னும் கற்க திரவியம் (37-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) ஆக நிறுத்து முற்கூறிய குடிநீரால் அரைத்துக் கரைத்து, விநாயகரைப் பூசித்து விதி போற் சிறுக எரித்துப் பதத்தில் வடித்து நெற்புடத்தில் ஒரு மாதம் வரையில் வைத்து எடுத்துக் கொள்வாயாக, எ-று. (77)

இதன் மகிமை

விருத்தம்

வாங்கருஞ் சிறிய விடமுட்டித் தைல
வாசமுட் சிரைகளிற் கமழச்
சாங்கம தாயவ் விடங்களிற் றெட்டுத்
தடவிமெல் லெனப்பிடித் துருவ

164431

வோங்கட லூருத் தம்பமா க்ஷேப
முதாவர்த்தந் தினந்தொறும் பகலிற்
றூங்கிய நிபத்தால் வரும்பல மருத்துஞ்
சுடரணும் புகையெனச் சொல்லே.

(இ - ள்.) புடந்தீர்த்தெடுத்த இந்த அருமையான சிறிய விஷமுட்டித் தைலமணமானது, உள்நரம்புகளில் ஏறும்படி நோயிருக்கின்ற இடங்களில் இதைத் தொட்டுத் தடவி மிருதுவாக வுருவிப் பிடிக்கில், வலியுள்ள ஊருஸ்தம்பவாதமும் பாதாக்ஷேபகவாதமும் உதாவர்த்தவாதமும் * பகல் நித்திரையால் வருகின்ற பற்பல வாதரோகங்களும் தீபம் அணுகிய புகையைப் போலாம், எ - று. (78)

லகுவிஷமுட்டித் தைலம்

விருத்தம்

தைலமிரு படிபாநாள் வெள்ளைப்பா விட்டுத்
தங்கெட்டி விதைச்சீவ லுரிதிரியா யிற்றூற்
பயிலுமவற் றுதிநடு வையரையை யரைகாண்
பக்கலொன்று மூவரையாம் பலமிடுகைப் பாகங்
குயிலுவதென் னவைசிவக்கும் பருவமுணர்ந் திறுத்துக்
குடிவழியா யுறுங்கன்மக் கொடும்பாவ மகற்றி
வெயிலிலிட்டப் பிப்பிடிக்கக் கனவாதக் குழுப்போ
மிக்கிலகு விடமுட்டி மென்றைல மிஃதே.

(இ - ள்.) ஒரு தைலபாத்திரத்தில், நல்லெண்ணெய் (படி-2) விட்டு அதில் வெள்ளாட்டுப்பாலில் (30) நாழிகை ஊறிய எட்டிக் கொட்டைச் சீவல் (பலம்-$2\frac{1}{2}$-யும்) உரித்த வெள்ளைப்பூண்டுத்திரி (பலம்-$2\frac{1}{2}$-யும்) ஆயில்பட்டைத்தூள் (பலம்-$1\frac{1}{2}$-யும்) ஆக சேர்த்து எரிக்கக் கைபாகம் சொல்லவேண்டுவதொன்றுமில்லை. அந்த மூன்று சரக்குகளும் சிவந்த பக்குவம் அறிந்து வடித்து வைத்துக் கொண்டு, கோத்திரவழியாய் வராநின்ற கருமத்தைச் சாந்தி செய்து இதை வெயிலில்வைத்து மேலிற்றடவிப் பிடிப்பையாகில், கனத்த வாயுவின் கூட்டமெல்லாம் விலகும். இதுவே மிகவும் லகுமுறையான விஷமுட்டித் தைலமாம், எ-று. (79)

---

* பகல் நித்திரையின் குணத்தை "பதார்த்தகுண சிந்தாமணி"யிற் காண்க.

விரணசஞ்சீவித் தைலம்

விருத்தம்

காற்புத்தி யோரை நீயோர் காசென மதித்துக் கிட்டாக்
  கனிக்கொட்டை யரிபி றப்பைக் கண்டரை நறுக்குச் சேரு
நூற்புத்தி யொடுவாற் கிண்ண நூவுநெய்த்தொடிப திற்றுண்
  ணேற்றெரி கழுநீரப்புண் ணுண்மையாய்ச் சாய்த்துக் காய்
மேற்புத்தி என்கொலங்க விரணங்கண்முழுதுந்தீர்த்த[ச்சின்
  வேதியர் தமையுள் ளாத விலங்கின ரினமு நோயி
ணுற்புத்தி ராதி யோடே நாளுக்கு நாட்டேய் வுற்று
  நமபுரத் தேகு வார்போ ளுட்டைவிட் டேகு மாதோ.

(இ-ள்.) வாற்கிண்ணம் என்கிற நீண்ட காம்பையுடைய அகலக் கரண்டியில் நல்லெண்ணெய் (பலம்-10) விட்டு அதில் பொடிசெய்த தாளகம் காசிடை (1-ம்) இரண்டிரண்டாக நறுக்கிய சேராங்கொட்டை (10-ம்) சேர்த்து இவற்றின் சத்துக்கள் அந்த எண்ணெயில் இறங்கும்படிக்குக் கைபாகத்துடன் மிருதுவாக எரித்ததைக் கழுநீரும் சுத்தசலமும் சமமாகக் கலந்து நிறைத்து வைத்திருக்கிற வாயகன்ற தாழியில் ஊற்றி, மறுநாள் வார் யெண்ணெய் வழிப்பதுபோல் பழகிய பாண்டத்தில் வழித்து மறுபடியும் அதைக்காய்ச்சி வடிக்கட்டிக் கொள்வையாகில், ஒருவரிடத்தில் யுத்திகேழ்க்க வேண்டுவதென்ன தேகவிரணங்கள் முழுவதும், நோய்தீர்த்த ஆயுள் வேதியரை நினையாத மிருகத்திற்கு ஒப்பாகிய மானிடக்குடும்பம் முற்றும் நாளுக்குநாள் நசித்துப் புவியைவிட்டு நமபுரத்திற் செல்லுதல் போலாம், எ-று. (80)

இதன் மகிமையும் விநியோகமும்

விருத்தம்

மாதவத்தா லித்தைல மமையி ளுக
  வல்லியிற்றேய்த் தருந்துசந்நி வருக்கந் தீரு
மோதகமிட் டலிபுரா தனத்தொன் றேனு
  மூரிமங் கல்லியத்தான் மோட்டைத் தூர்த்து
மீதிறகா லுதயமப்பி யாமப் பின்னர்
  மென்கலிகை யரைப்பிட்டு வெச்சு நீராட்
டேதமிலை யெழுதிவச மிவ்வண் ணஞ்செய்
  யிதுவிரண சஞ்சீவி யிதயத் துன்னே.

(இ - ள்.) முன்புசெய்த நற்றவத்திளுல் இத்தைலம் பாகத்துடன் அமையுமாயின் இதை வெற்றிலேயில் தோய்த்துத் தின்ன ச் சந்நிபா தங்களெல்லாந் தீரும். விரணங்களுக்கோ வென்ருல், தோசை இட்டலி புரா தனம் இம்மூன்றில் ஏதேனும் ஒன்றை எருமைத்தயிரில் கலந்து பூர்த்தியாக வயிறு நிறையப் புசித்துப் பின்பு அந்த விரணங்களின்மேல் கோழியிறகைக் கொண்டு மேற்படி தைலத்தை உதயகாலத்தில் தடவி ஒருசாமம் ஊறிய பின்பு உசில் அரைப்பிட்டு இளவெந்நீரிஞல் குளிர்ப்பிக்கவும் இவ்வாறே ஏழுநாள் நடத்துவையாகில், விரணங்களின் துன்பம் ஒன்றுமில்லே. இது விரணசஞ்சீவி என நினைக்கக்கடவை, எ-று. (81)

அஜபஞ்சக தைலம்

விருத்தம்

வெள்ளைப்பஞ் சகஞ்சயில வேம்பின்சா றெண்ணெய்
வெவ்வேறு காலேழும் விரவுமுக்க டரிட்டை
தொள்ளைக்கீ டப்பகைகண் டீரைகணு மூலந்
தோகைமுக பூடணமூன் றரைப்பலங்காண் வகைக்குக்
கொள்ளைப்பூந் துகட்படுத்திப் பத்துமிட்டட் டிறுத்துக்
குடிநாசிக் கிடுபூசிக் குளியூரப் பிடியோர்
நொள்ளைக்கட் காக்கைமுத லேவலியுன் மாத
நோயகலு மிஃதஜபஞ் சகதைல நுவலே.

(இ - ள்.) வெள்ளாட்டினது பால், தயிர், நெய், சாணிப்பால், மூத்திரம், மலேவேப்பிலேச்சாறு, நல்லெண்ணெய் என்னும் (7-ம்) வகை 1-க்கு மரக்கால்-1 ஆக ஒரு பாத்திரத்திற் சேர்த்து சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, வாய்விளங்கம், செவ்வியம் திப்பிலிமூலம், தோகைமுகபூஷணம் மூன்று என்கிற மஞ்சள், மரமஞ்சள், க்ஸ்தூரிமஞ்சள் என்னும் கற்கதிரவியம் (10-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{2}$) ஆக நிறுத்திடித்து மிகவும் மிருதுவாக வஸ்திரகாயஞ் செய்து அதில் கொட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு, காலேயில்மாத்திரம் ஒரு சிறுகரண்டிவீதம் நீ சாப்பிடு, நசியம்பண்ணிக்கொள், தேகமுழுதும்பூசி அப்பியங்கனஞ்செய், நரம்புகளில்ஊறும்படிக்கு தடவிப் பிடிப்பித்துக்கொள், இவ்வாறு செய்யில் வக்கிர பார்வையையுடைய காக்கைவலி முதல் (5-வித) வலிகளும், உன்மாதரோகமும் நீங்கும். இதனை அஜபஞ்சக தைலமென மொழியக் கடவை, எ-று. (82)

பீநசத் தைலம்

விருத்தம்

எண்சுரசஞ் சாலேயிம்மூன் றிரதமொன்றிற்
கிருபடிகா ணிந்த ரத்தை
யுண்சரமா மணக்குடசந் தகரமத
கங்கோட்ட முதக சுத்தி
யண்சதபுட் பிகைவிளங்க மதுரமுன்னுன்
கரைப்பலம்வெள் ளாப்பா லாட்டட்
டெண்சதுநாட் கொருமுழுக்கு நசியமுஞ்செய்
பீநசநோய்க் கியமன் மன்னே.

(இ-ள்.) நல்லெண்ணெய், நொச்சிச்சாறு, கரிசாலேச்சாறு இம் (3-ம்) வகை 1-க்கு (படி-2) ஆக ஒரு பாண்டத்தில் விட்டு இந்துப்பு, சிற்றரத்தை, திப்பிலி, ஆமணக்கின்வேர், பாலேமரத்தின்வேர், கிரந்திதகரம், சுக்கு, கோஷ்டம், தேற்றங்கொட்டை, சதபுட்பி, வாய்விளங்கம், அதிமதுரம் என்னும் கற்கதிரவியம் (12-ம்) வகை 1-க்கு (பலம்-½) ஆக நிறுத்ததை வெள்ளாட்டுப் பாலால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு (8) நாட்கொருகால் ஸ்நானமும் (4) நாட் கொருகால் நசியமும் செய்துகொள்வையாகில் பீநசநோய் விலகும். பீநசரோகங்களுக்கு இத்தைலம் காலனும், எ-று. (83)

மெருகுப்பச்சைத் தைலம்

விருத்தம்

அவித்தூற்றிய முத்தவி நாற்படி யறற்போக்குலக்
கைப்பொடி யோர்படி
புவிப்பாத்திரத் திட்டரி மண்டலம் புதைத்தேற்றல
ருந்திய ருந்தழக்
கவிக்காச்சிய முப்பும்பு ளிப்பும்விட் டடுக்காவர
சம்மொலி குன்மமுட்
கவிச்சாற்றுத ரப்பிணி வர்க்கமுங் கருக்காமெரு
குப்பச்சை நெய்யிதே.

(இ-ள்.) புவிப்பாத்திரம் என்கிற மண்பாண்டத்தில் வேக வைத்து ஊற்றிய சிற்றாமணக்கு நெய் (படி 4-ம்) மெருகன்கிழங் குச் சூரணம் (படி 1-ம்) சேர்த்து இப் பாத்திரத்திற்குச் சீலேமண் செய்து ஒரு மண்டல நாள்வரையில் நெற்புடம் வைத்தெடுத்துக்

கொண்டு இதை இராப்போஜனஞ் செய்தபின்பு ஆழாக்கு என்கிற (2½-பலம்) அளவையாக இருபதுநாள் வரையில் நெய்யும் உப்பும் புளிப்பும் நீக்கிக் குடிக்கில் மூலம், மூலவாதம், குன்மம், உட்கவிச்சு மகோதரம் என்னும் பிணிகள் நெருங்காவாம். இது அனலிற் காய்ச்சாத மெருகுப்பச்சைத் தைலமாம், எ-று. (84)

ஆதொண்டைத் தைலம்

விருத்தம்

சால விருட்சோ தகமூலந் தந்த
 சடநா ரங்கோட்டை
தபனற் கஞ்சி பலண்டாறுஞ்
 சாறு வகைக்கோ ருரியளவாங்
காலை யடக்குந் தலரூப கத்தி
 னவியங் கரைப்படிகாண்
கறிக்கா யிருசீ ரகம்வசம்பு காயஞ்
 சுரமெண் ணிருகழஞ்சாங்
கீல வுருவிங் கொருகழஞ்சாக் கிளரி
 மேனிச் சாற்றிலிழை
கிழித்தே யருந்துந் தகடுகுன்றிக் கிசலந்
 துவிபாக் களவரைசே
ரேல விளாவி யெரித்திடுச்சிக் கிடுமுத்
 திவசந் தரித்துமுழு
கெறுழா தொண்டைத் தைலமிஃ திடிக்குந்
 தலைநோய்க் கிடியாமே.

(இ - ள்.) ஆதொண்டையின் பச்சைவேர், எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், இஞ்சி, பசுமஞ்சள், வெங்காயம் என்னும் (6) வகை ரசமும் வகை 1-க்கு (ஒரு உரியும்) சிற்றாமணக்கு நெய் (படி-½-யும்) ஆக ஒரு பாத்திரத்தில் விட்டு மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், வசம்பு, வெள்வெங்காயம் என்னும் கற்கவகை (5-ம்) வகை 1-க்கு கழஞ்சி (2-ம்) பெருங்காயம், கழஞ்சி (1-ம்) நிறுத்து அவைகளைக் குப்பைமேனிச் சாற்றாலரைத்த விழுதையும், கம்மாறு வெற்றிலை, பவளக்குன்றித்தளிர் இதுகளைத் தனித்தனியே கொட்டைப்பாக்கு அளவாக அரைத்த விழுதுகளையும் அதிற் கரைத்துக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, இதிற் கொஞ்சம் எடுத்து உச்சந்தலை நனையும்படிக்கு (3) நாள் பூசிப்பூசி வைத்திருந்து (4-வது) நாளில் ஸ்நானஞ் செய்வையாகில், இடிப்புடன்

வருகின்ற சிரஸ்தாபரோகம் என்கிற தலைநோய்களுக்கெல்லா ந. பலமுள்ள இந்த ஆதொண்டைத் தைலமே ஒரு இடியேறும், .எ-று.

சம்பீரத் தைலம்

விருத்தம்

தந்தசடச் சாறுபடி நான்கெண்ணெய்
யொன்றகினெய் தற்சாதிக்காய்
சந்தமர மஞ்சளொலி யட்டவர்க்க
மப்பணிவேர் தகரம் பூரஞ்
சிந்தவிதைத் தோலிரத்தங் கோலமே
கப்பிணியெண் டேர்கான் முட்டி
முந்தணுவா யிடட்டிமுழு கிச்சாபத்தி
யந்தலைநோய் முயற்கோ டாமே.

(இ - ள்.) எலுமிச்சம் பழச்சாறு (படி-4-ம்) நல்லெண்ணெய் (படி-1-ம்) ஒரு பாத்திரத்திற் சேர்த்து, நெய்தற்கிழங்கு, சாதிக்காய், சந்தனம், மரமஞ்சள், கோஷ்டம், அட்டவருக்கம், யானைத் திப்பிலி, வெட்டிவேர், கிரந்திதகரம், பச்சைக்கருப்பூரம், புளி விதைத்தோல், குங்குமப்பூ, தக்கோலம் என்னும் கற்கதிரவியம் (21-ம்) வகை 1-க்கு (பலம்-$\frac{1}{4}$) ஆக நிறுத்தவைகளைப் பசுவின் பாலா லரைத்துக் கரைத்து எரித்து வடித்து (4) நாட் கொருகால் ஸ்நானஞ் செய்து இச்சாபத்தியமாக இருப்பையாகில், தலை நோயானது முயலின் கொம்பைப்போலாம், எ-று. முயலுக்குக் கொம்பு இல்லாததுபோல, தலைநோயும் இல்லை என்பது கருத்தாம். (86)

சிறியசம்பத் தைலம்

விருத்தம்

அரைப்படியெண் ணெய்க்கருணச் சாறுபடி யிரண்டூற்
றழிஞ்சில்விதை கோட்டமிள கார்த்திரக நான்கி
லுரைப்படிமுன் னிரண்டும்வகைக் கிருகழஞ்சா மற்ற
துபயமுப யந்தொடியீ ருளிச்சாறே ருழக்கு
ளரைப்படியை யிமுக்கவரைத் திட்டெரித்துத் தலைக்கிட்
டாடுசதுர் நாட்கொருகா லரைப்புமுற்கப் பருப்பாந்
தரைப்படியு நாசிநீர்ப் பாய்ச்சறலை நேரயுஞ்
சாராவாஞ் சிறியசம்பத் தைலமிதன் பெயரே.

(இ - ள்.) நல்லெண்ணெய் (படி-$\frac{1}{2}$யும்) எலுமிச்சம்பழச்சாறு (படி-2-ம்) ஒரு பாத்திரத்திற் சேர்த்து அழிஞ்சில்விதை, கோஷ்

டம் (2-ம்) வகை 1-க்கு கழஞ்சி (2-ம்) மிளகு, இஞ்சி (2-ம்) வகை 1-க்கு (பலம்-2-ம்) ஆக நிறுத்தவைகளை உழக்கு வெங்காயச் சாறுவிட்டுக் குழவியை அம்மி பிடிக்கும்படி நன்றாயரைத்து அதிற் கரைத்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு, (4) நாட்கொருகால் சிரசிற்குத் தேய்த்துச் சிறுபருப்பு அரைப்பிட்டு ஸ்நானஞ் செய்து கொள்வையாகில், பூமியை நனை யப் பண்ணுகிற நாசி நீர்ப்பாய்ச்சல் ரோகமும் தலைநோயும் அணுகாவாம் இதற்கு நாமம் சிறிய சம்பத் தைலம், எ-று. (87)

சம்பீரசமாதித் தைலம்

விருத்தம்

பழுத்துதிரும் பெரியசதா பலம்பத்தை நான்காய்ப்
    பத்தையிடா மணக்கவிபா கப்படியுண் முழுத்திக்
கொழுத்துயருங் குலிகத்தோற் பழத்தொடித்தூ ளானீர்
    கூட்டவிநே ரிவ்விரண்டுங் கூட்டியந்தக் குடத்தின்
கழுத்துதடுங் கரம்பச்சில் லிட்டுடையா டிச்சக்
    கரத்திட்டப் பெயர்நாட்பின் காற்பலங்காற் பலமுண்
வழுத்துலவைக் குளமுழுதுஞ் சிற்றுளிமுன் வரையாம்
    வழங்கலென்சம் பீரசமா தித்தைல வலியே.

(இ-ள்.) பழுத்துதிர்ந்த பெரிய (10) எலுமிச்சம்பழங்களை (4-4) பிளப்பாகப் பிளந்து ($\frac{1}{2}$-படி) ஆமணக்கு நெய்யில் இட்டு அதில் (10-பலம், இலுப்பைப்பட்டைத்தூளும் ($\frac{1}{2}$-படி) கோசல முஞ் சேர்த்து அக் குடத்தின் வாய்க்கு ஓடு மூடி அவ்வுதடும், கழுத்தும், மறையும்படி சீலைமண்செய்து பூமியிற் புதைத்து ஒரு மண்டல நாள்கழித்து எடுத்து வைத்துக்கொண்டு, காலையில் மாத்திரம் ஒரு பழத்தில், ஒரு பிளப்பும் ($\frac{1}{4}$-பலம்) தைலமும் உண்ணக்கடவை. இப்படியே ஒரு மண்டலஞ் சாப்பிட்டுப் பத்தி யத்துடன் இருக்கில், வாதரோகக் கூட்ட முழுவதும் சிற்றுளி முன். அகப்பட்ட மலையைப்போலாம், இந்தச் சம்பீரசமாதித் தைலத்தின் வன்மையை நாம் சொல்ல வேண்டுவதில்லை தானே சொல்லும், எ-று. (88)

கருஞ்செம்பத் தைலம்

நேரிசை வெண்பா

காரார் சயந்தியுளி காரெணிர தந்திரிநேர்
சேராவ டைம்பகறி னங்குளிமேற்—றீராத்
தலைநோய்க்குண் டாந்தலைநோய் சக்கொடுபு ரூரத்
துலைநோய்க்குண் டாமுலைநோ யோர்.

(இ - ள்.) கருஞ்செம்பையிலை, வெள்ளுள்ளி, கார்எள்ளு இம் மூன்றின் ரசமும் வேண்டியமட்டும், சமமாகவிட்டுப் பக்குவமாக எரித்த தைலத்தை நித்திய அப்பியங்கனமாக (5) நாள் செய்வை யாகில், தலைநோய்க்குத் தலைநோயும், நேத்திரம், புருவம் இவ்விடங் களைப் பற்றிய உபத்திரவங்களுக்கு உபத்திரவமுமாம், எ-று

இதனால் தலைக்குத்தலும் கண்ணோயும் புருவவலியும் தீரும் என்பதாம். (89)

சிலைத் தைலம்

விருத்தம்

கிடியவியையங் குடுப்பமதி லரசுதிமை
 யுடைநெல்விக் கிளரின் பூரற்
றெடிவகைகட் கிருமையந்தி னதளிரதம்
 புங்குறும்பாற் றெடியோர் வீதப்
படியிலிங்கங் களிகாய்ச்சுக் கட்டிமுட்டி
 மூன்றிடுமுப் பகலூ றச்செய்
வடியெரித்துப் புரையிரண வினங்களறுஞ்
 சிலைத்தைலம் வழுத்தி னமே.

(இ - ள்.) பன்றிநெய் (பலம்-20) ஒரு பாண்டத்திற் சேர்த்து அதில் அரசு, உதி, வேல், நெல்லி, செம்புரா என்னும் (5) பட்டை களின் சாறும் வகை 1-க்கு (பலம்-2-ம்) புங்கம்பால் (பலம்-2-ம்) விட்டு சாதிலிங்கம், களிப்பாக்கு, காய்ச்சுக்கட்டி என்னும் கற்க திரவியம் (3-ம்) வகை 1-க்கு (பலம்-1) ஆக நிறுத்துப் பொடித்து அதிற்போட்டு (3) நாளூறியபின்பு (4-வது) நாள் அடுப்பில் வைத்து மிருதுவாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு பூசினால், புரையோடிய விரணக் கூட்டங்களெல்லாம் ஆறிப்போம். சிலைத் தைலவிதியைப் புகன்றோம், எ-று. (90)

கண் தைலம்

கட்டளைக் கலிப்பா

சீன நற்றிரி ரத்தமு ரோசனஞ் சிகர மைந்திரு
 நிட்கமொன் றென்றெலாம்
வான நாடயி லேயஞ் சுரசப் வகைக்கீ ராறு
 தொடிவிட் டிழைத்ததைப்
பானு வாட்டியத் தூளோ டிருபலம் பால கம்பிட்
 டரைத்தப்பி வெய்யில்வை
யூன மற்றிறங் குங்கண்டி யிலமீ தோர்து ளிக்கண்
 ணுறவிற் படலமே.

(இ-ள்.) படிக்காரம், தோலுரித்த வெள்ளைப்பூண்டு, குங்குமப்பூ, கோரோசனம், லவங்கம் என்னும் (5) சரக்குகளும் வகை 1-க்கு (வராகனிடை-2) ஆக நிறுத்தவைகளைப் பொன்னுங்கணிச்சாறு (பலம்-12-ம்) முசுமுசுக்கைச் சாறு (பலம்-12-ம்) ஒன்றின்பின் ஒன்றாக விட்டரைத்து உலர்த்திப் பொடிசெய்து இதில், கழுவிய எள்ளு (2-பலம்) சேர்த்தரைத்து அதை அரைத்த கலுவத்தின் உட்புற ஓரத்தில் அப்பி கடும்வெயிலில் வைக்க அதிலிருந்து கெடுதியில்லாத எண்ணெய் இறங்கும். அதை எடுத்துக் குப்பியில் பதனஞ்செய்யவும்; இதுவே கண் தைலமாம்; இதனை அந்தி சந்தி துளிகணக்காக வேண்டிய நாள் வரைக்கும் கலிக்கம் தீட்டில், படலமுதலிய நேத்திரரோகங்கள் இல்லையாய்விடும், எ-று. (91)

சிறுமாந்தத் தைலம்

விருத்தம்

ஆமண்டத் தவிப்படியொன் றறுகுதிரி
நிசியுசிலத் ததளிண் டைந்தும்
போமண்டத் தணுவினரை வகைக்கிரண்டு
பலங்கலிங்கப் பொடித்துண் டிட்டே
தீமண்டச் சதுக்கனியுஞ் சிவக்கில்வடி
யொருகஃசாச் சேய்க்கூட் டுள்ளே
* தா ¶ மண் ‖ டத் தலஜமுமெண்
சிறுமாந்தத் தைலமாந்தமுமிற் மீதே.

(இ-ள்.) சிற்றாமணக்குநெய் (படி-1) பாத்திரத்திற் சேர்த்து அறுகம்புல், வெள்ளைப்பூண்டுத்திரி, மஞ்சள், உசில்பட்டை, ஈயக்கொழுந்து என்னும் (5-ம்) வகை 1-க்கு (பலம்-2) ஆக நிறுத்தவைகளை ஆகாயத்திற் செல்லுகின்ற அணுவைப்போல் வஸ்திரகாயஞ்செய்த பொடியையும் (4) துமட்டிக்காய்களை நறுக்கிய சிறிய துண்டுகளையும் அதிற்போட்டுத் தீயெரித்து அத்துண்டுகள் சிவந்தபக்குவத்தில் வடித்துவைத்துக்கொண்டு, இதைக் குழந்தைகளுக்கு உதயகாலத்தில் (பலம்-$\frac{1}{4}$) ஆக புகட்டுவையாகில், வன்மையுள்ள மிருத்திகாபட்சண ரோகத்தில் வராநின்ற அவமிருத்துவும், மூவித அலஜரோகங்களும், எட்டுவித மாந்த ரோகங்களும் நீங்குவனவாம். இதுவே சிறுமாந்தத் தைலம் எ-று. (92)

---

* தா - வன்மையுள்ள ¶ மண் - மண்களை (தின்பதனாலுண்டாகும்)
‖ தத்து-அவமிருத்து.

வாதநாசத் தைலம்

விருத்தம்

சுரச மிந்திர வல்லி விழுதிசு
வேத மூலயுத் தாமணி பர்ப்பணந்
தோய பாணமிவ் வேழி ரதத்தொடு
சேர்சப் பாலிரத் தாகத் தமிர்தமுஞ்
சரிச ரிப்படி யாகத் துழாவுஞ்
சமயஞ் சுக்கு வசம்புநற் சீரகந்
தாரு பீதத் துவயம்வெள் ளுள்ளியுத்
தாம ணிச்சடி லத்தோ டிராமட
மரிசி கச்சபத் தோடொரு நிட்கமாம்
வகை வகைக்கொரு பானெடொன் றுஞ்சுதை
வார்த்தி ழைத்திட் டெரித்திறு தேற்றுவை
மாந்த நோயில் வருந்தி யயர்வொடு
வருசு தர்க்குத யஞ்சிறு பாலடை
வாரந் நோய்முழு துஞ்சுடர் பூச்சியாம்
வாத நாசத் தைலமி தைப்புவி
வாழ்த்து மாமத் தைலமென் றெங்குமே.

(இ - ள்.) நொச்சில், முடக்கற்ருன், வீழி, வெண்சாரணை, உத்தாமணி, பாவட்டை, பொடுதலை என்னும் (7) ரசமும் தேங் காய்ப்பாலும் சிற்றுமணக்கு நெய்யும் ஆக (9-ம்) வகை 1-க்கு படி-1 ஆக சேர்த்து அதில் சுக்கு, வசம்பு, நல்லசீரகம், தேவதாரி) கப்புமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, உத்தாமணி வேர், பெருங்காயம், மிளகு, ஆமையின்ஒடு என்னும் கற்க திரவி யம் (11-ம்) வகை 1-க்கு வராகனெடை 1-ஆக தெங்கின் பாலால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு மாந்தரோகத்திஞல் துன்பமடைந்து வராநின்ற பாலர் கட்கு உதயகாலத்தில் ஒரு சிறு பாலடைத் தைலம் புகட்டுவை யாகில் அந்தரோக முழுமையும் தீபத்தில் விழும் விட்டிற்பூச்சிக ளாம். இதுவே வாதநாசத் தைலமாம். இதனை ஆமைத்தைலம் என உலகத்தார் சொல்லுவார். எ - று. (93)

சிறுசந்தனுதித் தைலம்

அகவல்பா

சிறுசந்த னுதியெண்ணெய் செப்புதும் ஆயுளோர்க்கே
நறுமணச் சந்தக்காழை நானிலம் புகழாதித்தர்
பலங்கொண்டோ ரெருந்தேறிட்டுப் பலங்கொண்டங் கிடித்த
சலங்கடனவ் வேதாழி தலையடுப்பிட் டந்நீரின் [தூளிற்

முப்பங்கு மறவேயட்டு முடிவேர்க்கு மலைதேநின்ற
வப்பங்கு மப்பங்கும்மேய ரகழிபெய் ததற்பின்மற்ற
வேர்வகை சகுனமெல்லாம் விளம்புதுங் குடிநீர்க்கும்ப
ரூர்விலாமிச் சாவாரை யூனிமா லூரந்தொண்டி
மாதவ னுந்திக்கந்த மட்டஊ யெருவைதொட்டி
பூதலக் குருக்கண்மங்கை பொன்றிடா வல்லிநெய்த
வல்லிமூ லகநீர்வள்ளி யாமதிக்கலை யொவ்வொன்றிற்
கொல்லையாந் தொடிகாணம்பு பாயமாம் படியட்டிப்பின்
றனித்தனி நான்கிலொன்ருய்த் தாழியுட் பெய்துவீழி
யினித்தநற் ருளிமோகி யிளம்பெணிந் திராணிகாணி
கவிர்முடக் கற்ருன்காகக் கரிப்பனீர் வல்லியங்க
மவிழிலைச் சுரதந்திங்க ளாம்படி வகைக்கிறுத்துத்
தாழைநீர் கீரமெண்ணெய் சாற்றிய படியேயொன்ருய்த்
தாழியுட் கலக்குக்கற்கஞ் சாகஞ்செங் கழுநீர்காணி
தொண்டிசா யிருவேர்நெய்த றெட்டிநா ரியுந்துவர்ப்பா
மண்டிய சரக்கேலங்கொம் பரக்கிரு சந்தம்வேதி
கச்சோல மாஞ்சிற்பூழிற் கற்புரை தேவதாரம்
பச்சிலை யரியபச்சை பத்திரி காய்மயூர
மஞ்சிட்டி சண்பகப்பூ மதூத்தங்காஸ் மிரங்கற்சூரம்
விஞ்சிட்டி கபவிரோதி மிசிதக ரஞ்செவ்வள்ளி
இலவங்கம் பன்னத்தொக்கோ டியலுமா கமமுன்வேரு
நலமுறக் கூட்டின்முப்பா னுலிரண் டாமொவ்வொன்றிற்
குருவின்கா ரணமவராக னுணரிவை யெலாங்கேளி
தருதெளி நீராலாட்டித் தாழியிட் டாரன்மூட்டி
யுமையர னுருவமாய வோங்கலா னனஊவாழ்த்திக்
கமையுற வேமபுட்பிக் காட்டமிட் டெரியமைச்ச
னக்கினி யாதிவேந்த னக்கினி யந்தமாகக்
கைக்கிய மூழிகொண்டே கனலடிப் பற்ருவண்ண
மிடைவிடா மற்றுழாவி யிபமுகன் கரநாளந்த
நடுப்பதத் திறற்கடுத்த நற்கடத் தகமுடங்கன்
மலர்பரப் பிரத்தங்குட்டம் வச்சல மணிநகங்குய்
மலிவகை ராசியெண்வ ராகன்கம் புகமுரம்பாற்
பொடியிறைத் திருபிற்பச்சைப் புழுகுமுற் பொடியெண்டற்ப
மடிவிற்பே ருந்துாட்டுவி வாய்ச்சில்லிட் டக்கடத்தை
நன்றுற நெற்குள்வைத்து ஞாலத்தின் பெயர்நாண்முற்றுஞ்
சென்றபி னெடுத்துப்பாரு சிறுசந்த னுதியாமே.

(இ - ள்.) சிறிய சந்தனாதி என்னும் தைலமுறையை, ஆயுளை விரும்புவர்க்குச் சொல்லுகின்றோம். அதாவது, நல்ல மணமும் வயிரமுமுள்ள (12-பலம்) சந்தனக்கட்டையை நன்றாக இடித்துத் தூளாக்கிப் பாண்டத்தில் கொட்டி (12-மரக்கால்) சலம்விட்டு அடுப்பேற்றி (4-ல்) ஒன்றாகக் காய்ச்சி இவ்வாறே வெட்டிவேரையுங் காய்ச்சி இவ்விரண்டில் நின்றும் வடித்து ஓர் பாத்திரத்திற் சேர்த்த 6-மரக்கால் கஷாயத்தையும்—அதற்குப்பின், பொன்னுங்காணி, விலாமிச்சம்வேர், ஆவாரைவேர், அமுக்கிராங்கிழங்கு, வில்வவேர், தோன்றிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டிவேர், ஆலம்விழுது, கற்றாழைவேர், சீந்திற்கிழங்கு, நெய்தற்கிழங்கு, அல்லிக்கிழங்கு, வெற்றிலைக்கொடிவேர் என்னும் வேர் கிழங்குகள் (16-ம்) வகை 1-க்கு (பலம்-12) ஆக இடித்து நிறுத்துத் தனித்தனியே பாத்திரங்களிற் சேர்த்து வகை-1-க்கு (4-படி) சலம்விட்டு (4-ல்) ஒரு பங்காகக் குறுக்கிய கஷாயங்களையும்——விழுதி, தாளி, கஞ்சா, கற்றாழை, நொச்சில், பொன்னுங்காணி, முள்முருக்கு, முடக்கற்றான், கருங்கையாந்தகரை, வெற்றிலை என்னும் விரிந்த இலை (10-ம்) வகை-1-க்கு (படி-12) ஆக தனித்தனியே பிழிந்த ரசங்களையும்,——(12-படி) செவ்விளநீர் (12-படி) பசும்பால் (12-படி) நல்லெண்ணெய் என்னும் இவைகளையும் ஒரு தைலபாத்திரத்தில் ஒன்றுபடச் சேர்த்துக்கொண்டு அதில், —— சிறுகீரைவேர், செங்கழுநீர்க்கிழங்கு, பொன்னுங்காணிவேர், காந்தட்கிழங்கு, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சவேர், நெய்தற்கிழங்கு, சிற்றாமுட்டி, நன்னாரிவேர் என்னும் கந்தமூலம் (10-ம்) ஏலம், கொம்பரக்கு, வெண்சந்தனம், செஞ்சந்தனம், சகத்திரவேதி, கிச்சிலி, சடாமாஞ்சில், அகிற்கட்டை, சாம்பிராணி, தேவதாரக்கட்டை, பச்சிலை, வங்காளப்பச்சை, சாபத்திரி, சாதிக்காய், குரோசானியோமம், மஞ்சிட்டிவேர், சண்பகமொக்கு, சிறுநாகப்பூ, கொடிமுந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், சிற்றரத்தை, தாளிசபத்திரி, கிரந்திதகரம், செவ்வள்ளிக்கொடி லவங்கம், அதன்பட்டை மேற்படி பத்திரி என்னும் (28-ம்) கூடிய கற்கதிரவியத்தொகை (38-ம்) வகை-1-க்கு (வராகனிடை-12) ஆக நிறுத்தவைகளைச் செவ்விளநீரால் அரைத்துக் கரைத்து அடுப்பேற்றி அர்த்தநாரீச்சுர உருவமாகிய யானைமுக விநாயகரைப் பூசித்துக் கமலாக்கினி முதலிலும் தீபாக்கினி கடையிலும் ஆக ஆவாரைவிறகினால் பொறுமையுடன் எரித்து இருப்பு அகப்பையைக்கொண்டு கற்கத்தில் தீப்பிடிக்க ஒட்டாமல் இடைவிடாமல் துழாவி ஐந்தாவதுநாளில் சிக்குப் பாகத்திலிறக்கி, உள்ளே தாழம்பூப்பரப்பி

அதன்மேல் குங்குமப்பூ, கோஷ்டம், கோரோசனம், நாகணம், சாம்பிராணி என்னும் (5) சரக்கும் வகை-1-க்கு (வராகனிடை-12-ம்) அபின் உரம் இவ் (2-ம்) வகை-1-க்கு (வராகனிடை-6-ம்) ஆக பொடிசெய்து தூவப்பட்டிருக்கிற நல்ல வடிகடத்தில் இறுத்து அதன்மேல் பச்சைக் கருப்பூரமும் புனுகும் வகை-1-க்கு (வராகனிடை-6) கஸ்தூரி (வராகனிடை.1) இவைகளைச்சேர்த்து, அந்தப் பாத்திரத்திற்குச் சில்லிட்டு மூடி நெற்புடம் வைத்து ஒரு மண்டலநாள் கழித்தபின்பு எடுத்துப் பார்ப்பாயாக; இதுவே சிறு சந்தனாதித் தைலமாம், எ-று. (94)

தேய்த்தாடும் முறைமை

விருத்தம்

எடுத்தநற் றயில நாசிக் கீரிரண் டாறு காதுக்
கடுத்திடத் துளிவிட் டுச்சி யங்கந்தா ளடிகளிற்சூ [வெந்நீர்
டெடுத்திடாத் தேய்த்தூ றச்செய் திப்புறஞ் சிகைக்காய்
விடுத்தாட ஞடி நீரும் வியர்ப்புமற் றிடப்பு லர்த்தே.

(இ - ள்.) அவ்வாறு நெற்புடந் தீர்த்து எடுத்த நல்ல தைலத்தை மூக்குகளில் (4) துளியும், செவிகளில் (6) துளியும் பொருந்த விட்டுச் சிரசு அங்கம் உள்ளங்கால் என்னும் இவ்விடங்களிற் சுடுகை எழும்பாமல் தேய்த்து ஊறவைத்துப் பின்பு சிகைக்காய் அரைப்பிட்டுக் காய்ந்தாறிய வெந்நீரால் ஸ்நானஞ்செய்து உடனே அச்சலமும் வியர்வையும் நீங்கும்படி துவட்டி உலர்த்தவும், எ - று. (95)

இதுவுமது

விருத்தம்

புலர்த்திய பின்ப ருந்தும் போஜனந் தனிற்பு ளிப்பு
சலத்துறு ததிபால் பாகல் சாகமீ னிறைச்சி யச்ச
நிலத்தெழு பிரம பத்ரி நித்திரை மடவா ரின்னு
நலத்துரு வகைநீக் கிப்பின் னாளும்பத் தியத்து ணில்லே.

(இ - ள்.) இவ்வண்ணம் உலர்த்திய பின்பு புசிக்கின்ற போஜனத்தில், புளி, தயிர், பால், பாகல், இலேக்கறி, மச்சம், மாமிசம், அகத்திக்கீரை இவைகளை விலக்குவதுந் தவிர, புகையிலேயும் பகல் நித்திரையும் போகமும் இன்னும் நன்மை செய்யாத வகையையும் நீக்கி மறுநாளும் பத்தியத்துடன் இருக்கக்கடவை, எ - று. (96)

இதன் மகிமை

விருத்தம்

இந்தநற் றயில நாலுநாட் கொருகா லிட்டொரு
வருடமா டிடவென்
பெழுசுரந் தொடருங் கயமைச்சு வாச மிருமன்மூ
லம்பகந் தரங்காற்
றுந்திரோ கங்கா மாலையுன் மாதஞ் சோமரோ
கம்மத ரோகஞ்
சோபைபாண் டண்ட விருத்திபற் குட்டஞ் சோணி
தங் குன்மமா மூர்ச்சை
மந்தநோய் மூர்த்த நுதல்விழி நாடி வள்ளடி
நாக்களங் களினும்
வரும்பிணி யிவைபோ மென்றிடின் மற்றை வலியுள
வென்குவீர் துவிதத்
தொந்தவா யிரத்துச் சொச்சநோய் களும்போஞ்
சுருக்குமா றென்னெனிற் பலருந்
துதிமக சந்த னுதிக்கோர் மகிமை சொலற்கிட
மிலையெனத் துணிந்தே.

(இ - ள்.) இந்த நல்ல தைலத்தை முறையாக நான்குநாட் கொருதரமாக ஒரு வருடம் ஸ்நானஞ் செய்யில் எலும்பில் நின் றும் எழும்புகின்ற அஸ்திகதசுரம், தீராத க்ஷயம், கப சம்பந்த மாகிய சுவாசம், காசம், மூலம், பகந்தரம், வாதம், மகோதரம், காமாலே, உன்மாதம், சோமரோகம், மதரோகம், சோபை, பாண்டு, அண்டவிருத்தி பலவிதமாகிய குஷ்டம், சோணிதரோகம், குன்மம் மகாமூர்ச்சை, அலஜரோகம் என்னும் இவ்வித ரோகங்களும் அன்றி, சிரசு, நெற்றி, கண், நாசி, செவிமூலம், நா-கழுத்து என் கிற இடங்களைப் பற்றி வராநின்ற ரோகங்களும் விலகும் என நாம் சொல்லுவோமாயின், இந்த ரோகங்கள் தவிர வண்மை யுள்ள மற்றைய ரோகங்களியாவும் நீங்காதோ வெனக் கேட்பீர் கள்; நிதான கிரந்தங்களில் சொல்லுகின்ற (4448) ரோகங்களும் நீங்குமென்றே துணிவாகச் சொல்லுவோம்; அப்படி நீங்குவ துண்மையாயின் இங்ஙனம் சில ரோகங்கள் மாத்திரம் நீங்கு மெனச் சுருக்கிச் சொன்னது ஏனென்றால் யாவராலும் தோத் திரஞ் செய்யத்தக்க மகா சந்தனுதித் தைலத்திற்கு ஓர் மகிமை சொல்லுதற் கிடம் இல்லை என்பதைப் பற்றி இதற்கின்னின்ன ரோகங்கள் போமென நவின்றனம், எ - று. (97)

லகுசந்தனாதித் தைலம்

விருத்தம்

சந்திரு சடைத்தருண நாரிபலை சாயட்டி
தாத்திரிக ளுசிசுரசை
தசமுட்டி தசமம்பு முக்காரி வேம்புனற்
றத்துவயம் பானெய்பீரு
தந்தியிள நீர்நான்கி லாதியுக முன்னீர
தற்பினவை படிகளாரந்
தருவிரண் டகிறிட்டி கோலமிரு வேர்கோபி
சாதுர்சா தஞ்சாதிசங்
கந்தணை யிரத்தமுப் பலைபருஞ் சாய்கோரை
காவிசம் பங்கிகுட்டங்
கத்தூரி முகுளமுரு ளரிசிகிச் சிலிமதூ
கம்மார வலரிலையசை
யிந்தவெண் ணுன்குமொவ் வொருநிட்க மமுதிழைத்
திட்டெரித் தாடிருக
மெரிவுபித் துஞ்சுகரை யடர்மாயை யாமில
கெனுஞ்சந்த னாதியிஃதே.

(இ - ள்.) சந்தனக்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சிறுநன்னாரி, சிற்றாமுட்டிவேர், கோரைக்கிழங்கு, அதிமதுரம், நெல்லிவேர்ப்பட்டை, சீந்திற்கிழங்கு, சிற்றரத்தை என்னும் குடி நீர்த்திரவியம் (10-ம்) வகை 1-க்கு (பலம்-10) ஆக நிறுத்திடித்த தைப் பாண்டத்திலிட்டு முக்காரி என்கிற (12-மரக்கால்) சலம் விட்டு எரித்து தத்துவம் என்கிற (4-படி) குடிநீராக வடித்து, இதில் பசுவின்பால், நல்லெண்ணெய், தண்ணீர்விட்டான் கிழங்கு ரசம், செவ்விளநீர் என்னும் இந் நான்கினுள் முற்கூறிய இரண் டும் வகை 1-க்கு (படி-4-ம்) பிற்கூறிய இரண்டும் வகை 1-க்கு (படி-1-ம்) ஆக சேர்த்து, சந்தனம், சரளதேவதாரம், தேவதாரம், அகிற்கட்டை, மந்திஷ்டிவேர், தக்கோலம், வெட்டிவேர், விலா மிச்சம்வேர், நன்னாரிவேர், சாதுர்சாதம், சாதிக்காய், சிற்றரத்தை குங்குமப்பூ, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சடாமாஞ் சில், கோரைக்கிழங்கு, சங்கமுநீர்க்கிழங்கு, சண்பகமொக்கு, கோஷ்டம், கஸ்தூரிமஞ்சள், தாமரைவளையம், கொத்துமல்லி விதை, கிச்சிலிக்கிழங்கு, அதிமதுரம், காட்டாத்திப்பூ, பச்சிலை, சீரகம் என்னும் கற்கதிரவியம் (32-ம்) வகை 1-க்கு (வராகனிடை

1-ஆக நிறுத்துப் பசுவின் பாலால் அரைத்து அதிற் கரைத்து எரித்துப் பாகத்தில் வடித்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்வையாகில்,——தாகரோகமும், கை, கால், கண் முதலிய இடங்களைப் பற்றிய எரிவும், சரீர எரிவும், பயித்திய முதலிய பித்த ரோகங்களும் சுகப்பிரம ரிஷியைத் தொடர்ந்த மாயையைப் போலாம்; இதுவே லகுசந்தனாதித் தைலம், எ-று. (98)

ஆலகாலவிஷ தைலம்

விருத்தம்

வாதநா சனத்தா நேயம் வாங்கீரைம் பலத்து ணல்ல
மதுகர மெண்ப லத்தை வாய்ச்சீவ லெனச்செய் திட்டுப்
போதவே சிவக்கக் காய்ச்சிப் புடைவையிட் டிறுத்தங்கத்திற்
பூசிப்பா ரிழுப்பின் பேச்சப் போழ்திழுப் பாகு மின்னும்
பாதமேற் கண்டுகண்டாய்ப் பராரைகொண் டெழுமூ வீக்கம்
பற்றற வொழிக வென்றுற் பரனு றத் திலைதோய்த் தப்பி
மீதவ்வே மிலைப ரப்பி வெண்படாந் திரிநாட் சுற்றி
விலக்கட லால கால விடத்தை லமுமீ தாமால்.

.(இ-ள்.) ஆமணக்குநெய் (பலம் 10-ல்) கொட்டைப்பாக்குச் சீவலைப்போல் சீவிய வர்ச்சநாபியின் சீவல் (பலம்-8) சேர்த்து அடுப்பிலிட்டு சிவக்கும்படி எரித்து வஸ்திரத்தால் வடிக்கட்டி வைத்துக்கொண்டு இதைச் சரீரத்தில் பூசிப் பிடிப்பையாகில், இசிவு என்கிற நோய்கள் முழுதும் விலகும், இதன்றியும் பாதத்திலும் தேகத்திலும் கண்டுகண்டாக அடிபருத்து எழும்புகின்ற திரிதோஷ வீக்கங்களின்மேல் மாவிலிங்கின் இலையில் இதனைத் தோய்த்துப் போட்டு அவ் இலையைத்தானே வதக்கி அவைகளின் மேல் பரப்பி வெள்ளை வஸ்திரத்தினால் (3) நாள் (3) கட்டுக்கட்டி அவிழ்க்க நிசேஷமாக நீங்கும்; இதுவே ஆலகாலவிஷ தைலமாம், எ-று. (99)

சிற்சுடர்த் தைலம்

விருத்தம்

நிம்பமெண் ணிவையி ரண்டி னேயமைந் தைந்தா முட்டி
நெல்லிக்காய்க் கந்த மிங்கு நேர்குந்தம் பூண்டி ரட்டி
கும்புற மூன்று மாட்டிக் குழைத்துடைக் கேற்றி யத்தைக்
குலவேளை மூல மூன்றுட் கொளவெழு புரையாச் சுற்றி
வெம்பயக் கதிரிற் றூக்கி விளக்கெரித் தந்நெய் விட்டு
மீட்டுமுத் தரம டக்கி வீழ்மழு நெய்வாங் கப்புச்

சிம்புளா மிசுவெ னச்சொற் சிம்மேறுக் கிதன்வல்லாண்மை
செப்பலென் னணங்கே செப்புஞ் சிற்சுடர் தைல மீதே.

(இ-ள்.) வேப்பமுத்துநெய், நல்லெண்ணெய் இவ்விரண்டும் வகை 1-க்கு (பலம்-5) ஆக கலந்து வைத்துக்கொண்டு, நெல்லிக் காய்க் கந்தகம், பெருங்காயம் இவ்விரண்டும் வகை 1-க்கு (பலம்-4) வெள்ளைப்பூண்டு (பலம்-8) இம் (3) சரக்கையும் சேர்த் தரைத்துக் குழப்பி (10) அங்குலச் சதுரமுள்ள வெள்ளைச் சீலை யிற்றடவி உலர்த்தி இதை (3) நல்வேளைவேர் கொண்டுவந்து ஒன்றாகச் சேர்த்து அதன்மேல் ஏழுசுற்று வரும்படி சுற்றித் திரிபோலத் திரித்ததை இருப்புக்கதிரில் தொங்கும்படிக்குக் கோத்து முன்பு வைத்திருக்கிற நெய்யில் தோய்த்துக் கொளுத்தி அடியில் பழக்கிய பாத்திரம் வைத்து மேற்படி நெய்யைச் சிறிய கரண்டியால் மொண்டு மேலாகச் சிறுகச் சிறுகவிட்டுச் சுடர் உருவமாக விழுகின்ற தைலத்தை வாங்கவும்; இவ் வண்ணம் மும்முறை மடக்கிக் கடைசியில் வருந் தைலத்தைப் பதனம் பண்ணி இதில் கொஞ்சம் எடுத்து வெதுப்பித் தேகத்தில் தடவிப் பிடிப்பையாகில், இசிவு என்கிற சிங்கத்திற்கு இது சரபம் பட்சி யாம். இதன் வல்லபத்தை ஒருவர் சொல்லுவதென்ன, அந் நோயே சொல்லும். இதுவே சிற்சுடர்த் தைலமாம், எ-று. (100)

பீநசக் கிருதம்

கட்டளைக்கலித்துறை

இரத்த முரோசனங் கோஷ்ட மதுர மெருவைகழஞ்
சுரத்த மறுவி சசிபண மேழ்பொடி யோர்படிநெய்
யரத்த முருதடு கீழிடு பீநசத் தாச்சியமா
மிரத்த முதலொழுக் கும்மின் னசிய மிதைப்புரினே.

(இ-ள்.) ஒருபடி பசுவின் நெய்யை முறுக்கிச் சிவக்காமல் காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு குங்குமப்பூ, கோரோசனம் கோஷ்டம், அதிமதுரம், கோரைக்கிழங்கு, கஸ்தூரி, பச்சைக், கருப்பூரம் என்னும் (7-ல்) ஆதிசரக்கு முதல் ஐந்தும் வகை 1-க்கு (1-கழஞ்சியும்) மற்றை (2-ம்) வகை 1-க்கு (1-பணவிடையும்) ஆக நிறுத்து வஸ்திரகாயம் செய்த பொடியைத் தூவி இவை களின் நிறம் அதில் தோற்றியவுடன் வடிகட்டிக்கொண்டு இதை அந்தி சந்தி நசியங் கட்டுவையாகில், இரத்தம் சலம் சீழ் முதலிய வைகளை, நாசியால் விழப்பண்ணுகின்ற நாசிகாரோகங்களும் இதைப் பற்றிய சில வுபத்திரவங்களும் நீங்கும். இதுவே பீநசக் கிருதமாம், எ-று. (101)

பத்திரசார விரணப்பூச்சுத் தைலம்

நேரிசை வெண்பா

எண்ணு மவிப்படிநே ரேமபுட்பி வேம்பூனுன்
றிண்ணு யுருவிசீ வந்திபரி—புண்ணுற்றுஞ்
சிந்தமந் தாரமெட்டுஞ் சேருரியி லைச்சாறட்
டெந்தமந்தா ரப்புண்ணு மில்.

(இ-ள்.) நல்லெண்ணெய் (படி-$\frac{1}{2}$) ஒரு பாத்திரத்திலிட்டு, அதில் ஆவாரை, வேம்பு, ஊனுன், நாயுருவி, வெட்பாலை, பருத்தி, புளி, தூதுளை என்னும் (8) வகை இலைச்சாறும் வகை-1-க்கு (உரி) அளவு சேர்த்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதை (விரணங்களின்மேல் பூசி மறுநாள் அரசம்பட் டைக் கஷாயத்தினுல் கழுவவும்) இவ்வாறே போதுமான நாளள வுஞ் செய்யில், ஐவ்விஞல் வாய்மூடிக்கொண்டு ஆருமலிருக்கிற சகல புண்களும் ஆறிப்போம், எ-று. (102)

இதுவும் வேறுவித விரணப்பூச்சுத் தைலம்

கலி விருத்தம்

எள்ளிரதம் படியுருவி கவிர்பரியின் பூறற்
கொள்ளிரவு தோணிபுளி கண்ணிநுசை பிலிவேம்
பள்ளிநுகர் சுரைகுடசங் கடுபதிணைந் திலைச்சா
றுள்ளிலிரு பலமிட்டுப் பூசிவிரணம் போமால்.

(இ-ள்.) ஒருபடி நல்லெண்ணெயில் நாயுருவி, கண்ணுல முருக்கு, பருத்தி, இன்புரு, கொள்ளு, மஞ்சள், சிறுவழுதுணம், புளி, கரிசாலை, சிவதை, பூனைக்காஞ்சொறி, வேம்பு, நல்லசுரை, வெட்பாலை, கடுக்காய் என்னும் (15) இலைச்சாறும் வகை-1-க்கு (பலம்-2) ஆக சேர்த்து அடுப்பேற்றி தீபாக்கினியால் எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு வேண்டுங் காலவரையில் விதிபோல் பூசிக் கழுவினுல், ஆருத புண்களெல்லாம் ஆறும், எ-று. (103)

வலம்புரிக்காய்த் தைலம்

விருத்தம்

திருகுபலை யட்சம்பப் பத்துவட்டத் திருப்பி
சேனுவணன் கறைபோக்கிப் புளிவெளுளி யசமும்
பருகுதலி லாமூலி யாயின்மிள கரணை
பகர்வகைக்குக் கழஞ்சிடையிப் பத்துமைப்பா லரைவால்

வருகுமிகை யவிநாழிக் களவியொரு விறகால்
வன்னிமெது வுறக்காய்ச்சி வடித்துமுழு குவையேற்
பெருகுமண்டை நோய்முழுதுங் கருகுமின்னுங் கூறிற்
பேசுசங்கைப் பீடைகளும் பேரும்வலம் புரிக்கே.

(இ - ள்.) வலம்புரிக்காய், தான்றிக்காய், வட்டத்திருப்பி, ஆகாசகருடன் கிழங்கு, சவுக்காரம், படிக்காரம், வெள்ளைப் பூண்டு, ஆடுதின்னுப்பாளை, ஆயில்பட்டை, மிளகரணை என்னும் (10-ல்) முதலிற்கூறிய காய்கள் (2-ம்) வகை-1-க்கு (10-ம்) மற்றவை வகை-1-க்கு (கழஞ்சி-1-ம்) ஆக சேர்த்து இடித்து வெள்ளாட்டுப்பாலால் அரைத்து ($\frac{1}{2}$-படி) எண்ணெயிற் கரைத்துக் கலக்கி ஒருசாதி விறகினுல் சிறியதீயாக எரித்துப் பாகத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும்; இவ் வலம்புரிக்காய்த் தைலத்தை விதிபோல் ஸ்நானம் செய்வையாகில், கபாலத்தைப்பற்றி அதிகரித்த நோய்க்கூட்டம் முழுதும் வெந்து நாசத்தை யடையும். இன்னும் சொல்லப்புகின் உலகத்தார் பேசுகின்ற பேய் பூத முதலியவற்ருல் வராநின்ற துன்பங்களும் விலகும், எ-று. (104)

கிரகணிபூப்புடத் தைலம்

விருத்தம்

சாதிசநிட் குடிசிகரம் பங்கி மத்தஞ்
சரஞ்சோகி யேழ்வகைக்குத் தொடியிரண்டாச்
சேதிபங்கிச் சாற்ருட்டிச் சுத்திபோலத்
திரட்டிப்பூத் தைலமுறக் கதைமுன் போலாட்
டோதுசிமி ழிட்டரைநிட் கங்கொள் சீதத்
தோடிரத்த மலப்போக்கு மொழியுந் தீயாங்
கேதமுறு கிஞ்சையிலின் பசியு மாகுங்
கிரகணிபூப் புடத்தைலங் கிளத்தி னுமே.

(இ - ள்.) சாதிக்காய், ஏலம், லவங்கம், சடைக்கஞ்சா, ஊமத்தையிலை, திப்பிலி, பலகறை என்னும் (7) சரக்கும் வகை 1-க்கு (முதல்-2) ஆக நிறுத்திடித்துக் கஞ்சாவிலைச் சாற்றினுல் அரைத்துக் கிளிஞ்சல்போலத் திரட்டி எடுத்துப் புடக்கலசத்திலிட்டுப் பூத்தைலம் இறக்கி அத்தைலத்தைக் கலுவத்தில் விட்டு முன்போல் கஞ்சாவிலைச் சாற்றினுல் பந்திக்கும்படி அரைத்துப் பீங்கான் சிமிழில் வழித்து வைத்துக்கொண்டு இதில் ($\frac{1}{2}$-விராகனிடை) வீதம் போதுமான நாள்வரையில் இரண்டு காலமும் உண்பாயாக. இதனுல், பசி மிகுவதுந் தவிர, சீதக்கழிச்சல்,

இரத்தக்கழிச்சல், மலக்கழிச்சல் முதலிய கிரகணி ரோகங்களுந் தீரும்; இதற்குக் குற்றமுள்ள புளிப்பு நீங்கிய இஷ்டபோஜனமும் உதவும்; கிரகணிபூப்புடத்தைலம் உரைத்தோம், எ-று. (105)

இலாங்கலித் தைலம்

விருத்தம்

முக்கண்ணி யமிழ்தாப்பாற் புன்கடிப்பாற் பற்ணி
முராரியணி வாயசிகி ரீட்மசுந் தரிபாம்
புக்கண்ணி யிரதமெட்டி லாதியொரு படிகாண்
புகலுமற்றைப் பதம்பதமிட் டெரிபுரந்தட் டெனச்சொ
லக்கண்ணி ரண்டையுந்தூக் கொருதொடியோர் பணமா
யதிலிடிறுத் தருந்துதய முட்டியொன்று ருப்புண்
டொக்கண்ணி யெழும்புநுணுப் பூக்கிரந்தி முதனேய்
தொலேயுமிதன் பத்தியமுஞ் சொல்லுதுங்கே ளினியே.

(இ - ள்.) தேங்காய்ப்பால், பசுவின்பால், புங்கம்பால், வல்லாரைச்சாறு, துளசிச்சாறு, மணத்தக்காளிச்சாறு, சிறுசெருப்படைச்சாறு, சங்குப்பிச்சாறு என்னும் (8-ல்) தெங்கின்பால் மாத்திரம் (1-படியும்) மற்றவை வகை 1-க்கு (¼-படியும்) ஆக பாத்திரத்தில் விட்டுத் தீபாக்கினியால் (3) நாள் வரையிலுந் துழாவிக் காய்ச்சிக் கொண்டே யிருந்து பாகம் வருவதற்கு முன்னம் சுத்தித்த நெல்லிக்காய்க் கந்தகம் (பலம் 1-ம்) ரசகருப்பூரம் (பணவிடை-1-ம்) ஆக தராசிலிட்டு நிறுத்துப் பொடித்துப் போட்டுச் சற்றுநேரம் கொதிப்பித்து நெய்ப்பருவங் கண்டு வடிகடத்தில் வடித்து வைத்துக்கொண்டு காலையில் மாத்திரம் (1-பலம்) விழுக்காடு உண்ணக்கடவை; இதனுல், துஷ்ட விரணமாகிய ஆருப்புண், சருமத்தைப் பற்றி எழும்புகின்ற நுணுப் பூக்கிரந்தி முதலிய நோய்களுந் தீரும். இனி இதன் பத்தியமும் கூறுவாம், எ-று. (106)

இத்தைலங் காய்ச்ச வேண்டிய நாள் (3) என்பதை, பின் வருஞ் செய்யுளினுல் உணர்க.

இதன் மகிமை

விருத்தம்

இனித்தவிலாங் கலிநேய மிஃதடுநாட் போற்றிரிநா
ளேற்றுண் ணுங்காற்
றனித்தபுரா தனந்தெளிவும் புத்தனமு மதிரசத்தைத்
தள்ளி மண்ணிற்

சனித்தபலண் டோடுண்மறு பத்தியத்திற் பொரித்தவெள்
ளைச் சயிந்த வஞ்சேர்
தொனித்தவே மூாம்பகலாச் சியமாடப் பாற்புளியுந்
துய்க்க லாமால்.

(இ - ள்.) இதுவே மதுரமுள்ள தேங்காய்நெய், இதைக் காய்ச்சிய (3) நாளைப்போலவே (3) நாள் அருந்து, பத்தியமாவது வெங்காய வெஞ்சனத்தோடு புளிப்பேருத நீராகாரத்தைப் புதிதாகச் சமைத்த சாதத்தில் விட்டுக்கொண்டு உப்பில்லாமல் சாப்பிடுவதாம், மறுபத்தியம் மூன்று நாளும் வறுத்த வெள்ளை உப்பைச் சேர்த்துக்கொண்டு (7-வது) நாள் பசுநெய் தேய்த்து ஸ்நானஞ் செய்து மறுநாள் முதல் புளிப்புஞ் சேர்த்துண்ணலாம், எ-று. (107)

கலிங்கத் தைலம்

விருத்தம்

வாருகச்சா றீருளிச்சா றருணச் சாறு
வரைநிம்பச் சாறு வர்த்தமான நேயஞ்
சேருகச்சா வளவளவூற் றைந்து மட்டத்
தின்மூன்ருங் குப்பகற்றிச் சேர்கா லாக
வாருகச்சா குந்தனத்தார்க் கிதுக லிங்க
மாத்தைல மலடொழிக்கு மாதாந் தச்செந்
நீருகச்சா டாவிரத்தக் குன்மம் போக்கு
நிலைமலட்டுப் புழுக்களையு நீக்குங் காணே.

(இ - ள்.) வரிக்குமட்டிக்காய், வெண்காயம், எலுமிச்சம்பழம், மலைவேப்பிலை இவற்றின் சாறுகள், ஆமணக்குநெய் என்னும் (5-ம்) வகை 1-க்கு கச்சா (படி-1) ஆக சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு பருவ மாதர்கட்கு மாதர்ந்த ருதுகாலமாகிய (3) நாட்களிலும் காலையில் மாத்திரம் ($\frac{1}{4}$-சேர்) தைலத்தை ($\frac{1}{4}$-சேர்) நீராகாரத்தில் கலந்து குடிப்பித்து உப்பில்லாப் பத்தியம் வைக்கக்கடவை. இதனுல், வந்தியாரோகம் என்கிற (4) வித மலட்டில் ஆதிமலடு ஒழிந்த மற்றைய (3) வித மலடுகளும், மாதாந்த ருதுகால ரத்தத்தை வெளிப்படுத்தாத ரத்த குன்மங்களும், நிலைபெற்றிருக்கும் மலட்டுப் புழுக்களும் நீங்கும், இதுவே பெருமை பொருந்திய கலிங்காதித் தைலமாம், எ-று. பேதைப்பெண் பருவத்திற்கு முன்னும், பேரிளம் பெண் பருவத்திற்குப் பின்னும், இத்தைலம் கூடாதென்பது விளங்க

கச்சாருந் தனத்தார் என்றூர். மலடு (4) ஆவன—ஆதிமலடு, காகமலடு, கதலிமலடு, கருப்பமலடு என்பனவாம். இதன் விபரங் களை ஜீவரக்ஷாமிர்தம் 273-275-வது பக்கங்களில் காண்க. (108)

கணத் தைலம்

விருத்தம்

சிறியமுத் தந்தருநெய் யமிழ்திளங்
குமரிபொற் றேகரா சம்பிம்பிநற்றதி
றேவரு ராம்மிலை பலண்டுகற் பூரவலி
செப்புநவ முதலுபயமு
மறியளவொவ் வொருபடிபி னேழிரத
மும்பிழிந் தரையரைப் படியூற்
லக்கிரா காரமில வங்கவுரி
யவ்விலைக தாகுவய மேதிசிங்கி
நறியசோம் பசையமிர்தை மாசைசா
திப்பன்ன நற்குலக் காய்முனுன்கி
னவிலந்த மொருகழஞ் சாமற்றை
யுபமுப நயத்துகளி டெரிதுவிதியை
வெறியிரத் தந்துவி வகைக்கொரு
கழஞ்சிடை விளாவியடு கடநடுவிடா
மேன்மூடி யைம்பகற் சுத்தித்தெ
டுத்திடுர மிகுகணத் தைலமிஃதே.

(இ-ள்.) சிற்றாமணக்குநெய், பசுவின்பால் வகை-1-க்கு (படி-1-ம்) கற்றாழை, பொற்றலைக்கையாந்தகரை, கோவை, நல்ல பொன்னாங்காணி, புளியாரை, வெங்காயம், கற்பூரவள்ளி என் னும் (9) சாறுகளும் வகை-1-க்கு (படி-½) ஆக ஒருபாத்திரத்தில் விட்டு அக்கிராகாரம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கோஷ் டம், வெந்தயம், கர்க்கடகசிங்கி, மணமுள்ளசோம்பு, சீரகம், வெள்ளைப்பூண்டு, மாசிக்காய், சாதிபத்திரி, தைலமுள்ள சாதிக் காய் என்னும் கற்கவகை (12-க்குள்) ஈற்றிற்கூறிய சாதிக்காய்த் தூள் (1-கழஞ்சும்) மற்றவைகளை வஸ்திரகாயஞ்செய்து வகை 1-க்கு (2-கழஞ்சும்) ஆக தைலத்திற்சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் கோரோசனை, மணமுள்ள குங்குமப்பூ இவ் (2-ம்) வகை 1-க்கு (கழஞ்சு 1-ம்) ஆக பொடித்திட்டிருக்கிற வடிகடத்தின் நடு வில் மேற்படி தைலத்தை வடித்து, அந்தக் கடத்திற்குச் சீலை

மண் செய்து ஐந்துநாள் நெற்புடத்தில் வைத்து எடுத்துக்கொள் வாயாக; இதுவே வன்மையுள்ள கணத்தைலமாம், எ-று. (109)

இதன் மகிமை

விருத்தம்

கணத்தைலங் கஃசமிழ்திற் கலந்ததிகாலையிலருத்த [சுரமுந்
வணத்தடர்வெண் மையுங்கணவெட் டையுமதிலுண் டாஞ்
தணத்தருமெய் யுணர்த்தலும்பாற் சர்த்திமந்தங் கிரந்திகளு
மணத்தமுலைப் பாலருந்து மைந்தருழி வாராவே.

(இ - ள்.) மேற்சொன்ன கணத்தைலத்தை (¼-பலம்) முலைப் பாலில் கலந்து போதுமான நாள்வரைக்கும் காலைவேளையில் குடிப்பிக்கில், மேல் அண்ணத்தைப்பற்றிய வெளுப்பும், கண வெட்டையும், வெட்டையினலுண்டாகிய சுரமும், நீங்குதற் கரிய தேகவுலர்த்தலும், பால்வாந்தியும், மாந்தமும், கிரந்திகளும் மண முள்ள முலைப்பாலருந்தும் பாலகரிடத்தில் சேராவாம், எ-று. (110)

மாந்தத் தைலம்

விருத்தம்

முத்துக் கிருதமு மீயச் சுரதமு மூட்டெரி யொன்றிரண்
டாம்படி முற்பரு
வத்துக் கருநிறச் சீரக மோர்தொடி மாவிட் டளாவி
மயனத் தொருகல
சத்துக் குளேநல் லுரோசனை நிட்கந் தனையிட் டிறுத்துவை
சந்ததி யைத்தொட
ரெத்துக் கமாந்தப் பிணியுங் கபங்களு மிந்திர விற்செய
லென்ப ரறிஞரே.

(இ - ள்.) (1-படி) முத்துக்கொட்டை நெய்யும் (2-படி) ஈயக் கொழுந்தின்சாறும் ஒருபாத்திரத்தில் சேர்த்து சிறுகொதியாகக் கொதிப்பித்துச் சாறுசுண்டிய இளங் கற்கபக்குவத்தில் (பலம்-1) கருஞ்சீரகத்தை இடித்து வஸ்திரகாயஞ்செய்த மாவை அதில் தூவித் துழாவிக்காய்ச்சி மெழுகுபதத்தில் (விராகனிடை-1) நல்ல கோரோசனத்தூள் வடிகடத்துள்போட்டு அதில் மேற்படி தைலத்தையிறுத்து வைத்துக்கொண்டு காலையில் மாத்திரம் (¼-பலம்)வீதம் போதுமான நாள்வரையில் கொடுத்துத் தாய்க்குப் பத்தியம் வைக்கவும்; இதனுல் குழந்தைகளைப் பீடிக்கப்பட்ட பல நோயை விளைக்கின்ற மாந்தங்களும், கபரோகங்களும் இந்திரவில்லைப்போல் மாறிவிடும், எ-று. (111)

வேறுவித மாந்தத் தைலம்

விருத்தம்

ஆமணக் கவிநற்க சச்சாறு படிபடிபெய்
யரணம்ப லங்கடுகைநீ
ரடிமுத்த மொலிபோகி புட்பேந் திரங்கார
மட்டமொவ் வொன்றுகஃசாந்
தீமணச் சயபாள மிருதொடி யிவற்றைமுன்
செப்பிரத மிட்டிழையெலாஞ்
சேர்வைபுரி யெரிமதூச் சிட்டமுறின் வடியிதே
சிறுவர்மாந் தத்தைலமா
மாமணக் குயவமுதி லிஃதுகஃ சளவளாய்
வணிவெதுப் பிக்குலுக்கி
வைகறை யருத்தருஞ் சேய்க்குச் சுருக்கந்தி
வாரினு மக்குவாத
நாமணப் பையதோ டம்பொரு முமாந்தமுண்
ணளிர்வெப்பு மாந்தமென்னு
நாலிரண் டுஞ் * சுரர் விழிச்சுகம தாமிதி
னவிற்றுமிச் சாப்பத்தியமே.

(இ-ள்.) ஆமணக்குநெய், உத்தாமணிச்சாறு இவ் (2-ம்) வகை-1-க்கு (படி-2) ஆக ஒரு பாத்திரத்தில்விட்டு, கருஞ்சீரகம், வெட்பாலையரிசி, கடுகுரோகணி, நீரடிமுத்துப்பருப்பு, கோஷ்டம், கார்போகிவிதை, சண்பகப்பூ, அக்கிராகாரம் என்னும் கற்க திரவியம் (8-ம்) வகை-1-க்கு (பலம்-$\frac{1}{4}$) வெப்பமுள்ள நேர்வாளப் பருப்பு (பலம்-2) நிறுத்தவைகளை மேற்படி சாற்றினுல் அரைத்து அதிற் கரைத்து எரித்து மெழுகுபதத்தில் வடித்து வைத்துக் கொண்டு, செம்மை நிறம்பொருந்திய மாதர்களின் மணமுள்ள முலைப்பாலில் (பலம்-$\frac{1}{4}$) சேர்த்துக் கலந்து அனலில் வெதுப்பிக் குலுக்கி விடியற்காலையில் பாலர்களுக்குக் குடிப்பிக்கவும்; அருங் குழந்தைகட்கோ என்றுல், தகுந்தபடி குறைத்துப் புகட்டவும்; மாலைப்போதில் மாந்தக்கஷாயம் வார்க்கவும்; இதனுல், நாவி னிடத்தில் பிருதிவி சம்பந்தமாகிய கபத்தினுல் வெளுத்திருக் கின்ற தோஷம், பொருமுமாந்தம், நளிர்ச்சுரமாந்தம் முதவிய

* தேவர்களின் நேத்திரத்துக்கு நித்திரானந்த மில்லாததுபோல் குழந்தைகளின் சரீரத்துக்கு வியாதியில்லை என்பது கருத்து.

* 8 வித மாந்த ரோகங்களும் தேவர்கள் விழியின் சுகம்போலாம். இதுவே குழந்தைகளுக்குரிய மாந்தத்தைலம். இதற்கு இச்சா பத்தியமாம், எ-று. (112)

வேறுவித குழந்தை மாந்தயெண்ணெய்

விருத்தம்

குருத்துக் குழந்தை குடித்தாலுங்
குமட்டா துடனே விரேசித்துக்
கொடுக்குங்குணமா மெண்ணெயொன்று
கூறுநின்றே னஃதுணர்தி
பருத்தி துளசி நாயுருவி பகண்டை
வேலிப் பருத்தியிவ்வேர்
பஞ்ச வகையு மொத்தநிறை
பாதி மிளகு கணை மெய்யுப்
பருத்தி ரோணி ரோசனையிவ் வாறு
மெண்ணெ யரைப்படிக்கே
யான தொடிகா லிரண்டாகப்
பொடித்திட் டதிற்பெய்ததைக்காய்ச்சிப்
பொருத்த முறவே யிறக்கிமதி
யதன்பி னதனை யருத்துவிக்கப்
போகா மாந்த மலவெதுப்பும்
போகக் கழியு மலமறுமே.

(இ-ள்.) பிறந்த சிசுமுதல் பாலர் வரையும் குடித்தாலும் குமட்டாது. மலத்தைக் கழித்து குணத்தைக் கொடுக்கும் எண்ணெயொன்று சொல்லுகின்றேன் அறிவாயாக; பருத்தி, துளசி, நாயுருவி, பகண்டை, வேலிப்பருத்தி இவைகளின் வேர் வகை 1-க்கு (பலம்-1) ஆகவும், மிளகு, அரிசிதிப்பிலி, பெருங் காயம், இந்துப்பு, கடுகுரோகணி, கோரோசனை இவைகள் வகை 1-க்கு (⅛-பலம்) ஆகவும் எல்லாவற்றையும் தனித்தனி பொடித்து வஸ்திரகாயஞ் செய்து (½-படி) சிற்றாமணக்கு யெண்ணெயில் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து ஒரு மாதபரியந்தம் நெல் புடத்தில் வைத்தெடுத்து குழந்தைகட்குக் காலையில் மாத்திரம் சிறுகரண்டி வீதம் புகட்டுவையாகில், தீராத மாந்தங்களும், மலத்தீச்சலும், மலக்கழிச்சலும், மலத்தை நீக்கி தீரும், எ - று.

---

* எட்டுவித மாந்தரோகங்களை ''ஜீவரக்ஷாமிர்தம்'' 290-291-292-வது பக்கங்களில் பார்க்கவும்.

குளிர்ச்சித் தைலம்

விருத்தம்

அத்திகற்ணி யவிசுபேய்க் கனியிரத மிளநீ
 ரமிழ்துநான் கரையரைத் தொள்ளையடிறுத் ததிலே
சுத்திபுரி மதுஸ்மிகிதா ணிகைபலப்பஞ் சிங்கித்
 தூளசைசர்க் கரையாறுந் தூட்டெரடிமா முகன்கைச்
சத்திவிணை யான்மாவீ டருத்தமிட்டு மதித்துத்
 தநயர்முத லோருமுணத் தண்டயில மிஃதூட்
டுத்திகொடு கஃசிலுய ராவணமண் டலத்தி
 லுட்சுரம்புண் மேகச்சூ டுலர்த்தலும்போ முணரே.

(இ - ள்.) சிற்ருமணக்குநெய், பேயன் வாழைப்பழரசம், செவ்விளநீர், பசுவின்பால் என்னும் (3-ம்) வகை 1-க்கு (½) மரக்கால் வீதம் பாத்திரத்தில் விட்டு மெதுவாக எரித்து மெழுகு பதத்தில் வைத்துச் சுடுகை ஆறுவதற்கு முன்னம் சுத்தித்து வஸ்திர காயஞ் செய்த பறங்கிப்பட்டைத்தூள் (பலம்-5) கொத்துமல்லி விதைத்தூள் (பலம்-3) பலப்பத்தூள் (பலம்-3) சிங்கிபஸ்பத் தூள் (பலம்-2) சீரகத்தூள் (பலம்-1) வெள்ளைச்சருக்கரை (பலம் ½) ஆக நிறுத்த கற்கத்தூள் (6-ம்) அதில் தூவி மத்தித்து வைத்துக்கொண்டு, சிசு ஆதி விருத்தர் பரியந்தம் அவரவர்களுக்குத் தக்கபடி நிதானித்து (பலம் ¼-க்கு) அதிகப்படாமல் உதய காலத்திலாவது இராப்போஜனஞ் செய்த பின்பாவது குடிப்பிக்கக்கடவை; இவ்வாறே ஒரு மண்டலம் என்கின்ற (48) நாள் வரைக்கும் குடிப்பித்தால், உட்சுரமும் புண்களும் மேகச்சூடும் அதிசுட்கரோகமும் தீரும் அறிவாயாக, எ-று. இதற்கு இச்சாப் பத்தியம். (114)

நவநாதசித்தத் தைலம்

விருத்தம்

சிம்மமுகி தழுதாழை யார்க்குமத் தங்குடஞ்
 சித்திரம் வியாக்கிரிகையான்
சிந்துவா ரஞ்சடக் கடைதொடி மணிப்பலஞ்
 சேர்காரி யங்குவாதம்
வெம்மையோ டெட்டிலொன் ருயிறெண் ணேரண்டம்
 வேம்பிவை நெய்விடுபடிபடி
வேர்க்கொம்பு பதுமநா ளங்கடுகு குட்டமகில்
 வெள்வசம் புக்கிரகந்தை

செம்மைதரு பாளித மரத்தைபூண் டிந்துசாய்
திப்பலி யம்மூலமதுரந்
திரிபலை முசுக்கை சங்கீத முயர்கோளஞ்
செப்புமக மிவைகளையெலாங்
கம்மென மணப்பெழத் துகள்புரியொவ் வொன்றனிரு
கஃசென விளாவிநன்ருக்
காய்ச்சிவடி நவநாத சித்தர்புரி தைலமிது
களமமிடு மணிவாரமே.

(இ-ள்.) ஆடாதோடை, தழுதாழை, எருக்கு, ஊமத்தை, சதுரக்கள்ளி, ஆமணக்கு, கண்டங்கத்திரி, கையாந்தகரை, நொச்சில் என்னும் வேர்கள் (9-ம்) வகை-1-க்கு (பலம்-20) ஆக நிறுத்திடித்துப் பாண்டத்திற் சேர்த்து (4-மரக்கால்) சலம்விட்டுக் காய்ச்சி (8-ல்) ஒரு பங்காகச் சுடுகையுடன் இறுத்த கஷாயத்தில் எள்ளுநெய், ஆமணக்குநெய், வேப்பநெய் இவை மூன்றும் வகை 1-க்கு (படி-1) ஆகவிட்டு, சுக்கு, தாமரைவளையம், கடுகு, கோஷ்டம், அகில்கட்டை, வெள்வசம்பு, வசம்பு, செஞ்சந்தனம், சிற்றரத்தை, வெள்ளைப்பூண்டு, இந்துப்பு, கோரைக்கிழங்கு, திப்பலி, திப்பிலிமூலம், அதிமதுரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முசுமுசுக்கைவேர், கிச்சிலிக்கிழங்கு, வாய்விளங்கம் என்னும் கற்கதிரவியம் (21-யும்) வாசனை யெழும்பும்படி நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூளை வகை-1-க்கு (பலம்-½) ஆக எடுத்து மேற்படி எண்ணெயிலிட்டுக் கலக்கி சிறிய தீயினுல் எரித்துப் பக்குவத்தில் வடித்து அக்கடத்திற்குச் சீலமண்செய்து நெற்புடத்தில் (9-நாள்) வைப்பாயாக. இதுவே நவநாதசித்தர் தைலமாம், எ-று. (115)

இதன் மகிமை

விருத்தம்

மண்நாட்ட ணந்தெடுத்தம் மாதவர் பொற் பதம்பரவிப்
பிணியாளர் தங்கருமப் பீடையறச் செய்வனசெய்
தணியாரு டலவலத்தந் நெய்யிட்டப் பிப்பிடிக்கிற்
றணியாப் பலமருத்துந் தாவமுணுந் தாவமரோ.

(இ-ள்.) (9) நாளுங் கழித்தெடுத்து இதற்கு அதிகாரிகளாகிய நவநாதர் திருவடிகளை வணங்கி, நோயுற்ருர் வினைக்குத் தக்கபடி கருமசாந்திசெய்து தைலத்தைத் தொட்டு அழகிய சரீரத்தில் நோயிருக்கும் இடங்களிற்பூசிப் பிடிப்பையேயாகில், சிகிச்சை

களுக்கு வசப்படாத பற்பல மஹா வாதரோகங்களும் அக்கினியால் தகிக்கப்பட்ட காடுகளைப்போலாம், எ-று. (116)

கஸ்தூரித் தைலம்

விருத்தம்

முத்தமீ ருளிவெளிப் பதுமமிர தம்படிபெய்
மூன்றுென்றி ரண்டொன்றனீர்ச்
சித்திரம் போகியர ணந்தந்தி பீசமிந்
திரியவஞ்ச ரம்வகைக்குச்
சுத்தியிர தத்திழையி டட்டையரை யுகமரைத்
துடிதுவிதி நாபிமுறையே
முத்துகளு நிட்கமிடு மக்கடத் துறவடியிம்
முறைமிருக மதநெய்யரோ.

(இ - ள்.) (1-படி) ஆமணக்குநெய் (2-படி) வெங்காயச்சாறு (1-படி) ஆகாயத்தாமரைச்சாறு ஆகிய (3-ம்) பாத்திரத்திலூற்றி இதில் நீரடிமுத்துப்பருப்பு, கார்போகிவிதை, கருஞ்சீரகம், வாளப்பருப்பு, வெட்பாலையரிசி என்னும் கற்க மருந்துகள் (5-ம்) வகை 1-க்கு (பலம்-½) ஆக நிறுத்ததை முற்கூறிய வெங்காயச்சாற்றினால் அரைத்துக் கரைத்து எரித்துப் பக்குவத்தில் ஏலம், கோரோசனம், கஸ்தூரி என்னும் (3) சரக்குகளையும் பொடித்து முறையே விராகனிடை (2½-ம்) (2-ம்) (½-ம்) ஆக தூவி வைத்திருக்கிற வடிகடத்தில் வடிப்பாயாக, இதற்கு கஸ்தூரித்தைலம் எனப் பெயர், எ - று. (117)

இதன் மகிமை

விருத்தம்

நெய்யரை கால ரைக்கா னிறைதொடி யகர்மு கத்திற்
பையவெச் செனக்கொண்டே*முப் பாலர்க்கும் புகட்டிற் பித்
மையலா சனத்த டைப்பு வலியிழுப் புதரப் பீடை [தன்
யையவா தச்சூர் குண்டால முந்தோடத் தயர்வும் போமே.

(இ - ள்.) இந்தத் தைலத்தை (½) (¼) (⅛) என்னும் (பலம்) கணக்குகளாக நிறுத்துப் பாலடைகளில்விட்டு அனலில் வெதுப்பி மூவகை பாலர்கட்கும் முறைப்படி காலையில் மாத்திரம் புகட்டுவையாகில் வாய்பிதற்றல், மயக்கம், குதாவர்த்தவாதம்,

* மூவகைப்பாலகர் ஆவன: பால்குடிக்கும் பாலகர். பாலுங்குடித்து அன்னமும் அருந்தும் பாலகர். அன்னமாத்திரம் புசிக்கும் பாலகர் என்பனவாம்,

இசிவு, சுவாசரோகம், வயிற்றைப்பற்றியரோகம், கபவாதம், செவ்வாப்புக்கட்டி, வாதோன்மாதம் முதலிய ரோகங்களும் தீரும், எ - று. (118)

ஊன்பூச்சுத் தைலம்

விருத்தம்

சங்கெட்கோ தபமார்க்கி மூன்றுஞ் சுட்ட
சாம்பரிடைக் கஞ்சதுபெய் தலைநீர் வாங்கிப்
பொங்கப்போ காதட்டிச் சிறுநீ ரோடே
புலரவிட்டவ் வுவரையரும் பொடியா தாக்கி
யங்கப்பா மைக்குளெழு மூணை வாளா
லரிவானே னதையெண்ணெய் யதிற்கு ழைத்துத்
தங்கப்பூ சலொழியு மிலதூன் பூச்சுத்
தைலமென விரணமருத் துவர்க்குச் சாற்றே.

(இ - ள்.) ஊதுசங்கம், எள்ளுக்காய்த்தோல், செந்நாயுருவி சமூலம் இம் மூன்றையும் தனித்தனியே சுட்டுச் சாம்பலாக்கி வேண்டிய மட்டும் சம பாகமாக அளந்து பானையிற் கொட்டி இது கண்ட மொத்தத் தொகைக்கு (4) பங்கு சலம் விட்டு (3) நாள் வரையில் துடுப்புக்கொண்டு சாமத்திற்கு ஒரு தரமாகக் கலக்கிக் கொண்டே யிருந்து (4-வது) நாளில் தலைநீர் மேலாகத் தெளிந்த சலத்தை சட்டியிலிறுத்துப் பொங்காமல் எரித்து சுண்ட வைத்துக் கொஞ்சஞ் சலம் இருக்கும்போது வெயிலில் உலர்த்தினால் உப்பாகும். அந்த உப்பை வேண்டுமட்டும் மெல் லிய தூளாக்கி நல்லெண்ணெயிற் குழைத்து விரணங்களில் நிலைக்கும்படி பூசுவையாகில், அதில் வளராநின்ற துர்மாமிசங் களைக் கத்தியால் அறுக்க வேண்டுவதென்ன? தானே கரைவ தும் அன்றி அவ் விரணங்களும் ஆறிப்போம். இது ஊண்பூச்சுத் தைலமென விரண சிகிச்சகருக்குச் சொல்வாயாக, எ-று. (119)

அஜசிருங்கித் தைலம்

விருத்தம்

துதிமகா காளிசர ணசுவகந் திச்சிவதை
சுரசமா தொண்டைமுதிரை
சுகபலை நிலாமணக் காயிலுரி புனர்நவஞ்
சுநுகிசெம் முளிகரந்தை
முதியார்:குழன்மா விலிங்குசித் திரவிதை
முருங்கையதள் பத்தொடேழா

முட்டியொவ் வொன்றினுக் கைந்தால மிருகுருணி
முளரியடு நான்கிலொன்று
யதிலவந் தியுமெணெயு முபயமு பயம்படிபெய்
யகருமர நிசிசசிவசம்
பாகுலி பிசாசிசுக் ககிலிவை வுரியவிலை
யம்பேல மிங்கொலிகடு
கதிமணக் கிச்சிலி யராளமிரு தருவென
வறைந்தபத் தொன்பதும்வகைக்
களவையிரு நிட்கமுன் பட்டநீ ரிழைவிரவி
யாரலிட் டட்டிவடியே.

(இ-ள்.) பெரியோர்கள் சொல்லுகின்ற களாவிழுது, அமுக்கிராங்கிழங்கு, சிவதைவேர், நொச்சில்வேர், ஆதொண்டைவேர், கொள்ளு, எருக்கின்வேர், நிலாமணக்கின்வேர், ஆயிற்பட்டை, வெண்சாரணைக்கிழங்கு, சதுரக்கள்ளிவேர், செம்முள்ளிவேர், கரந்தைவேர், முதியார்கூந்தல், மாவிலிங்குவேர், ஆமணக்கு முத்து, முருங்கைப்பட்டை என்னும் (17-ம்) வகை 1-க்கு (பலம்-5) ஆக இடித்துப் பாண்டத்தில் கொட்டி ஆற்றுச்சலம் (பதக்கு) விட்டு எரித்து (4-ல்-1) ஆக வடித்த குடிநீரில் (2-படி) காடிச்சலமும் (2-படி) நல்லெண்ணெயும் சேர்த்து அகருக்கட்டை, மரமஞ்சள், இந்துப்பு வசம்பு, சிற்றரத்தை, சடாமாஞ்சில், சுக்கு, அகிற்கட்டை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, திப்பிலி, ஏலம், பெருங்காயம், கோஷ்டம், கடுகு, வாசமுள்ள கிச்சிலிக்கிழங்கு, குங்கிலியம், தேவதாரம், சரளதேவதாரம் என்னும் கற்கத் திரவியம் (19-ம்) வகை 1-க்கு (2-விராகனிடை) ஆக நிறுத்து மேற்படி கஷாயத்தினுல் அரைத்து அதில் கரைத்துக் காய்ச்சி வடிகடத்தில் வடிப்பாயாக, எ-று. *(120)*

இதன் மகிமை

விருத்தம்

அட்டிவடித் திடும்பெரிய வஜசிருங்கித்
தைலத்தை யட்ட நாணெற்
கொட்டிமறைத் தொன்பானுட் கருமசாந்
திகள்புரிந்தக் குவைவயை நீக்கி
மட்டிதழி யுருத்திரனை யாராதித்
தாடினுமாந் தினும்வள் ளுக்கு
ளொட்டிவரு மையைந்து நோய்களுமெண்
கெதிர்நாகு ளுறைசெல் லாமால்.

(இ-ள்.) இவ்வாறு வடித்த அஜசிருங்கி என்னும் உயர்ந்த தைலத்தை அக்கடத்தோடு சீலமண் செய்து (8-நாள்) வரையில் நெற்குவியலுக்குள் மறைத்து வைத்து (9-வது) நாளில் கரும சாந்திகள் செய்து அக்குவியலை நீக்கி எடுத்து வைத்துக்கொண்டு மணமுள்ள கொன்றைமாலையணிந்த சிவபெருமானைப் பூசித்து இதை முறைமைப்படிக்கு ஸ்நானஞ் செய்தாலும் உள்ளுக்கு அருந்தினாலும், செவிக்குள் சப்த தாதுக்களைப் பற்றிப் பிறக்கா நின்ற வாத கர்ணசூலமுதலிய இருபத்தைந்துவித ரோகங்களும் கரடிக்கு எதிர்ப்பட்ட புற்றுக்குள் பொருந்திய செல்லுகளைப் போலாம், எ-று. 25-வித கர்ணரோகங்களை 'ஜீவரக்ஷாமிர்தம்' 359-வது பக்கம் முதல் 363-வது பக்கம் வரையில் காண்க.

கிடாரித் தைலம்

விருத்தம்

பொடுதலை யருணச் சாறு புத்தெண்ணெய் மூன்றுவ் வொன்றே, விடு*தலைப் படியா யீதில் வெங்காயொன் றரைப்ப லஞ்சேர்த், தடுதலை யொழித்தெல் லட்டி யப்பியா டுளையு திர்த்துக், கெடுதலைச் செயும் புழுச்சாங் கீடாரித் தைல மீதே.

(இ-ள்.) பொடுதலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, புதிதாகிய நல்லெண்ணெய் என்னும் இம் (3-ம்) வகை 1-க்கு தலைப்படி (1) ஆக ஒரு பாத்திரத்தில் ஊற்றி இதில் (1½-பலம்) காரமுள்ள மிளகை யுடைத்துப்போட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சுவதை நீக்கிச் சூரியபுடத்தில் சாறுசுண்டுகிறநாள் பரியந்தம் நித்தியமுந் துழாவி வைத்துப் பக்குவபாகத்தில் கற்கத்துடனே எடுத்து வைத்துக்கொண்டு, இதை ரோமகூபங்களிற் பரவும்படி ஒரு தினத்திற்கு மூன்று தடவையாக மூன்றுதினம் வரைக்கும் தொட்டுத் தடவி ஊறவைத்து (4-வது) நாளில் தேய்த்து ஸ்நானஞ் செய்யக்கடவை. இவ்வண்ணம், ஒரு மண்டலஞ் செய்யில், ரோமங்களை யுதிர்த்துத் தேகவழகைக் கெடுக்காநின்ற புழுவெட்டு என்கிற ரோகத்தைப் பிறப்பிக்கின்ற புழுக்களெல்லாஞ் சாகும். இதுவே கீடாரித் தைலமாம், எ-று. (122)

---

* தலைப்படி என்பது (பலம்-6) கொண்டது இதற்கு சாதாரணப்படி என்றும், இடைப்படி என்பது (பலம்-12) கொண்டது இதற்கு மாகதப்படி என்றும், கடைப்படி என்பது (பலம்-16) கொண்டது இதற்கு வைதீகப் படி என்றும் பெயராம்.

பாவனபஞ்சாங்குலத் தைலம்

விருத்தம்

புதியபுரா தனத்தாய்வை கறைவிடுத்த நீரிற்
 புதைத்தன்றுட் டணந்தறலாற் புனிதஞ்செய் துணக்கிப்
பதியணையாக் குமரிவிட்ட நீரின்முன்போ லமைத்தப்
 பயத்தொடட்டிச் சுத்தித்துப் பகலில்வறுத் திடித்த
முதியவிரத் தாகவிதைக் கீரண்டு வார
 முதிராச்செங் குழந்தைநீர் மொய்த்திடவிட் டெரித்துக்
கொதியடங்கி நெய்முழுது மிதக்குங்கால் வடித்துக்
 கூப்பிடுபா வனபஞ்சாங் குலத்தைல மெனவே.

(இ - ள்.) முதல் நாள் இரவிற்சேர்த்த புராதனத் தெளிவாகிய நீராகாரச் சலத்தை விடியற்காலத்தில் ஒரு பாத்திரத்தில் இறுத்து அதில் முதிர்ந்த சிற்றுமணக்கின் கொட்டையை வேண்டியமட்டுங் கொட்டி ஊறவைத்து அன்றையதினங் கழித்து மறு தினத்தில் அந்தச்சலத்தை ஊற்றிவிட்டு நல்ல சலத்தினுல் அலம்பிச் சுத்திசெய்து வெயிலில் உலர்த்தி, ஊரை நெருங்கியிராத மலைகளில் முளைத்த கற்றுழை மடலை இடித்துப்பிழிந்து இதில் அதை முன்போலவே வூரச்செய்து மறுநாள் அந்தச் சலத்தோடு வேகவைத்து வெந்த பிறகு சலத்தை வடித்துப்போட்டுச் சுத்த சலத்தினுல் கழுவி கடும்வெயிலில் துழாவி யுலர்த்தி இடித்துத் தைல பாத்திரத்தில் சேர்த்து, இந்தக் கொட்டையினது அளவைக்கு (4) பங்கு அதிகமாக ஓடு முதிராத செவ்விளநீரைப் பெருகவிட்டு அடுப்பேற்றி சிறிய தீயாக எரித்துப் பெருங்கொதி யடங்கி நெய்யெல்லாம் மேலே மிதக்கும் பக்குவத்தில் வடித்து வைத்துக் கொண்டு இதற்குப் பாவன பஞ்சாங்குலத் தைலமெனப் பெயரிடக்கடவை, எ - று. (123)

தாய்போல் போஷிப்பதால் நீராகாரத்தைத் தாய் என்றார்.

இதன் மகிமை

விருத்தம்

கூப்பிடுநெய் யெழுகடகங் கணங்க ருப்பங்
 குறிபொறிச்சூ டுடலுலர்தற் குதத்து ளேகா
மூப்பிடும லாவர்த்தம் விடமந் தீக்க
 ணுக்கினிபன் மருந்தழலு மறு மண் ணுளுண்
சேப்பிடுபு ரூணமெழி லறிவு தாங்கத்
 திங்கள்பத்துந் தினந்திவா கரனெ மூாமுன்

சாப்பிடுவர் காலரைக்காற் பலமி ராவுந்
தபனநாட் பத்தியச்சொற் றணத்தி னுமே.

(இ-ள்.) இவ்வாறு பெயரிடப்பட்ட தைலத்தை, முறைமைப் படி ஒரு மண்டலம் உண்ணுவையாகில், உயிர் என்கிற அரசன் வீற்றிருக்கின்ற ஏழுகோட்டைகள் ஆகிற சப்த தாதுக்களைப்பற்றிய வெதுப்பமும், கணச்சுரமும், கருப்பச்சூடும், நீர்த்துவாரத்திலுண்டாகிற எரிச்சலும், ஐம்பொறிகளின் உஷ்ணமும், சரீர உலரலும், மலத்துவாரத்திற்குள் வயிர ஆப்பு அடித்ததுபோலச் செய்கின்ற மலாவர்த்த வாதமும், விஷமாக்கினியும், தீக்ஷணுக்கினியும் பற்பல மருந்துகளால் ஏறியவேகமும் விலகும். இதன்றியும், செம்மை நிறம்பொருந்திய கருப்பமானது நல்ல அழகும் மேலாகிய அறிவும் பெறும்பொருட்டு, கருப்பந்தரித்த முதல் மாதந் தொடங்கி (10) மாதமும் இத்தைலத்தை பிரதிதினமும் சூரிய உதயத்திற்கு முன் ($\frac{1}{4}$-பலமும்) இராப்போஜனஞ் செய்த பின்பு ($\frac{1}{8}$-பலமும்) ஆக வெயிலுள்ள நாளில் கருப்ப ஸ்திரீகள் அருந்துவார்கள். இதற்குப் பத்தியம் என்கிற வார்த்தையை நீக்கி விட்டோம், எ-று. (124)

ஊழலாற்றித் தைலம்

விருத்தம்

முதிரூழ லாற்றிமண் ணரசுமா லுகமென்னு
மூவதலும் வீசைவீசை
முளரிமுர ணுந்தண்டு நந்தீசர் கோற்கந்த
முந்திரந் திறமிவைந்துஞ்
சிதருதி டித்தெண் ணி ரண்டுகட னீர்பெய்து
தீயிலாந் தொகையிலொன்றுத்
தீர்த்தகுடி நீரிலிது மணிநெய்யிது வேசரித்
தெண்ணீரம் மலவமுதுபாற்
புதிதாங்க டத்தட்டி யிருதொடி யருந்திமுப்
போதாறு நாட்பின்படுப்
போட்டுண்ட தற்பினே மப்பாலி னுடிடு
புகன்றபஞ் சாங்குலநெயை
யிதிலாங் கனற்கிர விறுட்டிடையு ணம்முறையு
ளெணெய்பட்டி முன்பினுடுள்
ளிரணமே கப்புணமை சூட்டுமறு மெம்மாணை
யிஃதூழ லாற்றிநெய்யே.

(இ-ள்.) நாட்சென்ற ஊழலாற்றி, பூவரசு, வேம்பு என்னும் (3) மரப்பட்டைகளும் வகை 1-க்கு (1-வீசையும்) அக்கினிக்குப் பகையாகிய புனற்றண்டும், நந்திதேவர் கைக்கோலாகிய பிரம்பி னது கிழங்கும் வகை 1-க்கு ($\frac{1}{2}$-$\frac{1}{2}$-வீசையும்) ஆக நிறுத்து இவ் (5-யும்) தறித்துச் சிந்தாமல் இடித்துக் குடிநீர்ப்பாண்டத்திலிட்டு (12) மரக்கால் சலம் விட்டு எரித்து அத் தொகையில் ஒன்று என்கிற ஒரு மரக்கால் அளவையாகக் குடிநீர் வடித்துக்கொண்டு இதில் இக் குடிநீரின் அளவாகச் சிறு முத்துக்கொட்டை நெய்யும் இந் நெய்க்குச் சமமாகத் தெளிந்த கழுதைமூத்திரமும், இம் மூத்திரத்திற்குப் பாதி அதன் லத்தையின் பாலும், சேர்த்துப் புதிதாகப் பழக்கிய தைல பாத்திரத்தில் ஊற்றி, எரித்துக் குடித் தைலமாக வடித்து வைத்துக் கொண்டு, இதில் (2-பலம்) விழுக் காடு உப்பில்லாப் பத்தியத்துடன் காலையில் மாத்திரம் (3) நாள் சாப்பிட்டு, மறுபத்தியம் (3) நாளிருந்து (7-வது) நாளில் உப்பு வறுத்துக் கூட்டி, பின்னுல் ஓமப்பால் தேய்த்து, ஆரோக்கிய ஸ்நானஞ் செய்வாயாகவும்; இப் பத்தியத்தினுல் உண்டாகிய உஷ்ணங் தணியும்பொருட்டு, முற்கூறிய பாவனபஞ்சாங்குலத் தைலத்தை, இரவில் போஜனஞ் செய்த பின்பு ஒரு துட்டிடை அளவாகப் போதுமான நாள்வரைக்கும் உண்ணவும், இது நிற்க, முன் தைலத்தைக் குடிப்பதற்கு முற்காலங்களிலும் குடித்த பிற் காலங்களிலும் அந்த முறைக்குள் இருக்கிற முத்துக்கொட்டை நெய்யை மாத்திரம் நீக்கி, அதற்குப் பதிலாக நல்லெண்ணெயைச் சேர்த்து முடித்தைலமாக எரித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்து வரவும். இவ்வாறு தவருமல் நடந்தால் சமஸ்த தாதுக்களிலும் வியாபித்த விரணங்களும் வெட்டை முதலிய மேகமும், புண் களும், தினவுகளும், குஷ்டரோகங்களும் நமது ஆணைப்படிக்கு ஒழிந்து விடும். இதுவே, ஊழலாற்றிக் குடித்தைலமாம், எ-று.

மேகாரித் தைலம்

விருத்தம்

நற்புல விரத்தாக நெய்யொன் றரைப்படி
நகத்தயிர னந்தைகுப்பி
நாரியறு கசுவநில வாகைமோ ரடமுசலி
நவம்வகைக் கீரைம்பலஞ்
சொற்புனற் பதினுற டம்பொன்று பெண்காணி
துவர்வீழி மடிவல்லியை
தூராகி சங்கட்ச மார்க்கவ நவஞ்சடுஞ்
சுரசம்பதந் திரியொவ்வொன்

றற்புதச யாவேத்திரத் தாண்மது ஸ்மிகிழூ
வசையட்டி கறிதாளிச
மாயதொண் டாதிதிரி சேர்சேர ரைக்கால
ரைக்காலெலாம் பொடிசெய்பெய்
பொற்புற வடிறும் தஞ்சத்துநா ரிவைபுடப்
பொடிகடுகை பொரிவறலிலாம்
பொடியிவைந் தஃதஃது முட்டியிடு பட்டமிடு
புவியிலிடு கவியினுளே.

(இ-ள்.) நன்னிலத்தில் விளைந்த சிற்றுமணக்கு நெய் (படி 1½) ஒரு பாத்திரத்திற் சேர்த்ததில், பூச்சருக்கரைக்கிழங்கு, கொத்தான், சங்குப்பி, நன்னாரிவேர், வெள்ளறுகு, அமுக்கிராங்கிழங்கு, நிலவாகை, விழுதிவேர், நிலப்பனை சமூலம் என்னும் (9-ம்) வகை 1-க்கு (பலம்-10) ஆக நிறுத்திடித்துப் பாண்டத்திற் போட்டுப் பாயிரத்திற் சொல்லிய பிரகாரம் ஆற்றுச்சலம் (16-படி) ஊற்றிக் காய்ச்சிய கஷாயம் (1-படியும்) கற்றாழை, பொன்னாங்கணி, சிவந்தவிழுதி, தாழைவிழுது, அசுவகந்தியின் இலை, எலிச்செவிக்கள்ளி, சங்குப்பி, வெங்காயம், கரிசலாங்கன்னி என்னும் (9) ரசங்களுக்குள் ஆதிரசம் தொடங்கி (6) ரசங்களும் வகை 1-க்கு (¼-படியும்) மற்றைய (3) ரசங்களும் வகை 1-க்கு (படி-1-ம்) விட்டு, சூரத்துக்கடுக்காய், பிரப்பங்கிழங்கு, பறங்கிப் பட்டை, சீரகம், கருஞ்சீரகம், சோம்பு, அதிமதுரம், மிளகு, தாளிச பத்திரி என்னும் கற்கமருந்து (9) க்குள் கடுக்காய் முதல் (3-ம்) வகை 1-க்கு (சேர்-1-ம்) மற்றைய (6-ம்) வகை 1-க்கு (சேர் ⅛-ம்) ஆக தனித்தனியே வஸ்திரகாயஞ் செய்து அதிற் கரைத்து மிருதுவாக எரித்து வடித்துச் சுடுகை ஆறுவதற்கு முன்னம், கல்மதம், கற்பூரசிலாசத்து, கல்நார் இவற்றின் பஸ்பங்களும், கடுகுரோகணி, வெண்காரம் இவைகளை வறுத்திடித்த பொடிகளும் ஆகிய (5-ம்) வகை 1-க்கு (பலம்-1) விழுக்காடு தூவித் துழாவி அந்தக் கடத்திற்குச் சில்லிட்டுச் சீலைமண்செய்து பூமிக்குள் (4) நாள் வரையில் புதைத்து வைக்கக்கடவை, எ-று. (126)

இதன் மகிமை

விருத்தம்

நாளாகு நெய்யையிரு போதுமரை
யரைப்பளமுண் ணுளைந் தாறிற்
றூளாக வறுப்புப்பிட் டுண்ணேகா
தசநாளிற் றுப்பிட் டேயா

டாளாகக் கொளுமேக வனிலமுமே
கக்குழுவு மவற்றின் புண்ணும்
வேளாக மப்பிணியுங் கூழுறன்
மேகாரி விறனெய் யீதே.

(இ - ள்.) இவ்வாறு பூமியில் புதைத்து (4) நாள் சென்ற பின்பு எடுத்த மேகாரித்தைலத்தைக் காலை மாலை இரண்டு காலங் களிலும் ($\frac{1}{2}$-$\frac{1}{2}$-பலம்) விழுக்காடு (5) நாள் சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியமாக இருந்து (6-வது) நாள் தொடங்கி ஐந்துநாளும் வறுத்த உப்புக்கூட்டி உண்டு (11-வது) நாளில் பசுநெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வையாயில், உன்னை முறியாக்கிக் கொண்டிருக்கின்ற மேகவாத ரோகமும், மேகரோகக் கூட்டமும் அந்த மேகத்தினுல் பிறந்த விரணங்களும், கொக்கோக சாஸ்திர அனுபவத்தினு லுண்டாகிய பற்பல ரோகங்களும், உயர்ந்த தங் கத்தினிடத்தில் ஊறல் என்கிற குற்றம் எப்படி யில்லையோ அப்படிப்போல் இல்லையாய் விடும், எ-று. (127)

மேகத்தெண்ணெய்

நாற்சீர் ஆசிரிய விருத்தம்

செவ்வியவி லாங்கனிபெய் சிந்துபடி நாலில்
யொவ்வுசிறு சித்திரவிதை யோர்படிய வித்து
வவ்வியதி னெண்ணெய்கொடு மற்றதை நிகர்ப்பக்
கொவ்வைகொடி வேலிபனை கொன்றைவனம் வன்னி.

(இ - ள்.) செவ்விளநீர் (படி 4-ல்) (படி-1) சிற்றுமணக்குக் கொட்டையை இடித்துப் போட்டுக் காய்ச்சி மேற்படி கொட்டை யின் நெய் யெடுத்து அதில் கொவ்வை கொடிவேலி நிலைப்பனை கொன்றை துளசி வன்னியிலை இவைகளும், எ-று. (128)

இதுவுமது

வெள்ளறுகு சாறணைவி லாவிலையி டித்தே
கொள்ளிரத முஞ்சிறிய குண்டினிலிட் டுப்பி
லுள்ளிமிள கையவிமெ யோமமிந்து வாளம்
முள்ளிபறங் கிப்பொருண்மை முக்கடுகி ரண்டும்.

(இ - ள்.) வெள்ளறுகு காட்டறணை விளாவிலை இவைகளின் ரசமும் வகை 1-க்கு (1-படி) விட்டு இத்துடன் கொள்ளுகிஷாயம் (1-படி) விட்டு ஒரு பாண்டத்தில் சேர்த்து இதில் பூணைக்காஞ் சொறிவிதை, வெள்ளைப்பூண்டு, வெள்ளைமிளகு, சிற்றரத்தை,

பெருங்காயம், வெங்தயம், ஓமம், இந்துப்பு, சுத்தித்த நேர்வாளப பருப்பு, நரிவெங்காயம் இவைகள் வகை 1-க்கு ($\frac{1}{4}$-பலம்) ஆகவும், பறங்கிப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி இவைகள், எ-று. (129)

மயனத் தைலம்

விருத்தம்

சித்தக மனற்கலுப் பயிரோம மரிசனந்
தேம்பிசா சேழுமுறையே
சேர்தொடி சதுப்பதிற் றஃதஃ ததிற்பாதி
செப்பரைக் காலரைக்கா
லொத்த தொகை யிற்பாதி யிவைகளை
நெடுங்கடத்துள் ளடைத்தொருகலசமே
லுறவைத்து மண்ணிட்டு நூல்வரிந் தெழுசீலை
யொவ்வப் பரிந்திரண்டின்
சுத்தமத் தியமீது கீழ்பெரிது சிறிதாய்த்
துவாரமிட் டுயர்வழியின்வாய்த்
தூமமே காவணமு லோட்டமொடு கோமயந்
தோயப்பொ திந்திவணமே
சத்தமுறு முத்தான மிட்டதோ முகவழி
தனிற்பாத் திரஞ்சேர்த்துதா
சனஜயங் குலவவிடு முச்சாம மாவியொடு
தைலம் பிறந்திழியுமே.

(இ - ள்.) மஞ்சள், மெழுக்கு, சக்கிக்கல், வெள்ளையுப்பு, ஆற்றுமணல், ஓமம், கப்புமஞ்சள், மணமுள்ள சடாமாஞ்சில் என்னும் சரக்குவகை (7-ல்) கிரமாலங்காரமாக ஆதியிலிருக்கிற ஒரு சரக்கு (40-பலம்) உள்ள ஒரு வீசையும், அதற்பின்னிருக்கிற (2) சரக்குகள் அது அது என்கிற ஒரு ஒரு வீசையும், அடுத்த சரக்கு அதிற்பாதி என்கிற ($\frac{1}{2}$) வீசையும் அப்பால் (2) சரக்குகள் அரைக்கால் அரைக்கால் வீசைகளும், ஈற்றிலிருக்கிற ஒரு சரக்கு அரைக்காலில் பாதி என்கிற வீசம் வீசையும் ஆக நிறுத்து அவை களைக் கழுத்துநீண்ட குடத்திற்குள் முறைப்படி அடைத்து, மற்றொரு சிறு கலசத்தை இதன் வாய்க்குப் பொருந்தக்கவிழ்த்து மூடி அந்தச் சந்தின்வாய் மறைய மண்ணரைத்துப்பூசி நூற் கயிற்றினால் வரிந்துகட்டி அதன்மேல் எழுசீலைமண்செய்து, இவ் விரண்டு கடத்தின் நடுமையங்களில் மேற்புறம் பெரிதாகவும் கீழ்ப்புறஞ் சிறிதாகவும் இரண்டு துவாரங்களிட்டு, மேற்றுவாரத்

தில் புகை வெளிப்படாதிருக்கும் பொருட்டு ஒரு சிறிய ஓட்டினுல் அத்துவாரத்தை மறைத்து அதன்மேல் பசுவின் சாணத்தை அப்பி இக்கடத்தை ஒஞ்சரித்தபடியே ஒலிக்காநின்ற அடுப்பின் மிசை யேற்றிக் கீழ்முகத் துவாரத்தின் வழியில் ஒரு பாத்திரத்தை வைத்து அக்கினியைமூட்டி (3-சாமம்) நன்ருக எரிக்கில், புகை யுடன்கூடத் தைலம் பிறந்திருக்கும், எ-று. (130)

இதுவுமது

ஓர்நிறைபொ டித்தபொடி யோடதுது ழாவி
யார்கனலி லப்பருவ மானதில றிந்து
நேர்வதிலி றக்கிவரு நேயமிக நேயம்
பேர்சிறுக டத்திலொரு பெட்புறவ மைத்தே.

(இ-ள்.) (1-பலம்) ஆக நிறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து மேற்படி சரக்குகளுடன் சேர்த்துத் துழாவி எரித்து பக்கு வத்தில் வடித்து ஒரு பாண்டத்தில் விட்டு, எ-று. (131)

இதுவுமது

மதிமிகவொன் ருகவமர் வைத்தமுத நெல்லிற்
பதியவையெ டுத்ததொரு பண்புமிக வுண்டாம்
அதனையிரு போதுமமு தாகவுள ருந்திற்
சதிசெயுள மேகவினை சஞ்சலமி ராதே.

(இ-ள்) மேற்படி எண்ணெயை ஒருமாத காலத்திற்குமேலும் நெல்லில்வைத்து எடுத்து, அதனை காலை மாலை இரண்டுவேளை யும் சிறுகரண்டி யளவு அமுதமாகக்கொள்ள மேக உபத்திரவங் கள் ஒன்றும் இராது, எ-று. (132)

இதன் மகிமை

விருத்தம்

இழியுமிந்த வள்ளியத்தாந் தைலப் பேரை
யியம்புங்கா லர்த்தாங்க மிசுவு வீக்கம்
வழியுமுதி ரங்கொடுத்த வெட்டுக் காயம்
வளியதப்பு நரித்தலையின் வாய்வு சந்நி
அழியுமட வார்குறியாண் குறித்த ளர்ச்சி
யத்திசந்தி தசைநரம்பிற் கிளைத்த வூதை
யொழியுமிதைப் பட்டிகட்டிற் கைகால் சோர்வு
முறங்குவர்க ளுப்பொருளா மோதுங் காலே.

(இ - ள்.) இவ்வாறு மெழுகினால் இறங்கிய தைலத்தின் பெயரைச் சொல்லுமிடத்தில், வலியுள்ள அர்த்தாங்க வாதரோகமும், குழந்தைகளுக்குக் காணுகின்ற இசுவுகளும் வீக்கங்களும் ரத்தம் வழிந்தோடும்படி செய்கின்ற வெட்டுக்காயங்களும், நோயோடுங் கூடிய பீஜத்தின் வீக்கமும் நரித்தலைவாதமும், சந்நிபாதமும், பெண்குறித்தளர்ச்சியும், ஆண்குறித்துவளலும் கீல் எலும்பு மாமிசம் நரம்பு என்னும் இவைகளைப்பற்றி அதிகரித்த வாயுவும் நீங்கிப்போம். அன்றியும், இதைப் * பட்டி கட்டினால் கை கால்களில் உண்டாகிய சோர்வுகளெல்லாம் நித்திரைசெய்பவர் சொப்பனத்திற்கண்ட பொருட்போல் பொய்மையாய்விடும், எ-று. (133)

சாரணைக்கள்ளித் தைலம்

விருத்தம்

நளியனற் சிதமிந்திர வல்லபிசு கங்குடமென்
 ஞளும்பி ணங்குதிருடி
நவிலேழுண் முதலைந்தொவ் வொன்றரைத் துலையுக
 நாட்டலெ ணிரண்டிரண்டாந் [ளி
தெளிபுவன மூடங்கு வாதஞ் சிவங்கடுகை
 திரிகடப் பலைகடுகுவேர்
செவ்வலிவி மூலசல வேம்புசவி யந்துவர்ச்
 சிகைசிங்கி யசமோதகங்
களிறினம் பமிர்தையிங் கட்டுப்பு சசிமகங்
 காண்வகைக் கொருதொடி கொண்முக்
கண்ணியமு திழையவமு தெணெயுமொவ் வொரு
 காற் கலக்கெலா மட்டிகுவடிநெற்
குளிருமுத் தினமமைத் தொருமருப் பிபமுகத்
 தொருகருத் தணையருச்சித்
துண்கழஞ் சிதுசார ணைக்கள்ளி நெய்யாம்பி
 னூதியம் புகல்வாமரோ.

(இ - ள்.) வெள்ளைச்சாரணை, சித்திரமூலம், வெண்சிவதை, முடக்கற்றான், உத்தாமணி, சதுரக்கள்ளி, எப்போது முறுக்கிக்கொண்டே வளருகின்ற திருகுக்கள்ளி என்னும் இவற்றுள் ஆதியிலிருக்கிற (5-ம்) வகை 1-க்கு (½-துலை) என்கிற (50-பலமும்) அடுத்த (2-ம்) வகை 1-க்கு (100-பலமும்) ஆக இவ் (7-

* பட்டி கட்டல் என்பது: மெல்லிய சீலையைத் தக்கபடி பாளமாகக் கிழித்துத் தைலத்தில் நனைத்து அவயவங்களிற் சுற்றப்படுவதாம்.

வகை) வேர்களையும் பஞ்சுபோலிடித்து இதில், தெளிந்த ஆற்றுச் சலம் (8-மரக்கால்) ஊற்றி எரித்து ஒரு மரக்கால் கஷாயமாக வடித்து கடுகுரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல் லிக்காய், தான்றிக்காய், கடுகு, திப்பிலிமூலம், செவ்வள்ளிக் கொடி, விழாலரிசி, நிலவேம்பு, செவ்வியம், துவர்ச்சிகை, கர்க் கடகசிங்கி, ஓமம், யானைத்திப்பிலி, வெள்ளைப்பூண்டு, பெருங் காயம், காய்ச்சலவணம், இந்துப்பு என்னும் கற்கதிரவியம் (21-ம்) தனித்தனியே வஸ்திரகாயஞ் செய்து வகை 1-க்கு (பலம்-1) ஆக கூட்டித் தேங்காய்ப்பாலால் அரைத்து அதில் கரைத்து அந்தத் தேங்காய்ப் பாலும் நல்லெண்ணெயும் வகை 1-க்கு ஒரு மரக்கால் விழுக்காடு விட்டுக் கலக்கி எரித்து மெழுகு பதத்தில் வடித்து நெல்லுக்குள் (6-நாள்) புதைத்து வைத்து ஒரு கொம்புள்ள யானைமுகக் கடவுளாகிய விநாயகமூர்த்தியைப் பூசித்து 7-வது நாளில் எடுத்துப் பதனம் பண்ணிக்கொண்டு இதை வேளைக்கு ஒரு கழஞ்சி அளவையாக உண்ணக்கடவை. இதுவே சாரணைக்கள்ளித் தைலமாம். இதன் பிரயோசனத்தை யும் இனிச் சொல்லுவாம், எ-று. (134)

இதன் மகிமை

விருத்தம்

ஊதலீ னமைவலி யுன்மாத மூர்ச்சை
யுள்வெளி வித்திரதி குடருக்கு ணீங்கா
நோதல்விரு தாங்குன்ம முதற்பன் னோயு
நோக்கிலார்க் காங்காட்சி யடனோய் கட்குப்
பீதலிலாப் பத்தியமற் றையநோய்க் கெல்லா
மிச்சாபத் தியஞ்சமனே யேய்க்கு மின்னுர்
காதலொழித் தல்குமண்ட லங்க ளேனுங்
கணக்கொடுண் டாரோக்கியமுங் கருதிச் செய்யே.

(இ-ள்.) இந்தச் சாரணைக்கள்ளித் தைலத்தைக் காலையில் மாத்திரம், ஒரு கழஞ்சிப் பிரமாணமாகச் சாப்பிட்டால், வாத ரோகக் கூட்டமும் (5) வகை வலிகளும் உன்மாதரோகமும் மூர்ச் சாரோகமும் உள்வித்திரதி வெளிவித்திரதி என்கிற கட்டிகளும், குடலைப் பற்றிச் சதாகாலமும் உபத்திரவஞ் செய்கின்ற குன்ம ரோகமும், மாதர்களுக்கு ருதுகாலந்தோறும் வயிற்று நோயைத் தராநின்ற ரத்தகுன்ம முதலிய பல ரோகங்களும், கண்ணில்லாத பிறவிக் குருடர்களுக்குண்டாகிய காட்சியைப்போலில்லை யென்ப தாம்; இதை உண்ணுங்காலத்தில் வன்மையுள்ள ரோகங்களுக்கு

உப்பில்லாப் பத்தியமும், மற்றைய அற்ப ரோகங்களுக்கு இச்சாப் பத்தியமுமாக இருந்து நமனை யொத்த மாதர் விருப்பத்தை ஒழித்து அவசியம் ஒரு மண்டல நாள் வரைக்கும் உண்ண வேண்டும் அல்லது அதற்குக் குறைந்த ($\frac{3}{4}$-$\frac{1}{2}$-$\frac{1}{4}$) என்கிற மண்டலங்களாகவாவது கணக்குடன் கிரமமாக உண்டு முறைப்படி ஆரோக்கிய ஸ்நானமுஞ் செய்யக்கடவை, எ - று. (135)

சூலைக்குடாரத் தைலம்

விருத்தம்

கடுநளி கடுக்கை வில்வங் கனற்சுவா தருப லார்த்தங்
கப்படி யிருமூன் றங்கிக் கஞ்சது ரத்தொன் றீதே
விடுமணி யவிழும் மூர்த்தி வெள்ளுள்ளி சயிந்த வம்விட்
விரேசனி கடுகை யேழும் விதத்திற் கிருக மூஞ்சா
யடுபுன லிழைத்தாக் குண்மூன் றல்கலும் முறைபுண்பத்தி
யங்கடி தெளிமை யாயு மகர்முகந் தொடிகா லாகக்
கொடுவிட வனிலச் சூலைக் குலங்குக னெதிர்சூர்ப் போலாங்
கூறுநூ லிதனைச் சூலைக் குடாரவன் றயில மென்றே.

(இ - ள்.) கடுக்காய், வெண்சாரடை, சரக்கொன்றை, வில்வம், சித்திரமூலம், ஆடாதோடை என்னும் (6) வேர்களும் வகை 1-க்கு (பலம்-$\frac{1}{2}$) ஆக இடித்து (6) படி சலம்விட்டுக் காய்ச்சி வடித்த (1$\frac{1}{2}$-படி) கஷாயத்தில் (1$\frac{1}{2}$-படி) முத்துக்கொட்டை நெய்யைச் சேர்த்து, அதில் மும்மூர்த்திகள் என்கிற சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, இந்துப்பு மலத்தைத் தள்ளுகின்ற வாளப் பருப்பு, கடுகுரோகணி என்னும் (7) கற்க மருந்தும் வகை 1-க்கு (2) கழஞ்சு அளவாகப் பொடித்து மேற்படி கஷாயத்தினுல் அரைத்துக் கரைத்துத் தைலபாத்திரத்தில் ஊற்றி எரித்துப் பக்குவத்தில் வடித்து வைத்துக்கொண்டு, இதைக் காலையில் மாத்திரம் (3) நாளைக்கு ($\frac{1}{4}$-$\frac{1}{4}$-பலம்) விழுக்காடு நோய்களின் பலாபலங்களுக்குத் தக்கபடி உப்பில்லாப் பத்தியமும் இச்சாப் பத்தியமும் ஆக இருந்து சாப்பிடக்கடவை; இவ்வாறு (3) முறை சாம்பிடுவையாகில், பொல்லாத விஷத்தைப்போலக் கேட்டை விளைக்கின்ற வாதசூலை முதலிய சூலைரோகக் கூட்ட முழுவதும் (எமது ஏயனுகிய) சுப்பிரமணியக் கடவுள் முன்பாக வந்தெதிர்த்த அசுரகுலம்போல் நாசகதியை யடையும். இதனை வன்மையுள்ள சூலைக்குடாரத் தைலமென ஆயுள்வேதஞ் சொல்லும், எ-று. (136)

* தூர்வைத் தைலம்

விருத்தம்

கணபதி யணிமூ லந்தோற் கணுத்தளி யைந்து வீசை
கறையிடித் தீதிற் காரி யஞ்சொரிந் தீரெட் டொன்றுத்
தணலிலட்டியநீர் வாங்கித் தத்துவயம் பாற்பா லெண்ணெய்
சாரவிட் டடுப்பி லேற்றித் தனிவிற கெரித்த ளாவிக்
குணமுறு பதத்தி றுத்துக் குளிவளி மூல வன்னி
கொண்டபன் மருந்தின் வெப்பு குறிவயிற் றெரிவ ழற்றீ
மணமிகு கிரந்தி பித்தம் ம ர்புநோய் கபாலச் சூலை
வறட்சிநீர்க் கோவையும்போ மாதூர்வைத் தைல மீதே.

(இ - ள்.) கணங்களுக்கெல்லாம் பதியாகிய விநாயகருக்கு மாலையெனச் சொல்லப்படுகிற அறுகம்புற் கிழங்கினது தோலை யும் கணுக்களையும் நீக்கி (5-வீசை) நிறுத்து உரலிலிட்டு இடித்து இதில் (4) மரக்கால் சலம்விட்டு எரித்து (16-ல்) ஒன்ருகச் சுருக் கிய கஷாயத்தைத் தைலபாத்திரத்தில் வடித்து இதற்கிரண்டு பங்கு பசும்பாலும், பாலுக்கு அரைப்பங்கு நல்லெண்ணெயும் விட்டு அடுப்பின்மிசை வைத்து ஒருசாதி விறகினுல் எரித்துத் துழாவி வாதம் முதலிய மூவிதத் தேகிகளுக்கும் நற்குணத்தைச் செய்யாநின்ற பாகங்களில் வடித்து வைத்துக்கொண்டு இதை முறைமைப்படிக்கு ஸ்நானஞ் செய்வாயாகவும்; இதனுல் வாத ரோகமும் மூலச்சூடும் பற்பல மருந்துகளால் ஏறிய உஷ்ணமும் ஆண்குறி வயிறு என்னும் இவ்விடங்களைப்பற்றிய எரிவுகளும், அழலையும் துர்வாசனை மிகுந்த அழுகிரந்திகளும் பித்தரோகமும் ஹிருத்வாதமும் கபாலச்சூலையும் சொறிகளும் நீர்க்கோவை என் கிற பீநசமுதலிய ரோகங்களும் நீங்கிவிடும். இதுவே பெருமை யுள்ள தூர்வைத்தைலமாம், எ - று. (137)

சவுரித் தைலம்

விருத்தம்

செய்யசவு ரிக்கனிநூற் றிரட்டியிரு தூணியாஞ்
சேர்த்தெ ரித்துப்
பையவீரெட்டி லொன்றேற்றெ ணெய்படிவிட்
டுபகுஞ்சம் பலமி ரண்டிட்
டையமுரு தப்பருவம் வடித்தோராண் டாடிடிற்குட்
டரிக ரப்பான்

* தூர்வை என்பது அறுகம்புல்.

வெய்யமருத் தணிமருட்காய் களவதப்பும் போஞ்சவுரி
யெண்ணெய் யீதே.

(இ - ள்.) சிவந்த சவுரிப்பழம் (200) கொண்டுவந்து கல்லுரலில் இடித்து ஒரு பாண்டத்திற் கொட்டி பதக்கு சலம்விட்டு மெதுவாக எரித்து (16-ல்) ஒருபங்காக வடித்த கஷாயத்தில் நல்லெண்ணெய் (படி-1) விட்டு (2-பலம்) கருஞ்சீரகத்தை மேற்படி கஷாயத்தா லரைத்துக் கரைத்து எரித்துச் சந்தேகமறப் பாயிரத்திற்கூறிய பக்குவப்பிரகாரம் வடித்து வைத்துக்கொண்டு இதை விதிபோல் ஒருவருடம் ஸ்நானஞ் செய்குவையாகில், குஷ்டரோகமும், வாதக்கரப்பானும், உஷ்ணவாதரோகமும், தேகமுற்றிலும் வரிசை வரிசையாக எழும்புகின்ற மருட்காய்களும், கழுத்தின் வீக்கமும் போய்விடும். இதுவே மிருதுவாகிய சவுரித் தைலமாம், எ - று. (138)

கேசரஞ்சகத் தைலம்

விருத்தம்

பத்துப்பத் தடுக்கிய*சோ சக்காய் நீரைப்
பரிகரித்தத் துளைவழியே பரிப்பூ லாசங்
கொத்துக்கொத் தாப்பழுக்கும் பழத்தைத் தூர்த்துக்
குழைமதிநாட் புதைத்தழுகிக் குழைநீ ரேற்றெட்
சத்துச்சத் திரண்டுபடி விடுத்தெ ரித்துச்
சமையாடிற் கேசரஞ்ச கத்தைக் கண்டோர்
சித்துச்சித் தென்பவெழு மாட நின்று
சிகையவிழ்க்கப் பூப்புரட்சித் திறத்தா லென்னே.

(இ - ள்.) தேங்காய் (100) கொண்டுவந்து அவைகளில் முளையெழும்புகின்ற கண்களைத் திறந்து சலத்தையெல்லாம் ஊற்றிவிட்டு அத் துவாரங்களின் வழியாகக் கொத்துக் கொத்தாகக் காய்த்துப் பழுக்கின்ற கறுப்புப் புல்லாந்திப் பழங்களைக்கொண்ட மட்டும் உட்செலுத்தி அத்துளைகளில் முளைகள் இறுக்கி அக்காய்களின்மேல் களிமண்பூசிச் சலமுள்ள சேற்றுக் குழிக்குள் ஒரு மாதம் வரைக்கும் புதைத்துவைத்து அவற்றுள் இருக்கிற பருப்புகளும் மேற்படி பழங்களும் நன்ருக அழுகிக் குழைந்து குழம்பிய சலம்போல் இருக்குந் தருணத்தில் அவைகளை எடுத்து முன்பு இறுக்கிய முளைகளைப் பிடுங்கிவிட்டு உள்ளிலிருக்கும் குழம்பையெல்லாம் தைலபாத்திரத்தில் சேர்த்து அதில் (2-படி) நல்லெண்

* சோசக்காய் என்பது தேங்காய்.

ணெய்விட்டு தீபாக்கினியாக எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு இந்தக் கேசரஞ்சகத் தைலத்தை முறைப்படி ஒரு வருஷம் ஸ்நானஞ்செய்து நீ ஏழு உப்பரிகைமேல் நின்றுகொண்டு உன் கேசத்தை அவிழ்த்தால் அது பூமிவரையில் புரளும். அந்த விநோதத்தைக் கண்டவர்கள் உன்னை மாயவித்தைக்காரனெனச் சொல்லுவார்கள் எனக் கருதுவாயாக, எ-று. (139)

மகா மேகராஜாங்கத் தைலம்

கலி வெண்பா

ஆரண மாதி யனைத்துந் தருங்குடிலை
வாரண மாமுகன்றாள் வாழ்த்தியே—பூரணமா
மேகரா ஜாங்கத் தைல விதிதனைச்செய்
பாகமா ரப்புவியிற் பண்ணுவாம்—பாகார்
திரியட்சி நீராடித் தேர்ந்தவெண்ணெண் ணெய
மரியார் பவப்படியா வாரை—எரிகுடிநீர் [தாந்
வெந்தமுத்தங் கான்றிடுநெய் வெணணிரைநெய் யைந்தைந்
தொந்தமுறச் சேர்குடிநீர் தூவிரத—மிந்தவகை
மூவைந்தா மாதி முதற்குடிநீர் கேளிருவேர்
பாவுந் தராசயை பரிக்கந்தி—வாவியுணுய்க்
கொட்டிநறு நீண்டிசங் குப்பி பதரிசிற்று
முட்டியையங் கோலநீர் முள்ளிசெந்—தொட்டிநன்
ஞரிசில்லி பூலிஞ்சி நாயுருவி வில்வநத்தைச்
சூரிமுடக் கற்றான் சுரசிகண்ட—காரிமாலை
தாங்கிதிரி கண்டகைவெண் சாறடையை யைந்தோடொன்
றுங்குவகைக் குப்பலமோ ரைந்திடித்திட்—டோங்குதுறை
யந்தொலையோர் சோடசம்பெய் யத்தொகையி லோர்பங்கா
செந்தழனீர் வாங்குகந்தஞ் செப்புவாந்—தந்திமருப் [ச்
பல்லிவா ராகிசிக்கு வைசின்னி முஸ்தைபிரம்
பெல்லிமலை முக்கருணை யிந்திவர—நல்லூரிசைச்
சேனைகொட்டி மாகாளி சேர்ந்ததொகை மூவைந்தும்
பானையிலா தித்தொகையாப் பாய்ச்சியதிற்—பானீயந்
தூணிவிட்டுக் காய்ச்சியதைச் சோடசத்தொன் றுயிறுபு
ராணிக் கடாயங்கே ஞரநெல்லி—யாணரசா
லத்திகணி வாகைமுருக் கையிருவேற் றேறுநிம்ப
மித்திகாட் டாத்தி யிருப்பைகவிர்—கொத்திதழி

பூவரசு முள்ளிலவு புன்கு வெறிக்கடுக்காய்
மாவிலிங்குப் பட்டை மருதருண—நாவ
விளவிரிசு சென்னகரை யெண்ணிருபத் தேழு
மளவையஃ தம்புமஃ தாப்பெய்—முளரியெரித்
தெண்ணிரண்டி லொன்ருக் கிலதைச் சிரிதமுண
ருண்ணழற்காய்ப் பிச்சி யுரகவல்லி—வெண்மைமணிக்
குன்றிமுசுக் கையைந்துங் கூறுதொடி யாத்தாழி
பொன்றப்பெய் நீருமுன்போ லொன்ருக்கொள்—ளென்றும
தீக்கணமூ லிக்குடிநீர் செம்முள்ளித் தண்டனலந் [தி
தீக்கபன்னித் தண்டுசெங்கீ ரைத்தண்டு—வேர்க்களுசி
யைந்திடையு மம்பும்வெந்த வன்னீரு மவ்வணமே
வந்தசர்வ சாரக்கு வாதந்தேர்—முந்திளம்பெ
ருரைசிறு சின்னிபற்ப டாம்வெள் ளறுகுவல்
லாரைக ரந்தையரிக் காந்திகாந்—தாரிநவ
மொவ்வொன்றுக் கவ்விடையப் பூற்ருறு தூம்பட்டி
யவ்வறலைச் சோடசத்தொன் ருகவடி—செவ்விருந்தத்
தாம்பாக்கி யம்புகல்வா மான்முசலிக் கொங்கைகணற்
காம்பாங் கரீரங் கரும்புறந்தெங்—காம்பாளை
மட்டைகளப் பங்கா மசியவிடி சூர்ப்பநீர்
விட்டெட்டி மொன்ருக்கொண் மென்றளிர்மே—லட்டக்கே
சாம்புகந்தம் வாகைபுன்கு சண்பகம்ப ருந்தேக்கு [ள்
வேம்பு முறைமசக்கி மெய்த்தொடரி—யோம்புபுளி
யாரை மருகொழுந்த ராளம் பதின்மூன்றுஞ்
சேரைந்தைந் தாக்கோணித் தீம்பசும்பால்—வாரெரித்திட்
டட்டபா கத்திலொன் ருக்கடைச்சா ரேதுவா
மட்டிலைதக் காளிம காபலைபொன்—முட்டை
பிரமிவிளா பச்சரிசி ப்பீளைசங்கு வேளை
கரிசாலை மேனிகண்ட காரி—யரியிலவு
காகமா சிப்பாது கைமோ ரடமுருக்கு
நாகமல்லி நொச்சிமே ஞடுகந்த—வாக
னடக்கி தகரை யறுநான் குபயப்
படிக்கெஞ்சா தீட்டொவ்வோர் பாற்கு—வெடித்தமலர்ச்
சாரநிர்த்து கம்பயில்வாஞ் சம்பங்கி கூவிளமந்
தாரைசம்பு மாகமுகு தாழைநற்புன்—காரேவ
தங்குலிக நந்தியலர் தான்றி கவிர்மயிலை

தெங்குடுண்டு கந்தளவஞ் செங்கழுநீர்—பங்கயப்பூ
வல்லிபிச்சி மூவேழு மத்தளிரெண் செவ்விளநீர்
புல்லவிரு தூணிவிடு பொங்கவிடு—மெல்லப்
பதினறி லொன்றெடுப மூச்சுரசஞ் சொல்வா
மதுமாங் கனிமாது லங்கங்—கதலியா
வாரங்கொ ளுஞ்சிநறு மாதுலமுட் சங்குதிரு
நாரமுருக் கீந்தீச ஞரணிமா—லூரமித்தி
தேறுவிள வைம்மூன்றுட் டேர்முதலொன் பான்வகையுஞ்
சாறுகச்சங் காற்காற் சடுவகையும்—வேறுவே
றீரம் புலர்த்திமுட்டி யீரைந்தீ ரைந்தாமோர்
சேரங் கிருதூணி சிற்றெரிகொண்—டாரவடி
நன்ஞன்கி லொன்ருய் நவில்வாம் விதைக்குடிநீர்
சென்ஞ யுருவிகழற் சேங்கொட்டை—முன்மதலை
யாவரை விளாவருக்கை யாமணக்கு மோசையில்லம்
பூவரசு தாடிமம்பூ ஊைக்காலி—கூவிளநீர்க்
கண்டகியி ரண்டுடைமுக் கண்டகிது வஞ்சூரி
விண்ட விருபான் விதைவகைக்கி—ரண்டுபலந்
தாக்கி யிடித்தரம்பைச் சாறுருதூ ணிக்குள்விட்
டாக்கிக் கனிநீ ரளவிலெடு—மாக்கதம்பப்
பாக்கியங் கேண்முப் பலைவான் மிளகுசிறு
தேக்கரத்தை தானியகஞ் செவ்வள்ளி—தீக்கடுகு
தேவதா ரங்காட்டுச் சீரகமும் மஞ்சள்கிராம்
பூவவிலை தொக்குசத புட்பிமதப்—பூவுபய
நாகமலர் குக்கி னதமிருசந் தோமங்கார்
போகிநுசை மேதை புணரிநுரை—யாகளர
சங்கடக ரோகணிச டாமாஞ்சிற் கற்கடக
சிங்கிவிடை சீனமஞ் சிட்டிவே—ரிங்காயிற்
பட்டைகிளிப் பட்டைசர பக்கோடு வண்டுகொல்லிப்
பட்டையப்பூ காரஞ்செம் பஞ்சமல—னிட்டமணி
கல்லாரும் பாசிவிளங் கங்கோலை மாக்கோடிற்
றில்லாக்க டாரிக்கோ டேணக்கோ—டல்லாய
சீரகமின் பூருவேர் தேசா வரந்தவள
வீருளிகாட் டுள்ளிநிம்பத் தின்சளிகத்—தூரிகைவெண்
பாதிரியின் கீலம்வெட் பாலைவிதை கற்காவி
வேதி வசுவாசி மேதிவசை—பீதமெனு

மாரோ கணிகுரும்பை வாரியி ருஞ்சியுரி
காரார் வலம்புரிக ஜக்கணையெண்—ணேரெழுபா
ணேடேக மொவ்வொன் றுணர்தி களஞ்சிரண்டா
யேடகநீர் நன்னுன் கெனும்படிவிட்—டாடெரிநீர்
பையவடி முன்போற் பகர்வா முபரசநீர்
துய்யமுத்தத் தோடுதுகிரி ரத்த—மையெனுங்கற்
காருடப் பங்சைச்சி கன்மதஞ்சீ னப்பட்டை
நாரொடுமுக் குந்திருக்க நற்றூபந்—தேரவையீ [ணித்
ரேழுவகை யொன்றினுக்கொன் றேதொடிகாண் முச்குரு
தாழைநீர்க் குட்சோட சத்தொன்ருக்—காழி
வலியான் மணிப்பிளவு மாத்திரமொன் றட்டுச்
சலியாதே யட்டாட்டந் தானும்—பலமதற்கம்
பிற்கட னெட்டந்தநீ ரெவ்வளவிங் கவ்வளவே
கற்க வகைமேற் கழறுவாந்—தக்கவர்சொல்
லாதி மருந்தை யரிதார யைங்காயஞ்
சாதிசமப் பத்திரஞ்ச வுக்காரம்—பூதமெரி
யேல மிலவ மிலவத்தோ ணரியுரம்
பூலை சிறுநாகப் பூமதுர—மாலரும்பு
தாளீசம் பச்சை தகரமசை கோட்டமெந்த
நாளுமுறு முப்பழமெண் ணுன்கும்வடி—தூளா
யரைவகைக்கு நிட்கமுக்கா லாப்பாற் கடத்திற்
கரைநீர் முழுதூங் கலந்தந்—நுரையடங்கா
முன்னம்வெள்ளைப் பாற்றூணி மொண்டி டகருளி
தன்னிலுரைக் காப்பணிநந் தந்திமுகன்—மின்னயிலோன்
ருண்மலர்களைப்பணிசந் தர்ப்பணைசெய்தக்கலத்தைச்[மொக்
சேண்மலிசோ பாலிகைவை சேர்வையைப்பெய் நாண்மலர்
குள்ளரும்பா யுள்ளரும்பா யுள்ளரும்பா யுள்ளரும்பைத்
தள்ளியெ ழும்புன்மைத் தாணுதியாய்—மெள்ளமெள்ள
ஏகமண்ட லங்காறு மேமபுட்பி யிந்தனத்தாற்
பாகமுறப் பாவகனைப் பாவவிடுத்—தாகுமட்டும்
வெள்ளிநகங் காக்கும் விறலோன் றணைப்பூசித்
துள்ளிலடிப் பற்று துறத்துழவி—வள்ளியநேர்
கண்டொருநெற் பாசனத்துட் கற்பனங்கம் பிச்சிதுவர்க்
கண்டலரக் குச்சண்ப கத்தலரைந்—தண்டவொரு
வீசை வகைக்கிடதன் மேன்மிருக நாவிரத்தம

வாசமிரு காண்டஞ்சவ் வாதுகோ—ரோசனங்கற்
பூரமிவை யாறின் பொடியிறைத்தோ ரைந்துநிட்க
மாரும்வகை யொன்ருென் றதிலிறுத்துப்—பூருதிரு
நிட்கமதிற் றூவி ஞெகிழியுண நோய்முழுது
முட்கமுக் கோரிகைநெய் யூற்றந்த—மட்கடமேற்
சில்லிட் டொருதெய்வஞ் சென்ற முகிற்பெயர்கொ
ணெல்லிட்டு மண்டலநா ணீக்கியெடுத்—தில்லிட்டு
மாமுகனைப் பேணி மறையவர்கட் கும்பதமிட்
டோமா குதிகள்புரிந் தூழ்விலக்கிச்—சேமமுறத்
தொட்டா டிஃதே துதிமேக ராஜாங்க
மட்டாங்க யோகத் தருந்தவரு—மெட்டா
நிலையுணர்ந்த சித்தர்களு நீடாயுள் வேதத்
தலைமையரு மித்தைலந் தன்னைப்—பலவாய்
விரித்துரைத்தா ரிங்ஙன் மிகச்சுருக்கிச் சொன்னும்
பரித்துலகம் வாழ்கப் பரிந்து.

(இ - ள்.) வேதமுதலிய சகலகலைகளையும் தராநின்ற பிரணவமே திருமேனியாகவுடைய யானைமுகப் பிள்ளையினது திருவடிக் கமலங்களைத் துதித்து பூரணத்தன்மையினை வாய்ந்த மகா மேக ராஜாங்கத் தைலத்தினது செய்பாகமுறையைப் புவியில் யாவரும் எளிதில் உணரும்படி சொல்லுவாம்.——செவ்விளநீரால் வெளுப் பாகக் கழுவிச் சுத்திசெய்த எள்ளெண்ணெய் (படி-10-ம்) ஆவாரை சமூலக் குடிநீரால் வேகவைத்து ஊற்றிய சிற்றுமணக்குநெய் (படி-5-ம்) வெள்ளைப்பசுவினது நெய் (படி-5-ம்) ஒன்றுபடக் கலந்துகொள்——இதில் சேர்க்காநின்ற வேர், கிழங்கு, பட்டை, கொடி, தீக்கணமூலி, சர்வசாரம், விருந்தமடல், தளிர், இலை, பூ, கனி, கதம்பம், உபரசம், மிளகு என்னும் (15) வகைக் குடிநீர்களையும், பரிசுத்தமான ரசவகைகளையும், முறையே கூறுவாம்; (1-வது வேர்வகை குடிநீர்) வெட்டிவேர், விலாமிச்சு, பம்பந்தரா, முன்னை, அமுக்கிரா, சலத்திலிருக்கின்ற நாய்க்கொட்டி, நறுநீண்டி, சங்குப்பி, இலந்தை, சிற்றுமுட்டி, அழிஞ்சில், நீர்முள்ளி, செந்தொட்டி, நன்னரி, சிறுகீரை, பூலா, இஞ்சி, நாயுருவி, வில்வம், நத்தைச்சூரி, முடக்கற்றான், வெண்ணொச்சில், கண்டங்கத்தரி, மலைதாங்கி, நெருஞ்சில், வெள்ளைச்சாரணை என்னும் வேர்கள் (26-ம்) வகை-1-க்கு (பலம்-5) ஆக இடித்துப் பாண்டத்திலிட்டு (16) மரக்கால் ஆற்றுச்சலம்விட்டு (1) மரக்கால் கஷாயமாக வடித்துக்கொள்; (2-வது கிழங்கு வகை குடிநீர்) முள்ளங்கி,

அல்லி, நிலப்பனை, தண்ணீர்விட்டான், சின்னி, கோரை, பிரம்பு, தாமரை, கருணை, காராக்கருணை, புளிக்கருணை, நெய்தல், சேனை, கொட்டி, மாவலி என்னும் கிழங்குகள் (15-ம்) வகை-1-க்கு (பலம்-5) ஆக இடித்து (4-மரக்கால்) சலம்விட்டு எரித்து (16-ல் 1-ஆக) வடித்துக்கொள்; (3-வது பட்டைவகை குடிநீர்) நாரத்தை, நெல்லி, ஆண் அரசு, ஆல், அத்தி, வேங்கை, காட்டுவாகை, முருங்கை, வெள்வேல், கருவேல், தேற்றான், வேம்பு, இத்தி, காட்டாத்தி, இலுப்பை, முருக்கு, சரக்கொன்றை, பூவரசு, முள்ளிலவு, புன்கு, பேய்க்கடுக்காய், மாவிலிங்கு, மருது, எலுமிச்சை, நாவல், இளவிரிசு, சென்னகரை என்னும் மரப்பட்டைகள் (27-ம் வகை-1-க்கு பலம்-5-ஆக) இடித்து (4) மரக்கால் சலம்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (4-வது கொடிவகை குடிநீர்) மிளகு, பிச்சி, வெற்றிலை, வெண்குன்றி, முசுமுசுக்கை என்னும் கொடிகள் (5-ம்) வகை-1-க்கு பலம்-5)ஆக தறித்திடித்து (4) மரக்கால் சலம்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (5-வது அதிதீக்ஷணமூலிகை குடிநீர்) முள்ளிக்கீரைத்தண்டு, சித்திரமூலம், மொசந்தன் வாழைத்தண்டு, செங்கீரைத்தண்டு, வேரையுடைய சீந்தில் என்னும் தீக்ஷண மூலிகைகள் (5-ம் வகை 1-க்கு பலம்-5) ஆக இடித்து (4) மரக்கால் சலம்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (6-வது சருவசாரக் குடிநீர்) முதிர்ந்த கற்றாழை, நீராரை, சிறுசன்னி, பற்பாடகம், வெள்ளறுகு, வல்லாரை, பெருங்கரந்தை, விஷ்ணுகாந்தி, சிவனார் வேம்பு என்னும் சருவசாரமூலிகைகள் (6-ம்) வகை-1-க்கு (பலம்-5) ஆக இடித்து (6) மரக்கால் சலம்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (7-வது விருந்தம் மடல்களின் குடிநீர்) ஆலம் விழுது, தாழைவிழுது, மூங்கிற்போத்து, பனம்பாளை மேற்படி மட்டை, தென்னம்பாளை மேற்படி மட்டை என்னும் விருந்தம் மடல்கள் (7-ம்) வகை-1-க்கு (பலம்-5) ஆக மசிய இடித்து (4) மரக்கால் சலம்விட்டு எரித்து (8-ல் 1-க்கு) ஆக வடித்துக்கொள், (8-வது தளிர்வகை குடிநீர்) நாவல், முருங்கை, வாகை, புன்கு; சண்பகம், பெருந்தேக்கு, வேம்பு, முறைமயக்கி, மெய்த்தொடரி, புளியாரை, தவனம், கொழுந்து, இருவாட்சி என்னும் இளந்தளிர்கள் (13-ம்) வகை-1-க்கு (பலம்-5) ஆக இடித்து (8) மரக்கால் சுவை பொருந்திய பசுவின்பால்விட்டு எரித்து (8-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (9-வது இலைவகைச்சாறு) பச்சிலை, தக்காளி, வில்வம், பொன்முசுட்டை, பிரமி, விளா, அம்மான்பச்சரிசி, சிறுபீளை, முட்சங்கு, நல்லவேளை, கரிசாலை, குப்பைமேனி, கண்டங்கத்தரி, துளசி, இலவு, மணத்தக்காளி, சிறுசெருப்படை, விழுதி,

கண்ணுலமுருக்கு, வெற்றிலே, வெண்ணெச்சில், பொன்னுங் காணி, வாதமடக்கி, தகரை என்னும் இலேகள் (24-ம்) வகை 1-க்கு சாறுபடி (2-ஆக) பிழிந்துக்கொள்; (10-வது புட்பவகை குடிநீர்) சம்பங்கி, வில்வம், மந்தாரை, நாவல், மா, பாக்கு, தாழை, நல்லபுன்கு, சரக்கொன்றை, இலுப்பை, நந்தியாவட்டம், மரு தோன்றி, முருக்கு, வெட்சி, தெங்கு, வாகை, முல்லே, செங்கழு நீர், தாமரை, அல்லி, பிச்சி என்னும் புட்பங்கள் (21-ம்) வகை 1-க்கு (2-படி) ஆக சேர்த்து செவ்விளநீர் (8) மரக்கால் விட்டு 16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (11-வது பழரசம்) தேமா, கொமட்டிமாதுளே, பேயன்வாழை, கொடிமுந்திரி கொளுஞ்சி, தித்திப்பு மாதுளே, சங்கம், உதிர்ந்தநாரத்தை, எலுமிச்சை, பேரீச்சி, கொன்றை, வில்வம், இத்தி, தேற்ருன், விளா என்னும் பழங்கள் (15) னுள் முற்கூறிய (9-ம்) வகை-1-க்கு மரக்கால் ($\frac{1}{4}$-ஆக) பிழிந்துக்கொள்; பிற்கூறிய (6-ம்) ஈரம் உலர்த்தி வகை 1-க்கு (பலம்-10) ஆக சேர்த்து (8) மரக்கால் பசுவின் மோர்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (12-வது வித்துவகைக் குடிநீர்) சென்ருயுருவி, கழற்சி, சேங்கொட்டை, முதிர்ந்தகொன் றை, ஆவாரை, விளா, பலா, சிற்ருமணக்கு, இலவு, தெற்ருன், பூவரசு, மாதுளே, சிறுபூனேக்காலி, வில்வம், நீர்முள்ளி, கருவேல், வெள்வேல், செப்புநெருஞ்சில், யானேநெருஞ்சில், நத்தைச்சூரி என்னும் வித்துக்கள் (20-ம்) வகை-1-க்கு (பலம்-2) ஆக இடித்து வாழையிலேச்சாறு (4) மரக்கால்விட்டு எரித்து (16-ல்-1-ஆக) வடித்துக்கொள்; (13-வது கதம்பக்குடிநீர்) கடுக்காய், நெல் லிக்காய், தான்றிக்காய், வால்மிளகு, சிறுதேக்கு, சிற்றரத்தை' கொத்துமல்லி, செவ்வள்ளி, காரமுள்ள கடுகு, தேவதாரம், காட் டுச்சீரகம், கப்புமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், லவங்கம், லவங்கப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, சதகுப்பை, மராட்டி மொக்கு, சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, மைசாட்சி, கிரந்திதகரம், சந்தனம், செஞ்சந்தனம், ஓமம், கார்போகிவிதை, சிவதை, மேதை, கடல்நுரை, அபினி, கடுகுரோகணி, சடாமாஞ்சில்; கற் கடகசிங்கி, அதிவிடயம், சீனம், மஞ்சிட்டிவேர், பெருங்காயம், ஆயில்பட்டை, கிளியூறல்பட்டை, வரையாட்டுக்கொம்பு, சண்ப கப்பட்டை மேற்படி மொக்கு, அக்கிராகாரம், செம்பஞ்சு, உருத் திராக்ஷம், கற்பாசி, வாய்விளங்கம், செவ்வியம், யானேத்தந்தம், ஈருக்கடாரிக்கொம்பு, மான்கொம்பு, கருஞ்சீரகம், இன்புருவேர், தேசாவரம், வெள்வெங்காயம், காட்டுவெங்காயம், வேப்பம்பிசின், தக்கோலப்பொட்டு, வெள்ளேப்பாதிரிபிசின், வெட்பாலேவிதை, காவிக்கல், சகஸ்திரவேதி, வசுவாசி, வெந்தயம், வசம்பு, பீத

ரோகணி, பெருங்குரும்பை, கடலழிஞ்சிப்பட்டை, கறுப்புவலம் புரிக்காய், யானைத்திப்பிலி என்னும் கதம்பங்கள் (71-ம்) வகை 1-க்கு (கழஞ்சி-2) ஆக செவ்விளநீர் (16-படி) விட்டு எரித்து (16-ல் 1-ஆக) வடித்துக் கொள்; (14-வது உபரசக்குடிநீர்) வெண் முத்து, முத்துச்சிப்பி, பவளம், கொம்பரக்கு, அஞ்சனக்கல், கரு டப்பச்சை, கர்ப்பூரம், கல்மதம், பறங்கிப்பட்டை, கல்நார், கருங் குங்கிலியம், வெண்குங்கிலியம், பச்சைக்குங்கிலியம், சாம்பிராணி என்னும் உபரசங்கள் (14-ம்) வகை 1-க்கு (பலம்-1) ஆகக்கூட்டி (3) மரக்கால் தாழைநீர் விட்டு எரித்து (16-ல் 1-ஆக) வடித்துக் கொள்; (15-வது மிளகு குடிநீர்) மிளகும், கொட்டைப்பாக்கும் வகை 1-க்கு (பலம்-32-ஆக) சேர்த்து (8) மரக்கால் சலம் விட்டு இதை மாத்திரம் மனச்சலிப்பு வாராமல் எரித்து (16-ல் 1-ஆக) வடித்துக் கொள்; (இனி கற்கம் சொல்லுவாம்) சுக்கு, மிளகு, திப்பிலி, வீரம், தாளகம், கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங் காயம், சாதிக்காய், சாதிபத்திரி, சவுக்காரம், சடாமாஞ்சில், கெந் தகம், ஏலம், லவங்கப்பட்டை, நன்னாரி, வெள்ளூரம், கிச்சிலிக் கிழங்கு, சிறுநாகப்பூ, அதிமதுரம், மராட்டிமொக்கு, தாளிச பத்திரி, வங்காளப்பச்சை, கிரந்திதகரம், சீரகம், கோஷ்டம், கடுக் காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்னும் கற்க திரவியங்கள் (32-யும்) நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் வகை 1-க்கு (விராக-$\frac{3}{4}$) ஆக பசுவின்பாலில் அரைத்து (2-மரக்கால்) பாலில் கரைத்து மேற்சொல்லிய எண்ணெய் குடிநீர் வகைகளை யும் இக் கற்கங்கரைத்த பாலையும் ஒன்றுபடக் கடத்திற் சேர்த்து அந்த நுரை அடங்குவதற்கு முன்னம் வெள்ளாட்டுப்பால் (4-மரக்கால்) விட்டுக் கலந்து கொண்டு தைலபாத்திரத்திற்குப் பொற்சரட்டினால் காப்புக்கட்டி நமது யானைமுகக்கடவுள், பிர காசமுள்ள வேலாயுதமேந்திய சுப்பிரமணியக்கடவுள் இவர்களது திருவடித்தாமரைகளைப் பணிந்து, பிராமணசந்தர்ப்பனை செய்து தைலபாத்திரத்தை உயர்ந்த அடுப்பின் மீது வைத்து, மேற்கலந்த சேர்மானங்களைப் பெய்து, அன்று விரிந்த செந்தாமரைப் புட்பம் போலும், (2-ம்) நாள் விகசிக்குந் தருணமலர் போலும், (3-ம்) நாள் மலரும் பருவ மொக்குப் போலும் (4) நாள் மலர விருக்கும் காய் மொக்குப் போலும் (5-ம்) நாள் மலரத்தக்க பிஞ்சரும்பு போலும், ஆதியிலெழும்புங் கொழுந்தரும்பு போலும் எரிக்கவும்; அம்படி எரிப்பதுவும் ஒவ்வொரு பருவத்திற்கு (8) நாளாக ஒரு மண்டலம் என்கிற (48) நாள் வரையில் ஆவாரை விறகினால் மிருதுவாக எரித்து தைலம் முடியுமளவும் நந்தி தேவரைப் பூசித்து பாத்திரத்தினுள் கற்கம் பிடிக்காமல் துழாவி மெழுகு

பதம் வரக்கண்டு ஒப்பற்ற நெல்லும் பொன்னும் கலந்து கொட்டி அதன்மேல் வைத்திரா நின்ற வடிகடத்தில் முல்லை, மல்லிகை, பிச்சி, செந்தாழை, சிவந்த சண்பகம் என்னும் புட்பங்கள் (5-ம்) வகை 1-க்கு (வீசை-1) ஆக பரப்பி, அதன்மேல் புழுகு, குங்குமப்பூ, கஸ்தூரி, சவ்வாது, கோரோசனை, பச்சைக்கருப்பூரம் என்னும் வாசனைத் திரவியங்கள் (6-ல்) பொடிக்கத் தக்கவைகளைப் பொடித்து வகை 1-க்கு (விராகனிடை-5) ஆக தூவி தைலத்தை இறுத்து அதன்மேல் பூநீறு (விராகனிடை-2) தூவி சகல ரோகமும் நிவர்த்தியாகத் தக்கதாக அக்கினிதேவர்க்கு (3) அகப்பை அவிர்ப்பாகங் கொடுத்து, தைலபாத்திரத்தின் மேல் சில்லிட்டுச் சீலைமண் செய்து, ஒரு வருஷம் பழகிய கறுப்பு மணக்கத்தை நெற்குள் புதைத்து ஒரு மண்டலங் கழித்து எடுத்து வீட்டில் வைத்துக்கொண்டு, விநாயக பூசை, பிராமணசந்தர்ப்பணை, ழமாகுதி, கரும நிவர்த்தி ஆகிய இவைகளைச் செய்து, பின்பு க்ஷேமம் உண்டாகும்படி உபயோகப்படுத்திக் கொள்; இது யாவராலுந் துதிக்கத்தக்க மஹா மேகராஜாங்கத் தைலமாம். இதை அட்டாங்கயோகத் தவத்தினையுடைய பெரியோர்களும் மேலான பிரமநிலையினை யுணர்ந்த சித்துப்புருஷர்களும், விரிந்த ஆயுள் வேதத் தலைமைப் பண்டிதர்களும், இந்தத் தைலத்தைப் பல வாறாக விரித்துச் சொன்னார்கள். இவ்வுலகத்தார் வாழத்தக்கதாக அன்பு கூர்ந்து, இந் நூற்குள் யாம் மிகவும் சுருக்கமாக உரைத்தோம், எ-று. (140)

இதன் மகிமை

விருத்தம்

பரிந்துரைத்த தைலமிது கற்பங் கற்பம்
பவமொழிக்கு மிருடியருஞ்சித் தருமா டுவர்காண்
டெரிந்திதனைக் குயிற்றுமவர் நரரா னாலுஞ்
சித்தர்குழாத் தவரெனச்சிந் தித்தல் வேண்டும்
விரிந்ததவத் தோரரசர் செல்வ ராயுள்
வேதியருக் கெளிதின்முற்றும் வினையோர்க் காகா
வெரிந்தவிஃ தரிக்குணத்தை மானு மின்னு
மெடுத்துரைக்கி னவன்றெழிற்கு மேற்ற மாமே.

(இ - ள்.) அன்புடன் சொல்லிய இத் தைலமானது, காயசித்தியைச் செய்கின்ற கற்பமேயாம். அன்றியும் பவத்தை நீக்கும் ரிஷிகளும் சித்துப் புருஷர்களும் கையாடத்தக்கதாம். இதன்

முறையைத் தெரிந்து செய்கிறவர் மானிடராக இருந்தபோதிலும் அவரைச் சித்தர்களுடைய கூட்டத்தார் எனவே நினைக்கவேண்டும். ஆனால் நல்ல தவத்தையுடையோர்கள், சக்கிரவர்த்திகள், தனிகர், ஆயுள்வேத பண்டிதர்கள் என்னும் இவர்களுக்கு எளிதில் முடியும், தீவினையுடையோர்களுக்கு முடியாது. பக்குவமாகக் காய்ச்சி வடித்த இத்தைலம் மகாவிஷ்ணுவைப்போல் சாமள வண்ணமாக விருக்கும். இதன் பெருமையை விரிக்குமிடத்து அவ் விஷ்ணுவினது ரட்சணைத் தொழிலைப் பார்க்கிலும் அதிகமாம், எ-று. (141)

இதுவுமது

ஏற்றமலர்க் கேகமுக்கா லரைக்கா லென்ன
விசயைமண் டலங்களிர சிதநா டோறுஞ்
சாற்றவருந் தைலத்தை யபிடே கஞ்செய்
தனித்தேனு மிஃதுநிட் கஞ் சமன்பொற் கிண்ணத்
தூற்றளவி நைவேதித் தாரா தித்தன்
புறவழுத்து கடவுடன்மை யுண்டா மூழ்போம்
போற்றரிய சிவபோக மடைவை நின்றென்
புலத்தாருங் கதிபுகுவர் புகலுங் காலே.

(இ-ள்.) ரிஷபவாகனருடராகிய சிவபெருமானுக்கு சுக்கிர வாரங்கள்தோறும் ($\frac{1}{4}$ - $\frac{1}{2}$ - $\frac{3}{4}$) என்னும் மண்டல வரிசைகளில் இயன்றமாத்திரம் இத்தைலத்தால் அபிஷேகஞ் செய்து இதையும் நல்ல தேனையும் ஒரு ஒரு வராகனெடையாகத் தங்கப் பாத்திரத்தில் விட்டுக் கலந்து நைவேதித்து அக் கடவுளை அன்புறத் துதித்துப் பூசிப்பையாகில், ஊழ்வினைநீங்கி உனக்குத் தெய்வத் தன்மை யுண்டாவதும் அன்றி பெறுதற்கரிய சிவபோகமும் பெறுவை; இன்னும் சொல்லப்புகுங்கால் உன்னுடைய பிதுர்க்களும் நற்கதியை அடைவார்கள், எ-று. (142)

இதுவுமது

புகன்றதை லங்களெல்லா மெல்ல வர்க்கும்
பொருந்தவா மிஃதேவர்க்கும் பொருந்தும் வன்றே
யகன்றவல்லார் சொலுமுறைமுப் பானே டொன்றென்
பவையுமிஃ துஞ்சமனு மடலில் விண்டு

மகன்றகைவச் சிரகாய மொளியின் பட்ட
வசிகரநெய் கவனசத்தி மாவாழ் வென்னப்
புகன்றவிவை வேண்டினரை திரையு மூப்பும்
போகவுன்னி ஞடியிரு போழ்து முண்ணே.

(இ-ள்.) சிகிச்சைக்குரிய சாஸ்திரங்களிற் சொல்லிய தைலங்கள் எல்லாம் சில தேகங்களுக்கு ஒவ்வியும் சில தேகங்களுக்கு ஒவ்வாமலும் ஆக இருக்கும். இதுவோ வென்ருல் சகல தேகங்களுக்கும் ஒவ்வும். ஊழ் நீங்கிய பெரியோர்களுரைத்த சிகிச்சைகள் (32-னுள்) இது நீங்கிய (31-ன்) வன்மையும், இவ்வொரு தைலத்தினது வன்மையும் சமமேயாம். இது நிற்க, மன்மதனைப் போல் அழகு, வச்சிரசரீரம், ரத்தவிருத்தி, மிகுதேஜசு, சுக்கிலப் பெருக்கம், அஷ்டவசீகரம், கவனசத்தி, லக்ஷ்மி விலாசம் என்னும் இவைகள் வேண்டுமாயினும், நரை - திரை - மூப்பு என்னும் இவைகள் நீங்கவேண்டுமாயினும் இத் தைலத்தை ஸ்நானமுஞ் செய்து காலை மாலை என்னும் (2) காலங்களிலுமாயினும் சாப்பிடக்கடவை, எ-று. (143)

இதுவுமது

ஆடுவது நான்குநாட் கொருகா லோராண்
டருந்துவது மண்டலங்கா சிடைகாண் மாதைக்
கூடுவது பகலுறக்க முழைப்பு வெய்யிற்
கோபமதி நடைபனிநீர் குடித்த றீக்கண்
ணுடுவது வேகவா கனங்க ளேறி
நடாத்துவது புளிபுகைமே னசைப சித்து
வாடுவது கட்கஞ்சா வபினி பாகன்
மச்சுமச்சு மச்சிகையெண் மாங்காய் நீக்கே.

(இ-ள்.) தைலஸ்நானஞ் செய்வது (4) நாட் கொருதரமாக ஒரு வருடமும், சாப்பிடுவது ஒரு ஒரு காசெடையாக ஒரு மண்டலமுமாம். இதற்குப் பத்தியம் ஸ்திரீபோகம், பகல்நித்திரை, அதிவேலை, கடும் வெய்யிலில் நடக்குதல், கோபம், மிகுநடை, பனி, குளிர்ந்தஜலபானம், அக்கினியை யுற்றுப் பார்க்குதல், வாகனங்களின்மேல் வேகமாகச் செல்லுதல், புளிப்பு புகையிலை இவைகளில் விருப்பம், பசியோடிருத்தல், கள்ளு, கஞ்சா, அபினி, பாகல்காய், மீன், அகத்திக்கீரை, மோர், எள்ளு, மாங்காய் இவைகளை நீக்குவாயாக, எ-று. (144)

இதுவுமது

நீக்கருநோய்க் கைந்துமுன்னி யிதனை முன்போ
னீட்டுங்காற் காலனலை நேத்தி ரச்சுரர்
மூக்கடைப்புட் காந்தனீ ரிழிவு குன்மம்
மூர்ச்சையுன் மாதமுளை மூலம் பாமை
நாக்குளெழு மருப்பமுளைப் புழலை விந்து
நாசங்கா சந்தாக நாத்தி வேட
மாக்கரப்பான் கிரந்திகுட்டம் பெருவி யாதி
வள்ளுருக்கு மேகங்கா மாலை பாண்டே.

(இ-ள்.) அசாத்திய ரோகங்களுக்கு பஞ்சாக்கரத்தைத் தியானித்து, இத்தைலத்தை முன்பு சொல்லியவாறே கையாடுங் கால் வாதரோகம், பித்தரோகம், சிலேஷ்மரோகம், நேத்திரரோகம், பீநசரோகம், உட்சுரம், மூத்திரரோகம், குன்மம், மூர்ச்சை, உன்மாதரோகம், முளைமூலம், விரணம், ஜிக்குவாரோகம், தேகக் குடைச்சல், உழலை, க்ஷீணசுக்கிலம், காசம், தாகரோகம், அரோசகம், கரப்பான், கிரந்தி, குஷ்டம், பெருவியாதி, கர்ணரோகம், மேகரோகம், காமாலைரோகம், பாண்டுரோகம், எ-று. (145)

இதுவுமது

மாலைவிழி வித்திரதிக பால வாடை
மார்புநோய் கஜசருமம் வாதாஷ் டீலஞ்
சூலையதி சாரஞ்சோ ணிதம ருத்து
சோபைவிட பாகமெழு தோடஞ் சந்நி
சீலநனை யரித்திரா மேகம் வெப்பு
திமிர்வாதஞ் சந்திகசி லேஷ்மஞ் சுட்கம்
பாலநிகர் சோமநோய் மாந்த நோயும்
பாறுமெனக் கூறுவரியாம் பகர்வ தொன்றே.

(இ-ள்.) மாலைக்கண், வித்திரதி, சிரோரோகம், ஹிருத்துரோகம், கஜசருமகுஷ்டம், வாதாஷ்டீலம், சூலை, அதிசாரம், சோணிதவாதம், விஷபாகம், 7-வகை தோஷம், 13-சந்நிபாதம், சீலையை நனைக்கின்ற அரித்திராமேகம், சுரம், திமிர்வாதம், சந்திக சிலேஷ்மம், அதிசுஷ்கம், சோமரோகம், அலஜம் என்னும் ரோகங்கள் தீருமென்பார்கள். நாம் சொல்லுவது ஒரு வார்த்தையேயாம், அதாவது, எ-று. (146)

இதுவுமது

ஒன்றியசா ரீராதி பனிரண் டானு
முதித்தநோய்க் கணமுழுது மொருங்கே நீங்க
லன்றியல்கற் கிடமிலிஃ துண்மை யுண்மை
யதிசயிப்பீ ரிதன்சேர்வை யாயு மட்டும்
வென்றியுறப் பிடகரிதை யாளுங் கால
மெய்ம்மைவெளி யாமினிநா மிழற்று தற்கிங்
கொன்றிலைநற் பத்தியமு முனமே விண்டே
முயர்மேக ராஜாங்க யோக மீதே.

(இ-ள்.) சரீரம் நிலைபெறுதற்குக் காரணமாகிய வாதம், பித்தம், சிலேஷ்மம், ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோ தாது, அஸ்திதாது, மச்சைதாது, சுக்கிலதாது, மலம், மூத்திரம் என்னும் சரீராதி (12-களின்) விருத்தி, சீரணங்களினால் பிறக்கா நின்ற நோய்க்கூட்ட முழுவதும் ஒருமிக்க நீங்குவதேயன்றி தங்கு தற்கு இடமில்லை. இது சரதமாம். இதை அனுபவிக்கும் பரியந் தம் இவ் வுறுதிமொழிக்கு ஆச்சரியப்படுவீர்கள். பத்தியங்களை முன்னமே தெரிவித்தோம். இனி நாம் கூறுவதற்கு விசேஷ மொன்றுமில்லை. ஆனால், வைத்தியர்கள் இதனை ஆளுங்காலத் தில் இதனது யதார்த்தம் வெளிப்படுவதினால் ஜயமடைவார்கள். இதுவே யாவருக்கும் (மங்களத்தைச் செய்யாநின்ற) மஹாமேக ராஜாங்கத் தைலமாம், எ-று. (147)

தைலவருக்கச் சுருக்கம் மூலமும் உரையும்

முற்றிற்று.

LC
N70

16443I

வாகீஸ்வரி அச்சகம், சென்னை—1. 1970.

2BA
13-56